# தனிப்பட்ட
# ஆவிக்குரிய வாழ்க்கை



டாக்டர். பீட்டர் மாஸ்டர்ஸ்

# தனிப்பட்ட ஆவிக்குரிய வாழ்க்கை

டாக்டர். பீட்டர் மாஸ்டர்ஸ்

தமிழாக்கம் : டாக்டர். டேவிட் இளங்கோவன்

# பொருளடக்கம்


1. நமக்குள் வாசம் பண்ணுகிற ஆவியானவரை நாம் எப்படி நடத்துகிறோம்? - 1

2. ஒரு கிறிஸ்தவனின் தனிப்பட்ட வாழ்வின் போராட்டம் - 15

3. பரிசுத்தத்திற்கான பவுலின் திட்டம் - 28

4. ஆவிக்குரிய சந்தோஷத்தில் நடத்தல் - 41

5. தேவனுடைய பிரசன்னத்தை உணருதல் - 59

6. நம்முடைய வாழ்க்கையின் நோக்கம் - 72

7. ஒவ்வொருவருக்கும் விசேஷித்த தாலந்துகள் உண்டு - 88

8. ஆவிக்குரிய உற்சாகமூட்டுதல் - 105

9. மன்றாட்டு ஜெப ஊழியம் உனக்கு உண்டா? - 113

10. உண்மைத் தன்மை முக்கியமானது - 124

11. தாழ்மை ஆசீர்வாதத்திற்கு அதிக முக்கியமானது - 138

12. ஒப்புக்கொடுக்கப்பட்ட வாழ்க்கை - 157

# அத்தியாயம் 1

## நமக்குள் வாசம் பண்ணுகிற ஆவியானவரை நாம் எப்படி நடத்துகிறோம்?

“உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?”(1கொரி **6:19**).

நித்தியமான, மாறாத பரிசுத்த ஆவியானவர் ஒரு விசுவாசிக்குள் தங்கியிருப்பதின் உன்னதமான சிலாக்கியத்தை எவரும் முழுமையாக விளங்கிக்கொள்ள முடியாது. அநுதினமும் நாம் சந்திக்கும் பலவிதமான சந்தோஷங்கள், துக்கங்கள், சோதனைகள், பாடுகள் போன்ற அனைத்தும் பலவிதமான விளைவுகளை நம்மில் ஏற்படுத்துகிறது. பல சமயங்களில், பரிசுத்த ஆவியானவர் நமக்குள் இருக்கிறார் என்றும் நம்முடைய எண்ணங்களினால் மற்றும் செயல்களினால் அவர் சந்தோஷமோ அல்லது துக்கமோ அடைகிறார் என்றும் நாம் உணருவதில்லை. அவர் எப்பொழுதும் நமக்குள் இருக்கிறார் என்று நாம் அறியாமலேயே, பலவிதமான தவறுகளைச் செய்து கொண்டிருக்கிறோம்.

ஒரு உண்மையான விசுவாசியின் சரீரமானது கர்த்தருக்கே சொந்தமானது. அது உலக ஆசை அல்லது பாவ ஆசைக்குள்ளாக சென்றாலும், நமக்குள்ளே வாசமாயிருக்கும் பரிசுத்த ஆவியானவர் அதினால் துக்கப்படுகிறார் என்று பவுல் பின்வருமாறு கூறுகிறார். “அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்” (எபே 4:30). அல்லது

இன்னும் தெளிவாக கிரேக்க வேதாகமத்தில் "பரிசுத்த நபராகிய, பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்தாதிருங்கள்" என்று கூறப்பட்டுள்ளது.

ஆவிக்குரிய வாழ்க்கையில் உள்ள இந்த மகத்துவமான உண்மையை விளங்கிக்கொள்ளாதவர்களாய் நாம் எப்படி இருக்க முடியும்? தேவன், ஒவ்வொரு மீட்கப்பட்ட இருதயத்திலும் தங்கி தாபரித்து, "நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை, கைவிடுவதுமில்லை" என்று அறிவிக்கும்போது, நாம் எப்படி இதை இலகுவாக எடுத்துக்கொள்ள முடியும்? மனமாற்றம் நிகழும் அட்சண நேரத்திலிருந்து, ஒவ்வொரு கிறிஸ்தவனிலும் பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்கிறவராய் இருக்கிறார். இதைத்தான் வேதமும் பின்வருமாறு கூறுகிறது. "கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல"(ரோமர் 8:9).

பரிசுத்த ஆவியானவரை அவமதிப்பதைக்குறித்து மூன்று விதமான பதங்களில் புதிய ஏற்பாட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. அவரை ஒன்று நாம் எதிர்க்கலாம் அல்லது இரண்டவதாக அவித்துப்போடலாம் அல்லது மூன்றாவதாக துக்கப்படுத்தலாம். இந்த ஒவ்வொரு வார்த்தையும், நம்மில் வாசமாயிருக்கிறவரை பாதிக்கும்படியான அளவாகும். அவர் நம்மில் வாசமாயிருக்கிறார் என்பதையும் அவருக்கு கொடுக்க வேண்டிய கனம், மரியாதை, சார்ந்திருத்தல், நன்றிகள் அனைத்தையும் நாம் எவ்வளவு சீக்கிரத்தில் மறந்துவிடுகிறோம்!

முதலாம் இரத்த சாட்சியாய் மரித்துப்போன ஸ்தேவான், சுய நீதிக்காரராய் இருந்த பரிசேயர்களுக்கு கொடுத்த தன்னுடைய மகத்தான பிரசங்கத்தில் பின்வருமாறு சொல்லுகிறார். "நீங்களும் பரிசுத்த ஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்து நிற்கிறீர்கள்"(அப் 7:51). கிரேக்க மொழியில், ஒன்றிற்கு எதிராக விழுதல் அதாவது திறக்க வேண்டிய கதவைத் திறக்கவிடாமல், தன்னுடைய தோள்பட்டையை வைத்து தடுத்து நிறுத்துவதைக் குறிக்கிறது. எதிர்த்தல் என்பது பரிசுத்த ஆவியானவருக்கு எதிராக செயல்படுவது ஆகும். ஸ்தேவானுடைய

பிரசங்கத்தை கேட்டவர்கள் இரட்சிப்பை எதிர்த்தார்கள். ஒரு பெரிய பாவத்தை அப்புறப்படுத்தாமல் மறுப்பதினாலோ, சுய இஷ்டமான பாதையை தெரிந்துகொள்ளுவதினாலோ, மற்றும் ஊழியத்திற்கு கர்த்தர் தம்முடைய வார்த்தையின் மூலம் தெளிவான அழைப்பை விடுக்கும்பொழுது, சுய இஷ்டமான பாதையை தெரிந்துகொள்ளுவதினாலோ, மற்றும் ஊழியத்திற்கு கர்த்தர் தம்முடைய வார்த்தையின் மூலம் தெளிவான அழைப்பை விடுக்கும்பொழுது, அதை தவிர்ப்பதினாலோ, விசுவாசிகளாகிய நாமும் அவருடைய தெளிவான சித்தத்தை செய்வதில் எதிர்க்கிறவர்களாய்க் காணப்படலாம். நமக்கு சரி என்று நன்றாகத் தெரியும். இருந்தும் நம்முடைய முழு பாரத்தையும் கீழ்ப்படியாமை என்ற கதவுக்கு எதிராக வைக்கிறோம். நமக்குள் கிரியை நடப்பிக்கிற தேவத்துவத்தின் அங்கமாய் இருக்கிற, நம்முடைய ஆத்துமாவிற்கு நித்தியமான அன்பும், மகிமையான பாதுகாவலருமாய் இருக்கிற ஒரு நபரை எதிர்க்கிறோம்.

பரிசுத்த ஆவியானவரை எதிர்த்தல் என்பது பைத்தியகாரத்தனம் அல்லது நம்மை நாமே காயப்படுத்துகிறதாகும். நிச்சயமாக நமக்குள் வாசம் பண்ணுகிற தேவன் நம்மை வேதத்தின் சத்தியத்திற்குக் கீழ்ப்படிய எதிர்பார்க்கும் கடமைக்கு நாம் கீழ்படியாமல் போகும் போது தேவனுக்கு நம்முடைய இதயக் கதவை அடைக்கிறோம்.

இரண்டாவதாக, பரிசுத்த ஆவியானவரை பாதிக்கும்படியான செயல் **1** தெச **5:19** -ல் “ஆவியை அவித்துப்போடாதிருங்கள்” என்று பார்க்கிறோம். இங்கே சொல்லப்படும் பரிசுத்த ஆவியானவரின் பணி, இருதயத்தில் எழும்பும் நெருப்பு தழல் போன்ற பரிசுத்த வாஞ்சை, வைராக்கியம், திடநம்பிக்கை ஆகியவற்றைச் சுட்டிக் காண்பிக்கிறது. தேவன் தம் பணிக்கென்று, நம்மை இன்னுமாய் ஒப்புக்கொடுக்கவும், ஆழமாய் அவருக்காக ஊழியஞ்செய்யவும் நம்மைத் தூண்டச் செய்யும்பொழுது, அதற்கு இணங்க மறுக்கும்படியான

செயல், ஆவியை அவித்துப்போடுதலைக் குறிக்கிறது. நாம் முதல் குறிப்பில் பார்த்தது போல, அவர் வலுகட்டாயமாக எதிர்க்கப்படுகிறவராய் அல்ல, ஆனால் அவருடைய உந்துதலும், வற்புறுத்துதலும் அடக்கப்படுகிறதைக் காட்டுகிறது. அதாவது, நம்முடைய மனதில் அப்படியான உந்துதல், வற்புறுத்தல் எழும்பினாலும் நாம் அதைக் கண்டுகொள்ளாமல் அதை விட்டு கடந்துபோவதைக் குறிக்கிறது. விசுவாசி உபதேசத்தில் *(Doctrine)* உண்மையாய் இருக்கலாம். ஆனால், அவனுடைய நடைமுறை வாழ்க்கையில் உள்ள செயல்கள் கடவுளோடு ஒத்துப்போகாததாய் இருக்க வாய்ப்புண்டு.

இழந்துபோன ஆத்துமாக்களைக் குறித்தோ, சத்தியத்தைக் குறித்தோ, ஆண்டவரைக் குறித்தோ வைராக்கியம் மற்றும் அன்பு ஆகியவை பரிசுத்த ஆவியானவரால் உண்டாக்கப்படுகிற நெருப்பு அல்லது நெருப்பு தழலாய் இருக்கிறது. அதுமாத்திரமல்ல, பரிசுத்த ஆவியானவரால் உண்டாக்கப்படுகிற இந்த காரியம், தொடர்ந்து நம் வாழ்வில், பாவத்தைக் குறித்த உணர்வையும், தேவனுக்கேதுவான மனந்திரும்புதலையும், நம்முடைய தவறான நடத்தையின் மீது கோபத்தையும் உண்டாக்கி, நம்மை சீர்ப்படுத்துவதற்கு ஏதுவான வைராக்கியம், வாஞ்சை மற்றும் ஜாக்கிரதையைக் கொண்டவார்களாய் நம்மை மாற்றுகிறது.(இதை நாம் 2கொரி 7:11 -ல் பார்க்கலாம்).

ஆவியானவருடைய அனல் அல்லது நெருப்புத் தழல், நம்மை சாட்சியாய் இருப்பதற்கும், மற்றவர்களுக்கு உதவியாக இரக்கத்துடன் செயல்படுவதற்கும் நம்மை வற்புறுத்தலாம். ஆனால் ஆவியானவரால் நம்முடைய இருதயத்தில் எழுப்பப்படுகிற தெய்வீக வாஞ்சை மற்றும் நோக்கங்களை நாம் அவித்துப் போடுகிறோமா? மனசாட்சியின் நிமித்தம் எழும்புகிற துரித செயல்களை நாம் அடக்குகிறவர்காளாகவும், அவித்துப் போடுகிறவர்களாகவும் இருக்கிறோமா? ஆவிக்குரிய வைராக்கியத்தை வளர்க்கும் போது, சில நேரங்களில் நமக்கு அது

அசௌகரியமாகவும், நம்முடைய விருப்பத்திற்கு எதிர்மாறாகவும் அல்லது அதிகவிலை கொடுக்க வேண்டியதாகவும் இருக்கிறதா? நற்செயல்கள், ஒப்புக்கொடுத்தல், நன்றியுள்ளவர்களாய் இருத்தல், துதி மற்றும் ஜெபம் ஆகியவற்றிலிருந்து விலகிப் போகிறவர்களாய் இருக்கிறோமா?

கிறிஸ்தவர்களாய் இருந்துவிட்டு இதை நாம் எப்படி செய்ய முடிகிறது? தெய்வீகமான அனைத்து உணர்வுகளுக்கும், உந்துதலுக்கும் காரண கர்த்தராய் இருக்கிற வல்லமையான பரிசுத்த ஆவியானவரான தேவன் தாமே, என்றென்றும் நம்மில் தங்கித் தாபரிக்கிறவராய் இருக்கிறார் என்பதை நாம் எப்படி எளிதில் மறக்கிறவர்களாய் இருக்கிறோம்?

அவ்வப்பொழுது சந்தித்துவிட்டுப் போகிறவராய் இருக்கிற பரிசுத்த ஆவியானவரை நாம் கொண்டிராமல், அதை விட மேலான, நம்மில் நித்தமும் தங்கயிருக்கிற தெய்வீகம் பொருந்திய நபராய், நம்மில் மரித்துக் கொண்டிருக்கிற ஆவிக்குரிய காரியங்களை, முழுமையாக எழுச்சிக்குள்ளாக கொண்டுவரும்படி புதுப்பிக்கிறவராய் இருக்கிறார். ஆனால், நாம் அவருடைய உண்மையான பிரசன்னத்தையும், மகிமைகரமான உபதேசத்தின் பார்வையையும் இழந்துவிடுகிறோம். மேலும் நமக்குள் கிரியை நடப்பிக்கிற பரிசுத்த ஆவியானவரின் உற்சாகமும், உத்வேகமும், எழுப்புதலையும் அடக்குகிறவர்களாய் இருக்கிறோம்.

பரிசுத்த ஆவியானவரை நாம் இழிவுபடுத்தும்படியான மூன்றாவது காரியம் எபேசியர் 4:30-ல் பார்க்கிறோம். “அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்”. இந்த கடிந்து கொள்ளுதல் பரிசுத்த ஆவியானவர் நம் இருதயத்தில் மறைந்திருப்பதைக் காண்பிக்கிறதாக இருக்கிறது. நிச்சயமாக அவர் துக்கப்படுகிறார் என்பதின் வெளிப்பாடாக அது இருக்கிறது. அதாவது, அவமரியாதையான மற்றும் தாறுமாறான போக்கைக் கொண்ட விசுவாசியினால், பரிசுத்த

ஆவியானவர் வருத்தம் மற்றும் கவலைக் கொள்ளுவதைக் குறிக்கிறது. நமது வித்தியாசமான போக்கினால், நித்தியமான, என்றென்றும் நம்மில் தங்கித் தாபரிக்கிற நமதாண்டவர் பாதிக்கப்படுகிறார், காயப்படுத்தப்படுகிறார். நம்மில் அவருடைய பணியானது அசட்டை பண்ணப்படும் பொழுது பரிசுத்த ஆவியானவர் துக்கப்படுகிறார். உண்மையாகச் சொல்லப்போனால், பரிசுத்த ஆவியானவர் நாம் நினைப்பதற்கு மேலாக, அதிகமான வேதனைக்குள்ளாக்கப்படுகிறார். வேதமும் இப்படித்தான் சொல்லுகிறது. நம்மீதுள்ள பரிசுத்த ஆவியானவரின் அன்பு, கிறிஸ்துவின் அன்பைப் போல மிகப் பெரிதானது. ஆம்! அவருக்கு முன்பாக, சிறு தூசி போல காணப்படுகிற நம்மைக் குறித்து அக்கறை கொள்ளுகிறவராய் இருப்பதினால், அவருடைய அன்பு எவ்வளவு பெரியது என்று பாருங்கள்.

ஒரு வினோதமான கேள்வி யாக்கோபு 4:5 -ல் கேட்கப்படுகிறது. "நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறாரென்று வேதவாக்கியம் வீணாய்ச் சொல்லுகிறதென்று நினைக்கிறீர்களா?". அதாவது நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கியத்தையும் ஏக்கத்தையும் கொண்டவராய் இருக்கிறார். நமக்கு அன்புக்குரியவர்களோ அல்லது நம்முடைய சொந்த பிள்ளைகளோ தவறு செய்யும்போது, நாம் எவ்வளவு வருத்தப்படுகிறோமோ, அதேபோல நம்முடைய தவறுகளினாலும், பின்வாங்குதலினாலும் மிகுந்த அன்பு கொண்ட பரிசுத்த ஆவியானவர் துக்கப்படுகிறார். பரிசுத்த ஆவியானவர் நம்மேல் எவ்வளவு அக்கறையாக உள்ளார் என்பதை நாம் உண்மையாய் புரிந்துகொள்ளுவோமானால், அது எவ்வளவு பெரிய தாக்கத்தை நம்மில் ஏற்படுத்த முடியும்.

பவுல் தன்னுடைய வாழ்வில் பரிசுத்த ஆவியானவருக்கு தான் எவ்வளவாய் கடன்பட்டிருக்கிறார் என்பதை நன்றாய் அறிந்திருப்பதை பின்வரும் வசனங்களின்

மூலம் பார்க்கமுடிகிறது. "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிமித்தமும், ஆவியானவருடைய அன்பினிமித்தமும், உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்" (ரோமர் **15:32**). பவுல், பரிசுத்த ஆவியானவர் நம்மை எவ்வளவாய் நேசிக்கிறார் என்பதை இப்பகுதியில் சொல்லுகிறார். நாம் பரிசுத்த ஆவியானவரை நேசிப்போம் என்றால், அவரை துக்கப்படுத்தமாட்டோம், மாறாக முன் எப்போதும் இல்லாதபடி சுவிசேஷத்தின் வளர்ச்சிக்காக ஜெபிப்போம். "பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்தாதிருங்கள்" என்ற அறிவுறுத்தல் எதை குறிக்கிறதென்றால் பரிசுத்த வாழ்க்கையைக் குறிக்கிறது. அதாவது பழைய மனுஷனைக் களைந்துபோட்டு, புதிய மனுஷனை அணிந்து கொள்ளுவதைக் குறிக்கிறது. கிறிஸ்தவ வாழ்க்கையில் அசிங்கமான பேச்சுக்கள் இருக்கக்கூடாது. அது பெருமையுள்ள பேச்சாக இருக்கலாம், உலகப் பேச்சாக இருக்கலாம், இழிவான பேச்சாக இருக்கலாம், மிகைப்படுத்தப்பட்ட பேச்சாக இருக்கலாம் அல்லது அசுத்தமான, கசப்பு எண்ணங்களைக் கொண்ட, காயப்படுத்துகிற, வெட்டிப் பேச்சு பேசுவதாகக் கூட இருக்கலாம். இவை அனைத்தையும் நீக்கிவிட வேண்டும்.

நாம் எப்படி பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்துகிறோம்? பரிசுத்த ஆவியானவர் நம்மில் கிரியை செய்யும்போது, மனசாட்சி பாதிக்கப்படுவதைத் தவிர்க்கும்போதும், நம்மில் காணப்படும் பாதகமான வார்த்தைகளையும், செயல்களையும் சரி பார்க்க நாம் தவறும் போதும் அவர் துக்கப்படுகிறார். இப்படியான செயல்களை நாம் தொடர்ந்து செய்யும்போது அது எப்பேர்ப்பட்ட பாவமாக இருந்தாலும், கடைசியாக மனசாட்சி செயலற்றதாய்ப் போய்விடும். மேலும் நாம் கண்மூடித்தனமாக பாவ பேச்சுகளைப் பேசுகிறவர்களாய், பாவ செயல்களைச் செய்கிறவர்களாய் காணப்படுவோம். அதோடு மாத்திரமல்ல, தேவனிடமிருந்து வரும் ஆசீர்வாதத்தையும், அவருடன் கொண்டிருக்கும் ஐக்கியத்தையும் இழந்துவிடுவோம். அதேபோல மற்றவர்களிடத்தில் மெல்லிய இருதயமும்,

தனிப்பட்ட அன்பையும் காண்பிக்கவும், அதற்காக ஜெபிக்கவும் தவறும்போது, இப்படியான ஒழுக்கங்களை நம்மில் வளரச்செய்யும் பரிசுத்த ஆவியானவரை நாம் துக்கப்படுத்துகிறோம் (எபேசியர் 4:29-32).

பரிசுத்த ஆவியானாவர் நம்மீது ஏன் துக்கப்படுகிறார்? அதற்கான முக்கிய காரணங்களை நாம் பார்ப்போமேயானால், மிக உதவியாக இருக்கும். பரிசுத்த ஆவியானவரின் வருத்தத்திற்கு தெளிவான முதல் காரணம் என்னவென்றால் அவர் பரிசுத்தராய் இருக்கிறார் என்பதே. பரிசுத்த ஆவியானவருக்கு எதிராக நாம் அருவருப்பான காரியங்களைச் செய்யும்பொழுது அவர் துக்கப்படுகிறார். ஆகமொத்தம் பரிசுத்தமும், தூய்மையும் கொண்ட ஒருவர் உயர்ந்த ஸ்தானத்திலிருந்து இறங்கி, நம்மில் வாசம் செய்கிறார். ஆனால் நம்முடைய எண்ணங்களிலும், இருதயத்திலும் பல்வேறு இழிவான காரியங்களுக்கு இடங்கொடுத்து அவரைக் காயப்படுத்துகிறோம்.

நம்முடைய ஆத்துமாக்களில், அவர் செய்த கடந்தகால செயல்களை மிதிக்கும்போது, பரிசுத்த ஆவியானவர் மேலும் துக்கப்படுகிறார். இந்த பரிசுத்த ஆவியானவர்தான் சுவிசேஷத்திற்கு செவிசாய்க்கும்படியாக நம்முடைய இருதயத்தை திறந்தார். நம்மில் காணப்பட்ட முரட்டாட்டமான குணத்தை மிருதுவாக்கினார். ஆவிக்குரியவைகளை கண்டறிய நம்முடைய கண்களைத் திறந்தார். பாவத்தைக்குறித்ததான ஆழமான உணர்வுக்கு நம்மைக் கொண்டுவந்தார். கிறிஸ்துவை ஒரே இரட்சகராகிய ஆண்டவராக நமக்குக் காண்பித்தார். பிறகு நாம் அவருக்கு இணங்கி நம்மையே முற்றிலுமாக அவருக்கு அர்ப்பணித்தோம். ஆனால், இப்பொழுதோ நம்மில் வல்லமையாய் கிரியை நடப்பித்த அந்த பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலுக்குச் செவிசாய்க்கக் கஷ்டப்படுகிறோம். முக்கியமாக சொல்லப்போனால், அவர் இருக்கிறார் என்ற உணர்வற்றவர்களாகக்கூடக் காணப்படுகிறோம்.

ஆம்! நிச்சயமாக கிறிஸ்துவானவர் நமக்காக மிகப்பெரிய காரியத்தைச் செய்ததினால், பரிசுத்த ஆவியானாவர் துக்கப்படுகிறவராய் காணப்படுவார். ஒவ்வொரு ஆத்துமாவின் இரட்சிப்புக்காக, இரட்சகராகிய இயேசுவானவர் எவ்வளவு பெரிய விலைக்கிரயத்தைச் செலுத்த வேண்டியதாய் இருந்தது என்று பரிசுத்த ஆவியானாவர் மற்றும் பிதாவானவரைத் தவிர வேறு யாருக்குத்தெரியும்? நம்மை மீட்பதற்காக, நம்மீது காணப்பட்ட நித்தியமான தேவனுடைய கோபாக்கினையையும், பாவத்தின் சாபத்தையும் கிறிஸ்துவானவர் சிலுவையில் சுமந்தார். அதினால், அவர் நம்முடையவராக நித்தியமான மகிமையின் இராஜாவாக என்றென்றும் நமக்கு காணப்படுகிறார். இவ்வளவு பெரிய மகத்தான காரியத்தை நமக்கு செய்திருக்கிற அவருக்கு, நாம் எந்த விதத்தில் பதிலுக்கு திருப்பி செலுத்துகிறவர்களாய் இருக்கிறோம்? பல சமயங்களில் முறையற்ற செயல்களினால், பரிசுத்தத்திற்கு ஏதுவான வாழ்க்கை வாழ்வதற்கு நாம் அக்கறை கொள்ளாதவர்களாயும், தேவனுக்கடுத்த காரியங்களை விட, உலகப் பிரகாரமான காரியங்களில் அதிகம் செலவிடுகிறவர்களாயும் இருக்கிறோம்.

பரிசுத்த ஆவியானாவர் நமக்காக அதிகமாக துக்கப்படுகிறவராய் இருக்கிறார் என்பதில் எந்த ஒரு சந்தேகமும் இல்லை. ஏனென்றால், நம்மில் காணப்படும் பரிசுத்த ஆவியானவரின் தூண்டுதல்களைப் புறக்கணிக்கும் பொழுது நாம் சந்திக்கும் விளைவுகள் மற்றும் இழப்புகளைக் குறித்து அவருக்குத் தெரியும். உதாரணமாக, தேவனுடன் கொண்டுள்ள ஐக்கியத்தின் இழப்பு, சுவிசேஷத்திற்காக கொடுக்கும் உழைப்பில் இழப்பு, ஜெபத்திற்குண்டான ஆர்வத்தில் இழப்பு மற்றும் ஆழமான கிறிஸ்தவ வாழ்க்கையில் உள்ள மகிழ்ச்சியில் இழப்பு போன்றவைகளைக் கூறலாம்.

மேலும் நம்மில் காணப்படும் ஆவிக்குரிய மந்தத்தினால் விளையும், பரிசுத்தமற்ற, வைராக்கியமற்ற வாழ்க்கையை இளம் விசுவாசிகள் பார்ப்பதினாலும், நம்மைச் சுற்றியிருக்கிற

இரட்சிக்கப்படாத மக்கள், நம்முடைய குளிர்ந்துபோன நிலையையும், தாறுமாறான வாழ்க்கையையும் பார்க்கிறதினால் பரிசுத்த ஆவியானாவர் மிகுந்த துக்கப்படுகிறார்.

ஏதேன் தோட்டத்தில் நிகழ்ந்த மீறுதல், நம்முடைய இருதயத்தில் நிகழும்போது, பரிசுத்த ஆவியானாவர் நிச்சயமாக துக்கப்படுகிறவராய் காணப்படுகிறார். கர்த்தர் நமக்குக் கொடுத்துள்ள முழுமையான கிறிஸ்துவப் பொறுப்பிலிருந்து விலகி, அதை மீறும் பொழுதும், பெருமை, சுய பற்று, பொருளாசை, நன்றியற்றத் தன்மை ஆகிய அனைத்தும் நம்மில் ஆரம்பிக்கும் பொழுதும், பரிசுத்த ஆவியானாவர் நாம் புரிந்துகொள்ள முடியாத அளவிற்கு துக்கப்படுகிறார்.

நாம் இங்கே சொல்லப்பட்ட பரிசுத்த ஆவியானவரின் அனைத்து செயல்களின் தூண்டுதல்களும், வேதத்திற்கு வெளியிலிருந்து ஒருபோதும் வராது. அவர் நமக்கு அதிகாரப்பூர்வமான சத்தியத்தை வெளிப்படுத்தி இருக்கிறார். நாம் எதையெல்லாம் அறிந்துகொள்ளவேண்டுமோ அவை அனைத்தையும் கர்த்தருடைய வேதத்தில் முழுமையாக கொடுக்கப்பட்டுவிட்டது என்று வேதம் தெளிவாய் போதிக்கிறது. தேவனுடைய ஞானம், இரட்சிப்பு, கிறிஸ்தவ வாழ்வு மற்றும் சபையின் செயல்பாடுகள் அனைத்திற்கும் இந்த வேதம் முழுமையானதும், நிறைவானதும், போதுமானதும் அதிகாரம் கொண்டதுமாய் இருக்கிறது. இன்றைய நாட்களில் காணப்படும் நவீனமான அனைத்தும் அதாவது, தரிசனம் மற்றும் நேரடி வெளிப்பாடு என்று சொல்லிக்கொண்டு புதிது புதிதாக வெளிப்படுத்துகிற அனைத்தும் பொய்யானவைகள் மற்றும் தவறானவைகள் ஆகும்.

பரிசுத்த ஆவியானாவர் மனசாட்சியைத் தொடர்ந்து தூண்டுகிறவராகவும், வேதத்தை நமக்கு நினைவுபடுத்துகிறவராகவும், அவற்றைப் புரிந்துகொள்ள உதவி செய்கிறவராகவும், மனதை தெளிவாக்குகிறவராகவும், நாம் மறந்துபோகிற ஆவிக்குரிய கடமைகளையும், முக்கியமான

*காரியங்களையும் நினைவுபடுத்துகிறவராகவும் இருக்கிறார். நாம் தேவனுடைய வார்த்தையின் சிலாக்கியங்களை அனுபவிக்கும்பொழுது பரிசுத்த ஆவியானாவர் மிகப்பெரிய சந்தோஷத்தையும், வார்த்தையில் இருக்கும் ஆறுதலையும் நமக்கு பொழிந்தருளுகிறவராய் இருக்கிறார். நமக்குள் வாசம் பண்ணுகிற வல்லமையான பரிசுத்த ஆவியானாவர், ஏற்கனவே வெளிப்படுத்தப்பட்ட தம் வார்த்தையின் மூலம் விசுவாசிகளோடு தொடர்ந்து தொடர்புக்குள்ளாக இருக்கிறாரே தவிர, வேதத்தை விட்டு, குறுக்கு வழியில் செயல்படுகிறவராக அல்ல. ஒருவன் கற்பனை பண்ணிக்கொண்டு அதினால், கர்த்தர் என்னோடு பேசினார் என்று சொல்லுவானாகில் அவன் தேவனுடைய வார்த்தையின் அளவைவிட்டு வெளியே திரிகிறவனாய் இருக்கிறான்.*

*ஒவ்வொரு விசுவாசிக்குள்ளும் காணப்படுகிற கிருபை மிகுந்த பரிசுத்த ஆவியானாவரின் பணியானது கலாத்தியர் **5:16-18**ல் பவுல் விளக்கப்படுத்தியுள்ளார். நாம் மாம்ச இச்சைகளை நிறைவேற்றாமல், ஆவிக்கேற்றபடி நடக்க வலியுறுத்தப்படுகிறோம். நம்மில் தங்கியுள்ள பழைய மாம்ச எச்சமானது, பரிசுத்த ஆவியானாவரால் கொடுக்கப்பட்ட புதிய சுபாவத்திருக்கு எதிராக போராடுகிறது. இதை பவுல் இருதயத்தில் உள்ள போர் என்று சொல்லுகிறார். இருந்தபோதிலும் பரிசுத்த ஆவியானாவர் இவ்விதமான பாவ இச்சையை எதிர்க்கிறவராய் "நீங்கள் செய்ய வேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு" என்று சொல்லுகிறார். நாம் வேண்டுமென்றே பாவ செய்கைகளை செய்வதிலும், பாவ வார்த்தைகளைப் பேசுவதிலும் மிக இலகுவாய் ஈடுபட முடியாதபடிக்கு பரிசுத்த ஆவியானாவர் நம்முடைய மனசாட்சியில் செயல்படுகிறார்.*

*ஆனால் இந்த தடுப்புச் சுவரைத் தாண்டி நாம் கடந்து செல்லுவோமானால் என்ன பிரயோஜனம்? பரிசுத்த ஆவியானாவர் நமது மனசாட்சியை தூண்டி செயல்பட வைத்தும், நாம் பாவம் செய்வோமானால் என்ன பிரயோஜனம்?*

அது ஒருவேளை, பெரிய சோதனையாக இருக்கலாம் அல்லது சிறிய சோதனையாக இருக்கலாம். அப்பொழுது நாம் தொடர்ச்சியாக பாவ செயலை செய்து பரிசுத்த ஆவியானவரை எதிர்க்கிறவர்களாய் இருப்போம். மேலும் அவ்விதமான வேளையில் எந்தவிதமான வருத்தமும் காட்டாதபடி இருப்போமானால், நிச்சயமாக பரிசுத்த ஆவியானாவரை அவித்துப்போடுகிறவர்களாயும், துக்கப்படுத்துகிறவர்களாயும் இருப்போம்.

"ஆவியானவரால் நடத்தப்படுவீர்களானால், நீங்கள் நியாயப் பிரமாணத்திற்குக் கீழ்பட்டவர்களல்ல" என்று பவுல் சொல்லுகிறார். அதாவது பரிசுத்த ஆவியானாவர் ஒருவனில் தங்கி செயல்படும் செயல்களுக்கு, அவன் கருத்தாய் இருக்கிறவனாகவும், மனசாட்சிப் பூர்வமாக கீழ்ப்படிகிறவனாகவும் இருக்கிறான். இதினாலே அவன் உண்மையாலுமே இரட்சிக்கப்பட்டவன் என்றும், இனிமேல் நியாயப்பிரமாணம் கூறும் ஆக்கினைத் தீர்ப்புக்கு கீழானவன் அல்ல என்றும் நிச்சயப்படுத்திக்கொள்ளலாம். நிச்சயமாக நியாயப்பிரமாணம் நம்முடைய வாழ்க்கைக்கு நீதியான சட்டமாக இருந்தாலும், இயேசுவானவர் நமக்காக வந்து, இரத்தம் சிந்தி மரித்து, நம்மேல் இருந்த நீதியான தண்டனையை அவர் சுமந்ததினாலே, நாம் இனிமேல் நியாயப்பிரமாணத்தினால் தீர்க்கப்படோம்.

நாம் ஆவியில் வாழ்வோம் என்றால், "ஆவிக்கேற்றபடி நாம் நடப்போம்" என்று பவுல் எழுதுகிறார். ஆகவே நாம் அவர் நம்மில் வாசம் செய்யும் அன்பான பிரசன்னத்திற்காக நன்றியுள்ளவர்களாக இருப்போமானால், பரிசுத்த ஆவியானாவரின் வல்லமையையும், ஆசீர்வாதத்தையும் நிரூபிக்கிறவர்களாகவும், அவற்றை ருசி பார்க்கிறவர்களாகவும் இருப்போம். மேலும் பரிசுத்த பக்தி, சந்தோஷம், சமாதானம், விளங்குதல், உபயோகத் தன்மை போன்றவற்றை நாம் அனுபவிப்போம். இருதயத்தில் நிகழும் ஆவியானவரின்

தூண்டுதல்களை எதிர்க்காதீர்கள், அது உங்களை தேவனுக்கு இன்னும் அதிகமாய் ஒப்புக்கொடுக்கவும், அவருக்கென்று பணியாற்றவும் செய்யும்படியான அழைப்பாக இருக்கிறது. பரிசுத்த ஆவியானாவரின் வற்புறுத்தல்களை அவித்துப் போடாதிருங்கள். மேலும் அவரை புறக்கணித்து துக்கப்படுத்தாதிருங்கள்.

கடைசியாக ஜெபத்தில், மன்றாடுதலில் இருக்கும்படியான சிலாக்கியங்களை புறக்கணித்து பரிசுத்த ஆவியானாவரை எதிர்க்காதீர்கள், அவித்துப் போடாதீர்கள், துக்கப்படுத்தாதீர்கள். எந்தவித கடமையையும் எதிர்க்காதீர்கள் அல்லது எந்தவித வற்புறுத்தல்களையும் அவித்துப் போடாதீர்கள். ஏனென்றால் பரிசுத்த ஆவியானாவர் நம் ஜெபத்தைப் பூரணப்படுத்தி பரலோக வார்த்தையாக மாற்றி, நமது பலவீனங்களில் உதவி செய்கிறவராய், வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறவராகவும், மகிமையான கடவுளுடைய சித்தத்திற்கு நம்முடைய ஜெபத்தை ஒத்துப்போகச் செய்கிறவராயும் இருக்கிறார்.(ரோமர் 8:26-27).

வில்லியம் பண்டிங் என்ற அருமையான பாமாலை பக்தனும், 19 ஆம் நூற்றாண்டு வெஸ்லியன் பிரசங்கியுமானவர், ஒரு உண்மை விசுவாசி பரிசுத்த ஆவியானவரோடு உள்ள தொடர்பை பற்றி மிக அழகாக பின்வருமாறு எழுதுகிறார்.

பரிசுத்த ஆவியானவரே! என்னில் பரிதாபம் கொள்ளும்
உம்மைத் துக்கப்படுத்தினதை எண்ணி வேதனைப்படுகிறேன்.
நீர் தூரத்தில் உள்ளவர் போல இருந்தாலும்
துக்கத்துடன் கூடிய என் இருதயத்தைக் கேட்டருளும்.

எண்ணிலடங்காத என் பாவங்களை அறிக்கையிடுகிறேன்
என் அசுத்தமான பாவத்தன்மையோடே கூட,
உமக்கு எதிராக மாத்திரமே செய்த பாவங்களை
சர்வத்திலும் வியாபித்திருக்கும் நீரே அறிவீர்.

*கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்தும்*
*தீட்டானவற்றை ருசித்தேன்.*
*பரத்திலிருந்து ஊறும் ஊற்றிலிருந்து*
*என் தேவையை சந்தித்தருளும்.*

*இரக்கமுள்ள பிதாவே!*
*உம்மையே நான் வாஞ்சிக்கிறேன்.*
*பரிசுத்த ஆவியானவருக்கு எதிராக செய்த பாவங்களையும்,*
*உம்முடைய குமாரன் நிமித்தம் எனக்கு மன்னியும்.*

# அத்தியாயம் 2

# ஒரு கிறிஸ்தவனின் தனிப்பட்ட வாழ்வின் போராட்டம்

பவுல் ரோமாபுரிக்கு எழுதின நிருபத்தில் ஒரு விசுவாசியானவன் எப்படி தன் சொந்த பாவத்தோடு போராட வேண்டும் என்றும் அப்பிரச்சனையைக் குறித்த விளக்கத்தையும், பல சோதனைகளைச் சந்திப்பதில் உண்டான எட்டு படிகள் கொண்ட திட்டங்களையும் குறித்து எழுதுகிறார். இந்த வேதப் பகுதியில் பாவத்தைக்குறித்து பார்த்தோமேயானால், பரிசுத்தத்தில் முன்னேறுவதைக் குறித்த குழப்பத்தை ஒருபோதும் நாம் அடையமாட்டோம். இந்த இரண்டாவது அத்தியாயத்தில், பரிசுத்த வேத வார்த்தையிலிருந்து முக்கியமான அம்சங்களை எடுத்து அதின் தன்மையையும், நடைமுறைக்கேதுவான செயல் முறையையும் நாம் பார்க்க இருக்கிறோம்.

ரோமர் 5 -ஆம் அதிகாரத்தின் கடைசி பகுதிகளில் ஒரு அழகான உதாரணத்தை நாம் பார்க்கலாம். அதாவது, பவுல் இரண்டு விதமான ஆதிக்கம் செலுத்தும் இராஜாக்களைப் பற்றி குறிப்பிடுகிறார். ஒருவர் "பாவத்தின் இராஜா" மற்றொருவர் "கிருபையின் இராஜா". பாவம் ஒரு காலத்தில் நம்மை ஆதிக்கம் செலுத்தும் ஒன்றாக இருந்தது. இரட்சிக்கப்பட்ட பிறகு, கிருபையானது வெற்றிக் கொண்டு, பாவத்தின் ஆதிக்கத்தை வீழ்த்தியது. அந்த நாள் முதற்கொண்டு, நம்முடைய பாவம் மன்னிக்கப்பட்டவர்களாய், பரலோக ராஜ்யத்துக்குரிய மக்களாய், தேவனுடைய இரக்கத்தில் பங்குள்ளவர்களாய் மாற்றப்படுகிறோம். இதன் அடிப்படையில் ஆறாவது அதிகாரத்தின் முதல் வசனங்கள் ஒவ்வொரு விசுவாசிக்கும்

*மிகுந்த சவாலைக் கொண்டுள்ளதாய் அமைகிறது. "ஆகையால் என்னசொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமா? கூடாதே" (ரோமர்* ***6:1).*** *நாம் இந்த வார்த்தையின் பொருளை சரியான விதத்தில் புரிந்துகொள்ளுவது மிக அவசியமானதாகும். எந்தவித மனசாட்சியும் இல்லாமல், துணிகரமாக பாவத்தை செய்யும் மக்களை, கிருபையானது மன்னிக்கும் என்று பவுல் கூறுவதாக சில கிறிஸ்தவர்கள் எண்ணுகிறார்கள். இவ்விதமான எண்ணங்கள் முற்றிலும் தவறான ஒன்றாகும். பவுல் முக்கியமாக விபச்சார வாழ்க்கையின் மயக்கத்திலும், திருட்டு போன்ற மாயைகளிலும் மயங்கி கிடக்கும் மக்களுக்கு எழுதவில்லை. பவுல், உண்மை கிறிஸ்தவர்களாக இருக்கக்கூடியவர்களின், இருதயத்தின் பாவங்களை மனதில் கொண்டு, பரிசுத்தத்தைக் குறித்து அக்கறையில்லாமல், கிருபையைச் சார்ந்து வாழ முடியுமா? என்று கேட்கிறார்.*

*இந்த சவால் மிக அவசியம். ஏனென்றால் விசுவாசிகள் அடிக்கடி பரிசுத்தத்தைக் குறித்து கருத்தற்றவர்களாய் இருக்கிறார்கள். நாம் நம்முடைய கண்காணிப்பைக் குறைத்துக்கொண்டு, அவ்வப்பொழுது சிறிய பாவங்களை உள்ளே அனுமதிக்கிறவர்களாக இருக்கிறோம். உதாரணமாக, கொஞ்சம் பொருளாசை அல்லது சிறிய அளவிலான சுயநலம், கொஞ்சம் சிடுசிடுப்பு அல்லது சிறிதுகாலம் பெருமை, அவ்வப்பொழுது தேவ வார்த்தையை தியானிப்பதை விட்டுவிடுதல் மேலும் கட்டுபாடில்லாத சுபாவங்கள் அனுமதிக்கப்பட்டு, பொய்கள், அன்பற்றத் தன்மை, வெட்டிப்பேச்சு இப்படியாக, இரட்சிக்கப்படுவதற்கு முன்பு இருந்த தேவையற்ற காரியங்கள்கூட அனைத்தும் உள்ளே வந்து விடுகிறது.*

*இந்த அனைத்து சவால்களையும் சந்திக்காதபடி, எதிர்த்து போராடாதபடி கடைசி நாளில் மனந்திரும்பிக்கொள்ளலாம், ஆண்டவர் மன்னித்துவிடுவார் என்ற எண்ணத்தை*

*வைத்துக்கொண்டு நம்மை நாமே ஆறுதல்படுத்திக் கொள்ளுபவர்களாய் இருக்கலாம். சின்ன பாவங்கள் தானே இதினால் என்ன? என்றும் கூட நினைக்கிறோம். அதினால் இப்படியான பாவங்களுக்கு நாம் உடன்பட்டு, அதைக் குறித்து சற்றேனும் கவலைகொள்ளாமல், சர்வ சாதாரணமாக எடுத்துக் கொள்ளுகிறோம். மேலும் நம்மை பொறுத்தவரையில் பாவம் முன்னாட்களில் இருந்ததுபோல அபாயகரமானதாக இனி இருப்பதில்லை, ஏனெனில் நாம் "பரிசுத்தவான்களின் பாதுகாப்பு" என்ற உபதேசத்தில் மகிழ்ந்து இருக்கிறோம். அதினால் நாம் கவலைப்பட அவசியமில்லை என்று எண்ணலாம். பவுல் இப்படியான சாதாரணமான பாவங்களைக் குறித்துதான் சொல்லுகிறார். இப்பாவங்களே கொஞ்சம் கொஞ்சமாக நம்மேல் ஆதிக்கம் செலுத்தி, நம்முடைய பரிசுத்த தேவனுக்கு மிகுந்த துக்கத்தை உண்டாக்குகிறவர்களாக இருக்கிறோம். அதினால் தான் பவுல், மிக அழுத்தமாக "ஆகையால் என்னசொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலைநிற்கலாம் என்று சொல்லுவோமா? கூடாதே. பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படிப் பிழைப்போம்?"(ரோமர் **6:1-2)** என்று சொல்லுகிறார். பாவத்துக்கு மரித்து அதின் ஆக்கினைக்குத் தப்பினவர்கள் எப்படி அதின் ஆக்கினைக்கு உட்படமுடியும்? பாவத்தில் தொடர்ச்சியாக எப்படி உழன்று கொண்டு இருக்கமுடியும்? இது ஒரு சாதாரண கிறிஸ்தவனுக்கு அதிர்ச்சியாக இருக்கலாம். ஆனால் பவுல் இங்கே சுய திருப்திப்பட்டு, பரிசுத்த வாழ்வைக்குறித்து அக்கறையற்று இருப்பவர்களைக் குறித்து எச்சரிக்கிறார். அதினால் தான் "கூடாதே!" என்று கூறுகிறார். கிரேக்க பதத்தில் பார்த்தால், "ஒருபோதும் இருக்கக் கூடாது" என்ற பொருள்பட உள்ளது. இது ஒரு மிக கடினமான வார்த்தையாக இருக்கிறது. பாவத்தின் ஆக்கினைக்கு மரித்து, பாவத்திற்கு பிரதிபலன் உண்டு என்பதை அறிந்தும் நாம் எப்படி அவைகளை நம்முடைய வாழ்வில் அனுமதிக்கப்பட முடியும்?*

**விசுவாசியின் இரண்டு விதமான சுபாவங்கள்:**

*ரோமர் **6:6** வசனத்திலிருந்து பவுல் முக்கிய அம்சமான, பாவத்திற்கு எதிரான போராட்டத்தைக் குறித்துப் பேசுகிறார். அவர் ஒரு விசுவாசியில் இருக்கும் முரண்பாட்டைத் தெளிவாக விளக்கப்படுத்துகிறார். அதாவது, பரிசுத்தத்தைக் குறித்து உண்மையான வாஞ்சை இருக்கும்பொழுது, மறுபக்கம் இருதயத்தில் பாவம் எழும்புகிற காரியத்தைக் குறித்துப் பேசுகிறார். பாரம்பரியமாக சீர்திருத்த வேத அறிஞர்கள் இரண்டுவிதமான சுபாவங்களைக் குறித்து கூறுகின்றனர். ஒன்று பழைய சுபாவம் (பாவத்தில் வீழ்த்தப்பட்ட நிலை, மிகவும் பெலவீனப்பட்டது, பாவத்திலே இன்னும் வாழுதல்), மற்றொன்று புதிய சுபாவம் (இரட்சிப்பை பெறும்பொழுது ஏற்படும்மேலான சிறந்த சுபாவத்தைக் கொண்டது). பவுல் சொல்லப்போனால் இந்த இரண்டு விதமான சுபாவங்களைக் குறித்துக் குறிப்பிடவில்லை. ஆனால் அவர் சொல்லும்படியான சத்தியத்தில் அவைகளை மிகத்தெளிவாக பார்க்கலாம். எபேசியர் **4:22-24** -வது வசனங்களில் "அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொள்ளுங்கள்."*

*பவுல் ரோமர் **6:6** -வது வசனத்தில் "நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு, பாவசரீரம் ஒழிந்துபோகும்பொருட்டாக, நம்முடைய பழைய மனுஷன் அவரோடேகூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம்" என்று சொல்லுகிறார். பழைய மனுஷன் அதாவது பழைய சுபாவம் உலகத்தினாலும், பாவத்தினாலும், சுய எண்ணத்தினாலும், செய்கையினாலும், ஆதிக்கம் செலுத்தப்படும்படியான மனுஷன் மரித்துவிட்டான். எந்த விதத்தில் மரித்துவிட்டான்? முதலாவது, அதிகாரியாக*

இருந்தவன் மரித்துவிட்டான் (ரோமர் 5:21). விசுவாசியின் மேல் முழு அதிகாரம் செலுத்தப்பட்ட நிலை மாறிவிட்டது. இரண்டாவதாக, நரக ஆக்கினையிலிருந்து விடுவிக்கப்பட்டான்.

பழைய வேத எழுத்தாளர்கள், இந்த பழைய மனிதனின் மரணத்தைக்குறித்து சொல்லும்பொழுது, இந்த பழைய மனிதனின் ஆளுகை, பாவத்தின் மீதுள்ள அவனுடைய பிடிப்பு ஆகியவைகள் இரட்சிப்பின் வேளையில், முறிக்கப்பட்டுவிட்டது என்றும் ஆனாலும் அது இன்னும் இருக்கிறது என்றும் எழுதுகிறார்கள். இது எவ்விதம் இருக்கிறது? குறைவுபடுத்தப்பட்டு, பெலவீனப்படுத்தப்பட்டு, தாழ்த்தப்பட்டு மனிதனுக்குள் காணப்படுகிறது. பாவ ராஜா இன்னும் சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கவில்லை. இன்னுமாக அவன் விசுவாசியின் வாழ்க்கையில் எஜமானனாக இல்லாதபடிக்கு, எஞ்சிய பாவத்தன்மை உள்ளவனாக ஒரு கிறிஸ்தவனில் இருக்கிறான். ஒரு கிறிஸ்தவன் இந்த எஞ்சிய பாவத்தன்மையைத் தொடர்ந்து மரணத்துக்குட்படுத்தி செயல்பட வேண்டும். இவ்விதமான செயல் அவனுடைய சரீர மரண வேளையில், முழுவதுமாக தேவனுடைய வல்லமையினால் அழிக்கப்படுகிறது. ஆகவே பவுல், தொடர்ந்து பாவத்திற்கு ஊழியம் செய்யாமல், அதனுடைய விருப்பத்திற்கு இணங்கிக் கொடுக்காமல், அதோடுகூட எதிர்த்து போராடவேண்டும் என்று சொல்லுகிறார். இதுவே ரோமர் 6:6 -வது வசனத்தின் பொருளாக உள்ளது.

இந்த புதிய சுபாவம் கிறிஸ்தவனில் மேலோங்கி நிற்கிறதாகவும், வல்லமையுள்ளதாகவும் இருக்கிறது. பழைய மனிதன் கீழானவனாகவும், பெலவீனப்பட்டவனாகவும் இருக்கிறான். ஆகவே இந்த பழைய மனிதன், புதிய மனிதனுக்கு சமமானவனாக இல்லையென்றாலும், ஒரு விசுவாசி ஆவிக்குரிய வாழ்க்கையில் ஜாக்கிரதையாக வாழாதபொழுது, பழைய மனுஷன் மேலோங்க முடியும்.

## பரிசுத்தமாகுதல் முற்றிலுமாக விசுவாசத்தின் அடிப்படையில் ஆனதா?

*சிலர் இந்த பழைய மனிதனுக்கு எதிராகப் போராட வேண்டும் என்ற போதனையை எதிர்க்கிறவர்களாக இருக்கலாம். அதாவது பரிசுத்தமாகுதல் முற்றிலும் விசுவாசத்தின் அடிப்படையில் ஆனது என்று நாம் விசுவாசிப்போமேயானால், தேவன் நமக்காக அதைச் செய்வார் என்று சொல்லலாம். பவுல் ரோமர் **6:6** -வது வசனத்தில் நம்முடைய பழைய மனுஷன் அவரோடே கூட சிலுவையில் அறையப்பட்டது என்று அறிந்திருக்கிறோம் என்று கூறுகிறார். "அப்படியே நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள்"(ரோமர் **6:11**). விசுவாசிகள் பாவத்திற்கு முற்றிலுமாக அந்நியர்கள் என்று எண்ணும்படியான நம்பிக்கையின் மூலம் இது அவர்களுக்கு ஆகும் என்று பவுல் இங்கு சொல்லவில்லை. கிறிஸ்தவர்கள் தங்களுடைய ஆசீர்வாதங்களை நினைவுகூர்ந்து, அதாவது பாவத்தின் ஆக்கினையிலிருந்து மீட்கப்படும்படியாக, கிறிஸ்துவானவர் தங்களுக்கு செய்த காரியங்களை எண்ணிப்பார்த்து, பாவத்தின் பழைய மனுஷனின் ஆளுகையை முறிக்கவேண்டும் என்று சொல்லுகிறார். இவ்விதமான உன்னதமான ஆசீர்வாதங்களை விசுவாசிகள் எண்ணிப்பார்க்கும் பொழுது, தேவனுக்கு கடமைப்பட்டவர்களாகவும், தங்களுடைய பாவ சோதனையை மேற்கொள்ளுவதில் உறுதியுள்ளவர்களாகவும் ஆவார்கள் என்று சொல்லுகிறார். பவுல் ரோமர் **6:11-13** -ல் உள்ள வசனங்களில், கர்த்தர் உங்களை பாவத்தின் விளைவாக மரணத்திற்கு ஏதுவான நித்திய ஆக்கினைத் தீர்ப்பிலிருந்து மீட்ட கிருபையை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும் என்றும், மேலும், இதன் அடிப்படையில் உங்கள் சரீர பாவத்தின் உணர்வுகளுக்கு இணங்கிக் கொடுக்காமல் இருக்கவும், நீங்கள் பிசாசின் ஆயுதங்களாகப் பயன்படாமல், சுவிசேஷத்தையும், கிறிஸ்துவையும் வெட்கத்திற்கு உட்படுத்தாமல் இருக்க*

வேண்டும் என்று சொல்லுகிறார். மேலும், உங்கள் வாழ்க்கையை மனப்பூர்வமாக ஆண்டவருக்கு ஒப்புக்கொடுத்து, எப்பொழுதும் உண்மையாக இருக்கும்படிக்கு, உங்கள் வாழ்க்கையின் ஒவ்வொரு காரியத்திலும் தேவனையே சார்ந்து நடவுங்கள் என்றும் சொல்லுகிறார். நம்முடைய வாழ்வில் இவ்விதமான காரியங்களைப் புறக்கணிக்கும் பொழுதும், நாம் ஒவ்வொரு நாளும் ஆண்டவருக்குக்கென்று ஒப்புக்கொடுக்காத நிலையில் இருக்கும் பொழுதும், நம்முடைய வாழ்வில் அநேக சிறிய பாவங்களை அனுமதிக்கும் பொழுதும், அதை சாக்குப்போக்கு சொல்லி தவிர்க்கும் பொழுதும், அவைகள் நம்முடைய வாழ்க்கையில் தொடர்ந்து அதிகரிக்கிறதாகவும், அபாயகரமானதாகவும் உருவாகின்றன. நாம் ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவின் பணிக்கென்று நம்முடைய ஆவிக்குரிய நிலையை நினைத்தவர்களாக ஒப்புக்கொடுக்கும் பொழுது, பாவம் நம்முடைய வாழ்க்கையில் பழைய விதங்களில் மேற்கொள்ளாது.

விசுவாசிகளை பரிசுத்தத்தில் முன்னேறும்படியாக சொல்லுகிற பவுல், இன்னொரு விதமான வாக்குவாதத்தை வைக்கிறார். அதாவது ரோமர் **6:15** -வது வசனத்தில், "நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிராமல் கிருபைக்குக் கீழ்ப்பட்டிருக்கிறபடியால், பாவஞ்செய்யலாமா?" என்று கேட்கிறார். உங்களை மறுபடியுமாக பாவத்திற்கு ஊழியம் செய்யும்படியாக அனுமதிக்கிறதினால், நீங்கள் மறுபடியுமாக பாவத்தின் ஊழியர்களாக உட்படுத்திக் கொள்ளுகிறீர்கள் அல்லவா? அப்பொழுது நீங்கள் மறுபடியுமாக பாவத்திற்கு உட்பட்டு, கிறிஸ்துவை விட்டு பாவத்தின் ஆளுகைக்கு உங்களை உட்படுத்திக் கொள்ளுகிறீர்கள்.

ஒரு விசுவாசியானவன், கிறிஸ்துவுக்காக தன்னை ஒப்புக்கொடுத்து, ஒரு புதிய சுபாவத்தை பெற்றவனாக நிலைத்திருக்கிறான் (ரோமர் **6:17**). இப்படியிருக்க, தம்முடைய வாக்குகளுக்கு எதிராக அவன் எவ்விதம்

செயல்பட முடியும்? அதை மீறி தமக்குள்ளாகவே பாவத்திற்கு இடம் கொடுக்கும்பொழுது, இந்த ஒரு தடவை மட்டும் தானே என்றும், இந்த ஒருமுறை மட்டுமே கோபத்திற்கு இடம் கொடுக்கிறேன் என்றும், இருந்தாலும்கூட நான் எல்லைமீறிப் போக மாட்டேன் என்றும் எப்படிச் சொல்ல முடியும்? அவ்விதம் இருக்கக் கூடாதே என்று தேவன் சொல்லுகிறதைப் பவுல் கூறுகிறார். அது எவ்வளவு மூர்க்கத்தனமானதாக உள்ளது. பாவத்திற்கு நீ அனுமதி கொடுத்து, எதிராளியின் பக்கமாகப் போகிறாய். பிசாசானவன் நீ செய்கிறதை கண்டு களிகூருகிறவனாக இருப்பான்.

மேலும் பவுல், இதன் விளைவைக் குறித்து எச்சரிக்கிறதாவது, சிறிய பாவங்களுக்கு இப்பொழுது இடம் கொடுக்கும்பொழுது, பெரிய பாவங்கள் அதன் பின்பாக வர வழிவகுக்கும். அப்படியானால் இது வேத முறைக்கு முற்றிலுமாக முரண்பட்டதாக இருக்குமே.

கடைசியாக பவுல், பரிசுத்தத்திற்கு அதிகமாக ஊக்குவிக்கும்படியாக, இதன் விளைவாக ஏற்படும்படியான கனியைக் குறித்துப் பேசுகிறார். இரட்சிப்பிற்கு முன்பாக பழைய குணங்களில் எந்தவிதமான சாதனை என்பது இல்லை, ஆக்கினை மட்டுமே இருந்தது. ஆனால் இப்பொழுதோ ஆண்டவருடைய பிள்ளைகளாக கீழ்ப்படிவதின் மூலம், தேவனுடைய மகிமைக்கும் மற்றும் பரலோகத்திற்குமாக அவர்கள் முடி சூட்டப்படுகிறார்கள். இந்த சத்தியத்தை அறியாமல் ஒரு விசுவாசி அபாயகரமான பாவத்தை மேற்கொண்டு வாழமுடியாது. நித்தியமான ஒரு வாழ்க்கைக்கு முன்பாக இருக்கும்பொழுதும், தேவனுடைய வல்லமையுள்ள வாக்குத்தத்தங்கள் உண்மையுள்ளவைகளாக இருக்கும்பொழுதும், அவர்கள் எவ்விதம் தங்களை முழுமையாக ஆண்டவருக்கு ஒப்புக்கொடாமல் வாழமுடியும்? (ரோமர் **6:22**). ஒவ்வொரு நாளும் நேர்மையுள்ளவர்களாக, சுயநலமற்றவர்களாக, உண்மையுள்ளவர்களாக, தாழ்மையுள்ளவர்களாக

மற்றவர்களுடைய தேவைகளை உணர்கிறவர்களாக, அன்பு கூறுகிறவர்களாக ஒருவரையொருவர் பொறுத்துக்கொண்டு வாழாமல் இருக்கமுடியாது.

ரோமர் 7 -வது அதிகாரத்தில், நியாயப்பிரமாணம் பாவத்தை உணர்த்தும்படியாக இருக்கிறது என்பதும், அது ஒரு பாவியை மாற்றுவதாக இருக்க முடியாது என்பதையும் பவுல் எடுத்துச் சொல்லுகிறார். இரட்சிப்பதற்கு முன்பாக பவுலின் இருதயம் நியாயப்பிரமாணத்தை வேறுபடுத்தி விளங்கிக்கொண்டதின் மூலமாக, அவர் வாழ்ந்த வாழ்க்கை வேறுவிதமாக இருந்தது. பாவம் அவருடைய பெருமையோடு கூட சேர்ந்து, பாரம்பரிய நியாயப் பிரமாணத்தைப் பின்பற்றுவதின் மூலமாக தேவனுடைய உயந்த ஊழியனாக ஆகமுடியும் என்ற தவறான எண்ணம் எழும்பிற்று. இந்தவிதமான தவறான விளங்குதலின் மூலமாக தேவனுடைய நீதிப்பிரமாணங்களுக்குக் குருடான நிலையில் தவறான விருப்பங்கள் அவருடைய வாழ்க்கையில் மேலோங்கிற்று. இவ்விதமாக நியாயப் பிரமாணத்தை தவறாகவிளங்கி கொண்டதின் மூலமாக, தன்னுடைய உண்மையான பாவத்தன்மையை உணர்ந்துகொள்ளாதபடிக்கு வாழ்ந்த ஒரு மனிதனாக காணப்பட்டார்.

ரோமர் 7:9 -வது வசனத்தில் நியாயப் பிரமாணத்தின் பின்பகுதியானது அவரை உணர்த்தினபொழுது, அவருடைய பாவம் அவருடைய மனசாட்சியைக் குத்தி, மரணத்திற்கு உட்பட்ட ஒரு பாவி அவர் என்பதை விளங்கிக் கொள்ளச் செய்தது. 10 -வது வசனத்தில் தனக்கு ஜீவ வழியைக் காட்டவேண்டிய இந்த நியாயப்பிரமாணம் அவரைப் பாவத்திற்கு ஏதுவாக நியாயந்தீர்க்கிறது. 11 -வது வசனத்தில் பாவமானது நியாயப்பிரமாணத்தின் மூலமாக வஞ்சித்தது. 12 -வது வசனத்தில் நியாயப்பிரமாணத்தில் தவறு என்பது இல்லை, ஆனால் பாவமானது பவுலின் வாழ்க்கையில் சடங்காச்சார பகுதிகளை மாத்திரமே காண்பித்து அவரை

*வேறுவிதமாக விளங்கிக்கொள்ளும்படியாக வஞ்சித்தது. ஆனால் நியாயப்பிரமாணத்தில் நீதி பிரமாணத்தின் பகுதியை விளங்கிக் கொண்டபொழுது பவுல் தான் எவ்விதமாக வஞ்சிக்கப்பட்டேன் என்பதையும், தன்னுடைய பாவத்தின் கொடுமைத் தன்மையையும் உணர்ந்து ஒரு ஆத்துமாவை அது எவ்விதமாக அழிக்கும்படியாக செயல்படுகிறது என்பதையும் புரிந்து கொண்டார். அதற்குப் பின்பாக நியாயப்பிரமாணத்தின் நீதி சட்டம் அவருடைய வாழ்க்கைக்கு எவ்வளவு உகந்தது என்பதையும், அவருடைய வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருக்கிறது என்பதையும் விளங்கிக் கொண்டார்.*

*ரோமர் 7:14 -வது வசனம் வரைக்கும் பவுல் இறந்தகால ரீதியில், தன்னுடைய இரட்சிப்பிற்கு முன்பான பகுதியைக் குறித்துப் பேசுகிறார். இந்தப் பகுதியிலிருந்து அவர் நிகழ் காலத்தில் ஒரு இரட்சிக்கப்பட்ட மனிதனாய் பேசுகிறார். இப்பொழுது அவர் ஒரு விசுவாசியாக பாவத்தை எவ்வாறு வெறுக்கிறார் என்பதையும், அதைக்குறித்து ஆழமாக வருந்துகிறார் என்பதை பற்றியும் எழுதுகிறார் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. (வசனம் 15). இப்பொழுது அவர் 19 -வது வசனத்தில் நன்மை செய்ய விரும்புகிறதையும், 22 -வது வசனத்தில் தேவனுடையப் பிரமாணத்தைக் குறித்து சந்தோஷப்படுவதைக் குறித்தும், 25 -வது வசனத்தில் கர்த்தர் கொடுத்த விடுதலையைக் குறித்தும் பேசுகிறார். இந்த புதிய பவுல் 25 -வது வசனத்தில் சொல்லுகிற வண்ணமாக இரண்டுவிதமான தன்னமைகளைக் கொண்டவராக இருக்கிறார். ஒன்று அவருடைய மனது அதாவது புதிய தன்மை. இரண்டாவது அவருடைய மாம்சம், அதாவது பழைய தன்மை. இவைகள் இரண்டும் எப்பொழுதும் போராடுகிறவைகளாக இருக்கின்றன.*

*ரோமர் 7:14 -வது வசனத்தின் பிற்பகுதியை வாசிக்கும் பொழுது, பவுல் தன்னை விசுவாசி என்று சொல்லிக்கொண்டு, "நானோ பாவத்துக்குக் கீழாக விற்கப்பட்டு, மாம்சத்துக்குரிய வனாயிருக்கிறேன்" என்று சொல்லப்படுவது அதிர்ச்சியூட்டும்*

ஒரு காரியமாக காணப்படுகிறது. தவறான பாவத்தின் எண்ணத்தோடு கூட நாம் இந்த பகுதியை பார்க்கும்பொழுது அது முற்றிலும் முரண்பாடானதாக இருக்கிறது. இந்த இடத்தில் பாவம் என்று சொல்லும்படியான காரியத்தை அதிபயங்கரமான பாவங்களான கொலை, விபச்சாரம் போன்ற இவ்விதமான பாவங்களோடு கூட பவுல் ஒப்பிட்டுப் பேசவில்லை. இந்த இடத்தில் ஒரு கிறிஸ்தவனாக வாழ வேண்டிய அளவை ஒப்பிட்டு அதற்கு ஏற்றவண்ணமான பாவங்களைக் குறித்துப் பேசுகிறார். இந்த இடத்தில் அவர் சொல்லும்படியான அளவு என்பது முற்றிலுமான நேர்மைத்தன்மை, முற்றிலும் சுயநலமற்ற வாழ்க்கை, பெருமை என்பதே இல்லாத வாழ்க்கை, பொருளாசை என்பது முற்றிலும் இல்லாத ஒரு நிலை, எல்லையில்லாத அன்பு, தேவனை முழு இருதயத்தோடு நேசிக்கிற நிலை போன்ற இவ்விதமான காரியத்தை மனதில் வைத்துக்கொண்டு பேசுகிறார். பவுல் முழுமையாக தேவனை நேசித்து அவருடைய பணிக்கென்று முற்றிலும் அர்ப்பணித்து வாழுகிற அளவை வைத்து இங்கு பேசுகிறார். இவ்விதமான தேவனுடைய அற்புதமான ஆவிக்குரிய அளவுகளை குறிப்பிட்டு, அதில் அவர் எவ்விதம் அந்த அளவுகளுக்கு குறைந்தவராக இருக்கிறார் என்பதைக் குறித்துப் பேசுகிறார். அவருடைய தோல்வியை அவர் வெறுக்கிறார், அதே சமயத்தில் தனக்குள் இருக்கும்படியான எஞ்சிய பாவத்தன்மையை உணர்ந்து அதைக் குறித்து மாம்சம் என்று பேசுகிறார். நிச்சயமாக அவர் பாவத்தினால் முற்காலத்தில் மேற்கொள்ளப்பட்டதைப் போல இப்பொழுது மேற்கொள்ளப்படவில்லை, ஆனால் தெய்வ பக்திக்குரிய அவருடைய வாஞ்சையைக் குறித்து எண்ணிப்பார்க்கும் பொழுது, மாம்சம் தன்னுடைய வாழ்க்கையில் எந்த அளவுக்கு அதை தடை செய்கிறது என்பதைக் குறித்துப் பேசுகிறார்.

இது நிச்சயமாக எல்லா விசுவாசியின் அளவுகளாக இருக்கிறது. நாம் ஆத்துமாக்களை நேசிக்கவும், கிருபையின் வார்த்தைகளைப் பேசவும், சுயநலமில்லாமல் வாழவும், நல்ல எண்ணங்களைக் கொண்டிருக்கவும், மற்றவர்களுக்கு உதவி

செய்யக்கூடிய உணர்வுள்ளவர்களாக வாழவும், சுயபரிதாபம் கொள்ளாமல், சோதனை நேரங்களில் முறுமுறுப்பு இல்லாமல் வாழவும் விரும்புகிறோம். ஆனாலும் அநேக சமயங்களில் நாம் இவ்விதமாக பவுலைப் போல் கதறுகிறோம், நான் மாம்ச சிந்தனையுள்ளவனாக இருக்கிறேன், பாவத்தின்மேல் வெட்கப்பட்டவனாக இருக்கிறேன். நான் வெறுக்கிறதையே யோசிக்கிறவானாக, பேசுகிறவனாக, செய்கிறவனாக இருக்கிறேன். பவுல் 17 -வது வசனத்தின்படி பிரிக்கப்பட்ட ஒரு மனிதனாக இருப்பதை நேர்மையாக ஒத்துக்கொள்ளுகிறார். அவருடைய மனதில் ஒரு தெய்வ பக்தியுள்ள வாழ்க்கை வாழவேண்டுமென்று 18 -வது வசனத்தில் சொல்லுகிற வண்ணமாக அவர் காணப்படுகிறார். ஆனாலும் அவர் அந்த காரியத்தை நிறைவேற்றுவதில் வல்லமையில் குறைவுள்ளவராக இருக்கிறதைக் குறித்துப் பேசுகிறார். தோல்வி என்பது அவர் விரும்புகிற காரியமாக அல்ல, அதாவது 19 மற்றும் 21 -வது வசனங்களில் சொல்லப்பட்டபடி தொடர்ச்சியாக பாவ சுபாவம் நம்மை இழுத்துக் கொள்ளுகிறதாகவே இருக்கிறது என்பதைப் பற்றி பேசுகிறார்.

“ஆகிலும் என் மனதின் பிரமாணத்துக்கு விரோதமாய்ப் போராடுகிற வேறொரு பிரமாணத்தை என் அவயவங்களில் இருக்கக் காண்கிறேன்; அது என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது” (ரோமர் 7:23). நம்முடைய மனதில் சில சமயங்களில் பழைய பாவத்தன்மை உள்ளே நுழைய விரும்பும் பொழுது, சோம்பேறித்தனம், பொருளாசை, சுயபரிதாபம், முறுமுறுப்பு, பொல்லாத எண்ணங்களின் சிந்தனை போன்றவைகளைக் கொண்டு நம்மில் உட்புகப் பார்க்கிறது.

பவுல் தன்னைக் குறித்துச் சாக்குப் போக்கு சொல்லிக்கொள்ள விரும்பவில்லை. தனக்குள் இருக்கும் பாவ சுபாவத்தின் தூண்டுதல் தன்னுடைய தவறு அல்ல என்று சொல்லுகிற வண்ணமாக அவர் சொல்லவில்லை. அவர்

எப்பொழுதெல்லாம் அந்த அளவுகளில் இருந்து குறைந்து போகிறாரோ, அதற்குரிய குற்றத்தை அவர் தன்மேல் ஏற்றுக்கொள்ளுகிறார். ஆகவே இந்த விதமான சூழ்நிலையில், அவர் அங்கு தன்னுடைய பழைய பாவத்தன்மை, முழுமையான பரிசுத்தம் என்கிற பிரமாணத்தை தகர்த்துப் போடுகிறபடியால், அவர் வேதனையோடு கூட, "நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?" (ரோமர் 7:24) என்று கதறுகிறார். அதற்கு பதில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மட்டுமே என்று சொல்லுகிறார்.

பவுல், தன்னுடைய பழைய மனுஷத்தன்மையிலிருந்து கிறிஸ்துவின் மூலம் மூன்று விதங்களில் பாதுகாக்கப்படுகிறார்:

1. அவர் பட்சமாக இயேசுகிறிஸ்து செய்த செயலின் மூலமாக, ஏற்கனவே தன்னில் பழைய மனுஷத் தன்மைக்கு மேலாக மேற்கொள்ளும் புதிய மனுஷத்தன்மையைப் பெற்றிருக்கிறார்.

2. கிறிஸ்துவானவர் கொடுத்திருக்கும் பரிசுத்த ஆவியானவர் மூலமாக, அவருடைய உணர்த்துதலைப் பெற்று, பழைய மனிதப் பாவத்தன்மையினுடைய தூண்டுதலைத் தோற்கடிக்க முடியும்.

3. கிறிஸ்துவானவர் கடைசியாக அவருடைய மகிமைக்கென்று அழைக்கிற வேளையில் பழைய பாவத்தன்மையிலிருந்து முற்றிலுமாக கழுவி அவரை, முழுமையான வெற்றியுள்ளவராக ஏற்றுக்கொள்ளுவார் என்கிற நம்பிக்கையும் பெற்றிருக்கிறார்.

நாம் ரோமர் 6 மற்றும் 7 -வது அதிகாரத்தில் இவ்விதமான காரியங்களை சிந்தித்ததோடு கூட, அடுத்த அதிகாரத்தில் பவுல் எவ்விதமாக பரிசுத்தத்தைப் பெற்றுக்கொள்ளும்படியாக அவர் செயல்படுத்தின தீர்மானத்தை வெளிப்படுத்துகிறதைப் பார்க்கிறோம்.

# அத்தியாயம் 3

# பரிசுத்தத்திற்கான பவுலின் திட்டம்

**ரோமர் *7, 8* அதிகாரங்கள்:**

*பவுல் ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் இரண்டு தன்மையைக் குறித்து பேசினதின் மூலமாக பரிசுத்தத்தில் வளருவதற்கும், பாவத்தை நாம் தோற்கடிப்பதற்குமான 8 திட்டங்களைப் பார்ப்போம்*

## *1.* பிரச்சனையைக் கண்டு கொள்வோமாக:

*ரோமர் **7:14,18** வசனங்களில் நாம் பரிசுத்தத்தில் முன்னேறிச் செல்வதற்கான வழிமுறை இருக்கிறது. "மேலும், நமக்குத் தெரிந்திருக்கிறபடி, நியாயப்பிரமாணம் ஆவிக்குரியதாயிருக்கிறது, நானோ பாவத்துக்குக் கீழாக விற்கப்பட்டு, மாம்சத்துக்குரியவனாயிருக்கிறேன் அதெப்படியெனில், என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன்; நன்மை செய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது, நன்மை செய்வதோ என்னிடத்திலில்லை" (ரோமர் 7:14,18). பவுல் இங்கு தான் மாம்சத்திற்கு உரியவனாக இருக்கிறேன் என்பதை ஒப்புக்கொள்ளுகிறார். அதோடுகூட அவர் என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன் என்று சொல்லுகிறார். நாம் ஒப்புக்கொள்ள வேண்டிய காரியம் என்னவென்றால், அந்தப் பழைய விழுந்துபோன தன்மை தோற்கடிக்கப்பட்டதாக இருந்தாலும், அவைகள் இன்னும் நமக்குள் இருக்கிறது. ஆகவே நாம் அத்தோடுகூட யுத்தம்பண்ண வேண்டியவர்களாக இருக்கிறோம். இதை*

*நாம் சரியாக விளங்கிக்கொள்ளாத பொழுது, தவறான வழிகளுக்குள் செல்லுகிறோம். அவ்விதம் நாம் பழைய மனிதனோடு போராடவில்லை என்றால், மறுபடியுமாக பழைய சுபாவத்தினால் மேற்கொள்ளப்பட வாய்ப்புகள் உண்டு. ஒரு கிறிஸ்தவனாக வாழுவதற்கு, பழைய மனித தன்மையின் பாவத்திற்கு எதிராக போராடுவதற்குரிய நிச்சயமான தீர்மானம் அவசியமாக இருக்கிறது. ஆனால் கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக்கொள்ளுகிறவர்கள் அநேகர் உலகப்பிரகாரமான காரியங்களையும், பொழுதுபோக்கு காரியங்களையும் விரும்பிச் செய்வதினால், இவ்விதமான எதிரான போராட்டத்தைப் போராட விரும்புவதில்லை. கிறிஸ்தவ வாழ்க்கையானது இந்த உலகத்தில் மிகுந்த மகிழ்ச்சிகரமான ஒன்று, ஆனாலும் நம்முடைய தனிப்பட்ட பாவத்திற்கு எதிராக நாம் போராடுவதும், அதைக்குறித்து அதிகமான உணர்வோடு வாழுவதும் மிக அவசியமாக இருக்கிறது. நாம் அதை உணர்ந்து அந்த பழைய மனிதனுக்கு எதிராக போராடவேண்டும்.*

## 2. நேர்மறையான குறிக்கோள்களைக் கொண்டிருத்தல்:

*நம்முடைய ஆவிக்குரிய பிரயாணத்தில் பவுலின் இரண்டாவது திட்டத்தை பார்க்கிறோம். ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன் (ரோமர் 7: 19). இங்கு நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல் என்று சொல்லுகிறார் அப்படியென்றால், நான் இதைத் தெரிந்துகொண்டு இதையே செய்யும்படியாக தீர்மானிக்கிறேன் என்கிறார். இதில் தெளிவான மனசித்தம் இருப்பதை நாம் பார்க்கிறோம். இந்த வசனத்தில் அப்போஸ்தலன் தன்னுடைய மனதில் கொண்டிருக்கும்படியான குறிக்கோள் என்னவென்றால், ஏதோ கண்டும் காணாத ஒரு வாழ்க்கையாக அல்ல, தெளிவான ஒரு நோக்கத்தோடு வாழும்படியான வாழ்க்கையைக் குறிக்கும்படியாக இதைப் பேசுகிறார். இது ஒரு விளையாட்டு வீரன் ஒவ்வொரு நாளும் தன்னுடைய பயிற்சியின் மூலமாக தன் செயலை இன்னும் அதிகமாக*

சீர்படுத்தி தன்னுடைய குறிக்கோளை நிறைவேற்றும்படியான பிரயாசத்தைக் குறிக்கிறது.

நாம் கேட்க வேண்டிய காரியம் என்னவென்றால், நான் எவ்விதமான மனிதனாக இன்றைக்கு இருக்க வேண்டும்? நான் நிச்சயமாக ஜெபிக்க வேண்டும். பரிசுத்த ஆவியானவரின் கனியை வெளிப்படுத்த முயற்சிக்க வேண்டும். நிச்சயமாக நடைமுறையில் நான் இன்னும் அதிகமாக பொறுப்புள்ளவனாக இருக்க திட்டமிடவேண்டும், மற்றவர்களைக் குறித்து அவர்களின் ஆவிக்குரிய வாழ்க்கையின் நிலையைக்குறித்து அறிந்து செயல்பட வேண்டும், என்னுடைய வார்த்தையின் மூலமாக இன்னும் அதிக பிரயோஜனமுள்ளவனாகக் காணப்படவேண்டும், நான் செய்யும்படியான காரியத்தில் இன்னும் அதிக கருத்துள்ளவனாக காணப்படவேண்டும். நம்முடைய வாழ்க்கையில் எந்தப் பகுதியில் அல்லது எந்த குணத்தில் நாம் தவறுகிறோம்? ஒரு நடைமுறைக் கேதுவான குறிக்கோள் திட்டம் என்னவென்றால், நாம் தோற்றுப்போய்க் கொண்டிருக்கும் இந்தப்பகுதிகளில் வெற்றிப்பெற்று உறுதியான மனதோடு வாழவேண்டும்.

நம்முடைய வாழ்க்கையில் இவ்விதமான குறிக்கோளோடுகூட கிரமமாக செயல்படுகிறவர்களாக காணப்படுகிறோமா? குறிப்பாக வாழ்க்கையின் சில புதிய திருப்பங்கள், மாற்றங்கள் மத்தியில் இவ்விதமாக நாம் செயல்படுகிறோமா? பவுல் 'நான் விரும்புகிற நன்மையை' என்று சொல்லுகிறார். அதாவது நான் எந்த நன்மையை செய்ய வேண்டும் என்ற குறிக்கோளோடுகூட வாழுகிறேனோ அந்த நன்மை என்று சொல்லுகிறார். இவ்விதமான அனுதின திட்டத்தின் உறுதியைக் கைவிடுவது, நாம் நம்முடைய பரிசுத்த வாழ்க்கையில் மேலோங்கி வளர்வதைத் தடுக்கிறதாக இருக்கிறது.

### 3. பாவத்தை தவிர்க்க திட்டமிடுதல்:

பவுலினுடைய அடுத்த குறிக்கோளின் செயல்,

*19 -வது வசனத்தில் நான் விரும்பாத தீமையையே செய்கிறேன் என்று சொல்லுகிறார். இதில் அவர் ஒரு தெளிவான திட்டத்தோடுகூட தான் விரும்பாத தீமை என்று சொல்லுகிறார். பவுல் இவ்விதமாக சில குறிப்பிட்ட காரியங்களைச் செய்ய விரும்பாததைப் பார்க்கிறோம். பவுல் தன்னுடைய மனதில் நேர்மையான நல்ல நோக்கங்களைக் கொண்டவராக, சில குறிப்பிட்ட பாவங்களுக்கு எதிராக உறுதியாய் நிற்க வேண்டும் என்பதைக் குறித்துப் பேசுகிறார். பவுல் இந்த இடத்தில் தீமை என்று குறிப்பிடும்படியான காரியத்தை, அவர் எதைக் குறிப்பிட்டுச் சொல்லுகிறார் என்று நாம் ஆராயவேண்டுமென்ற அவசியமில்லை. ஆனால், நம்முடைய வாழ்வில் எந்த தீமையோடு நாம் போராடுகிறோம் என்பதைப் பார்ப்பது அவசியமாக இருக்கிறது. சில விசுவாசிகள் பொருளாசை போன்ற காரியங்களில் விருப்பமுற்று, தங்களை ஒப்புக்கொடுத்து பிறகு அதிலிருந்து வெளிவரும்படியாக பிரயாசப்படுகிற காரியங்களைப் பார்க்கிறோம்.*

*சிலர் அசுத்தமான எண்ணங்களுக்கு இடங்கொடுத்து, ஒவ்வொரு நாளும் ஜெபத்தோடுகூட போராட வேண்டியதாக இருப்பதைப் பார்க்கிறோம். சிலர் வெகு சீக்கிரத்தில் கோபம் அடைந்து விடுவதுண்டு. அவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் ஒவ்வொரு நாள் திட்டத்தில், அதை எதிர்த்து நிற்கவேண்டும் என்று போராடுவது அவசியம். சிலர் சடுதியில் தவறான வார்த்தையைப் பேசுவதும், கோள் சொல்லுவதும், தங்களைத் தாங்களே மேன்மையாக பேசிக்கொள்வதும், மற்றவர்களைப் பாதிக்கக்கூடிய வார்த்தைகளைப் பேசுவதுமுண்டு. சிலர் கடினமான அல்லது தவறான வார்த்தைகளைப் பேசிவிடுவதுமுண்டு. சிலருடைய பாவம் சுயநலத்தின் பாவமாக உள்ளது. சிலருடைய பாவம் சோம்பேறித்தனம். சிலர் உண்மையற்ற பேச்சுகளை பேசுவது. நேர்மையற்ற விதத்தில் அநேக சமயங்களில் காரியங்களைச் சாக்குப் போக்கு சொல்லுவது. இவ்விதமாக பல காரியங்கள் இருக்கிறது. பாவம் என்பது முறிக்கப்பட்டு, மேற்கொள்ளப்படுவதற்கு*

*நமக்கு அதிகமான வாஞ்சை தேவை. வாஞ்சை இல்லாமல், அதற்கான ஆயத்தம் இல்லாமல் நம்முடைய வாழ்வில் வெற்றி காணமுடியாது. நம்முடைய வாழ்க்கையில் நம்முடைய பரிசுத்தமாகுதலில் பவுலைப்போல, நாம் விரும்பாத தீமை என்று சொல்லக்கூடிய விதத்தில் காணப்படுகிறோமா?*

## *4.* உங்களை நீங்களே ஆராய்ந்து பார்ப்பதைப் பயிற்சி செய்யுங்கள்*:*

*பவுல் 19 -வது வசனத்தில், "ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன்" (ரோமர் 7:19) என்று சொல்லும்பொழுது, தன்னுடைய இந்த நிலையின் விளைவைக் குறித்தும் அறிந்திருந்தார். அதற்கு எதிராக பரிசுத்தத்திற்கென்று போராட வேண்டியதைக் குறித்து அறிந்து இவ்விதமாகப் பேசுகிறார். நாம் இதை எவ்விதம் நிறைவேற்ற வேண்டும் என்பதைக் குறித்து அக்கறையும், ஜாக்கிரதையும் இல்லையென்றால், வெறுமையாக திட்டமிடுவதில் என்ன பிரயோஜனம்? பவுலுக்கு இந்தக்காரியங்கள் அதிமுக்கியமாக காணப்பட்டதினால், அவர் ஒவ்வொரு நாளும் தன்னுடைய நடத்தையைக் குறித்து ஜாக்கிரதையுள்ளவராக நடந்து கொண்டார். பவுல் இவ்விதமாக வார்த்தைகளைப் பேசும்பொழுது அதைக்குறித்து அக்கறையும், பாரமுள்ளவராகப் பேசுகிறார். அதற்கு பின் நிச்சயமாக மனந்திரும்புதலும், புதிதான அர்ப்பணிப்பும் இல்லாமல் இருந்திருக்க முடியாது. நம்மை நாமே சுய பரிசோதனை செய்யவில்லை என்றால், நாம் எவ்விதம் ஆவிக்குரிய முன்னேற்றத்தைக் கொண்டிருக்க முடியும்? இயற்கையாக இவ்விதமான வெட்கப்படும்படியான, வேதனைப்படும்படியான வேளைகளை நாம் விரும்புவதில்லை. ஆனால், நாம் ஆண்டவரின் அன்பைப் பெற்றுக்கொள்ளவும், ஆண்டவரிடம் நெருக்கமாய் வரவும் இவைகள் அவசியமாக இருக்கின்றன. அதேசமயத்தில் நம்முடைய வாழ்க்கையில் சுத்திகரிக்கப்படவும் இவைகள் தேவைப்படுகின்றன. நாம் இவைகளைக் குறித்து ஒவ்வொரு நாளும் கருத்தோடும்*

அக்கறையோடும் செயல்படவில்லை என்றால், இவைகளைக் குறித்த காரியத்தில் நம்முடைய மனசாட்சி மழுங்கிவிடும். வில்லியம் பண்டிங் என்பவர் எழுதியிருக்கும் பாடலின் மூலமாக சுய பரிசோதனையை நிராகரிப்பதின் மூலம் ஏற்படும் நிலையைக் குறித்து நாம் வாசிக்கிறோம்.

**நான் குறைவுள்ளவனாக தூங்கினேன்**

**நான் ஒவ்வொருநாளும் செய்த தவறுகள் மேலே வரும்பொழுது,**

**ஆண்டவரே உம்மைத் தேடுகிறவனுக்கு இரங்கி இரக்கம் செய்யும்**

**காயப்பட்ட என்னை நீர் ஆறுதல்படுத்தும்.**

நீண்ட நேரம் நாம் வெறுமையாக பரிசோதிக்கிறதற்கு மாத்திரம் செலவிடக்கூடாது. ஆனால், அதிலிருந்து சுத்திகரிக்கப்படவும், நம்முடைய பாவங்கள் நீக்கப்படவும், குறிப்பிட்ட பாவங்களைக் குறித்து எண்ணி வருந்தி அவைகளை விட்டு விலகவும், தேவனுக்கு முன்பாக அவரின் கல்வாரியின் வெளிச்சத்திற்கு முன்பாக நம்மை சோதித்துப் பார்க்கவேண்டும். மேலும் நாம் பரிசுத்த ஆவியானவரின் உதவியைக் கொண்டு மற்றவர்களை நியாயந்தீர்க்கும்படியாக காணப்படக்கூடாது. அப்படியானால் பரிசுத்த ஆவியானவரின் துணையைக்கொண்டு இவைகளை விட்டு நாம் மெய்யாலும் விலகும்படியாக பார்த்துக் கொள்ளவேண்டும்.

சுய பரிசோதனை மூலம் நம்முடைய தோல்விகளை நாம் உணர்ந்து நேர்மையானவைகளைச் செய்யவும், அதாவது நாம் செய்ய வேண்டியவைகளை செய்யாமல் தவறிவிடுவதும், செய்யக் கூடாதவைகளை செய்வது போன்றவற்றை சுய பரிசோதனை மூலம் அறிந்துகொள்ளவேண்டும். நம்முடைய தனிப்பட்ட வாழ்விலும் கூட ஒரு தொழில் செய்வோமானால், அது எவ்விதம் நடைபெறுகிறது என்ற பல சூழ்நிலைகளை ஆராய்ந்து அறிந்துகொண்டே செயல்படுகிறோம். அவ்விதமாக தனிப்பட்ட வாழ்க்கையில் முன்னேற்றத்தையும், அதனின் நிலையைக் குறித்தும் ஆராய்ந்து பார்க்காமல் இருக்கமுடிமா?

## 5. வளர்ச்சிக்கான ஆர்வம்:

பவுல் தன்னுடைய தற்போதைய ஆவிக்குரிய நிலைக்கும், இயேசு கிறிஸ்துவின் அளவிற்கும் இடையிலான அந்தப் பிளவை உணர்ந்து "நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்?" (ரோமர் 7:24) என்று கதறுகிறார். அவர் தம்முடைய பலவீனத்தை உணர்ந்து நீதிக்காக பசி தாகத்தைக் கொண்டிருந்தார். இது சுய பரிசோதனைக்கு மேலாக தன்னுடைய தனிப்பட்ட ஆவிக்குரிய நிலையை நிறுத்துப் பார்க்கிறதாக இருக்கிறது. சுய பரிசோதனை தன் உண்மையான நிலையை மாத்திரம் பார்க்கிறதாக இருக்கிறது. ஆனால் ஆவிக்குரிய முன்னேற்றம் வேண்டுமென்று வாஞ்சிக்கிறவர்களுக்கு "சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன்" (பிலிப் 3:13,14). மேலும் ரோமர் 12:1 -ல் அவர் தன்னுடைய இருதயத்தின் வாஞ்சையை வெளிப்படுத்துகிறதைப் பார்க்கிறோம், "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்கவேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை".

அவ்விதமான வாஞ்சைகள் தேவனுக்கென்று ஒவ்வொரு நாளும் பரிசுத்தமாய் வாழ ஒப்புக்கொடுக்கிறதாக இருக்கிறது. தனக்கு எதிராக எழும்பும் சோதனை என்கிற போராட்டத்திற்காகப் போராடி அவைகளின் மேலாக வெற்றி சிறந்து தன்னுடைய மனதையும், எண்ணங்களையும் காத்துக்கொள்ளுகிறதாக இருக்கிறது. இவ்விதமான ஆவிக்குரிய முன்னேற்றத்தின் வாஞ்சை பாவத்தை வெறுக்கிறதாகவும், தேவனுக்கென்று அதிகமான வாஞ்சை கொண்டிருக்கிறதாகவும்

இருக்கிறது. இது தன்னுடைய வேலையை சரியாகச் செய்யும் மனிதனுக்கு ஒப்பாக இருக்கிறது. இவ்விதமான வாஞ்சை நமக்கிருக்கிறதா? இது தன்னை சுய பரிசோதனை செய்துகொண்டு அதற்காக ஜெபிப்பதைக் கொண்டதாக இருக்கிறது.

## 6. ஆவிக்குரிய உதவியைத் தேடுதல்:

இந்த ஆறாவது படியானது பரிசுத்தத்திற்காக வாஞ்சிக்கிற செயலாக இருக்கிறது. "நிர்ப்பந்தமான மனுஷன் நான்! இந்த மரணசரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்? நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய்த் தேவனை ஸ்தோத்திரிக்கிறேன். ஆதலால் நானே என் மனதினாலே தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்கும், மாம்சத்தினாலேயோ பாவப்பிரமாணத்துக்கும் ஊழியஞ்செய்கிறேன்." (ரோமர் 7:24, 25). பவுல் ரோமர் 8 -வது அதிகாரம் 1, 4 வசனங்களில் ஆவியின்படியே என்று சொல்லுகிறார். அதே சமயத்தில் 11, 14 -வது வசனங்களில் பரிசுத்த ஆவியானவரின் பெலத்தைப் பெறுவதைக் குறித்துப் பேசுகிறார்.

கர்த்தருடைய ஜெபத்தில் தேவன் சோதனைக்கு உட்பிரவேசியாமல் தீமையினின்று இரட்சித்துக்கொள்ளும் என்று ஜெபிக்கப் போதிக்கிறார். தவறான சிந்தனைகள் சோதனைக்காரனின் மூலமாக நம்முடைய பழைய சுபாவத்திலிருந்து எழும்பும்பொழுது அல்லது நம்மை சுற்றிலுமிருந்து எழும்பி வருகிற பலமான சோதனை வேளைகளில் நாம் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகிறோம். தினந்தோறும் நாம் ஒரு ஜீவனுள்ள உயிருள்ள மனசாட்சியோடு, கர்த்தர் நம்மை பார்த்துக்கொண்டிருக்கிறார் என்ற உணர்வோடு வாழ்வதற்காக ஜெபிக்கவேண்டும். நம்மை வீழ்த்தும்படியான பலமான பாவங்களை ஊக்கமான ஜெபத்தின் மூலமாக மேற்கொள்ளவும், பரிசுத்த ஆவியானவரின் துணையோடுகூட அவைகளை எதிர்த்து நிற்கவும் முடியும்.

ஒரு விசுவாசிக்குத் தேவையான ஆவிக்குரிய உறுதி ரோமர் 6 மற்றும் 7 -ம் அதிகாரங்களில் கொடுத்திருப்பதை நினைவுகூர்ந்து, மேலும் நாம் எப்படி பாவத்தில் நிலைத்திருப்போம் என்று கேட்கிறார்? இயேசு கிறிஸ்து நம்மை இரட்சிக்கும் படியாக செய்துமுடித்த எல்லாவற்றையும் பார்க்கும்பொழுதும், நம்மைப் பரலோக ராஜ்யத்தில் கொண்டு செல்லும் காரியங்களைப் பார்க்கும்பொழுதும், நாம் பாவத்திற்கு எதிராக போராடவேண்டும் என்ற உறுதியான தீர்மானம் நமக்குள் எழும்புகிறதாக இருக்கிறது.

## 7. பரலோகத்தின் காரியங்களைக் குறித்துக் கருத்தாக இருத்தல்:

அடுத்து முக்கியமான திட்டம், பரிசுத்தமாகுதலின் வாழ்க்கையில் முன்னேறி செல்வதென்றும், ஆவிக்குரிய காரியங்களில் நாம் எவ்விதம் முழுமனதோடு காணப்படுகிறோம் என்பதையும் சார்ந்துள்ளது. இது ரோமர் 8 -வது அதிகாரம் 5, 6 வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. “அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். மாம்ச சிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்” (ரோமர் 8:5,6).

ஆவிக்குரிய சிந்தை மற்றும் மாம்ச சிந்தை என்று சொல்லும்பொழுது, நம்முடைய மனது இவ்விரண்டில் ஏதாவது ஒன்றில்தான் இருக்கும் என்பதைக் குறிக்கிறது. இதற்கு இணையான ஆண்டவருடைய வார்த்தையானது கொலோசெயர் 3 -வது அதிகாரத்தில் கூறப்பட்டுள்ளது. “பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்” (கொலோ 3:2). நிச்சயமாக நாம் பரலோக சிந்தையைக் கொண்டிருப்பது என்பது ஆவிக்குரிய விதங்களில் ஆவிக்குரிய காரியங்களைப் படிப்பதிலும், அதற்காக ஜெபிப்பதிலும், அதைக் குறித்துப் பேசுவதிலும் இருக்கிறது. ஆண்டவராகிய

இயேசுவிற்காக இந்த உலகத்தில் செய்யும்படியான ஊழியங்களில், போராட்டங்களும் அடங்கியுள்ளது. மேலும் மற்ற விசுவாசிகளின் தேவைகள், குறைவுகளை நினைவு கூர்வதும் நம்முடைய தனிப்பட்ட ஜெபங்களில் அவர்களுக்காகப் போராடி ஜெபிப்பதும், சாட்சி கூறுவதிலும் அவர்களை உற்சாகப்படுத்துவதிலும் அடங்கியிருக்கிறது.

ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் இவைகள் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்குமானால், சோதனைகளின் பாதிப்பு அதிக வலுவாக நம்முடைய வாழ்வில் காணப்பட முடியாது. பொருளாசை போன்ற சோதனைகள் நம்முடைய வாழ்வில் அதிகமாக தாக்கி மேற்கொள்ளமுடியாது. இவைகளைக் குறித்துக் கருத்தாக திட்டமிட்டு நம் எண்ணங்கள், விருப்பங்கள் உலகப்பிரகாரமான காரியங்கள்மேல் சாயுமானால் அதை தவிர்த்து செயல்படுவது மிக அவசியமானது. அவ்விதமாக ஒரு விசுவாசியின் வாழ்வில் இருக்குமானால் மத்தேயு 6:21 -ல் கூறுவதை நினைவில் கொள்க, "உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்" (மத்தேயு 6:21).

## 8. பாவத்தை அழித்தல்:

பாவத்தை அழித்தல் என்பது நம்முடைய இருதய சிந்தையில் எழும்பும் தவறான எண்ணங்களை உடனடியாக அழிப்பதிலிருந்து துவங்குகிறது. அழித்தல் என்று கூறும்பொழுது தவறான விருப்பங்கள், எண்ணங்கள், வாஞ்சைகள், சிந்தனைகள், வார்த்தைகள், செயல்கள் போன்ற எல்லாவற்றையும் அழிப்பதாக இருக்கிறது. பவுல் ரோமர் 8:13 -ல் "மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்" என்று கூறுகிறார். மற்ற திட்டங்களை நாம் கண்டு கொள்ளாமல் அல்ல, ஆனால் இந்த எட்டாவது திட்டம் மிக முக்கியமானதாக இருக்கிறது. தேவனை ஜெபத்தில் உறுதியாகப் பற்றிக்கொண்டு

பாவத்தை அழித்து, நம்முடைய எண்ணங்கள், சிந்தனைகளை அழித்து மேலான அளவிற்கு உயர்த்தும்படியாக இருக்கிறது.

நாற்பது வருடங்களுக்கு முன்பாக நானும், என்னுடைய மனைவியும் ஒரு சபையை நிறுவும் பணியில், லண்டன் மாநகரத்தின் வடக்குபகுதியில் கர்த்தரின் கிருபையால் ஒரு பெரிய இடத்தை வாங்கி அதில் சபை கட்டும்படியாக ஒப்புக்கொண்டோம். அந்த இடமானது அதிகமான வேர்களும், முள் புதர்களும் இருந்ததினால் அதை சுத்தப்படுத்தும்படியாக, பெரிய கருவிகளை கொண்டு சுத்தப்படுத்தினாலும், அதில் அதிக அளவில் ஆழமான கடின வேர்கள் போன்றவைகள் இருந்தன. அதை எவ்வாறு சுத்தம் செய்வது? என்பது பெரிய பிரச்சினையாக இருந்தது. ஆகவே தொடர்ச்சியாக இந்த வேர்களை எல்லாம் நீக்கும்படியான கருவிகளை உபயோகப்படுத்தி, இறுதியில் அது ஒரு நல்ல இடமாக மாற்றப்பட்டது. அங்கு இவ்விதமான வேர்கள், முள் புதர்கள் போன்றவைகள் இருந்ததே தெரியாத அளவிற்கு மாற்றப்பட்டது. ஆனால் அந்த பணிகள் முடிந்தபின் மறுபடியுமாக அந்த முள் புதர்களின் செடிகள் வளர ஆரம்பித்தது. அவைகள் அந்த நிலத்தின் ஆழமான பகுதிகளில் கடினமான வேர்கள் இருந்ததைக் காண்பித்தது.

ஒரு கிறிஸ்தவனுக்கு இரண்டு தன்மைகள் உள்ளன. ஒன்று மேலாக இருப்பது, மற்றொன்று ஆழமாக இருப்பது. மேலாக ஒரு புதிய தன்மையும், கீழாக அல்லது ஆழமாக இருக்கும் பழைய தன்மையும் காணப்படுகிறது. எப்பொழுதெல்லாம் கீழான நிலையில் இருந்து செடிகள் வளர ஆரம்பிக்கப் பார்க்கிறதோ, அப்பொழுதெல்லாம் அவைகள் உடனடியாக துண்டிக்கப்படவேண்டும். இந்த ஆலய நிலத்தில் ஒவ்வொரு முறையும் செடிகள் வளர ஆரம்பித்த வேளையில் அவைகள் உடனடியாக நீக்கியபொழுது, நிலம் நன்றாக இருந்தது. ஆனால், அதைச் செய்வதைத் தவிர்க்கும் பொழுது மறுபடியுமாக ஆழமான வேர்கள் எழும்பி வளரும்படியாக காணப்பட்டது. ஒரு விசுவாசியின் உள்ளே புதைந்திருக்கும் இந்த பழைய

மனிதத்தன்மை வளரும்படியாக விட்டுவிட்டால், பிறகு அதை நீக்கி சுத்தப்படுத்துவது என்பது மிகக்கடினமான காரியமாக இருக்கும். கொஞ்சம் கோபம் வெளியே வருதல், அதிலிருந்து அடுத்தப்படி என்று இப்படி விட்டுவிடும் பொழுது அவைகளை கட்டுப்படுத்தக் கூடாத அளவிற்கு போய்விடக் கூடும். ஒரு விசுவாசி நேர்மையற்ற விதத்தில் இருந்துகொண்டு, அதற்குச் சாக்குப்போக்கு சொல்லிக்கொண்டு மெல்ல அவைகளை வளரவிடும் பொழுது, அவைகள் நிச்சயமாக அவருடைய ஆவிக்குரிய நிலையைச் சீர்குலைத்து, பிறகு அதிமோசமான நிலைக்குக் கொண்டுபோக முடியும். நாம் நம்முடைய சரீரத்தில் பாவங்களை ஒவ்வொரு நாளும் அழிக்கும்பொழுது, நமக்கு இவ்விதமான சோதனைகளைச் சுலபமாக மேற்கொள்ளவும், ஆண்டவரின் உதவியினால் அவைகளை சுத்தப்படுத்தி, பெரிய பாவங்களில் விழுந்துபோகாதபடிக்குக் காத்துக்கொள்ளவும் உதவுகிறது. எப்பொழுதாகிலும் மட்டுமே இவைகளை நாம் செய்கிறவர்களாக காணப்படுவோமானால், அதிகமான ஆவிக்குரிய தோல்விக்கு உள்ளாகி, வேதனையுள்ள ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டு விடுவோம்.

## அனைத்துப் படிகளும் நமக்கு அதிகமாக உதவிசெய்கிறவைகளாக இருக்கின்றன:

இந்த அத்தியாயத்தில் சொல்லப்பட்டிருக்கும் எல்லா படிகளும் அதிகம் முக்கியத்துவம் வாய்ந்தது. முதல் படியாக நம்மில் இருக்கும்படியான பழைய மனிதத்தன்மையைக் குறித்தும், அதினால் ஏற்படும் விளைவுகளைக் குறித்தும் உணர்ந்து நாம் வாழுவதை விட்டுவிடுவோமானால் நாம் குழப்பத்திற்குள் விழுந்துவிட வாய்ப்புண்டு. ஏனென்றால், உங்களுடைய எதிராளி யார் என்பதையும், அதோடுகூட நீங்கள் எப்படி யுத்தம் செய்யவேண்டும் என்பதைக் குறித்தும் நீங்கள் அறிந்திருக்க வேண்டும். இரண்டாவது படியானது, நாம் நேர்மையான உண்மையான நோக்கங்களைக் கொண்டிராமல் இருந்தால், நாம் குழம்பிக்கொண்டு வாழுகிறவர்களாக இருப்போம். மூன்றாவது

படியாக, நாம் குறிப்பிட்ட பாவங்களைத் தவிர்ப்பதில் கருத்துள்ளவர்களாக இல்லையென்றால், ஒரு நோக்கமற்ற ஆவிக்குரிய நிலைக்குச் சென்றுவிடுவோம். நான்காவது படியானது, தற்பரிசோதனை செய்யாமல் அதைக்குறித்து அக்கறையற்றவர்களாக இருக்கும்பொழுது நாம் சுயநீதி கொண்டவர்களாக வாழ ஆரம்பித்துவிடுவோம். ஐந்தாவது படியானது, ஆண்டவருக்கென்று வைராக்கிய வாஞ்சை இல்லாமல் வாழும்பொழுது நாம் பாவத்தைக் குறித்துச் சாக்குப்போக்குச் சொல்லுகிறவர்களாகவும், பரிசுத்தத்தைக் குறித்தும், தேவனுடைய மகத்துவத்தைக் குறித்தும் எண்ணமற்றவர்களாக வாழுகிறவர்களாகவும் காணப்படுவோம்.

ஆறாவது படியானது, நாட்கள் கணக்கில் ஆண்டவரின் உதவிக்காக ஜெபித்து, குறிப்பிட்ட பாவங்களுக்கு எதிராக எதிர்த்து நிற்கவில்லையென்றால், அதற்கு இணங்கி கொடுப்பவர்களாகக் காணப்படுவோம். ஏழாவது படியானது, உலகப்பிரகாரமான காரியங்களில் அதிகமான வாஞ்சைகளும், ஆவிக்குரிய காரியங்களில் குளிர்ந்துபோன நிலையில், எந்த ஒரு போராட்டத்தையும் போராடாமல் விட்டுவிடுவோம். கடைசியாக எட்டாவது படியானது, பாவத்தின் வாஞ்சைகளும், செய்கைகளும் நாம் செய்வதை நிறுத்தவில்லையென்றால், சத்துருவோடு கூட நாம் சமாதானமாகி முற்றிலும் குளிர்ந்து போய்விடுவோம்.

# அத்தியாயம் 4

# ஆவிக்குரிய சந்தோஷத்தில் நடத்தல்

"ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்"(கலா 5:22).

முதலாவது பரிசுத்த ஆவியானவர் நம்வாழ்வில் கிரியை செய்யும்பொழுது, அவர் சந்தோஷத்தைக் காண்பிக்காமல், மாறாக வருத்தத்தைக் காண்பிக்கிறார். அவர் நமக்குள்ளாக வரும் பொழுது நம்முடைய ஆவிக்குரிய வெறுமையை உணர்த்தி, பாவிகளாக இருக்கும் நாம் தேவனிடத்தில் என்ன செய்யவேண்டுமோ அதை உணர்த்துகிறார். அவர் மனந்திரும்புதலையும், விசுவாசத்தையும் கொடுத்து நம்முடைய வாழ்க்கையை மாற்றி அவருடைய சந்தோஷத்தை ஈவாக நமக்குக் கொடுக்கிறார். இதற்கு முன்னால், நாம் உலகப்பிரகாரமான சந்தோஷத்தை மாத்திரமே அனுபவித்துள்ளோம்.

ஆவிக்குரிய சந்தோஷம் என்பது உள்ளான இருதயத்தில் சந்தோஷத்தையும், புத்துணர்ச்சியையும் கொடுக்கிறது. அது நன்றி உணர்வையும், அமைதியையும் உள்ளடக்கியதாயிருக்கிறது. இந்த ஆவிக்குரிய சந்தோஷமானது இயேசு கிறிஸ்து நமக்காக இம்மையிலும் மாத்திரமல்ல, மறுமையிலும் செய்த, செய்யப் போகிற ஒவ்வொரு காரியத்தின் மூலமாக வருகிறது. ஆவிக்குரிய சந்தோஷமானது நிலையான சொத்தாகும். இது சில சமயங்களில் நம்முடைய பாவம், பயம், கவலை எதிர்பாராத நிகழ்வுகள் மூலம் மறைக்கப்பட்டு, நம் கண்களுக்கு தென்படாமல் இருக்கலாம். ஆனால் இது, எப்பொழுதும் ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் நிலைத்திருக்கிறது. அதேசமயம்,

ஒரு சில நேரங்களில் இந்த மகிழ்ச்சியானது உச்சத்திற்குச் செல்லுகிறது. வாழ்க்கையின் மோசமான சூழ்நிலைகள், கஷ்டங்கள் மற்றும் ஏமாற்றங்கள் மத்தியிலும்கூட இம்மகிழ்ச்சி விருத்தியடையலாம்.

இயேசு கிறிஸ்து, உங்களுடைய சந்தோஷத்தை ஒருவரும் எடுத்துப் போட முடியாது என்று சொல்லுவதின் மூலம், நிலையான சந்தோஷத்தைத் தருகிறார் என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். நம்முடைய வாழ்க்கையின் பின்னடைவிலும், அவர் எல்லாவற்றையும் ஒரு நோக்கத்தோடு செய்கிறார் என்பதை எண்ணி, அவருடைய கிருபையில் மகிழ்ச்சியாய் இருக்கலாம். நாம் துன்பத்தின் நடுவில் இருக்கும்பொழுது, "கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்" என்ற கட்டளையைக் கொடுத்திருக்கிறார். மேலும் பவுல், "உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்திருப்பதாக" என்றும் கூறுகிறார். இதற்கு அர்த்தம் என்னவென்றால், உன்னுடைய பெருந்தன்மை, புரிந்துகொள்ளுதல் மற்றும் உன்னுடைய ஆழ்ந்த அமைதி எல்லோரும் காணும்படியாக இருக்க வேண்டும் என்று கூறுகிறார். ஒரு நெருக்கடியான சூழ்நிலை ஊடாக நீ கடந்து சென்றாலும், ஆண்டவருக்குள்ளாக எப்பொழுதும் சந்தோஷமாக இருக்கும்படியாகக் கூறுகிறார். நிச்சயமாக இந்த ஆவிக்குரிய சந்தோஷம் பல விதங்களில் இருக்கிறது.

பேதுருவும் கூட "சொல்லிமுடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூர்ந்து" (1பேதுரு 1:8) என்று கூறுகிறார். இது ஒரு எல்லையைத் தாண்டக்கூடிய அளவாக இருக்கிறது. இருந்தும், இது மற்றொரு குணாதிசயத்தைக் கொண்டுள்ளது. அது என்னவென்றால், நிதானமாக பகுத்தறியும் தன்மை கொண்ட சந்தோஷமாக இருக்கிறது. இது நம்மை அறியாமல் ஏதோ உணர்ச்சியின் அடிப்படையில் நடைபெறுகிறது அல்ல, நாம் எதற்கு சந்தோஷப்படுகிறோம் என்ற காரணத்தை அறிந்துள்ளோம். மேலுமாக, இந்த மகிழ்ச்சியானது, உலகப் பொருள்களினாலோ,

ஆடம்பரத்தினாலோ பூர்த்தி செய்ய முடியாதது. நாம் ஏழ்மையிலும் கிறிஸ்தவ சந்தோஷத்தை பெற்று வாழலாம். கடந்த கால வரலாற்றைப் பார்ப்போமானால், எண்ணற்ற கிறிஸ்தவர்கள் பல்வேறு இழப்புகள், பாடுகள் மத்தியிலும் சந்தோஷமாக வாழ்ந்திருக்கிறார்கள். நவீன உலகத்தில் வாழுகிற நமக்கு இதைப்பற்றி அதிகம் தெரிந்திருக்க வாய்ப்பில்லை. உலகப்பிரகாரமான சந்தோஷம் நம்மில் நிலைத்திருப்பதற்கு, ஏதாவது அடிக்கடி உற்சாகமூட்டுவதற்கு உண்டான காரியங்கள் தேவையாக உள்ளது. உற்சாகமூட்டுதல் மறைந்த உடன், சந்தோஷமும் மறைந்துவிடும்.

**குணங்கள் மற்றும் பயன்கள்:**

நாம் சந்தோஷத்தின் வளர்ச்சி அல்லது குன்றிப்போகுதல் ஆகிய தன்மைகளைக் குறித்துப் பேசுவதற்கு முன், அதின் குணங்கள் மற்றும் பயன்களைச் சிந்திக்கலாம். இது ஒரு ஆராதனையில் முறையாகவும், பங்காகவும் இருக்கிறது. ஆராதனையில் பலவிதமான ஒழுங்குகளுக்கு அற்பாற்பட்டு, தேவன் தம்முடைய பிள்ளைகள் தமக்குள்ளாக சந்தோஷமுள்ளவர்களாய், அன்பு பாராட்டுகிறவர்களாய், அவருடைய அன்பில் மூழ்குகிறவர்களாய் இருக்கவே விரும்புகிறார். ஆவிக்குரிய சந்தோஷமானது ஒரு தொடர்ச்சியான விலையேறப்பெற்ற ஆராதனை முறையாக இருக்கிறது. அது ஒரு முறையான ஆராதனைக்கு முக்கிய பங்காக இருக்கிறது. அதினால் தான் சங்கீதக்காரன், "அவருடைய கூடாரத்திலே நான் ஆனந்த பலிகளையிட்டு, கர்த்தரைப் பாடி, அவரைக் கீர்த்தனம்பண்ணுவேன்" (சங் 27:6) மற்றும் "முன்னே நான் பண்டிகையை ஆசரிக்கிற ஜனங்களோடே கூட நடந்து, கூட்டத்தின் களிப்பும் துதியுமான சத்தத்தோடே தேவாலயத்திற்குப் போய்வருவேனே; இவைகளை நான் நினைக்கும்போது என் உள்ளம் எனக்குள்ளே உருகுகிறது" (சங் 42:4) என்று கூறுகிறார்.

சந்தோஷமற்ற கிறிஸ்தவனின் மூலம் கர்த்தர் மகிமைப்படுவதில்லை. சில சமயங்களில், ஆவிக்குரிய போரில் அல்லது கர்த்தருக்காக உழைப்பதில் பின்னடைவு ஏற்படலாம். ஆனால் நாம் கர்த்தர்மேல் வைத்திருக்கும் நம்பிக்கை, அமரிக்கை மற்றும் நன்றியறிதல் ஆகியவற்றை இழந்து கவலைப்படக்கூடாது. ஆவிக்குரிய சந்தோஷத்தின் பல நன்மைகளில் ஒன்று நம்மை பெலப்படுத்துகிறதாகும். சாத்தான் நம்மை தாக்கும் பொழுதும், நம்முடைய வாழ்வில் எதிர்மாறான அநேக காரியங்கள் நடக்கும் பொழுதும், ஆவிக்குரிய சந்தோஷம், நன்மை ஆகியவைகளின் வழியாய்ப் போகிறோம். மேலுமாக ஆவிக்குரிய சந்தோஷத்தில் மற்றுமொரு வெற்றி என்னவென்றால், அது நம்மை ஆண்டவருக்குப் பிரயோஜனமுள்ளவர்களாக மாற்றுகிறது. ஒரு வருத்தமுள்ள ஆவியைக் கொண்டவருடைய சாட்சியைப் பார்க்கிலும், மகிழ்ச்சியுள்ள ஆவிக்குரிய மனிதனின் சாட்சி மிகுந்த பயனுள்ளதாக இருக்கிறது. நம்முடைய இருதயத்தில் மகிழ்ச்சி இருக்கும்பொழுது மக்களால் அறிந்துகொள்ளப்படுகிறோம். விசுவாசிகள் ஆண்டவருக்குள்ளாக, உறுதியாய் நிற்பதும், ஆண்டவருடைய காரியங்களில் உறுதியானவர்களாக மற்றும் சந்தோஷமுள்ளவர்களாக இருப்பதையும் பார்த்து, அநேக அவிசுவாசிகள் சாட்சி கூறுவதை நாம் கேட்டிருக்கிறோம். சோர்ந்துபோன கிறிஸ்தவர்கள் மற்றவர்களுக்கு பிரயோஜனமுள்ளவர்களாக இருக்க முடியாது. ஆனால், மகிழ்ச்சி நிறைந்த விசுவாசிகள் ஆண்டவருடைய பணியில் மிகுந்த பிரயோஜனமுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

கிறிஸ்தவ சந்தோஷம் கூட பல்வேறு சோதனைகளில் இருந்து நம்மை தப்புவிக்கிறது. நாம் நிறைவாகவும், சந்தோஷமுள்ளவர்களாகவும் இருப்போமானால், பொருளாசை என்ற சோதனைக்குள்ளாக விழாமல் நம்மைப் பாதுகாத்துக்கொள்ள முடியும். ஒரு கிறிஸ்தவன் சிறிது சிறிதாக கிறிஸ்துவுக்குள் இருக்கும் சந்தோஷத்தை இழக்கும்பொழுது, அவர்களும் கூட உலகப்பிரகாரமான சந்தோஷத்தை

பெறுகிறவர்களாக, அதாவது ஆடம்பர பொருள்களை வாங்கவும், பெரிய வீடு வாங்கவும், உயர்தர வாகனங்கள் வாங்குகிறவர்களாகவும் இருக்கலாம். பொருளாசை என்ற பாதை எங்கே ஆரம்பிக்கிறதோ, அங்கே ஆவிக்குரிய சந்தோஷம் மறைந்துவிடுகிறது.

## நாம் எவ்வாறு சந்தோஷத்தை இழக்கமுடியும்?

நாம் எவ்வாறு இந்த சந்தோஷத்தை இழக்கிறோம்? ஆம்! பாவம் நம்மிடத்திலிருந்து ஆவிக்குரிய சந்தோஷத்தை பிரிக்கிறதாக இருக்கிறது. நாம் இந்த ஆவிக்குரிய சந்தோஷத்தில் நிலைத்திருப்பதற்கு அநேக முயற்சிகள் செய்தாலும், இது பரிசுத்த ஆவியானவரின் ஒரு ஈவாக நமக்கு கொடுக்கப்படுவதினால், நாம் பாவம் செய்யும்பொழுது ஆவியானவர் அதை நம்மிடத்திலிருந்து எடுத்துப் போடுகிறார். அதினால் தான் தாவீது 51 -ம் சங்கீதத்தில் "உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து" (சங் 51:12) என்று கூறுகிறார். அவன் பாவம் செய்ததினால், அவனுடைய நம்பிக்கை மற்றும் ஆவிக்குரிய சந்தோஷத்தை இழந்துவிட்டான். அதாவது ஆவிக்குரிய கனிகளின் எதிர் பதங்களான கலா 5:19-21 வசனங்களில் கூறியுள்ளவற்றில் ஒன்று கோபம். கோபம் பலவிதமான வெளிப்பாடுகளைக் கொண்டுள்ளது. இவை ஆவிக்குரிய சந்தோஷத்தை நம்மிடத்திலிருந்து எடுத்துப் போடுகிறதாய் காணப்படுகிறது.

நாம் நம்முடைய பாவத்தினால் ஆவிக்குரிய சமாதானத்தை இழந்து, ஆவியிலே குளிர்ந்துபோன நிலையில் காணப்படும்பொழுது, நம்மை சரிபடுத்திக் கொள்ளாமல் ஆவிக்குரிய சந்தோஷத்தை தேடுவதில் எந்த பயனுமில்லை. தேவன் மாத்திரமே நம்முடைய பாவத்தை மன்னித்து சந்தோஷத்தைத் திரும்ப கொடுக்கமுடியும். நாம் அறிக்கையிடப்படாத, ஒத்துக்கொள்ளாத, தொடர் பாவங்களில் காணப்படுவோமானால் ஆவியானவர் நமக்கு அந்த சந்தோஷத்தைத் திரும்பக் கொடுக்கமாட்டார்.

உதாரணமாக, நம்முடைய திருமணத்திற்கு பிறகு அன்பற்ற, மரியாதையற்ற நிலையில் கோபதாபங்கள் இருக்குமாயின், அங்கு பரிசுத்த ஆவியானவர், ஆவிக்குரிய சமாதானத்தை எப்படி கொடுப்பார்?

அதேபோல பெருமை, பொறாமை, கசப்பு, வெறுப்பு ஆகியவை இருக்கும்பொழுது அங்கு ஆவிக்குரிய சந்தோஷம் இருக்காது. மேலும் சுயபரிதாபம் இருக்கும்பொழுதும், ஆவிக்குரிய சந்தோஷம் இருக்காது. ஏனென்றால், சுயபரிதாபமானது நன்றி உணர்வு, அன்பு மற்றும் சந்தோஷத்திற்கு இடம் கொடுக்காமல், மனிதனுடைய உணர்ச்சிகளுக்கு மாத்திரமே இடம் கொடுக்கிறது. மேலும் தொடர்ச்சியாக சுயபரிதாபத்தில் காணப்படுவோமானால், நாம் அனைத்து சந்தோஷத்தையும் இழக்கிறவர்களாய் காணப்படுவோம்.

நாம் சந்தோஷத்தை இழப்பதற்கு முக்கிய காரணம், பல வருடங்களாக பயின்று கொண்டிக்கும் விசுவாசத்தை, அப்பியாசப்படுத்தத் தவறுவதே ஆகும். இது கடினமானது, ஆனால் இதை கர்த்தருக்கு முன் நிறுத்துவேன். இந்த சூழ்நிலையை அவருக்கு முன்பாக கொண்டுவருவேன். அவரால் இந்த சூழ்நிலையிருந்து என்னை பெலப்படுத்தவும், உயர்த்தவும் முடியும். கடந்த காலத்தில் தேவன் செய்த நன்மைகளை நான் நினைவு கூர்ந்து, அவரை துதித்து நன்றி செலுத்துவேன். மேலும் “தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறது” (ரோமர் 8:28) என்ற வாக்குத்தத்தத்தை தியானித்து அவருக்குள்ளாக எழும்புவேன் என்று கூற வேண்டும். இல்லையென்றால் ஆவிக்குரிய விதத்தில் நாம் என்ன தவறினாலும், சுயபரிதாபமும், துயரமும் நம் இருதயத்தைக் கவ்விப் பிடித்துக்கொள்ளும். அப்பொழுது நாம் விசுவாசத்தில் தோற்றவர்களாய்க் காணப்படுவோம்.

சோதனைகள் இல்லாத பொழுதும் கூட நாம் கர்த்தர் செய்த நன்மைகளை நினையாமல் இருக்கும்பொழுது, அதைப் பாராட்டாமல் இருக்கும்பொழுது, நாம் கர்த்தருக்குள்

சந்தோஷமற்றவர்களாக காணப்படக்கூடும். நாம் அநுதினமும் கர்த்தருக்குள் இருப்பதினால் வரும் ஆசீர்வாதங்கள், சிலாக்கியங்கள், வாய்ப்புகளை எண்ணிப்பார்க்கிறோமா? அல்லது அவர் நமக்கு கொடுக்கும் ஒவ்வொரு ஆசீர்வாதத்தையும் உணராமல் வெறும் அனுபவிக்கிறவர்களாக மாத்திரம் காணப்படுகிறோமா? ஒவ்வொரு நாளும், ஏதோ ஒரு நேரத்திலாகிலும், அவர் நமக்கு கொடுத்திருக்கும் சரீர மற்றும் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களுக்காய் அவரை நன்றியோடு துதிக்கிறோமா? இதுவே ஆவிக்குரிய சந்தோஷத்திற்கு முக்கிய காரணமாய் இருக்கும்.

உலக ஆசை நம்முடைய ஆவிக்குரிய மகிழ்ச்சியைக் கெடுத்துவிடும் என்று முன்னமே கூறியுள்ளோம். நாம் இந்த உலகத்தின் எண்ணங்கள், ஆசைகளினால் மனதை நிரப்புவோமானால், ஆவிக்குரிய சந்தோஷத்தில் குன்றியவர்களாய் காணப்படுவோம். நாம் உலக சந்தோஷம், ஆவிக்குரிய சந்தோஷம் இரண்டையுமே ஒரே நேரத்தில் பெற்றவர்களாய் காணப்பட முடியாது. நாம் உலக சிநேகிதர்களாய்க் காணப்படுகிறோமா? இது கட்டாயமாக நம்மிடத்திலிருந்து ஆவிக்குரிய சந்தோஷத்தை எடுக்கிறதாய் இருக்கிறது. ஏனென்றால் 1கொரி 15:33 வது வசனத்தில், "மோசம்போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்" என்று பவுல் கூறியுள்ளார். அதின் பொருள் என்னவெனில், பொல்லாதவைகளின் ஐக்கியமானது, நல்ல எண்ணங்கள், செய்கைகள், உணர்வுகளை கெடுத்துவிடும் என்பதாகும்.

## நாம் சந்தோஷத்தை எப்படி அதிகரித்துக்கொள்ள முடியும்?

ஆவிக்குரிய சந்தோஷத்தின் ஊற்றாய் இருக்கிற பரிசுத்த ஆவியானவர், பல விதங்களில் அதைக் கொடுக்கிறார். அவர் முதலாவதாக, ஒரு குறிப்பிட்ட அளவு சந்தோஷத்தை நம்முடைய இருதயத்தில் ஊற்றுகிறார் "நமக்கு அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு நம்முடைய இருதயங்களில்

ஊற்றப்பட்டிருக்கிறது"(ரோமர் 5:5). அதன் பின்பு, எவ்வாறு பெற்றோர் முன்பாக வைக்கும் உணவை ஒரு குழந்தை எப்படி தானாகவே எடுத்து உண்டு வளர வேண்டுமோ, அதேபோல பரிசுத்த ஆவியானவரும், நாம் எடுத்துக்கொள்ளும்படியான சந்தோசத்தின் ஆகாரங்களை நிறைய வைத்திருக்கிறார்.

அதில் முதலாவது, அவரை ஆராதிப்பதாகும். நாம் அவருடைய குணாதிசயங்களைப் பற்றிப் பாடும்பொழுது, தேவனின் மகத்துவத்தை எண்ணி, அதன் மூலம் நிம்மதி மற்றும் சந்தோஷத்தைப் பெறுகிறோம். நாம் ஒரு மகத்துவமான தேவன், இரட்சகர், வழிகாட்டி மற்றும் நண்பரை கொண்டிருக்கிறோம் என்று எண்ணி மகிழ்கிறோம். கல்வாரியின் தியாகத்திற்காய் நாம் அவரைத் துதிக்கும்பொழுது, நம்முடைய மனம் நன்றியோடும், களிப்போடும், அன்போடும் நிறைந்து வழிகிறது. நாம் தனியாகவோ அல்லது மற்றவர்களோடோ எப்படி ஆராதித்தாலும், உண்மையாக செய்யும் ஆராதனையினால் கிடைக்கும் சந்தோஷத்தைப்போல வேறு எதுவுமில்லை. இதுவே ஆவிக்குரிய வாழ்க்கைக்கு மிக அவசியமான ஒன்றாகும்.

மனந்திரும்புதல் நம்முடைய மிகுந்த சந்தோஷத்திற்கு மற்றுமொரு ஆதாரமாய் இருக்கிறது. ஏனென்றால், மனசாட்சி நிம்மதி அடைந்ததாகவும், பாவ பாரம் நீக்கப்பட்டதாகவும், நாம் தேவனோடு சமாதானம் அடைந்தவர்காளாகவும், அதாவது எல்லா புத்திக்கும் மேலான தேவ சமாதானத்தை கொண்டவர்களாய் உள்ளோம். "இப்பொழுது ஒப்புரவாகுதலை நமக்குக் கிடைக்கப்பண்ணின நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாய் நாம் தேவனைப்பற்றியும் மேன்மைபாராட்டுகிறோம்"(ரோமர் 5:11). நம்முடைய இரட்சகர், நம்மேல் இருந்த ஆக்கினைத் தீர்ப்பை எடுத்துவிட்டார். நம்முடைய பாவம் போய்விட்டது, தேவன் இனி ஒருபோதும் நம்முடைய பாவத்தை நினைவு கூறுவதில்லை. நம்முடைய மனசாட்சி சுத்திகரிக்கப்பட்டு, சுத்தமாக்கப்பட்டுவிட்டது.

இவைகள், ஒப்பிடமுடியாத ஆசீர்வாதங்களாய், நமக்கு மிகுந்த சந்தோஷத்தைக் கொடுக்கமுடியும்.

சில நேரங்களில் ஒரு காலத்தில் நாம் செய்த பாவங்கள் நினைவுக்கு வரும். அந்த நாட்கள் எவ்வளவு கொடுமையானதாக இருந்தது. நாம் செய்தவைகள், செய்ய நினைத்துப் பேசினது, நாம் அதையெல்லாம் நினைக்கும் பொழுது மறுபடியும் ஒருமுறை மனந்திரும்ப வேண்டுமென்று நினைப்போம். ஆனால் அப்படி ஒருபோதும் செய்யக்கூடாது. ஏனென்றால், நாம் மனந்திரும்பும் பொழுது அவர் அனைத்தையும் மன்னித்துவிட்டார். அதற்காக நாம் அவரை துதிக்கவும் நன்றி செலுத்தவும் வேண்டும். நாம் அப்படியாக கடந்த பாதையைக் குறித்து நினைவு கூறுவோமானால், அவர் நம்முடைய பாவத்திற்காக இரத்தம் சிந்தி, மரித்து, நம்முடைய பாவத்தை கழுவினதற்காக, நன்றியும், துதியும் ஏறெடுக்கும் வண்ணமாக நினைவு கூறவேண்டும். "தேவன் என் பாவத்தை மன்னித்துவிட்டார், புது சந்தோஷத்தையும், பெலத்தையும் கொடுத்தார். அவருடைய உதவியினாலே, அவருக்கு கீழ்ப்படியவும், கனத்தைக் கொடுக்கவுமே வாழுவேன்" என்று கூறும்பொழுது மனதுக்குள் எவ்வளவு சந்தோஷமும், மகிழ்ச்சியும் நிரம்புகிறது. மனந்திரும்புதலினால் மனத்தாழ்மையும், சந்தோஷமும் உண்டாகிறது மாத்திரமல்ல, அது பாவத்திற்கு எதிராக நம்மைப் பாதுக்காக்கிறதாய் இருக்கிறது. இதுவே உண்மையான ஆவிக்குரிய வாழ்வாய் இருக்கிறது.

நாம் தொடர்ந்து, கர்த்தர் செய்த நன்மைகளை நினைத்து பார்க்கும் பொழுது, அதின்மூலம் பெரும் மகிழ்ச்சியை அடைவோம். அதினால் தான் மோசே "உயர வானத்திலும் தாழ பூமியிலும் கர்த்தரே தேவன், அவரைத் தவிர ஒருவரும் இல்லை"(உபா 4:39) என்றும், இதை "உன் மனதிலே சிந்தித்துக் கொள்" என்றும் சொல்லுகிறார். ஆவிக்குரிய காரியங்களை ஆழமாக, நிதானத்தோடு, இருதயத்தில் எண்ணிப்பார்க்கக் கூறுகிறார். அதைப்பற்றி ஆராய்ந்து, அதின் மகத்துவத்தை

நாம் விளங்கிக்கொள்ள வேண்டும். இதை செய்ய தவறினால், நம்முடைய சந்தோஷம் குறைந்ததாகவே காணப்படும். நன்றியறிதலோடு திரும்பிப்பார்த்தல் சந்தோஷத்தின் நிச்சயமான ஆதாரமாய் இருக்கிறது. அவர் நமக்கு கொடுத்த மீட்பை வாக்குத்தத்தங்களை, விசுவாசத்தின் உபதேசங்களை அதிகமாய் தியானிக்க நேரம் கொடுக்க வேண்டும். உதாரணமாக, அவர் நம்மில் காண்பித்த விடா முயற்சியின் சத்தியத்தைச் சிந்திப்போம். அப்படியான வசனங்களை நாம் அறிந்து அதை வாசித்து, நெருக்கமான சூழ்நிலைகளில் அவரிடத்தில் நாம் கிட்டிச்சேர முடியும். தேவனிடத்திலிருந்து ஒருவனும், ஒருக்காலும், நம்மைப் பிரிக்க முடியாது என்பதையும், நாம் தேவனுக்கு மட்டுமே சொந்தமானவர்கள் என்ற பெரிய நம்பிக்கையும் பெற்றுக் கொள்ளுவோம். இங்கே நாம் எப்பொழுதும் மகிழ்ச்சியாய் இருப்பதற்கான பெரிய ஆதாரத்தைக் காண்கிறோம். இதுவே ஆவிக்குரிய வாழ்க்கையாக இருக்கிறது.

அடுத்தபடியாக, நம்முடைய சந்தோஷத்திற்கு காரணம் ஜெபமே ஆகும். "நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்"(யோவான் 14:13). நம்முடைய ஜெபம் வெறும், சுய தேவைகளுக்கு மாத்திரம் (அவசியமான தேவைகளை தவிர) இல்லாமல், மற்றவர்களுடைய ஆசீர்வாதத்திற்காகவும், சுவிசேஷம் பரவுவதற்காகவும், கிறிஸ்துவின் பணியாளர்களுக்காகவும், அவர்களுக்கு செய்யவேண்டிய உதவியைக் குறித்தும், நம்முடைய சொந்த பரிசுத்தமாகுதல் போன்றவற்றிற்கும் நாம் ஜெபிப்போமானால், நம்முடைய ஜெபம் கேட்கப்படும். இப்படிப்பட்ட வாக்குத்தத்தத்தை பெற்ற நாம் எவ்வளவு சந்தோஷமும், மகிழ்ச்சியும் நிறைந்த மக்களாய் இருக்க வேண்டுமே! தேவன் குறித்த நேரத்தில், வழியில், ஞானத்தில் நம்முடைய கூப்பிடுதலுக்கு பதிலளிப்பேன் என்று சொல்லிருக்கிறார்.

நம்முடைய தேவன் சர்வ வல்லமை கொண்டவராய் இருந்தாலும் கூட, நாம் அற்பமான அவருடைய பிள்ளைகளாய்

இருந்தாலும் நம்முடைய கூப்பிடுதலுக்கு செவிகொடுத்து, நமக்கு பதில் அளிப்பதில் பிரியமுள்ளவராய் இருக்கும் படியான பெரிய சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறோம். நம்முடைய அறிவுக்கும் எட்டாத ஆச்சரியமான விஷயம் என்னவென்றால், அவர் உலகத் தோற்றத்திற்கு முன்னமே சகலத்தையும் திட்டமிட்டு, அவருடைய ஆளுகைக்குள்ளாய், விருப்பத்தை நம்மிடத்தில் வைத்து அதை நிறைவேற்றுகிறவராய் இருக்கிறார். இது மனித ஞானத்திற்கு அப்பாற்பட்டது. இதையறிந்தும் நாம் எப்படி சந்தோஷமற்றவர்களாய், எதிர்மறையான சிந்தனைகளோடு இருக்கமுடியும்?

யாராகிலும் பிரதம மந்திரி எனக்கு மிக நெருக்கமானவர், எனக்கு செவிகொடுக்கிறவர் என்று சொல்லுவதைவிட, தேவாதி தேவன் நான் நம்புகிறவர் எனக்கு செவிகொடுக்கிறவர் என்று சொல்லுவது மிக உன்னதமான ஒரு சிலாக்கியமாக இருக்கிறது. எந்த ஒரு சூழ்நிலையிலும் நாம் நெருக்கப்பட்டு, நசுக்கப்பட்டு போய்விடக்கூடாது. ஒருவேளை நாம் நம்முடைய அன்பான நெருக்கமானவர்களுக்காக, கிறிஸ்துவின் பக்கம் வராமல் இருப்பவர்களுக்காக அதிகமாக மன்றாடி ஜெபிக்கிறவர்களாக இருக்கலாம். அவர்களுக்குள்ளாக அதிகமான சந்தேகங்களும் எதிரிடையான எண்ணங்களும் காலப்போக்கில் அதிகமாக காணப்படுகிறதாகக் கூட இருக்கலாம். ஆனாலும் நாம் நமக்குள்ளாக எல்லாவற்றையும் நிர்ணயிக்கிற தேவன், எனக்கு அன்பானவர்கள் எவ்வளவாக கலகம் பண்ணினாலும், கர்த்தர் என்னுடைய ஜெபத்தைக் கேட்டு அவர்களை மாற்றமுடியும், அவர் சர்வ வல்லமையுள்ள தேவன் என்று விசுவாசிப்பதும், எண்ணுவதும் மிகுந்த சந்தோஷத்தையும், சமாதானத்தையும், மகிழ்ச்சியையும் நமக்குக் கொண்டுவரும்.

அதே விதமாக நாம் கர்த்தரிடத்தில் நம்முடைய எல்லாத் துயரங்களையும் பாரங்களையும் எடுத்துச் செல்லவேண்டும். நம்மை உருவாக்கின தேவனிடத்தில், இவ்விதமான காரியங்களை பகிர்ந்து கொள்ளுவது, நமக்கு

கிடைத்த இன்னொரு சிலாக்கியமான காரியம். நம்முடைய வாழ்க்கையில் அக்கறையுள்ளவராக இருக்கும் இந்த தேவன், சர்வத்தையும், பரலோகத்தையும் ஆளுகை செய்கிறவரும், நம்முடைய துயரங்களையும், துக்கங்களையும் அறிந்தவராகவே இருக்கிறார் (1பேதுரு 5:7). இது வல்லமையான, அதிக செல்வம் உள்ள மக்களைக் காட்டிலும், மிகப்பெரிய ஐஸ்வரியமான ஆசீர்வாதமாக இருக்கிறது.

அடுத்த நாளோ அல்லது அந்த வாரத்திற்குள்ளாகவோ தேவன் நம்முடைய ஜெபத்திற்கு அளிக்கும் பதிலை நாம் மறந்துவிடக்கூடிய, கவனக்குறைவான மக்களாக இருக்கிறோமா? கர்த்தர் ஜெபத்திற்கு ஆச்சரியமான விதங்களில் பதிலளிக்கிறபடியால், இவைகளை நாம் நினைவில் கொண்டு மறுபடியுமாக திரும்பிப் பார்க்கிறவர்களாக இருக்க வேண்டும். நம்முடைய வாழ்வில் ஒவ்வொரு மணி நேரத்திற்கும், ஒவ்வொரு நாளுக்கும், ஒவ்வொரு வாரத்திற்கும் அவ்விதமாக தேவன் பதிலளிக்கும்படியான காரியங்கள் இல்லையா? சில சமயங்களில் சிலருக்காக நாம் மாதங்களாக, வருடங்களாக ஜெபிக்கிறவர்களாக இருப்போம். பிறகு அந்த ஜெபத்திற்கு பதில் கிடைக்கும். இவைகள் எவ்வளவு மகிமைகரமானதாக இருக்கிறது என்பதை நாம் எண்ணிப் பார்ப்பதில்லையா? பரலோகத்தின் தேவன் என்னுடைய வாழ்க்கையில், என்னுடைய குறைவான ஜெபத்தைக் கேட்டு நித்திய நித்தியமாக அழிந்துபோகிற ஒரு ஆத்துமாவை விடுதலையாக்கி, அன்பும், வெளிச்சமும் நிறைந்த ராஜ்யத்தில் கொண்டுவருவது எவ்வளவு மகிமைகரமான காரியம்! இவ்விதமான காரியங்கள் மிகவும் ஆச்சரியத்திற்கு உரியதாகவும், ஆண்டவரை நாம் நன்றியுள்ள இருதயத்தோடு துதிப்பதும் ஸ்தோத்தரிப்பதும் எவ்வளவு அவசியமானதாயிருக்கிறது. இவைகள் ஒரு மெய்யான ஆவிக்குரிய காரியமாயிருக்கிறது. இவைகள் நாமாகவே சிந்தித்துக் கொண்டு செயல்படுகிற காரியங்களாக எண்ணிவிடக் கூடாது.

இன்னொரு சந்தோஷத்திற்குரிய காரியம் ஆண்டவருடைய வார்த்தையை நாம் ஆராய்ந்து படிப்பது. ஒருவேளை வேதாகமத்தில் ஒருநாளைக்கு வெறும் ஐந்து வசனங்களை மாத்திரமே படித்து, அதைக் குறித்து கருத்தற்றவர்களாக இருப்போமானால் அது எவ்வளவு வருத்தமான காரியம். அருமையான நண்பர்களே!, ஆண்டவருடைய வார்த்தையை நாம் வாசிப்போம். ஒருவேளை உங்களுக்கு வேறுவிதமான உபகரணங்கள் இல்லையென்றாலும், மேத்யு ஹென்றி எழுதின வேதாகம விளக்க உரைகளை படிப்பீர்களானால், அது நிச்சயமாக உங்களுடைய எண்ணங்களைத் தூண்டிவிடுகிறதாகவும், வேதாகமத்தை எவ்விதம் வாசிப்பது என்றும் அதில் எவ்வாறு சந்தோஷம் கொள்ளுவது என்பதையும் காட்டுகிறதாக இருக்கிறது. "உமது பிரமாணங்களில் மனமகிழ்ச்சியாயிருக்கிறேன். கர்த்தாவே, உம்முடைய இரட்சிப்பின்மேல் ஆவலாயிருக்கிறேன்; உம்முடைய வேதம் என் மனமகிழ்ச்சி" **(சங் 119:16,174).** என்று சங்கீதக்காரன் சொல்லுவது போல, நாம் சொல்லக்கூடுமா?

வேதாகமம் வல்லமையுள்ளதாகவும், மிகுந்த சந்தோஷத்தின் ஊற்றாகவும் காணப்படுகிறது. உதாரணமாக, புதிய ஏற்பாட்டில் காணப்படும் அனைத்துச் சத்தியங்களும், வேதாகமத்தின் ஒற்றுமையையும், ஒருவரே வேதாகமத்தை எழுதினார் என்பதையும் வெளிப்படுத்துகிறதாக இருக்கிறது. நாம் அவைகளை சரியான விதத்தில் கண்டு, அவற்றைப் படிக்கும்பொழுது ஒவ்வொரு முறையும் நாம் கர்த்தருக்கு நன்றி செலுத்துவோமாக. தேவனுடைய வார்த்தை மற்றும் அதனுடைய ஆச்சரியமான ஆழத்தையும், ஆச்சரியமான ஒருமித்த நிலைத்த தன்மையையும் நாம் நேசிப்போமாக. ஒவ்வொரு நாளும் இந்த நாளில் நான் என்ன சத்தியத்தை கற்றிருக்கிறேன்? என்று கேட்போமாக. இந்நாளில் என்ன நிச்சயத்தை கண்டிருக்கிறேன்? என்ன கடமை மற்றும் உற்சாகம் அல்லது வாக்குத்தத்தம் எனக்கு இன்று கொடுக்கப்பட்டிருக்கிறது? இந்த வேதப்பகுதியில் ஆண்டவரைப் பற்றி, இரட்சகரைப் பற்றி

என்ன சொல்லப்பட்டிருக்கிறது? என்று ஆராய்ந்து பார்ப்பது மிக அவசியமானது.

ஆதியாகமம் முதல் வெளிப்படுத்தின விசேஷம் வரைக்கும் கிறிஸ்துவானவர் முக்கியமானவராக, தொடர்ச்சியாய் காணப்படுகிறவராக இருக்கிறார். அதுமாத்திரமல்லாமல், மனிதனுடைய சுபாவங்கள், தன்மைகள் போன்றவற்றை மிக ஆழமாக வேதாகமத்தின் ஆரம்ப முதல் கடைசி பகுதி வரை நாம் பார்க்கக் கூடியவர்களாக இருக்கிறோம். நாம் கவனமாக பார்ப்போமானால் அவைகளை நிச்சயமாக நம்மால் பார்க்க முடியும். தேவனுடைய இந்த புத்தகத்தில், மனிதன் எண்ணிப்பார்க்க முடியாத அளவிற்கு உன்னதமான ஞானமும், கற்றுக்கொள்ளக்கூடிய காரியங்களும், தெய்வீக வார்த்தைகளும் இருக்கின்றன. இவைகளை நாம் அறிந்து படிப்பதற்கு தெய்வீக ஞானம் நமக்குக் கொடுக்கப்படுகிறதாக இருக்கிறது. நாம் மிகுந்த சந்தோஷத்தோடும், மகிழ்ச்சியோடும் இவ்விதமான ஞானத்தைப் பெற்றுக்கொள்ளுபவர்களாக காணப்படுவோமாக. இதுவே மெய்யான ஆவிக்குரிய வாழ்க்கையாக இருக்கிறது.

தேவன் எவ்விதம் மற்ற விசுவாசிகளின் வாழ்க்கையில், தம்முடைய காரியத்தை நடப்பிக்கிறார் என்பதை வேதாகமத்தில் உள்ள தேவ மக்களுடைய வாழ்க்கையைப் படிக்கும்பொழுது நாம் மகிழ்ச்சி அனுபவிக்கக் கூடியவர்களாக இருக்கிறோம். சில சமயங்களில் ஒருவரைக் குறித்து ஒருவர் முறுமுறுக்கிறவர்களாக இருக்கிறோம். நாம் அவ்விதம் இருக்கக்கூடாது. நாம் அவ்விதமாக குற்றம் சாட்டுகிறவர்களாக இல்லாமல், ஆண்டவர் அவர்களுடைய வாழ்வில் செய்திருக்கிற கிருபையின் காரியங்களைப் பார்த்து சந்தோஷப்பட வேண்டும். நாம் மற்ற நல்ல ஆவிக்குரிய கிறிஸ்தவர்களைப் பார்க்கும்பொழுது, அவர்களில் காணப்படும் நிலைத்த ஆவிக்குரிய தன்மையையும், அவர்களுடைய ஆவிக்குரிய பெலத்தையும், எந்த ஒரு கடினமான சூழ்நிலையிலும் ஒரு தெய்வீகத் தன்மையோடு அவர்கள் செயல்படுவதையும், அவர்கள் இரக்க குணமுள்ளவர்களாக,

தேவபயமுள்ளவர்களாக, மற்றவர்களிடத்தில் அன்போடு பழகுகிறவர்களாக இருப்பதைப் பார்க்கும் பொழுது ஆச்சரியப்பட வேண்டும். அவர்கள் எப்பொழுதும் இவ்விதம் இருந்தது கிடையாது. ஆனால், இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் அவர்களுடைய வாழ்க்கையைத் தொட்டதின் மூலமாக இவ்விதமான காரியங்கள் வெளிவருகின்றன. நாம் அவ்விதமான கிறிஸ்தவர்களாக இருப்போமானால் எவ்வளவு நலமாக இருக்கும். நாம் அவர்களை நேசிக்கிறோம், கிறிஸ்துவானவர் அவர்களின் மூலமாக வெளிப்படுகிறார், அவர்களுடைய விசுவாசத்தையும், மகிழ்ச்சியையும் கிறிஸ்துவுக்குள்ளாக நாம் உறுதிப்படுத்துகிறோம்.

நாம் ஒருவருக்கொருவர் ஒன்றாக இருப்பதை எவ்விதமாக விரும்புகிறோம்? ஏனென்று கேட்டால் தேவன் நம்மைத் தம்முடைய குடும்பத்தின் மக்களாக இணைத்திருக்கிறார். நாம் ஒரே விதமான ஆவிக்குரிய காரியங்களைப் பகிர்ந்து கொள்ளுபவர்களாக, சுவைக்கிறவர்களாக, ஒரே நோக்கம் அல்லது குறிக்கோள்களை கொண்டவர்களாக, ஒரே காரியத்தை நேசிப்பவர்களாக இருக்கிறோம் அல்லவா? ஒரு ஆவிக்குரிய மொழியில் ஒருவருக்கொருவர் ஐக்கியம் கொள்ளுகிறவர்களாக இருக்கிறோம், ஒருவருக்கொருவர் மற்றவர்களை ஏமாற்றும்படியாக இல்லை. ஆகவே நாம் ஒருவரையொருவர் நம்புகிறோம். கிறிஸ்தவ குணாதிசயங்களில் இவ்விதமாக சந்தோஷப்படுவது எவ்வளவு மேலான காரியம். சங்கீதம் **141:5** -வது வசனத்தில் சங்கீதக்காரன் "நீதிமான் என்னைத் தயவாய்க்குட்டி, என்னைக் கடிந்துகொள்ளட்டும்; அது என் தலைக்கு எண்ணெயைப்போலிருக்கும்; என் தலை அதை அல்லத்தட்டுவதில்லை" என்று சொல்லுகிறதைப் பார்க்கிறோம். இராஜாவாகிய தாவீது மற்றவர்களுடைய உயர்வை எண்ணிப்பார்த்து அதை ஏற்றுக்கொள்ளுகிறதைப் பார்க்கிறோம். ஆகவே ஒருவர் கிறிஸ்துவுக்குள் நிறைவேற்றும் காரியத்தை, மற்றொருவர் ஏற்று சந்தோஷப்படுகிறதை நாம் பார்க்கிறோம். **1** யோவான் **3:14** -ல் "நாம் சகோதரரிடத்தில்

அன்புகூருகிறபடியால், மரணத்தைவிட்டு நீங்கி ஜீவனுக்குட்பட்டிருக்கிறோமென்று அறிந்திருக்கிறோம்" என்று சொல்லப்படுகிறதைப் பார்க்கிறோம்.

நம்மைச் சுற்றியிருக்கும்படியான கர்த்தருடைய சிருஷ்டிப்பைப் பார்க்கும்பொழுது நாம் மிகுந்த சந்தோஷத்தைப் பார்க்கலாம். இயற்கையான அநேக காரியங்களை நாம் பார்க்கும்பொழுது, அவைகளைக் குறித்து எண்ணிப்பார்த்து சந்தோஷப்பட வேண்டும். தாவீது ஒரு பையனாக, வாலிபனாக ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்ததை நாம் பார்க்கிறோம். தாவீது அவ்விதமாக இரவிலே ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்த பொழுது, ஆகாயத்தைப் பார்த்து தேவனுடைய சிருஷ்டிப்பை எண்ணி "உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான் பார்க்கும்போது, மனுஷனை நீர் நினைக்கிறதற்கும், மனுஷகுமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் அவன் எம்மாத்திரம் என்கிறேன்" (சங் 8:3-4) என்று சொல்லுகிறதைப் பார்க்கிறோம். மேலும் சங்கீதம் 111:2 -வது வசனத்திலும் கூட "கர்த்தரின் செய்கைகள் பெரியவைகளும், அவைகளில் பிரியப்படுகிற எல்லாராலும் ஆராயப்படுகிறவைகளுமாயிருக்கிறது" என்று சொல்லுகிறதைப் பார்க்கிறோம்.

நாம், ஆண்டவருடைய கிரியைகளைப் பார்த்து சந்தோஷப்படுகிற மக்களோடு இருப்பவர்களாக காணப்பட வேண்டும். நீ இயற்கையின் அழகான காரியங்களைப் பார்க்கும்பொழுது, அங்கு நின்று அதை நிதானித்துப்பார். நிச்சயமாக சில காரியங்களை இந்த உலகத்தில் பார்க்கும்பொழுது, மனிதனுடைய வீழ்ச்சியை பிரதிபலிக்கிறதாகவும், வேதாகமத்தை நன்கு நாம் விளங்கிக் கொள்ளும்படியாக காணப்படுகிறதாகவும் இருக்கின்றன. ஆனால், மற்ற ஆச்சரியப்படும் படியான அழகான இடங்கள் இருக்கின்றன. இவைகளைப் பார்க்கையில் ஆச்சரியப்பட்டு,

இது என் இரட்சகரின் கரத்தின் செயல் என்று சொல்லித் துதி. அப்பொழுது நாம் இந்த உலகத்தை விட்டு கடந்து போகும்பொழுதும், கர்த்தரின் சிருஷ்டிப்பான உன்னதமான சிருஷ்டிகளாக பரலோகத்தில் மகிழ்ச்சியுள்ளவர்களாகக் காணப்படுவோம். இந்த உலகத்தில் காணும்படியான மிக உன்னதமான காட்சிகளும் கூட, நித்திய மகிமையின் ராஜ்யத்தில் ஒரு சிறிய அளவிலும் கூட ஒப்பிட்டு பார்க்கமுடியாத அளவிற்கு, மகிமையானவைகளாக இருக்கின்றன. ஆகவே நாம் அவசரப்படாமல், பொறுமையாக ஆண்டவரின் அற்புத செயலைப் பார்த்து வேதம் சொல்லுகிற வண்ணமாக, கர்த்தரின் மகிழ்ச்சியைச் சந்தோஷமாக அனுபவிக்கக் கூடியவர்களாக இருப்போமாக. இதுவும் ஆவிக்குரிய விதத்தில் வாழுகிற வாழ்க்கையாக இருக்கிறது.

நாம் மறுபடியுமாக நினைவில் கொள்ளவேண்டிய காரியம், சோதனைகள் சந்தோஷத்தைக் கொண்டுவருகின்றன. புதிய ஏற்பாட்டில் யாக்கோபு எழுதின நிருபம் முதல் முதலாக எழுதப்பட்ட நிருபம் என்று கருதுகிறோம். இந்த யாக்கோபு நிருபத்தை எழுதின யாக்கோபு எருசலேமிலே முப்பது ஆண்டுகள் போதகராக பணியாற்றினவர். அவர் யாக்கோபு 1:3 -வது வசனத்தில் "உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்" என்று சொல்லுகிறார். ஏன் கஷ்டங்கள், பாடுகள் மகிழ்ச்சிக்கு ஊற்றாக இருக்க வேண்டும்? இதன் மூலமாக மற்ற சமயங்களைக் காட்டிலும் தேவன் நமக்கு நெருக்கமானவராக இருக்கிறார் என்பதை நிரூபிக்க முடியும். நம்முடைய வாழ்க்கையில் நம்பிக்கையான ஜெபங்களுக்கு பதிலளிக்கும் விதங்களைப் பார்க்கும்பொழுது, நாம் அவரை துதிப்பதும் ஸ்தோத்தரிப்பதுமான காரியமாக அது இருக்கிறது. ஆகவே சோதனை மத்தியிலும் சந்தோஷமாக வாழுவதே ஆவிக்குரிய வாழ்க்கையாக இருக்கிறது.

நாம் ஆண்டவருக்கு மகிழ்ச்சியானதும், விசுவாசத்தில் உறுதிப்படுத்தக் கூடியதும், எல்லா சோதனைகள் மத்தியிலும் காத்துக்கொள்ளக் கூடியதுமான ஆவிக்குரிய மகிழ்ச்சியின் எல்லா ஊற்றுகளையும் பார்த்தோம். நம்முடைய எல்லா விதமான சந்தோஷத்திற்கும் முக்கியமான முதல் ஊற்று இயேசு கிறிஸ்து மாத்திரமே என்பதை மறந்துவிடக் கூடாது. ஆகவே பிதாவானவர் கிறிஸ்து மூலமாக தன்னை வெளிப்படுத்தினதையும், கிறிஸ்துவானவர் மாம்சத்தில் இந்த உலகிற்கு வந்து வாழ்ந்து பிதாவை வெளிப்படுத்திக் காண்பித்ததையும் நாம் அறிந்திருக்கிறோம். நாம் விசுவாசத்தின் மூலமாக கிறிஸ்துவானவர், பிதாவின் வலது பாரிசத்தில் நமக்காக மன்றாடுகிறதையும், நம்முடைய வாழ்க்கைக்கு என்று அவர் திட்டங்களைக் கொண்டு, நம்முடைய எதிர்காலத்திற்கென்று திட்டங்களையும் வைத்து நமக்காக ஜெபிக்கிறவராக இருக்கிறார் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது. நாம் உண்மையான உணர்வோடுகூட, சந்தோஷத்தோடு கூட அவரே மகிமையின் தேவனென்றும், எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனென்றும், உலகத்தை நியாயம் தீர்க்கிறவரும், நம்முடைய விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவரென்றும், இந்த அகில லோகத்திற்கும் அதிபதி என்றும், நான் அவருடையவன் அவர் என்னுடையவர் என்றும் தைரியமாக சொல்லக்கூடும். இதைக்காட்டிலும் மேலான ஒரு காரியம் இந்த உலகத்தில் உண்டா? நாம் மகிழ்ச்சியினாலும், சந்தோஷத்தினாலும் நிரப்பப்பட்டவர்களாக இருக்கவேண்டும் அல்லவா? இதுவே ஆவிக்குரிய வாழ்க்கையாக இருக்கிறது.

# அத்தியாயம் 5

# தேவனுடைய பிரசன்னத்தை உணருதல்

**கிறிஸ்துவானவர் அவருடைய மக்களுக்கு நெருக்கமாக இருக்கும் வழிகள்:**

*"கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது; அவர்களுக்கு தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்"(சங் 25:14).*

*விசுவாசிகள் ஆண்டவருடைய பிரசன்னத்தை எவ்விதம் உணருகிறார்கள்? "அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐஸ்வரியத்தின்படியே, உங்களுக்கு அநுகிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்" (எபே 3:19). வேதாகமத்தில் கிறிஸ்துவோடு கூட நெருங்கி வாழுவதைக்குறித்து அநேக இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. தேவனுடைய சகல பரிபூரணத்தாலும் நிறையப்படவும், சங்கீதங்களிலும் கூட ஆண்டவருக்கு நெருக்கமாய் வாழுவதைக் குறித்தும் அநேக இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. "நீதிமான்கள் உமது நாமத்தைத் துதிப்பார்கள்; செம்மையானவர்கள் உமது சமுகத்தில் வாசம்பண்ணுவார்கள்"(சங்140:13) என்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்னுமாக "உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வ வல்லவருடைய நிழலில் தங்குவான்" (சங் 91:1) என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னுமாக தாவீது சங்கீதம் 51:11 -ல் "உமது சமூகத்தை விட்டு என்னைத் தள்ளாமலும்" என்று சொல்லுகிறார். சங்கீதம் 25:14 -ல் "கர்த்தருடைய இரகசியம்" என்று சொல்லப்படுவது தேவனோடு இணைந்து வாழுவதைக் குறிக்கிறது. இரகசியம் என்கிற பதம்*

கிரேக்க மொழியில் நெருக்கமாக இணைக்கப்பட்டதைக் குறிக்கிறது.

தேவனுடைய பிரசன்னத்தை நம் வாழ்க்கையில் எவ்விதமாக உணருவது? முக்கியமாக புதிய விசுவாசிகள் இதைக்குறித்து ஆர்வமாக இருப்பதுண்டு. ஆகவே சிலர் பரவசக்கூட்டத்தில் உணர்ச்சிப்பூர்வமான ஒரு உணர்வைத் தேடிப்போவதுண்டு. சிலர் வேறு விதமான அனுபவத்துக்குரிய போதனைகளை நாடிச்செல்வதுண்டு. அப்படியானால் ஆண்டவருடைய பிரசன்னத்தை உணர்ந்து அவருக்கு நெருக்கமாக வாழுவது என்றால் என்ன? அது ஒரு உணர்வா? என்று நாம் கேட்க வேண்டிய ஒரு கேள்வியாக இருக்கின்றது. ஒருவேளை அது உணர்வாக இருக்குமானால் தொடுதலைப் போன்ற ஒரு உணர்வா? அல்லது கிளர்ச்சியூட்டும் விதமான அல்லது வித்தியாசமான உணர்வை உணருகிற தன்மையா? என்றும் கேட்கலாம்.

இவ்விதமான கேள்விகளுக்கு அளிக்கப்படுகிற சரியான பதில் அது ஒரு உணர்வு அல்ல. மாறுத்தரமாக ஆண்டவரை நேசிக்கும்பொழுது ஒருவரில் ஒரு ஜீவனுள்ள துடிப்பை வெளிப்படுத்தும் விதமாக, ஒருவேளை சந்தோஷமான உறவு, நன்றியறிதல், ஒரு மகிழ்ச்சியான உணர்வாக இருக்கலாம். ஆனால் விசுவாசிகள் இவ்விதமான உணர்வுகளைத் தேடி அதைச் சார்ந்து அல்லது நம்பி ஆண்டவரோடு வாழுகிறதைக் கணக்கிட்டுவிடக் கூடாது. இது விசுவாசத்தின் அடிப்படையில் செயல்படுகிற ஒன்றாக இருக்கிறது. ஆகவே உணர்வின் அடிப்படையில் செயல்படுகிற காரியமல்ல.

அநேக நல்ல வாஞ்சையுள்ள கிறிஸ்தவர்கள் ஏதாகிலும் ஒரு உணர்வைப் பெற்று வாழுகிறதுண்டு. ஆனால் நாம் ஆவிக்குரிய நிச்சயத்தையும், மகிழ்ச்சியையும் ஆண்டவருடைய நன்மையையும் உணர்ந்து வாழுகிற நன்றி உள்ளத்தன்மையை நம்முடைய வாழ்க்கையில்

கர்த்தர் அவ்வப்பொழுது கொடுக்கிறவராகவே இருக்கிறார். கர்த்தர் தம்முடைய பிரசன்னத்தை நமக்குக் கொடுப்பதாக வாக்குப்பண்ணியிருக்கிறார்.

சில மக்கள் ஆண்டவருடைய பிரசன்னத்தை தங்களுடைய மனதில் எழும்புகிற எண்ணங்களின் மூலம் உணரக்கூடும் என்று எண்ணுவதுண்டு. தரிசனங்கள் அல்லது ஏதாகிலும் ஒரு யோசனை எழும்புமானால் அது கர்த்தருடைய பிரசன்னம் என்று எண்ணுவதுண்டு. ஆனால் இதுவும் தவறு. சில சமயங்களில் நம்முடைய வாழ்க்கையில் இந்த உணர்வுகளை வைத்துப் பெருமைப்படுவதற்கும் வாய்ப்புகள் உண்டு. ஆனால் ஒன்று நாம் அறிந்துகொள்ள வேண்டும். விசுவாசத்தின் அடிப்படையில் மட்டுமே, நாம் கர்த்தருடைய பிரசன்னத்தை உணர்ந்துகொள்ள முடியும்.

அப்படியானால் என்னுடைய கிறிஸ்துவ வாழ்க்கையில், வாழ்க்கை முழுவதும் நான் ஒரு எண்ணம் அல்லது உணர்வு இல்லாத அடிப்படையிலே வாழ வேண்டுமா? ஒருவேளை நான் விசுவாசத்தின் அடிப்படையில் இந்த ஆண்டவருடைய பிரசன்னத்தை உணரவேண்டும் என்ற காரியம் நான் தவறிப்போவதற்கும் வாய்ப்பாக அமைய முடியுமா? என்று எண்ணலாம். அவ்விதமாக தவறிப்போக வாய்ப்பு இல்லை. விசுவாசம் எப்பொழுதும் நம்மை நிச்சயப்படுத்துகிறதாக இருக்கின்றது. அந்த விசுவாசத்தின் அடிப்படையில் தேவன் என்னுடைய வாழ்க்கையில் செய்கிற மேலான ஒரு காரியம் அற்புதமானதாக இருக்கிறது. நாம் ஒருபோதும் ஒரு உணர்வைப் பெற்று வாழமுடியவில்லை என்றால் அதை எப்படி நான் விசுவாசிக்க முடியும்? என்று எண்ணக்கூடும். பொதுவாக ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் தொடர்ந்து வாழுகிற வாழ்க்கையில் அவருடைய கிருபையையும் தேவன் ஜெபத்திற்கு பதிலளித்து வழிநடத்துகிறது போன்ற காரியங்களினாலும் நாம் ஆண்டவருடைய பிரசன்னத்தை நிச்சயமாக உணரமுடியும்.

**ஆண்டவருடைய பிரசன்னத்தையும், நெருக்கத்தையும் விசுவாசத்தின் மூலமாக உணரவேண்டுமானால், நாம் எவ்விதமாக சிந்திக்க வேண்டும் என்பதைக் குறித்து சில காரியங்களைப் பார்ப்போம்:**

*எந்த விதத்தில் கர்த்தர் நமக்கு நெருக்கமானவராக இருக்கிறார்? முதலாவதாக, நாம் ஆண்டவருடைய பார்வையின் கீழ் இருக்கிறோம். அவர் எல்லாக் காலங்களிலும் நம்மை நோக்கிப்பார்க்கிறார். இது ஒரு வல்லமையான எண்ணம். அவர் தம்முடைய மக்களை நேசிப்பதினால் அவர்களை அதிக அன்போடும் நெருக்கத்தோடும் நோக்கிப் பார்க்கிறவராக இருக்கிறார். அவர் தொடர்ந்து நம்மைப் பாதுகாக்கிறவராக இருக்கிறார் என்பதை விசுவாசத்தின் மூலமாக அறிந்து இருக்கிறோம். அவருடைய பிரசன்னத்தை நாம் உணர்வுப்பூர்வமாக உணராமல் இருக்கலாம். நம் கண்களினால் அவரைப் பார்க்காமல் இருக்கலாம். ஆனாலும் அவர் நம்மை கவனித்துக் கொண்டிருக்கிறார் என்று வேதம் சொல்லுவதினால் அது உண்மை என்று அறிந்து கொள்ளலாம். நம்முடைய வாழ்க்கையின் சூழ்நிலைகளை அவர் முற்றிலுமாக அறிந்திருக்கிறார். நம்முடைய வாழ்க்கையில் எது நேரிட்டாலும் அதை அவர் அறிந்திருக்கிறார். நம்முடைய வாழ்க்கையில் சில காரியங்களை அனுமதித்து அவரை நோக்கிக் கூப்பிடும்படியாக செயல்படுகிறார். நம்முடைய வாழ்க்கையில் விசுவாசத்தின் அடிப்படையில் நமக்கு அளிக்கிற ஆறுதலையும் பெலத்தையும் உணர்ந்து அதன் அடிப்படையில் அதை நம்ப நமக்கு உதவி செய்கிறார்.*

*இவ்விதமான உணர்வு நம்முடைய வாழ்க்கையில் பரிசுத்தத்தை நாட உதவி செய்கிறது. ஏனென்றால் அவர் நம்மைப் பார்க்கிறார் என்று சொல்லும்பொழுது, நம்முடைய பாவத்தைக் குறித்து அஞ்சுகிறவர்களாக இருக்கிறோம். ஆகவே நம்முடைய வாழ்க்கையில் தினமும் அவர் நம்மைப் பார்த்துக்கொண்டிருப்பது நம்முடைய வாழ்க்கையில் ஒரு சீரான ஒழுங்கான வாழ்க்கையைக் குறித்த எண்ணத்தோடு வாழ*

நமக்கு அது உதவி செய்கிறது. நம்முடைய எண்ணங்களினால் எழும்புகிற பலவிதமான காரியங்களினால் நம்முடைய நடத்தைகளில் முன்னேற்றம் அடையாமல் போகக்கூடும். ஆனால் விசுவாசத்தின் அடிப்படையில் தேவன் நமக்கு நெருக்கமாய் இருக்கிறார் என்பது ஒரு திடமான உணர்வோடு வாழ நமக்கு உதவிசெய்கிறது.

இரண்டாவதாக, இயேசு கிறிஸ்து நமக்கு நெருக்கமாக இருக்கிறார் என்பது நாம் அவரிடத்தில் பேசுவதற்கும் ஜெபிப்பதற்கும் உதவியாக இருக்கிறது. அவர் நம்முடைய ஒவ்வொரு ஜெபத்தையும் கேட்கிறார் என்பதும், நம்முடைய ஒவ்வொரு எண்ணத்தையும் அறிந்திருக்கிறார் என்பதும், நாம் கூப்பிடும் பொழுது நமக்கு செவிகொடுத்துப் பதிலளிக்கிறார் என்ற காரியமும் நம்முடைய வாழ்க்கையில் நமக்கு உதவி செய்கிறது. ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலில் உள்ள ஒருவரைப் பார்த்து நாம் ஜெபிப்பதாக அல்ல, நமக்கு நெருக்கமாக இருக்கிற ஒருவரை நோக்கி நாம் ஜெபிக்கிறோம். நாம் காற்றில் பேசுகிறவர்களாக அல்ல. அவர் நம்மைப் பார்க்கிறார் என்பது நாம் அவரிடத்தில் நெருங்கி ஜெபிக்கவும், சரியான விதத்தில் ஜெபிக்கவும், சுயநலமற்ற ஜெபத்தை ஏறெடுக்கவும், மற்றவர்களுக்காக மன்றாடி ஜெபிக்கவும் நமக்கு உதவி செய்கிறது. அவர் எனக்கு நெருக்கமாக இருக்கிறார், ஆகவே நான் சரியானதைக் கேட்க வேண்டியது அவசியமானதாக இருக்கிறது.

மூன்றாவதாக, நமக்கு அவர் நெருக்கமாக இருப்பது நமக்கு பாதுகாப்பானதாகவும், ஒரு உத்திரவாதத்தைக் கொண்டதாகவும் இருக்கிறது. அப்படியானால் நான் எப்படி வீழ்ந்து போக முடியும்? நான் எப்படி பயங்கரமாக விலகிப் போக முடியும்? நான் வீழ்ந்து போக ஏது உண்டு உண்மைதான், ஆனாலும் அவர் எனக்கு நெருக்கமாக இருப்பதினால் நான் வீழ்ந்து போவதில்லை. அவர் என்னைச் சீர்படுத்தி தண்டிக்கவேண்டிய இடங்களில் தண்டித்து, என்னுடைய

வாழ்வில் மறுபடியுமாக அவரிடத்தில் சரியான நிலைக்கு கொண்டுவர எனக்கு உதவி செய்கிறவராக இருக்கிறார். இது நாம் ஏதோ பாவம் செய்வதற்குத் தூண்டும்படியான காரியமாக அல்ல. ஏனென்றால் அவர் தண்டிக்கும் பொழுது சில சமயங்களில் மிக கடுமையாக இருப்பதும் உண்டு. அதே சமயத்தில் நம்முடைய வாழ்க்கையில் அவர் நமக்கு மிக நெருக்கமாக இருப்பது நாம் தவறிப் போனாலும் நாம் செம்மைப்படுத்தப்படுவோம் என்கிற நம்பிக்கைக்குரிய ஒன்றாக இருக்கிறது.

நான்காவதாக, ஆண்டவர் நமக்கு மிக நெருக்கமாக இருப்பது தம்முடைய மக்களுக்காக அவர் மன்றாடுகிறார் என்ற சத்தியத்தை உணர்த்துகிறதாக இருக்கிறது (ரோமர் 8:34, எபிரெயர் 7:25). நம்முடைய வாழ்க்கைக்காக அவர் பிதாவின் வலது பாரிசத்தில் இப்பொழுதும் மன்றாடுகிறார் என்ற காரியம் நமக்கு மிகுந்த ஆறுதல் அளிக்கிறதாக இருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் மன்றாட்டு ஜெபம் அவ்வப்பொழுதாக அல்லது எப்பொழுதாகிலுமானதாக அல்ல. அது தொடர்ச்சியாக செயல்படுகிறது. அவர் தம்முடைய பரிபூரணமான பிராயச்சித்த பலியான தன்னுடைய காயங்களைக் காண்பித்து, தம்முடைய மக்களுக்கு நித்திய ஜீவனை கொடுக்கும்படியாக அவர் பிதாவினிடத்தில் மன்றாடுகிறவராக இருக்கிறார். யார் யாருக்காக அவர் ஜெபிக்கிறாரோ அவர்கள் எல்லோரையும் எப்பொழுதும் அறிந்திருக்கிறவராகவே இருக்கிறார்.

ஐந்தாவதாக, கிறிஸ்துவானவர் தம்முடைய மக்களைத் தொடர்ச்சியாக பயிற்றுவிப்பத்தின் மூலம் அவருடைய பிரசன்னத்தை உணரக்கூடியவர்களாக நாம் இருக்கிறோம். 1 கொரி 1:2 வசனத்தில் பவுல் இயேசு கிறிஸ்துவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயுமிருக்கிற என்று எழுதுகிறார். தமது ஆவியானவரைக் கொண்டு அவர் செயல்படுவதின் மூலம் நமக்கு நெருக்கமுள்ளவராக இருக்கிறார். ஒரு விளையாட்டு வீரனைப்

பயிற்றுவிக்கும் பயிற்சியாளர் அவரோடு எப்பொழுதும் இருந்து, அவருடைய ஒவ்வொரு காரியத்தையும் கவனித்து, தவறுகள் ஏற்படும் பொழுது அதைச் சரிபடுத்திச் செயல்படுகிறவராக இருக்கிறார். இந்த பயிற்சியாளர் அவருடைய ஒவ்வொரு அசைவையும் ஆராய்ந்து, கவனித்து, உற்சாகப்படுத்துகிறார். இது கிறிஸ்துவானவர் தம்முடைய மக்களிடம் நெருக்கமாக இருந்து பயிற்றுவிக்கும்படியானதாக இருக்கிறது.

அவர் நம்முடைய வாழ்க்கையில் நம்மை பெலப்படுத்தவும், விசுவாசமுள்ளவர்களாய் இருக்கவும், ஜெபிக்கிறவர்களாக, பொறுமையுள்ளவர்களாக வாழும்படியாகவும் அவர் நம்மை உருவாக்குகிறார். என்னுடைய இந்த பிள்ளைக்கு இன்னும் அதிகமான பொறுமை, மன உருக்கம் அல்லது விளங்குதல், தைரியம் தேவையாக இருக்கிறது என்பதை அவர் அறிந்திருக்கிறார். அவ்விதமாக பரலோக பயிற்சியாளராக நம்முடைய வாழ்க்கையில் எல்லாக் கிருபைகளிலும் நம்மை பயிற்றுவிக்கிறவராக, சாட்சி கொடுப்பதில், அவருக்கு பணி செய்கிறதில் அவருடைய மகிமைக்கென்று அவர் செயல்படுகிறார். இவ்விதமான பயிற்சி பெறுகிறவர்கள் இரட்சிக்கப்பட்டவர்களாக இருந்தாலும்கூட, அவர்கள் தங்களை ஆண்டவருக்கென்று ஒப்புக்கொடுத்த கிறிஸ்தவர்களாக, கர்த்தரின் வழிநடத்துதலில் இணைந்து செயல்பட வாஞ்சையுள்ளவர்களாக இல்லையென்றால் இவ்விதமான காரியங்களை அனுபவிக்க முடியாது. மறுபடியுமாக அவர் நமக்கு நெருக்கமாக இருப்பது ஏதோ ஒரு உணர்வுக்குரியதாக அல்ல, ஆனாலும் அவருடைய நெருக்கத்தின் விளைவாக நாம் இவைகளை அனுபவிக்கக் கூடியவர்களாக இருக்கிறோம்.

ஆறாவதாக, அவருடைய நிலைத்த இந்தப் பிரசன்னமானது தம்முடைய ஆவியானவரைக் கொண்டு நம்மை உந்துவதின் மூலமாக, நம்முடைய மனசாட்சியைத் தொடுவதின் மூலமாக அல்லது வேதாகமத்தின் பகுதியை

நமக்கு நினைப்பூட்டுவதின் மூலமாக நம்முடைய வாழ்க்கையில் மறந்துபோன காரியங்களையும் நினைப்பூட்டி செயல்படும்படியாக கர்த்தர் செய்வது அவருடைய பிரசன்னத்தை உணர்வதற்குரிய காரியமாக இருக்கின்றது. ஆண்டவர் தம்முடைய பரிசுத்த வார்த்தையில் அதிகாரமுள்ள எல்லாவிதத்திலும் தம்மைப்பற்றின காரியங்களை நமக்கு வெளிப்படுத்தியிருப்பதினால் இன்னும் நமக்கு வெளிப்பாடுகள் தேவை என்று எதிர்பார்ப்பது சரியல்ல. பரிசுத்த ஆவியானவர் நம்மை உணர்த்தும்பொழுது ஏற்கனவே இருக்கிற காரியங்களை நமக்கு வெளிப்படுத்துகிறவராக இருப்பார். அடிக்கடி தேவன் நம்முடைய மனதில் மறந்துபோன ஆண்டவருடைய காரியங்களை நமக்கு நினைவுபடுத்தி நம்மோடுகூட தொடர்புகொண்டு நமக்கு சத்தியத்தை நினைப்பூட்டுகிறவராக இருக்கிறார். நம்முடைய வாழ்க்கையில் எல்லாவிதமான காரியங்களுக்கும் அவரை நோக்கிப்பார்க்கும் பொழுது அவர் நமக்கு உதவி செய்கிறவராக இருக்கிறார். நம்முடைய எல்லா சூழ்நிலைகளிலும் அவர் அவ்விதம் செயல்படுகிறவராக இருக்கிறார். அவர் நமக்கு நெருக்கமாய் இருக்கிறார் என்பது நம்முடைய வாழ்க்கையில் பெற்றுக்கொள்ளுகிற அநேக நன்மைகள் மூலமாக நமக்கு விளங்கப்பண்ணுகிறவராக இருக்கிறார்.

ஏழாவதாக, பரிசுத்த ஆவியானவருடைய தேவ பிரசன்னம் நம்முடைய பாவத்தைக் குறித்து உணர்த்துவதின் மூலமாக இருக்கிறது. சோதனை வரும்பொழுது நாம் அதற்கு இணங்கிக் கொடுக்க ஆரம்பிக்கும்பொழுது மனசாட்சியின் ஒரு எச்சரிப்பு சத்தம் கேட்கிறது. அப்பொழுது நாம் அதை செய்யக்கூடாது என்பதை அறிந்துகொள்ளுகிறோம். கிறிஸ்துவானவர் நமக்கு நெருக்கமாக இருக்கும்பொழுது, நம்முடைய மனசாட்சி உயிருள்ளதாகவும் செயல்படுகிறதாகவும் இருக்கிறது. நாம் மனப்பூர்வமாக நம்முடைய மனசாட்சியை பரிசுத்த ஆவியானவர் கொடுக்கும்படியான தூண்டுதலோடு இணைத்து செயல்படாத சூழ்நிலையில் தேவன் தம்முடைய

பிரசன்னத்தை நம்மிடத்தில் இருந்து எடுத்துப்போடலாம். அப்பொழுது நாம் பாவத்தில் பிரவேசிக்கவும், அதோடு கூட வருத்தங்களையும், வேதனைகளையும் அனுபவிக்கவும் விட்டுவிடப்படலாம். ஆனால் நம்முடைய வாழ்க்கையில் அவரை நோக்கிப்பார்க்கும் பொழுது அவர் நமக்கு நெருக்கமாக வந்து எச்சரிப்பின் சத்தத்தைக் கொண்டு, நாம் தவறிப் போகும் பொழுது நமக்கு உணர்த்துகிறவராகவே இருக்கிறார். தேவன் நமக்கு நெருக்கமாக இருந்து, நம்முடைய வாழ்க்கையின் பரிசுத்தமாகுதலில் தொடர்ந்து நம்மோடு இடைப்படுகிறதைக் காணலாம்.

எட்டாவதாக, நாம் வேதத்தை வாசிக்கும்பொழுதும், அவருடைய செயலைக் குறித்து சிந்திக்கும்பொழுதும் தம்முடைய பிரசன்னத்தைக் கொடுக்கிறவராக இருக்கிறார். கிறிஸ்துவானவர் தமது ஆவியானவரைக் கொண்டு நம்முடைய சிந்தையைத் தொட்டுப் புதிய ஜீவனுக்குள்ளும், வழிக்குள்ளும் நம்மைக் கொண்டு செல்லுகிறார். அவர் நம்முடைய விளங்குதலை அதிகப்படுத்தி ஆண்டவருடைய காரியங்களை அதிகமாய் விளங்கிக் கொள்ளுவதற்கான உணர்வைத் தந்து செயல்படுகிறவராக இருக்கிறார். நாம் ஒவ்வொரு நாளும் கடந்து போகும்பொழுது தேவன் வேதத்திலிருந்து ஒரு வசனத்தையோ, ஒரு பகுதியையோ நினைவுபடுத்தி ஆண்டவருடைய ஆவிக்குரிய காரியங்களில் இன்னும் ஆழமாகச் செல்ல நமக்கு உதவி செய்கிறவராக இருக்கிறார். பொதுவாக நாம் எப்பொழுதும் சத்தியத்தில் இருக்கிறவர்களாய் காணப்படவேண்டும். தேவனுடைய வார்த்தையைத் தினம் வாசிப்பதிலும், தேவனுடைய வார்த்தையை நேசிப்பதிலும் நாம் காணப்படும்பொழுது, கிறிஸ்துவானவர் நம்முடைய இருதயங்களைத் தொட்டு அதன் மூலம் விளங்குதலைக் கொடுக்கிறவராக இருக்கிறார். தேவனுடைய வார்த்தையின் மூலமாக ஜீவனைப் பெறும்பொழுது அவர் நமக்கு நெருக்கமாக இருக்கிறார் என்பதை விளங்கிக் கொள்ளமுடியும்.

ஒன்பதாவதாக, ஆண்டவருடைய நெருங்கிய பிரசன்னம் அவருடைய பணியில் நாம் ஈடுபடும்பொழுது உணரக்கூடியதாக இருக்கும். நாம் ஒரு இரட்சிக்கப்படாத மனிதனிடத்தில் பேசும்பொழுது என்ன சாதிக்க முடியும்? அவர்களுடைய இணங்கிக் கொடுக்காத சித்தத்தை நாம் மாற்றவோ அல்லது அவர்களுடைய கடினமான இருதயத்தை உடைக்கவோ முடியாது. ஆனால் நாம் பேசும்பொழுது கிறிஸ்துவானவர் நமக்கு நெருக்கமாக இருப்பதினால் அவர் அந்த இருதயங்களில் செயல்படுகிறவராக இருக்கிறார். அவர் வரும்வரை நாம் காத்திருப்பவர்களாக அல்ல, அவர் எப்பொழுதும் நம்மோடு கூட இருக்கிறார். நம்முடைய வார்த்தைகள் வல்லமையுள்ளதாக நம்முடைய சாட்சியின் மூலம் செயல்படக்கூடியவராக இருக்கிறார். நாம் ஒரு சக விசுவாசிக்கு உதவியாக அல்லது ஆறுதல் படுத்தும்பொழுது நம்முடைய வார்த்தைகள் ஆசீர்வாதமாக இருந்தது என்று எப்படிச் சொல்லமுடியும்? கிறிஸ்து நெருக்கமாக இருக்கும்பொழுது அவர்களுடைய இருதயத்தை விளங்குதலுக்குள் கொண்டுவரவும், அவைகள் அவர்களுக்கு பிரயோஜனமாகக் காணப்படவும் செய்ய வல்லவராக இருக்கிறார். பரிசுத்த ஆவியானவரின் மூலம் கிறிஸ்துவின் செயல்பாடு தம்முடைய மக்களோடு அவர் இருக்கும்படியான நிச்சயத்தை வல்லமையாய் உணர்த்துகிறதாக இருக்கிறது.

சில விசுவாசிகள் கிறிஸ்துவானவர் நெருக்கமாக இருப்பதினுடைய காரியத்தை விளங்கிக்கொள்ளாமல், ஏதோ சில உணர்ச்சிப்பூர்வமான உணர்வுகள் அல்லது சத்தங்களை எதிர்பார்க்கிறவர்களாகக் காணப்படுகிறார்கள். விசுவாசத்தின் மூலமாக கிறிஸ்துவினுடைய தொடுதலை உணருவதின் மூலம் பெறும் சமாதானத்தை எண்ணாமல், அவர்கள் ஏதோ ஒருவிதமான உணர்வு மற்றும் தொடுதலை விரும்புகிறவர்களாக இருக்கிறார்கள்.

நான் ஏறக்குறைய நாற்பது ஆண்டுகளுக்கு முன்னதாக சந்தித்த ஒரு சகோதரி ஒரு திருமணத்தில் தேவனுடைய பிரசன்னைத்தை உங்களால் உணர முடிகிறதா என்று கேட்டதை

நினைவு கூறுகிறேன். அவர்கள் ஒரு இரட்சிக்கப்படாதவரின் திருமணத்தில் தேவனுடைய தொடுதலை உணர்ந்ததாகச் சொன்னார்கள். இது தேவனை மையமாகக்கொண்டு நடைபெறாத ஒரு திருமணம். கிறிஸ்தவர்களே இவ்விதமாக இருக்கும்பொழுது அவர்கள் அநேக நன்மைகளை இழந்துவிடுகிறார்கள். நாம் ஏதோ ஒரு உணர்வுப்பூர்வமான ஆண்டவருடைய பிரசன்னத்தை உணரும்படியாக அல்ல என்பதை விளங்கிக்கொள்ள வேண்டும். அப்பொழுது தேவனுடைய பிரசன்னத்தை நாம் விசுவாசத்தின் மூலமாக உணர்ந்து அதன் மூலமாய் நாம் பெலப்படுத்தப்படுகிறதைப் பார்க்க முடியும்.

ஆண்டவர் எனக்கென்று வைத்திருக்கிற எல்லாத் திட்டங்களையும் நிறைவேற்றுவார் என்று நிச்சயமாக இருக்கமுடியுமா? அதற்கான பதில் சங்கீதப் புத்தகத்தில் உள்ள வசனத்தில் கொடுக்கப்படுகிறது. "கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில் இருக்கிறது; அவர்களுக்குத் தம்முடைய உடன்படிக்கையைத் தெரியப்படுத்துவார்" (சங் 25:14). இந்த வாக்குத்தத்தம் நிபந்தனையின் அடிப்படையிலானது. கிறிஸ்துவானவருடைய பார்வையில் அவர் எப்பொழுதும் நமக்கு நெருக்கமாக இருக்கிறார் என்றாலும், அவர் நம்மோடு கூட இருப்பதைப் போல எப்பொழுதும் செயல்படுகிறவர் அல்ல. அவர் எப்பொழுதும் நம்முடைய கஷ்டங்களில் உதவி செய்வார் என்றும், பாவத்தில் விழாமல் நம்மைக் காத்துக் கொள்ளுவார் என்றும், நம்முடைய வாழ்க்கையில் செயல்படுவார் என்றும் எதிர்பார்க்க முடியாது. அதே விதமாக நம்முடைய ஜெபங்களுக்கு பதிலளிக்கும் விதமாகவும், ஆவிக்குரிய வாழ்க்கையில் பயிற்றுவிக்கிறவராகவும், நம்முடைய பாவங்களை உணர்த்தி நமக்கு ஆவிக்குரிய நிச்சயத்தைக் கொடுக்கிறவராகவும், ஆண்டவருடைய வார்த்தையின் வெளிச்சத்தைக் கொடுக்கிறவராகவும் அல்லது உபயோகப்படுத்துகிறவராகவும், இருப்பார் என்றும் எதிர்பார்க்க முடியாது. இவையெல்லாம் நிபந்தனையின் அடிப்படையில் இருக்கிறது. அந்த நிபந்தனை என்னவென்றால், கர்த்தருடைய இரகசியம் அவருக்குப் பயந்தவர்களிடத்தில்

இருக்கிறது. நாம் கர்த்தருக்கு பயந்து அவருக்குக் கீழ்படிய வேண்டும். நாம் அவரிடத்தில் பயபக்தியோடு கூடிய மதிப்பைக் கொண்டிருக்கவேண்டும். *"உம்மை நோக்கிக் காத்திருக்கிற ஒருவரும் வெட்கப்பட்டுப் போகாதபடி செய்யும்; முகாந்தரமில்லாமல் துரோகம்பண்ணுகிறவர்களே வெட்கப்பட்டுப் போவார்களாக" (சங் 25:3).* தெளிவாக நம்முடைய பரிசுத்தத்தைக் குறித்து நாம் ஜாக்கிரதை உள்ளவர்களாக இருக்கவேண்டும். அதே விதமாக தேவன் நம்முடைய வாழ்க்கையில் செயல்படுவதைப் பார்க்க வேண்டுமென்றால், அவர் நமக்கு நெருக்கமாக இருக்கிறார் என்பதை உணரவேண்டுமானால், நாம் நிச்சயமாக அவ்விதம் செயல்படுகிறவர்களாக காணப்படவேண்டும்.

அடுத்த நிபந்தனை என்னவென்றால், *"உம்முடைய சத்தியத்திலே என்னை நடத்தி, என்னைப் போதித்தருளும்; நீரே என் இரட்சிப்பின் தேவன், உம்மை நோக்கி நாள்முழுதும் காத்திருக்கிறேன்" (சங் 25:5).* தேவனுடைய வழிநடத்துதலை நாம் அதிக ஜாக்கிரதை உள்ளவர்களாக எடுத்துக் கொள்ளவேண்டும். நாம் நம்முடைய வாழ்வில் விரும்புகிற யாவற்றையும் செய்யக் கூடியவர்களாக இருக்கக்கூடாது. ஆனால், நாம் எப்பொழுதும் நம்முடைய வாழ்வில் சந்திக்கக்கூடிய எல்லா முக்கியமான காரியங்களிலும், தேவனுடைய வழிநடத்துதலை தேடுகிறவர்களாக இருக்கவேண்டும்.

நாம் ஒவ்வொரு நாளும் விசுவாசத்தின் மூலமாக கிறிஸ்துவானவர் நமக்கு நெருக்கமாக இருக்கிறார் என்பதை உணர்ந்து வாழுவது மிக உன்னதமான அனுபவம். நாம் ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்து நம்முடைய பணிக்கு செல்லும்பொழுது நாம் கிறிஸ்து எனக்கு நெருக்கமாக இருக்கிறார், அவர் என்னை அதிக அன்போடு கவனித்துக் கொண்டிருக்கிறார், என்னுடைய காரியங்களில் செயல்பட எப்பொழுதும் விருப்பமும், ஆயத்தமுமாக இருக்கிறார் என்றும், என்னுடைய வாழ்க்கையில் நடக்கும்படியான எல்லாவற்றையும் அவர் அறிந்திருக்கிறார் என்றும், என்னுடைய ஜெபங்களுக்குப் பதிலளிக்க அவர் ஆயத்தமுள்ளவராக இருக்கிறார் என்றும், என்னுடைய வாழ்க்கைக்கு தேவையான எதையும் உடனடியாக

செய்ய அவர் எனக்கு மிக நெருக்கமுள்ளவராக இருக்கிறார் என்றும், அவர் என்னை சோதனைகளில் பலப்படுத்தவும், பயிற்றுவிக்கவும் செய்வார் என்றும், அவர் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கிறார் என்றும் உணர்ந்து, ஆகவே நான் அவரை சந்தோஷப்படுத்தவும், கனப்படுத்தவும் செய்வேன் என்று சொல்லிக் கொள்ளவேண்டும்.

ஒரு விசுவாசிக்கு உன்னதமான அளவில் எழும்பின ஆவிக்குரிய அனுபவங்கள் உண்டா? ஆம், அவ்விதமான அனுபவங்கள் நமக்கு பரிசுத்த ஆவியானவர், தேவனுடைய வார்த்தையை வாசிக்கும்பொழுதும் ஜெபிக்கும்பொழுதும், தியானிக்கும்பொழுதும் இயேசு கிறிஸ்துவின் அன்பையும் இரக்கத்தையும் அதிகமாக உணருகிற வேளையிலும் நம்மை சந்தோஷத்தினாலும், நன்றியினாலும், ஆச்சரியத்தினாலும் நிரப்புகிறவராக இருக்கிறார்.

இயேசு கிறிஸ்துவின் பிரசன்னம் என்பது ஏதோ உணர்ச்சிப் பூர்வமானதாக அல்ல. இது நம்முடைய நம்பிக்கையின் மூலமாக, ஆண்டவர் நமக்கு நெருக்கமானவராக, உணரக்கூடிய நிலையில் நம்மில் செயல்படுகிறவராக இருக்கிறார். கிறிஸ்தவ வாழ்க்கையில் அதிகமான பிரயோஜனமுள்ள ஒரு பலனளிக்கக் கூடிய நம்பிக்கையாக இது இருக்கிறது. இவ்விதமாக கிறிஸ்துவானவர் நம்முடைய வாழ்வில் ஏற்படுத்தும்படியான காரியங்கள், நாம் உணர்ச்சி வசப்படும்படியான ஆயிரக்கணக்கான நிலைகளை விட மிக உன்னதமானதும், ஆச்சரியமானதுமாக இருக்கிறது. நிச்சயமாக நாம் ஒவ்வொரு நாளும் கிறிஸ்துவினுடைய அற்புதமான செயலை வாழ்வில் காணக்கூடியவர்களாகவும், நம்முடைய இருதயத்தின் சிந்தனைப் பலகையில் எழுதப்பட்டவைகளாகவும் இருக்கவேண்டும் என்று ஜெபிக்க வேண்டும். அப்பொழுது நாம் விசுவாசத்தின் மூலமாக தேவன் நமக்கு நெருக்கமாக இருக்கிறார் என்பதை உணர்ந்து கொள்ளமுடியும்.

# அத்தியாயம் 6

# நம்முடைய வாழ்க்கையின் நோக்கம்

## ஆத்தும ஆதாயம்

அநேக ஆண்டுகளுக்கு முன்பு, நாம் ஊழியம் செய்யும்படியாகவே இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்று சொல்லப்படுவதுண்டு. இது வேதப் பூர்வமாக சரியாக இருக்கிறது. ஆண்டவரகிய இயேசு கொடுத்திருக்கிற பிரதான கட்டளையாகிய, உலகமெங்கும் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஆத்துமாக்களை ஆதாயம் செய்வது அவருடைய சீஷர்களுக்கு மாத்திரமல்ல, எல்லா காலத்திலும் தம்முடைய மக்களுக்கு கொடுக்கப்பட்ட கட்டளையாக இருக்கிறது. அதாவது, இழந்து போன ஆத்துமாக்களை ஆதாயம் செய்வது. நாம் மேலோட்டமாக பார்க்கும்பொழுது, தனிப்பட்ட ஆவிக்குரிய வாழ்க்கைக்கு இது உகந்ததாய் இருக்கும் என்று எண்ண முடியாது. ஆனால் ஒரு விசுவாசி தன்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில், கிறிஸ்துவின் பணியில், தன்னுடைய மனதையும் இருதயத்தையும் ஈடுபடுத்தாமல், ஆவிக்குரிய வாழ்க்கையில் வளரமுடியாது. ஏனென்றால் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து "நீங்கள் மிகுந்த கனிகளைக் கொடுப்பதினால் என் பிதா மகிமைப்படுவார், எனக்கும் சீஷராய் இருப்பீர்கள்" (யோவான்15:8) என்றார். மேலும் "நீங்கள் என்னைத் தெரிந்துக் கொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்து கொண்டேன். நீங்கள் என் நாமத்தினால் பிதாவை கேட்டுக்கொள்வதெதுவோ அதை உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய் கனி கொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும் நான் உங்களை ஏற்படுத்தினேன்" (யோவான்15:16) என்று சொல்லியிருக்கிறார். இந்த உலகத்தில், இரட்சிக்கப்பட்ட

மக்கள் இந்தக் காரணத்திற்காகவே இருக்கிறார்கள். மேலும் நம்முடைய வாழ்க்கையில் பெறும்படியான ஆவிக்குரிய பெலம், அனுபவம் இந்தப் பணியைச் செய்ய நம்மை தகுதிப்படுத்துகிறது.

ஆத்துமாக்களுக்காக நாம் போராடுவது, நம்முடைய மனதையும், இருதயத்தையும் அதிகமாக ஆட்கொண்டதாக இருக்க வேண்டும். அவ்விதமாக இல்லையென்றால், நாம் குளிர்ந்து போன சுயநலக் கிறிஸ்தவர்களாய் இருக்கிறோம் என்று காட்டுகிறது. இங்கு நாம் கேட்க வேண்டிய கேள்வி என்னவென்றால், புதிய ஏற்பாடு சொல்லும்படியான சுவிசேஷப் பணியை நாம் பிரதிபலிக்கிறோமா? ஆத்துமாக்களுக்காக நாம் தீவிரமாய் செயல்படுகிறவர்களாய் காணப்படுகிறோமா? முக்கியமாக நம்முடைய முற்பிதாக்கள், ஆதி திருச்சபை மக்கள், விசுவாசிகள், சீர்திருத்த காலங்களில் எவ்விதமாக உயிர்மீட்சி பெற்று, ஆத்துமாக்களை ஆதாயம் செய்தார்கள் என்பதும், அவ்விதமான காலங்களில் சபைகள் எவ்வளவு உறுதியாய் இருந்தது என்பதையும் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

வருத்தமான காரியம் என்னவென்றால் சீர்திருத்த கிறிஸ்தவர்கள் இந்த காலங்களில் ஆத்துமாக்களுக்காக போராடுவதில் செயல்படுவதில்லை. சீர்திருத்த கிருபையின் சத்தியத்தை விசுவாசிக்கும் சபைகளிலும் கூட, இந்தக் காரியத்தைக் குறித்து அதிகமாக கவனம் செலுத்தப்படுவதில்லை. சபைகளில் இதற்கென்று பிரத்தியேகமாக, சபை மக்கள் அருகிலுள்ள மக்களை போய் சந்திப்பதிலும், அதற்காக உழைக்கவும் பயிற்சிவிக்கப்படுவதில்லை. இதினிமித்தமாக சபையின் எண்ணிக்கை தொடர்ந்து குறைந்து வருவதும், இன்றைய காலங்களில் அநேக சீர்திருத்த சபைகள் பலவீனமடைந்து வருகிறதையும் நாம் பார்க்க முடிகிறது. அநேக சபைகளில், சபையை உயிர்ப்பிக்கும்படியாக இந்தக் காலத்து ஆராதனை கலாச்சாரங்கள், பாடல் கலாச்சாரங்கள் முக்கியப்படுத்திச் செயல்படுகின்றன. ஆகவே நம்முடைய

ஆராதனைகளில் இக்காலத்து ஆராதனை முறைகளை நாம் உட்புகுத்துவோம் என்று சொல்லுகிறார்கள். ஆகவே நல்ல சீர்திருத்த சபைகளும் கூட இந்த காலங்களில் வழிதப்பி போக ஏதுவான சூழ்நிலை காணப்படுகிறது. அநேக ஆண்டுகளாக சத்தியத்தின் அடிப்படையில் வாழ்ந்து வந்த சபைகளும் கூட, பரவசக் குழுக்களின் போதனைகளை பின்பற்றுவதும், வல்லமை என்று சொல்லிக்கொண்டு பலவிதமான புதிய முறைகளைக் கையாளுவதும் காணப்படுகிறது.

நாம் இந்த பகுதிகளில், கிறிஸ்துவுக்கென்று இழந்துபோன ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தும் விதங்களைச் சொல்லும் வேதாகம வசனங்களைப் பார்த்து, உற்சாகம் அடைவோமாக. இது அநேக சீர்திருத்த விசுவாசிகள் மத்தியில் காணப்படாத ஒன்றாக இன்றைக்கும் இருக்கிறது. நம்முடைய தனிப்பட்ட ஆவிக்குரிய வாழ்க்கையில் ஆத்தும ஆதாயம் செய்வது மையமான ஒன்றாகவும், ஜீவனுள்ள ஒன்றாகவும், மிக முக்கியமானதாகவும் காணப்படுகிறது.

ஆத்துமாக்களுக்காகப் போராடுவது ஒரு யுத்தத்தை போன்றதாக இருக்கிறது. இவ்விதமாக ஒரு யுத்தத்தில் சலிக்காமல் முன்னேறிச் செல்கிறதைப் போல, ஆத்தும ஆதாயத்திலும், நாம் சலிக்காமல் முன்னேறிச் செல்லவேண்டும். இவ்விதமாக ஒரு உந்தும் சக்தியாக தீர்மானத்தோடு இழந்து போன ஆத்துமாக்களுக்காக போராடுவதில் சபைகள் இன்றைக்கு குறைவுபட்டுப் போய்விட்டன.

நாம் ஆத்துமாக்களைச் சந்திப்பதில் இராணுவத்தின் வைராக்கியத்தைக் கொண்டவர்களாகக் காணப்பட வேண்டும். உதாரணமாக 1 கொரி 9:7 -ல் “எவன் தன் சொந்த பணத்தைச் செலவழித்து, தண்டிலே சேவகம்பண்ணுவான்? எவன் திராட்சத்தோட்டத்தை உண்டாக்கி, அதின் கனியில் புசியாதிருப்பான்? எவன் மந்தையை மேய்த்து, அதின் பாலை சாப்பிடாதிருப்பான்?” என்று சொல்லுகிற வேளையில், எவன் தன் சொந்தப்பணத்தைச் செலவழித்து, தண்டிலே

சேவகம்பண்ணுவான்? என்று சொல்லுகிறார். இந்த இடத்தில் பவுல் ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுவதை இராணுவ யுத்தத்திற்கு ஒப்பிட்டுப் பேசுகிறார். மேலும் பவுல் சுவிசேஷத்தைஅறிவிக்கும் பணிக்கு திராட்சைத் தோட்டத்தை ஒப்பிட்டுப் பேசுகிறார். மேலும் 2கொரி 5:18 மற்றும் 2கொரி 6:4-10 வசனங்களில் ஒப்புரவாகுதலின் ஊழியத்தைக் குறித்து பேசும்பொழுது பலவிதமான செயல்களைக் குறிப்பிட்டு, பவுல் இந்த இடத்தில் ஒரு ரோம சிப்பாய் ஒரு கையில் கேடகத்தையும் இன்னொரு கையில் பட்டயத்தையும் வைத்திருப்பதைக் குறித்து சொல்லுகிறார். நம்முடைய சுவிசேஷப் பணி அவ்விதமாக இருக்கிறதா?

பவுல், 2 கொரிந்தியர் 10:3-5 வசனங்களில் "நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர்களாயிருந்தும், மாம்சத்தின்படி போர்செய்கிறவர்களல்ல. எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவைகளாயிராமல், அரண்களை நிர்மூலமாக்குகிறதற்குத் தேவபலமுள்ளவைகளாயிருக்கிறது. அவைகளால் நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்கி, எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியச் சிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்" என்று சொல்லுகிறார்.

இந்த வசனங்கள் ஒரு விசுவாசி தன்னுடைய வாழ்க்கையில் பரிசுத்தமாகுதலுக்குப் போராடுகிற போராட்டத்தைக் குறிக்கிறதாக இருந்தாலும், ஆத்துமாக்களுக்காகப் போராடுகிற போராட்டத்தையும் குறிப்பிடுகின்றன. பவுல் தன்னை அப்போஸ்தலன் அல்ல என்று சொல்லுபவர்களுக்கு எதிராக தான் அப்போஸ்தலன் என்பதை நிரூபிக்கும்படியாக சொல்லுகிற வேளையில், யுத்தத்திற்கு சமமான சுவிசேஷம் தன்னுடைய கரத்தில் எவ்விதம் ஒப்புவிக்கப்பட்டது என்பதைக் குறித்துப் பேசுகிறார். 1 தீமோ 6:12 -ல் "விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு" என்று சொல்லுகிறார். இதை தன்னுடைய தனிப்பட்ட பரிசுத்தமாகுதலுக்கு சொல்லுகிறாரா

அல்லது சுவிசேஷப் பணிக்காக சொல்லுகிறாரா? இதை இரண்டையும் குறிக்கும் விதத்தில் தான் பேசுகிறார். ஏனென்றால் தீமோத்தேயு இந்த இரண்டு விதமான காரியத்தைக் குறித்தும் போராடுவதை வைத்துப் பேசுகிறார். சரியான சத்தியத்தைக் கற்பிக்க ஒரு சுவிசேஷகன் செய்யும் ஊழியத்தைக் குறித்தும் பேசுகிறார். இவைகள் இரண்டையுமே நாம் யுத்தமென்று கருத்தில் கொண்டு இவைகளை அதிக ஜாக்கிரதையோடு நிறைவேற்ற வேண்டும்.

இந்த யுத்தத்திற்கு சம்மந்தமான விதத்தில் உபயோகப்படுத்தும்படியான முறையைத் தொடர்ந்து, 2தீமோ 2:3-4 வசனங்களில் "நீயும் இயேசு கிறிஸ்துவுக்கு நல்ல போர்ச்சேவகனாய்த் தீங்கநுபவி. தண்டில் சேவகம்பண்ணுகிற எவனும், தன்னைச் சேவகமெழுதிக்கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி, பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ளமாட்டான்" என்று எழுதியிருக்கிறார். பவுல் சுவிசேஷப் பணி செய்வதைக் குறித்தும், பரிசுத்தவான்களுக்குப் பிரசங்கிப்பதைக் குறித்தும் நினைவில் கொண்டு உடனடியாக அவர் எல்லாவற்றையும் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் நிமித்தம் செய்வதாக சொல்லுகிறார். அதாவது தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் கிறிஸ்து இயேசுவினால் உண்டான இரட்சிப்பை நித்திய மகிமையோடே பெற்றுக் கொள்ளும்படி என்று எழுதுகிறார்.

வெளிப்படுத்தின விசேஷம் 6:2 -ல் "நான் பார்த்தபோது, இதோ, ஒரு வெள்ளைக்குதிரையைக் கண்டேன்; அதின்மேல் ஏறியிருந்தவன் வில்லைப் பிடித்திருந்தான்; அவனுக்கு ஒரு கிரீடங் கொடுக்கப்பட்டது; அவன் ஜெயிக்கிறவனாகவும் ஜெயிப்பவனாகவும் புறப்பட்டான்" என்று சொல்லப்படுகிறது. இங்கு நிச்சயமாக கிறிஸ்துவின் வல்லமையின் கீழ் ஆத்துமாக்களுக்காக செய்கிற யுத்தத்தை விளக்கப்படுத்தி பேசுகிறதாக இருக்கிறது.

பவுல் இந்த யுத்தம் சம்மந்தமான வார்த்தைகளை எபேசியர் 6:13 வசனத்தில் "ஆகையால், தீங்குநாளிலே அவைகளை

நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்" என்று சொல்லுகிறார். இங்கு சொல்லப்படும்படியான ஆயுதங்கள், தற்பாதுகாப்புக்காக சொல்லப்படுபவை. அதாவது இவைகள் ஒரு விசுவாசி சோதனைக்குள்ளான போராட்டங்கள் மற்றும் சத்தியத்திற்கு விரோதமானவைகளுக்கு எதிராக போராடுகிறதைக் குறிக்கின்றன. ஆனாலும் அங்கு தாக்கும்படியான பட்டயமாக தேவனுடைய வார்த்தையாக இருக்கிறது. பவுல் இந்த இடத்தில் தைரியமாக எபேசியர் **6:19-20** வது வசனத்தில் "சுவிசேஷத்திற்காகச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாபதியாகிய நான் அதைப்பற்றிப் பேசவேண்டியபடி தைரியமாய்ப் பேசத்தக்கதாக, நான் தைரியமாய் என் வாயைத் திறந்து சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கிறதற்கு வாக்கு எனக்குக் கொடுக்கப்படும்படி எனக்காகவும் விண்ணப்பம்பண்ணுங்கள்" என்று சொல்லுகிறார்.

எபேசியர் **6** -ஆம் அதிகாரத்தில் கிறிஸ்தவ சபையானது சந்திக்கும்படியான நான்கு விதமான போராட்டங்களைக் குறித்து பவுல் பேசுகிறார். சத்தியத்திற்கான போராட்டம் (தேவனுடைய மக்கள் விசுவாசத்திற்காக போராடும்படி); பரிசுத்தத்திற்கான போராட்டம் (நீதியின் மார்க்கவசத்தை தரித்துக்கொண்டு); இரட்சிப்பின் நிச்சயத்திற்கான போராட்டம் (எதிராளியான பிசாசானவன் எறியும்படியான அக்கினியாஸ்திரங்களை அவிக்கும்படியாக); ஆத்துமாக்களுக்கான போராட்டம் (சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையை கால்களில் தொடுத்தவர்களாய் நின்று) என்று எபேசியர் **6:15** -ல் சொல்லியிருக்கிறார்.

முக்கியமாக சத்தியத்திற்கான போராட்டம் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது. ஏனென்று கேட்டால் இந்த நாட்களில் சீர்திருத்தவாதிகளைப் போல ஆண்டவருடைய சத்தியத்தின்படியான சீர்திருத்தத்திற்காக நாம் நிற்க வேண்டியது

அவசியமாக இருக்கிறது. எல்லா இடங்களிலும் சீர்திருத்த போதகர்கள் சத்தியத்தை ஜாக்கிரதையோடும் உண்மையோடும் போதித்து வருகிறார்கள்.

அநேக சீர்திருத்த போதகர்களால் பரிசுத்தத்திற்கான போராட்டம் முக்கியப்படுத்திச் சொல்லப்படுகிறது. அநேக பிரசங்க பீடங்களிலிருந்து தேவ வல்லமையினால் பாவத்தை அழித்து, பரிசுத்த ஆவியானவரின் உதவியோடு கூட தேவ பக்தியுள்ள வாழ்க்கை வாழ வேண்டுமென்று போதிக்கப்படுகிறது. தூய்மைவாதிகளினால் போதிக்கப்பட்ட பரிசுத்தத்திற்கான அளவுகள் இன்றும் போதிக்கப்படுகிறது அல்லவா? இவைகளை எவ்வித தடையும் இல்லாமல் அநேகர் அறிந்துகொள்ளுவதற்கு ஏதுவாக நம் வாழ்க்கையில் பயிற்சி செய்வதற்கு அக்கறையுள்ளவர்களாக காணப்பட வேண்டும்.

இரட்சிப்பின் நிச்சயத்திற்கான போராட்டம், டாக்டர் மார்டின் லாய்ட்-ஜோன்ஸ் என்பவர் 1950 ஆண்டில், பிசாசிற்கு எதிராக நம்முடைய மனதில் எவ்வளவு கருத்துள்ளவர்களாக போராட வேண்டும் என்பதைக் குறித்தும், பிசாசு ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் தேவனை விசுவாசிப்பதின் மூலம், சந்தோஷம் சமாதானத்தை எடுத்துப் போடுவதை எவ்விதம் மேற்கொள்ளுவது என்பதைக் குறித்தும் சொல்லுகிறார். இவ்விதமாக ஆவிக்குரிய தொடர்ச்சியான போராட்டத்தைக் குறித்துச் சொல்லப்படுகிற வேளையில் ஆத்துமாக்களுக்காகப் போராடுகிற போராட்டம் எங்கே? எந்தவிதமான சந்தேகமும் இல்லாமல் இந்தக் காரியத்தில் நாம் விழிப்பாய் இருந்து செயல்படுவதில் தவறிவிடுகிறோம் என்பதும் இதற்கான போராட்டம் இல்லாத நிலையில் இருக்கிறோம் என்பதும் சொல்லப்படக் கூடும்.

ஆகவே இவ்விதமான சூழ்நிலையில் அநேக தேவனுடைய ஊழியக்காரர்கள் மூலம் செய்யப்படுகிற பணிகளை நாம் அங்கீகரிக்க கூடியவர்களாக இருக்கிறோம். ஆனால் 1950 -லிருந்து சுவிசேஷப் பணி பெலவீனப்பட்டதாக

இங்கிலாந்து சீர்திருத்த சபைகளில் காணப்படுவதை நாம் அறிந்திருக்கிறோம். பொதுவாக சொல்லவேண்டுமானால் பிஷப் ஜெ.சி. ரைல் சொல்லுவது போல, பிசாசினுடைய கோட்டையைத் தகர்த்து ஆத்துமாக்களை விடுதலையாக்க வேண்டும் என்பதைக் குறித்து சிந்திப்பது குறைந்துவிட்டது.

இன்றைய சீர்திருத்த சபைகளில் காணப்படுவது என்ன? சபைகள் முன் வருமானால் இந்தக் காலங்களில் சபைகள் தேவனுடைய வார்த்தையைக் கொண்டதாகவும், நன்கு போதிக்கக்கூடிய போதகர்களைக் கொண்டதாகவும், சிறு பிள்ளைகளுக்கான பள்ளிகளை நடத்துவதிலும், வீடுகளைச் சந்திப்பதிலும், செய்ய வேண்டிய பணிகளுக்கு போதுமான காரியங்கள் இருக்கின்றன, ஆனாலும் சபைகள் அதை செய்வதில் தவறிவிடுகின்றன. ஒருவேளை தேவ தூதர்கள் பரலோகத்திலிருந்து பார்த்து இந்த இங்கிலாந்து சீர்திருத்த மக்களை ஏதாவது பணி செய்யும்படியாக நாம் என்ன செய்ய முடியும்? ஆத்துமாக்களுக்காக யுத்தம் செய்வதில் அவர்கள் ஆர்வமுள்ளவர்களாக இல்லையே என்று எண்ணக் கூடிய நிலையில் இன்றைய சீர்திருத்த சபைகள் இருக்கின்றன.

மற்ற அநேக போராட்டங்களுக்காகப் போராட நாம் ஆயத்த நிலையில் இருக்கிறோம், ஆனால் ஆத்துமாக்களுக்காகப் போராடுவதில் ஆயத்தமாக இருப்பதில்லை. இது ஏன்? இந்தக் காரியங்களில் நாம் சீர்திருத்தவாதிகளைப் போலவோ அல்லது தூய்மைவாதிகளைப் போலவோ, ஜார்ஜ் விட்பீல்ட், கேரி, ஸ்பர்ஜன் போன்றவர்களைப் போலவோ செயல்படக்கூடிய ஆர்வம் உள்ளவர்களாக இல்லை. இலவசமாக சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும் வேதப் போதனையை நம்புகிற விசுவாசிகள் உண்டு. ஆனால் அதை அவர்கள் உறுதியாய் போதிப்பது கிடையாது. அவர்கள் எழுத்துப் பூர்வமாக கால்வின் கொள்கைகளை விசுவாசிக்கிறவர்கள். ஆனால், அவர்களுடைய நடைமுறை செயலில் ஹைப்பர் கால்வினிஸ்ட்டுகளாக இருக்கிறார்கள்.

நாம் இந்தக் காலங்களில் சிறுபிள்ளைகளுக்கான ஞாயிறு பள்ளிகளில் அருகில் உள்ள மக்களை சுவிசேஷப் பணிக்கென்று சந்திப்பது, சபையில் அங்கத்துவத்தை முக்கியப்படுத்தி செயல்படுவது போன்ற பணிகளை முக்கியப்படுத்துவது இல்லை. ஆகவே இது அதிகாரப்பூர்வமான சீர்திருத்த கிறிஸ்துவம் அல்ல. இது வித்தியாசமுள்ளதாக இருக்கின்றது. இதைக் குறித்து நாம் ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்க வேண்டும். இன்றைய காலங்களில் தங்களுடைய சபை மக்களைப் பாதுகாப்பதில் சீர்திருத்த பிரசங்கிகளும், எழுத்தாளர்களும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் யுத்தம் செய்யும்படியாக நியமிக்கப்பட்டவர்கள் என்பதை மறந்துவிட்டார்கள். அநேக சீர்திருத்த கூட்டங்களும் அநேக புத்தகங்களும் வெளிவருகின்றன. ஆனால் இவைகளின் மத்தியில் இன்றைய கால்வின் கொள்கைக்காரரர்கள் பலவிதங்களில் சரியான ஆரோக்கியமான விதத்தில் செயல்படுகிறது இல்லை. ஆகவே இதன் விளைவாக அநேக தனிப்பட்ட விசுவாசிகள் அநேக சபைகளில் ஆண்டவருக்காக அனைவரும் சேர்ந்து எவ்விதம் உழைப்பது என்பதை மறந்துவிட்டார்கள். அவர்களில் ஒருவராக நாம் இருக்கிறோமா? நாம் நம்மை நாமே உற்சாகப்படுத்த வேண்டியவர்களாக இருக்கிறோமா?

நாம் ஏற்கனவே பார்த்த வண்ணமாக யுத்தம் என்பது முன்னேறி செல்லும் விதமாகவும், மேலான குறிக்கோள்களைக் கொண்டதாகவும் இருக்கவேண்டியது அவசியம். நாம் இன்னொரு விதத்தில் சொல்லப்போனால் யுத்தத்தில் புத்தியுள்ளவர்களாக, ஞானமுள்ளவர்களாக செயல்பட வேண்டியது அவசியம். ஆத்துமாக்களுக்காக யுத்தம் செய்வதில் நம்முடைய மனதை சமுதாயத்தில் எவ்விதம் செயல்படவேண்டும் என்பதிலும், சிறுபிள்ளைகள், வாலிபர்கள் மற்றும் பெரியோர்கள் போன்றோர்களின் மத்தியில் செய்யும்படியான பணிகளைக் குறித்தும் அதிகம் கவனமுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

வேதத்திற்கு ஏற்புடையதல்லாத அநேக போதனைகளை எழுதுகிற எழுத்தாளர்கள் அநேகரை

தவறாக வழிநடத்திவிடுகிறார்கள். முக்கியமாக அவர்கள் பிரசங்கிப்பத்தின் மூலமாக ஆத்துமாக்களை சந்திப்பதிலும், பாவத்தைக் குறித்து பேசுவதில் அதிக கண்டிப்பில்லாத நிலையிலும், நாடகங்கள் போன்றவற்றின் மூலமாக மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிப்பதிலும், உலக முறைகளில் உற்சாகப்படுத்துகிற இசைக் கருவிகளைக் கொண்டு செயல்படுகிற ஊழியங்களின் மூலமாகவும் ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுவதற்கு பிரயாசப்படுகிற வழிமுறைகளையும் சொல்லுகிறார்கள். இவ்விதமான வழிமுறைகளைப் பின்பற்றுகிற சீர்திருத்த சபைகள் குழப்பத்தில் முடிந்துவிடுகின்றன.

இன்றைய விசுவாச சபைகளில், தெளிவான ஆவிக்குரிய போராட்டத்திற்கான திட்டங்கள் கிடையாது. மிக அழகான பதங்களை உபயோகப்படுத்தி பரிசுத்த வாழ்விற்கான சுவிசேஷப்பணியை ஊக்குவிக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு இருப்பவர்கள், மெய்யாலுமே அவர்கள் சரியான சுவிசேஷப் பணியைச் செய்வதில்லை.

நிச்சயமாக கிறிஸ்தவ மக்களுடைய சாட்சியுள்ள வாழ்க்கை மற்றவர்களைக் கவரும் வண்ணமாக இருக்கிறது. ஆனால் இது ஆத்துமாக்களுக்காகப் போராடுவதின் ஒரு பகுதி மாத்திரமே. ஆனாலும் சில சபைகள் ஓய்வு நாள் பள்ளிகளை நடத்துவதிலும், வாலிப பிள்ளைகளுக்காக வாரத்தின் மத்தியில் நடக்கும்படியான வகுப்புகளையும் நிறுத்திவிட்டனர். மேலும் அருகில் உள்ள மக்களை சந்திப்பதிலும், இன்னும் அதிகமான வெளி சுவிசேஷப் பணிகளை செய்வதிலும் அவர்கள் ஆர்வம் காட்டுவதை விட்டுவிட்டார்கள்.

சரியான ஒரு குறிக்கோளோடு கூடிய திட்டம் ஒவ்வொரு சபைக்கும் மிக அவசியமானது. இது அவர்கள் சரியான ஆவிக்குரிய போராட்டத்தைப் போராடுவதற்கு ஏற்றதாக இருக்கும். ஒரு நாடு யுத்தம் தொடுக்கும்பொழுது, அதில் எவ்வித திட்டமும் குறிக்கோளும் இல்லாமல் இருக்க முடியுமா? அதிகமான அளவில் யோசித்து செயல்பட வேண்டிய

*காரியங்களாக இவைகள் இருக்கின்றன. ஒருவேளை நம்முடைய சபை இருக்கும்படியான இடம், ஞாயிறு பள்ளிக்கு ஏற்றதாக இல்லையென்றால் சிறுபிள்ளைகள் அதிகமாக இருக்கும்படியான இடத்தில் ஒரு பள்ளியை வாடகைக்கு எடுக்கலாம். நமக்கு கர்த்தர் ஒரு நல்ல சபையை கொடுத்திருப்பது சந்தோஷமான காரியம்தான். ஆனால், அவைகள் பிள்ளைகளுக்கு என்று உபயோகப்படுத்தப்பட முடியவில்லை என்றால் நாம் கிளையாக இன்னொரு பகுதியில் ஊழியத்தை ஆரம்பிக்க வேண்டும். இன்றைக்கு அநேகரில் இவ்விதமான எண்ணங்களுடன் கூடிய செயல்பாடு இருப்பதில்லை. அநேக வருடங்களுக்கு முன்பாக அநேக கிளைகள் கொண்ட சபை ஊழியங்களும் ஞாயிறு பள்ளிகளும் இருந்தன. ஸ்பர்ஜனுக்கு ஒரு தலைமுறைக்கு முன்பாக இருந்த ரோலண்ட் ஹில் என்பவருடைய சர்ரே தேவாலயத்திற்கு அருகில் **13** ஞாயிறு பள்ளிகள் இருந்தன. ஏனென்று கேட்டால் அந்த சபையானது ஞாயிறு பள்ளி நடத்துவதற்கு இடம் போதுமானதாக இருக்கவில்லை.*

*இதுவே ஆத்துமாக்களுக்காகப் போராடும் போராட்டமாக இருக்கின்றது. யுத்தம் செய்யும்பொழுது முழு இராணுவ பட்டாளமே, மேல் அதிகாரி முதல் கீழுள்ள சிப்பாய் வரைக்கும் ஒரு தெளிவான திட்டம் கொண்டதாக இருக்கும். இது பழங்காலத்து கால்வின் கொள்கை கொண்ட சபைகள் தெளிவாய்ப் பின்பற்றி வந்த வழிமுறையாக இருக்கின்றன. நம்முடைய சபையானது சமுதாயத்தில் எல்லா நிலையிலும் உள்ள பிள்ளைகளை சந்திப்பதற்கு ஏற்ற வண்ணமாக காணப்படுகிறதா?*

*அடுத்தது யுத்தத்திற்கான போராட்டத்தில் புதிய ஏற்பாட்டில் சொன்ன வண்ணமாக அதிகமான தியாகமுள்ள நடவடிக்கைகளைக் கொண்டதாக சபை இருக்கவேண்டும். யுத்தம் என்பது இக்கட்டான இடங்களிலும் முழுமையான அர்ப்பணிப்போடு செயல்படுகிறதாக இருக்கின்றது. ஒருவேளை ஊழியம் என்று சொல்லப்படுகின்ற வேளையில் நடு இரவில்*

யுத்தம் செய்யவேண்டிய நிலையிருக்குமானால் போர் வீரர்கள் இது தூங்குவதற்கான நேரம் என்று அதை தட்டிக் கழித்துவிட முடியாது. இராணுவ யுத்தத்தில் பல அசௌகரியங்கள், கஷ்டங்கள், பாடுகள் கொண்டதாகவே இருக்கின்றன. இது நம்முடைய சபைகளில் காணப்படுகின்றவைகளாக இருக்கின்றனவா? ஒரு சபையின் விசுவாசியாக அதை ஏற்றுக்கொள்ள நாம் ஆயத்தமாக இருக்கின்றோமா? ஒரு போதகர் வாரத்தின் மத்தியில் சிறுபிள்ளைகள் கூட்டத்தில் பியானோ போன்ற இசைக்கருவியை இசைக்கும்படியான ஒருவர் தேவை என்று அழைத்திருந்தார். ஆனால் அந்த சபையில் பியானோ வாசிப்பவர்கள் அநேகர் இருந்தும், அந்நாளில் ஒருவரும் முன்வரவில்லை, ஒவ்வொருவராக அதை தவிர்த்துவிட்டார்கள். ஏனென்று கேட்டால், அவர்கள் செய்யும்படியான சொந்தக் காரியங்களினாலும், அவர்களின் வழக்கமான செயல்பாட்டினாலும் இழுக்கப்பட்டுப் போனார்கள்.

முதலாம் உலக யுத்தத்தில் இராணுவ அதிகாரியாக இருந்த ஒருவர், நான் சிறுவயதில் படிக்கும்பொழுது எனக்கு ஆங்கிலம் போதிக்கும் ஆசிரியராக இருந்தார். அவர் அவ்விதமாக யுத்தம் ஆரம்பித்தவுடன், அவரோடு கூட இருபதிற்கும் மேற்பட்ட வாலிபர்கள் பல்கழைக்கழகத்தில் இருந்து இராணுவத்தில் இணைந்ததைச் சொன்னார். அவர்கள் அப்பொழுதுதான் பணிகளில் சேர்ந்திருந்தார்கள். ஆனாலும் தங்களுடைய தேசத்திற்காக கைகள், கால்கள் அல்லது உயிர் பிரிய நேரிட்டாலும் அந்தப் பணியை செய்ய முழுமனதாய் இருந்தார்கள். எனக்கு ஆங்கிலம் போதித்த அந்த ஆசிரியர் யுத்தத்திற்கு சென்றபோது அவர் மாத்திரமே திரும்பி வந்ததாக சொன்னார். அவர்கள் அங்கிருக்கும் தங்களுடைய அபாயத்தை உணர்ந்திருந்தார்கள். ஆனாலும் தங்களுடைய நாட்டிற்காக, இராஜாவிற்காக தங்களை ஒப்புக்கொடுத்தார்கள். ஆனால், இங்கு இராஜாதி இராஜாவாக, நித்திய ராஜ்யத்திற்காக அழைக்கும்பொழுது ஆவிக்குரிய யுத்தத்திற்கு ஆண்டவருடைய

பணிக்கென்று ஒப்புக்கொடுக்கிறவர்கள் ஒரு சிலர் மாத்திரமே இருக்கிறார்கள். இவ்விதமான யுத்தத்தில் தியாகத்தோடு இந்த யுத்த வீரர்களைப் போல பனியிலும், தண்ணீரிலும் தவிழ்ந்து தியாகங்களைச் செய்து போராட வேண்டும் என்பதை மறந்துவிடுகிறோம். அநேக சீர்திருத்த விசுவாசிகளும் கூட இவைகளை உணர்வது கிடையாது.

எனக்குத் தெரிந்த அநேகர் புதிய ஊர்களில் புதிய சபைகளுக்கு போகவேண்டிய பொழுது, அங்கு ஞாயிறு பள்ளி இல்லை என்பதை அறிந்துகொண்டார்கள். அந்த சபை மக்கள், மிக அன்போடு புதிதாக வந்த அவர்களை உபசரித்து வரவேற்றார்கள். இந்த விசுவாசிகள் ஞாயிறு பள்ளிகள் ஆரம்பிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்ட பொழுது அவர்கள் வரவேற்றார்கள். அவர்கள் நீங்கள் செய்வது அற்புதமாக இருக்கிறது நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். இதில் நாங்கள் உங்களோடு கூட இருக்கிறோம் என்று சொன்னார்கள். ஆனாலும் நடைமுறையில் ஒருவரும் உதவி செய்ய முன்வரவில்லை.

சமீபத்தில் மெட்ரோபொலிட்டன் டேபர்னேகிலில் இருந்து 25 ஆண்டுகளுக்கு முன்பாக சென்ற ஒரு கிறிஸ்தவ தம்பதியரை சந்தித்தேன். இவர்கள் தாங்கள் போன பெயர்பெற்ற சீர்திருத்த சபையில் உண்மையாய் ஞாயிறு பள்ளியை நடத்திவந்தார்கள். இவ்வளவு ஆண்டுகள் உழைத்தும் அவர்கள் அங்கிருந்து செல்ல வேண்டிய சூழ்நிலையில் அந்த ஞாயிறு பள்ளிகள் மூடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டது. ஏனென்றால் அவர்களுக்கு உதவி செய்வார் ஒருவருமில்லை. அந்த சபை மக்களுக்கு ஆத்துமாக்களுக்காக போராடவேண்டிய காரியங்களில் பயிற்சிகள் கொடுக்கப்படாமல் இருந்தது ஒரு வருத்தமான காரியம். இவ்விதமான ஒரு ஆவிக்குரிய மெத்தனமாக இருப்பது கால்வின் கொள்கை கொண்ட திருச்சபைக்கு உகந்ததா? இல்லவே இல்லை.

அப்போஸ்தலனாகிய பவுல் அப்போஸ்தலர் **20:16** -ல் “பவுல் கூடுமானால் பெந்தெகொஸ்தே பண்டிகைநாளிலே எருசலேமிலிருக்க வேண்டுமென்று தீவிரப்பட்டதினிமித்தம்” என்று சொல்லுகிறார். இங்கு பவுல் அந்த மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் என்ற தீவிரத்தைப் பார்க்கிறோம். ஆத்துமாக்களின் இரட்சிப்பிற்காக பசிதாகமுள்ளவர்கள் இந்நாட்களில் எங்கே? உயிர்மீட்சியை வாஞ்சிப்பது நல்லது. ஆனால் தேவன் ஏற்றவேளையில் கொடுப்பார் என்பதை அறிந்திருப்பது நல்லது.

சில சமயங்களில் பிசாசை மேற்கொள்ள முடியாது என்கிற எண்ணத்தினால் அவர்கள் ஆத்துமாக்களுக்காகப் போராடுவதை விட்டுவிட்டார்கள். இரண்டாம் உலகப்போரின் போது ஏற்பட்ட இன்னொரு உதாரணத்தைப் பார்க்கலாம். சிங்கப்பூர் தேசத்தை இங்கிலாந்து தேசம் **1942** -ல் இழந்து போனது எவ்வளவு வருத்தமான காரியம். இங்கிலாந்து வீரர்கள் மலேசியா பகுதியை பாதுகாப்பது மிக கடினமாக இருந்த வேளையில் இங்கிலாந்து இராணுவம் நான்கு பகுதிகளாக சிங்கப்பூர் உள்ளே நுழைய பார்த்த வேளையில், ஜப்பான் போர்வீரர்கள் மற்றொரு பகுதியில் நுழைந்து சிங்கப்பூரை பிடித்துவிட்டார்கள். வெகுசீக்கிரத்தில் அந்த யுத்தத்தில் இங்கிலாந்து போர் வீரர்கள் **900** பேர் மடிந்துபோனார்கள். ஒரு லட்சம் இராணுவ வீரர்கள் சரணடைய வேண்டியதாயிற்று. அநேக அதிகாரிகள் இது இங்கிலாந்து இராணுவ சரித்திரத்தில் வெட்கப்படவேண்டிய காரியமாகப் போனது என்று சொல்லுகிறார்கள். அதோடு கூட **18** முதல் **60** வயதில் இருந்த **25,000** பேர் கொண்ட சீன வீரர்களை ஜப்பான் இராணுவத்தினர் தூக்கிலிட்டு கொன்றார்கள். இது எவ்வளவு வருத்தமான காரியம்.

அவர்கள் ஏன் சரணடைந்தார்கள்? ஏனென்றால் அவர்களைக் காட்டிலும் ஜப்பானியர்கள் அதிக பலமுள்ளவர்கள் என்று எண்ணினார்கள். ஆனால் பிறகு கண்டுபிடிக்கப்பட்டது

என்னவென்றால் அந்த சமயத்தில் ஜப்பானிய போர் வீரர்கள் ஆயுதங்கள், மற்ற எல்லாவற்றையும் இழந்து, ஓரிரு வாரங்களுக்கே தாக்குபிடிக்கிறவர்களாக இருந்தார்கள் என்பதே. கடைசியில் ஜெனெரல் பெர்சிவல் குற்றம் சாட்டப்பட்டார். சர்ச்சில் என்பவர் அவரின் கட்டளையை நிறைவேற்ற முழு மனதோடு இருந்தார். ஆனாலும் கூட தன்னோடு இருந்த இராணுவ மக்களின் சரணடைந்த மனநிலையை அவர் ஏற்றுக்கொண்டு தவறிவிட்டார். இது நடைபெற்றதின் காரணம் என்னவென்றால் எதிராளியை மேற்கொள்ள முடியாது என்ற எண்ணம் தான். இது நாம் ஆத்துமாக்களுக்காக இன்றைய காலக்கட்டத்தில் போராடாமல் இருப்பதற்கான காரணமா?

நாத்திகை கொள்கை அதிகமாக பரவி வருவதினாலும் உலக கவர்ச்சிகளும் பலவிதங்களில் ஆத்துமாக்களை இழுப்பதினாலும் இந்த சுவிசேஷ பணியில் தொடர்ந்து வெற்றிபெற முடியாது என்று எண்ணுவது காரணமா? அதேவிதமாக சத்தியத்திற்காகவும், பரிசுத்தத்திற்காகவும் இரட்சிப்பின் நிச்சயத்திற்காகவும் போராடுவது மாத்திரமல்ல, ஆத்துமாக்களுக்காகவும் போராடவேண்டியது மிக அவசியமானது. பழங்காலத்து சீர்திருத்த கிறிஸ்தவர்களுக்கும் இன்றைய சீர்திருத்த கிறிஸ்தவர்களுக்கும் அதிகமான வித்தியாசங்கள் இருப்பது பரிதாபத்திற்குரிய நிலையாகும். நாம் நம்முடைய மூதாதையர்கள் போல் அல்ல. அவர்கள் கொண்டிருத்த வைராக்கியம் மற்றும் தீவிரம் நம்மிடத்திலில்லை. ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணவேண்டும் என்ற கருத்தோடு கூடிய வாழ்க்கை நம்மில் இல்லை. இதை நாம் அறிந்துகொள்வோமானால் நிச்சயமாக முன்னேறிச் செல்ல முடியும். நம்மைக் குறித்து தனியான விதத்தில் எண்ணும்பொழுது நாம் எவ்விதமாக இருக்கிறோம்? உழைக்கும்படியாக நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம் என்ற எண்ணம் நம்மில் காணமுடிகிறதா? ஒரு மெய்யான தனிப்பட்ட ஆவிக்குரிய வாழ்க்கையைக் கொண்டிருப்பது என்றால், ஆண்டவருடைய பணியில் நம்மை முழுமையாக அர்ப்பணித்திருப்பதும்,

இழந்துபோன ஆத்துமாக்களுக்காக, பெரியவர்களுக்காக, குழந்தைகளுக்காக நம்மை நாமே அர்ப்பணிப்பதிலும் தான் இருக்கிறது. நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினுடைய பிரதானமான பணி இந்த பூமியில் என்னவென்றால், ஆத்துமாக்களுக்காக இரட்சிப்பை சம்பாதிப்பதாகவே இருந்தது. அதை நம்முடைய வாழ்விலும் வெளிப்படுத்தவேண்டியது மிக அவசியமானது. இதுவே நம்முடைய அழைப்பும், நோக்கமும், சந்தோஷமும், பலனுமாக இருக்கிறது.

# அத்தியாயம் 7

# ஒவ்வொருவருக்கும் விசேஷித்த தாலந்துகள் உண்டு

நம்முடைய தாலந்துகள் அவருடைய பணிக்கென்று அர்ப்பணிக்கப்பட வேண்டியவைகளாய் இருக்கின்றன. மேலும் சபையிலும் அவைகள் பயன்படுத்தப்பட வேண்டியவைகளாய் இருக்கின்றன. நம்முடைய உலகப் பிரகாரமான வாழ்க்கைக்கு மாத்திரமே அவைகள் உபயோகப்படுத்தும்படியாக இருக்கக்கூடாது. நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையின் முன்னேற்றம் இதைச் சார்ந்து இருக்கிறது. வேதாகமத்தினுடைய பல பகுதிகளில் ஒவ்வொரு விசுவாசிக்கும் விசேஷித்த தாலந்துகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. நம் ஒவ்வொருவருக்கும் என்று பவுல் சொல்லுகிறார் (எபேசியர்4:7). வித்தியாசமான வரங்கள் நம் ஒவ்வொருவருக்கும் விசேஷித்த முறையில் கொடுக்கப்பட்டிருக்கின்றது என்று பவுல் சொல்லுகிறார் (ரோமர் 12:6, 1கொரி 12:6).

நாம் நிச்சயமாக இவைகளை அறிந்து அவைகளைப் பயன்படுத்த வேண்டும். "அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள்" (1பேதுரு 4:10). தீமோத்தேயுக்கு பவுல் எழுதும்போது கூட இவ்விதமாக சொல்லுகிறார். உனக்குள்ளாக இருக்கும் வரத்தை அசட்டை பண்ணாதே (1தீமோ 4:14). நாம் வரங்கள் என்று சொல்லும்போது அற்புத வரங்களை மாத்திரமே நினைக்கக் கூடியவர்களாய் இருக்கின்றோம். ஆனால் நாம் பிரசங்கிக்கும்படியான வரத்தை

குறித்து அதிகம் சிந்திப்பது இல்லை. பவுலும் பேதுருவும் வரங்களைக் குறித்து பேசும்பொழுது அதற்கு மேலாக பேசுகிறார்கள். நமக்கு இயற்கையாக கொடுக்கப்பட்ட வரங்களை அல்லது தாலந்துகளை குறித்தும் அவர்கள் சேர்த்து பேசுகிறார்கள். நமக்கு சில சந்தர்ப்பங்களில் உபயோகப்படுத்த கூடிய வரங்களைக் குறித்தும் பேசுகிறார். ஒரு இடத்தில் தாலந்துகளைக் குறித்து பவுல் பேசும்பொழுது ஆளுகை செய்கிற வரங்கள், மற்றவர்களைக் கவனித்துக்கொள்ளுகிற வரம் போன்ற நிறைய வரங்களை குறித்தும் பேசுகிறார் (ரோமர் 12:8).

ஏறக்குறைய இந்த அதிகாரத்தில் இருபத்தியொரு (21) சாத்தியக்கூரான வரங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒருவேளை இதற்கும் அதிகமான வரங்கள் இருக்கலாம். இந்த புத்தகத்தின் ஆக்கியோனுடைய அனுமானம், ஏறக்குறைய ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் இங்கு சொல்லப்பட்டிருக்கிற வரங்களில் குறைந்தது மூன்றில் ஒரு பங்காகிலும் பெற்றிருக்கக் கூடும். ஒருவேளை ஒரு சிலர் இன்னும் அதிகமான வரங்களைப் பெற்றிருக்கலாம். ஆனாலும் கூட ஒருவருக்கொருவர் சார்ந்திருக்கும்படியாக வரங்களைத் தேவன் கொடுத்திருக்கிறார் (எபே 4:16, கொலோ 2:19). தேவன் நம் எல்லோரையும் ஒரே நிலைமையில் வைத்திருக்கிறார். அதே சமயம் ஏறக்குறைய ஒவ்வொரு விசுவாசியும் மற்றவர்களைப் போலவே தாலந்துகளைப் பெற்றிருக்கிறவர் மாத்திரம் அல்ல, இந்த தாலந்துகள் ஒட்டு மொத்தமாக கர்த்தருடைய சபைக்குப் பிரோஜனமாக இருக்கும்படியாக கர்த்தர் கொடுத்திருக்கிறார். இது நம்மை தாழ்த்துவதற்கும், நம்மை உற்சாகப்படுத்துவதற்கும் ஏதுவானதாக இருக்கிறது. தேவன் நமக்கு கொடுத்திருக்கின்ற இந்த தாலந்துகளைப், பொறுப்புள்ளவர்களாக உபயோகப்படுத்தும்படியாக நாம் எதிர்பார்க்கப்படுகிறோம்.

இந்த தாலந்துகளைக் குறித்து சொல்லுவதற்கு முன்பாக முக்கியமாக மூன்று குறிப்புகளை சொல்ல வேண்டியதாக இருக்கின்றது. முதலாவது, நாம் அறிந்துகொள்ள வேண்டியது, தாலந்துகள் தனிப்பட்ட மனிதனின் பிரோயஜனத்திற்கு அல்ல, சபையின் பிரோஜனத்திற்காகவே கொடுக்கப்பட்டிருக்கின்றது. எபேசியர் 4:12,13 -ல் பவுல் இந்த தாலந்துகளைக் குறித்து பேசும்பொழுது, அவைகள் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், இன்னும் சுவிசேஷகர்கள், போதகர்கள், ஆசிரியர்கள் இவைகளைக் குறித்துச் சொல்லுகிறார். இவைகளை தேவன் சபையினுடைய பாதுகாப்பிற்காக கொடுத்திருக்கிறார் (எபே 4:14). இவைகள் விசுவாசிக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற எல்லா தாலந்துகளையும் உட்படுத்தினதாக இருக்கின்றன.

இரண்டாவதாக, விசுவாசிகளின் தாலந்துகள் சுவிசேஷ பணியில் உபயோகப்படுத்தப்பட வேண்டும். அவராலே சரீரம் முழுதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன் தன் அளவுக்குத்தக்கதாய்க் கிரியைசெய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது (எபே 4:16). சபையின் அங்கத்தினருடைய எல்லா தாலந்துகளும் சபையில் உபயோகப்படுத்தப்படும் பொழுது சபையானது வளரும்.

மூன்றாவதாக, ஒவ்வொரு கிறிஸ்துவனும் இந்த தாலந்துகளில் ஒரு சிறிய பகுதியாகிலும் கொண்டிராமல் இருக்க முடியாது. இந்த பகுதிகளைத் தொடர்ந்து வாசிக்கும் பொழுது நிச்சயமாக ஒவ்வொரு கிறிஸ்தவனும் தேவனுக்கென்று பணி செய்ய வேண்டும் என்பதை அறிந்துகொள்ள முடியும். வெளியரங்கமாக தெரியக்கூடிய ஒரு தாலந்து சாட்சி பகிர்வது. சந்தேகமில்லாமல் நாம் சொல்லக் கூடிய காரியம் என்னவென்றால் ஒவ்வொரு விசுவாசியும், தேவன் அவருடைய சித்தத்தின்படி கொடுத்திருக்கக் கூடிய தாலந்துகளை

அறிந்து அவைகளை உபயோகப்படுத்த வேண்டும் என்பதே. இப்பொழுது தேவன் தம்முடைய மக்களுக்கு கொடுத்திருக்கக் கூடிய தாலந்துகளின் சில பட்டியலை நாம் பார்ப்போம்.

முதலாவது தாலந்து போதிக்கும் வரம். ஒவ்வொரு விசுவாசியும் போதிக்கும்படியாக இருக்கிறார்கள். நம்முடைய பிள்ளைகளுக்கு நாம் போதித்து காரியங்களை ஒருவருக்கொருவர் விளக்கப்படுத்துகிறோம். ஆனால் அதை விசேஷித்த விதத்தில் செய்யக்கூடிய தாலந்து ஒரு சிலரிடத்தில் மட்டுமே உண்டு. அவர்கள் பொதுவான இடத்தில் தேவனுடைய வார்த்தையை விளக்கப்படுத்தி, வெளியரங்கமாக பாவிகளை இரட்சிக்கும்படியாக அழைப்பதுண்டு. ஒருவேளை அவர்கள் இவ்விதமான செய்திகளை பிரசங்கிக்கும்படியான காரியத்தைக்குறித்து மற்றவர்களை விட சுலபமாக வேதாகமத்தில் பார்க்கக்கூடியவர்களாய் இருப்பார்கள்.

ஆனால் இந்த தாலந்து, போதகர்களுக்கு மாத்திரமே விசேஷித்ததாக இருப்பதில்லை. அநேக வாலிபர்களும், பிள்ளைகளும் போதிக்கக்கூடிய வரத்தைப் பெற்றவர்களாக இருக்கிறார்கள். உண்மைதான் ஒருவேளை அநேக போதகர்கள் சிறுபிள்ளைகளுக்கு போதிப்பதில் அதிகம் தாலந்து உள்ளவர்களாய் இருக்க முடியவில்லை. இருபதாவது நூற்றாண்டில் ஒரு பெரிய போதகர் சிறுபிள்ளைகளுக்கு ஆரம்பக் காலங்களில் சத்தியத்தைச் சொன்ன பொழுது, அவருடைய மனைவி அவர் அந்த தாலந்துகளை பெற்றிருக்கவில்லை என்று சொல்லி, மறுபடியுமாக அதை செய்ய வேண்டாம் என்று சொன்னதாக நாம் அறிகிறோம். அவ்வளவு ஒரு பெரிய பிரசங்கி மறுபடியுமாக சிறுபிள்ளைகளுக்குப் போதிப்பதை செயல்படுத்தவில்லை. பெரியவர்களுக்கு போதிக்க முடியாமல் இருக்கிற அநேகர் சிறுபிள்ளைகளுக்கு போதிக்கக்கூடியவர்களாய் இருப்பதுண்டு.

இந்த புத்தகத்தின் ஆக்கியோன் தனது சபையில் சிறுபிள்ளைகளின் மத்தியில் நன்கு போதிக்கக்கூடியவர்களைக் கொண்டிருக்கிறார். அநேகர் அதை நடைமுறை படுத்துவதற்கு

முன்பாக அவ்விதமான தாலந்து இருப்பதை அறிந்திராமல் இருந்திருக்கிறார்கள் என்று நாம் தெரிந்திருக்கிறோம். நாம் எண்ணிப்பார்ப்பதை விட அநேக நல்ல தாலந்து பெற்றவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களில் இந்த தாலந்து இருப்பதைக் கவனத்தோடு பார்த்து அறிந்துகொள்ளவில்லை என்றால் அது வெளிவராது. தேவன், தம்முடைய மக்கள் எல்லோரையும், அவர்ககளின் தாலந்தை அறிந்துகொள்ள ஜெபிக்கும்படியாக சொல்லி இருக்கிறார். நாம் ஜெபித்து விழிப்புள்ளவர்களாய் இருப்போமானால் நம்மத்தியிலேயே அநேக தாலந்துகளை பெற்றவர்களைக் கண்டுகொள்ள முடியும்.

அடுத்த தாலந்து, மற்றவர்களை பராமரித்து மேய்ப்பர்களாக இருந்து செயல்படுவது. மற்றவர்களைப் பராம்பரிக்கும்படியான தாலந்து பெற்றவர்களை ஒருவேளை சபையில் இணங்கண்டுகொள்ளப்படாமல் போகலாம். சிலர் போதிக்கிற வரத்தை பெற்றிருக்கிற தாலந்தை உபயோகப்படுத்தாமல் இருப்பதும், சிலர் எந்த தாலந்துகளையும் உபயோகப்படுத்தாதபடிக்கு தனிமையாய் இருப்பதுமுண்டு. ஆனால் பிறகு அநேக சமயங்களில் பார்க்கும்பொழுது அவர்கள் நன்றாக மற்றவர்களைப் பராம்பரிக்கும் படியாக இருப்பதைப் பார்க்க முடியும். அவர்கள் மற்றவர்களை எவ்விதமாக சரியான ஆவியோடு உற்சாகப்படுத்துவதை அறிந்திருக்கிறார்கள். எது தேவையோ அதைக் குறித்து அவர்கள் கருத்தாய் இருக்கக்கூடியவர்களாய் இருப்பார்கள். தேவையான உதவியை கொடுக்கும்படியான தாழ்மை, மிருதுவான தன்மை ஆகியவைகளைக் கொண்டவர்களாய் இருப்பார்கள். எல்லோரும் இந்த தாலந்தை பெற்றிருக்க வேண்டியது அவசியம். ஆனால் ஒரு சிலருக்கு இது விசேஷித்த விதத்தில் கொடுக்கப்படுகிறது. அவர்கள் எப்பொழுது ஆலோசனை கொடுக்க வேண்டும், எவ்விதம் கொடுக்க வேண்டும், எப்பொழுது கொடுக்கக்கூடாது என்பதை அறிந்திருக்கிறார்கள். அவர்கள் தங்களை எந்த விதத்திலும் மேலாக உயர்த்தாதபடிக்கு எவ்விதமாக ஆறுதல்படுத்துவது அல்லது கண்டிப்பாய்

பேசுவதென்பதை அறிந்திருக்கிறார்கள். சபையில் உண்மையான தாலந்தை அவர்கள் பெற்றிராத பொழுது, அவர்கள் தங்கள் சொந்த ஞானத்தைக்கொண்டு மக்களை கண்டிக்கும் பொழுது பிரச்சினை ஏற்படுகிறது. சீக்கிரத்தில் சபையில் அது குழப்பத்தை ஏற்படுத்துகிறதாய் இருக்கின்றது. மற்றவர்களைப் பராமரிப்பது சபைக்கு கொடுக்கப்பட்டிருக்கின்ற தாலந்துகளில் ஒரு பெரிய தாலந்து. ஒருவேளை இதை வாசிக்கிறவர் இவ்விதமான தாலந்தை பெற்றிருக்கலாம். ஆகவே இவ்விதமான தாலந்தை பெற்றிருக்கிறவர் எந்த விதத்திலும் மேன்மை பாராட்டக்கூடாது. நாம் இவ்விதமான தாலந்தை பெற்றிருப்போமானால் அதை பொறுப்போடு கூட தேவனுடைய பணியில் உபயோகப்படுத்த வேண்டியவர்களாய் இருக்கின்றோம். இவர்கள் மற்றவர்களைச் செயல்படுத்தும்படியாக, அங்கும் இங்குமாக அலைந்து திரிகிறவர்களாய் இருக்கமாட்டார்கள். ஒரு உண்மையான பராமரிக்கிறவன், எப்பொழுது ஒரு நபரை போதகரிடத்திலோ அல்லது மூப்பரிடத்திலோ அழைத்துச் செல்லவேண்டும் என்பதை அறிந்திருக்கிறான். இந்த தாலந்து 1 கொரி 12:28 -ல் சொல்லும்படியான தாலந்தைப் போல் இருக்கின்றது. அதாவது உதவுவது, ஆனால் என்ன விதமான உதவிகள்? அவர்கள் மற்றவர்களோடு சிநேகம் கொள்ளும்படியான விதத்தில் ஒரு விசேஷித்த தாலந்தை பெற்றவர்களாய் இருப்பார்கள். மற்றவர்களுக்கு உதவி செய்வதில், விழுந்து போனவர்களுக்கு இரக்கத்தைக் காட்டுவதில், அதிகம் குழப்பம் உள்ளவர்களிடத்தில் பரிவு காட்டுவதில் அவர்கள் விசேஷித்தவர்களாய் இருப்பார்கள். அவ்விதமாக உதவி செய்யப்படுகிறவர்கள் நண்பர்களைப் போல பார்க்கப்படுவார்கள். அவர்களில் விசேஷித்த இந்த தாலந்து இருக்கின்றது. அவைகள் இல்லாதபடிக்கு சபை குறைவுள்ளதாக இருக்கின்றது.

மற்றொரு உயர்ந்த ஈவு அல்லது தாலந்து பகுத்தறிவது. ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் இது ஓரளவு இருக்கிறது. ஆனால், சிலருக்கு அதிகப்படியான அளவில் இருக்கிறது. சிலர் எளிதில் வரும்படியான ஆபத்தை விளங்கிக்கொண்டு முன்னதாகவே அதை

மேற்கொள்ளுபவர்களாகக் காணப்படுவார்கள். உதாரணமாக, சிறுவர்களுக்கான ஒரு கூட்டத்தை நடத்தும்பொழுது, அதற்கு முன்பாகவே அதில் இருக்கும்படியான ஆபத்தான பிரச்சனைகளோ அல்லது தவறான காரியங்களோ அல்லது வேறு ஏதாகிலும் இருக்குமானால் அதை முன்னதாகவே கண்டு கொள்ளுவார்கள்.

ஒரு சபையில் ஏற்படக்கூடிய சத்திய ரீதியான ஆபத்தை முன்பதாகவே ஆவிக்குரிய பிரகாரமாக ஒரு சிலர் விளங்கிக் கொள்ளக்கூடிய காரியங்கள் உண்டு. அநேக ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு சபையின் போதகர் மரித்துவிட்டார். இன்னொரு போதகரை அவர்கள் அழைக்க வேண்டியவர்களாக இருந்தார்கள். அப்போது அந்த சபையோடு மிக நெருக்கமாக இருந்த வாலிபர் ஒருவர் இருந்தார், ஆனால் அவர் சத்தியத்தில் முற்றிலும் வித்தியாசமான கொள்கைகளைக் கொண்டவராக இருந்தார். அந்த சபையில் இந்த வாலிபருடைய திறமையான பல தாலந்துகளை மட்டும் எண்ணி, அவரினுள் இருக்கும் குறையைப் பார்க்காமல் விட்டு விட்டார்கள். அவரை போதகராக நியமிக்கப்படும்படியான நேரத்தில், ஓரிரு அங்கத்தினர்கள் அவரை நியமிப்பதின் மூலம் ஏற்படும்படியான ஆபத்தை நன்கு விளங்கிக்கொண்டார்கள். அதாவது, அந்த வாலிபர் வேத சத்தியத்தைக் குறித்த அதிகமான விலைமதிப்பை உணராதவராக இருக்கிறார் என்றும், சத்தியத்திற்குப் புறம்பான பல உலகப்பிரகாரமான வழிமுறைகளைக் கொண்டிருக்கிறார் என்பதையும் விளங்கிக் கொண்டார்கள்.

இவ்விதமாக இந்த எச்சரிப்பின் உணர்வை பெற்ற ஒரு மூத்த டீக்கன்மார், அதைச் சபையின்முன் கொண்டுவந்தபொழுது, அவர்கள் இவருக்குச் செவி கொடுக்கவில்லை. இந்த வாலிபரை சபையின் ஊழியராக நியமிக்கும் படியான வேளையில் இந்த மூத்த டீக்கன்மார் சொன்ன காரியத்தை அவர்களால் விளங்கிக் கொள்ள முடியவில்லை. அவருடைய வார்த்தைக்கு அவர்கள் செவி கொடுக்க விரும்பவில்லை. அவர் பயப்படும்படியாக

இருந்த காரியத்தை அவர்கள் எண்ணிப்பார்க்கவில்லை. அந்த வாலிபர் அந்த சபையின் போதகராக நியமிக்கப்பட்டு, பிறகு இறுதியில் அந்த சபை நல்ல ஆவிக்குரிய போதனைகளை இழந்து பரவசக் கூட்டத்தின் வலையில் விழுந்துபோனது. சபையில் ஒருவர் இந்தக் காரியத்தை விளங்கிக் கொண்டிருந்த வேளையிலும், அவர்கள் அவருக்கு செவி கொடுக்கவில்லை. சபையில் எல்லா தாலந்துகளும் மிக முக்கியமானது. அதில் இவ்விதமான காரியங்களை உணர்ந்துகொள்ளக் கூடிய தாலந்தைப் பெற்றவர்கள் மிக முக்கியமானவர்களாகவே இருக்கிறார்கள். இவ்விதமாக பகுத்தறியும் தாலந்துகளை கொண்டிருப்பவர்களைக் குறித்து சொல்லும்பொழுது, சிலர் எப்பொழுதும் எதைக் குறித்தும் எதிர்மறையாக சிந்தித்து செயல்படுகிறவர்களைக் குறித்து நான் சொல்லவில்லை என்பதை நீங்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

இன்னொரு தாலந்து, காரியங்களை நேர்த்தியாக அமைப்பது. இது பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும் அப்பாற்பட்டதாக இருக்கிறது. ஆகவே ஒரு காரியத்தைத் திட்டமிட்டு அதை எவ்விதம் சிறப்பாக செயல்படுத்துவது என்பதைக் குறித்த ஞானமுள்ளவர்கள் இருப்பார்கள். காரியங்களை நன்கு அமைக்கக்கூடிய தாலந்தைப் பெற்றவர்கள் சபை வாழ்வில் இருப்பது மிக அவசியம். ஏனென்று கேட்டால், சபையில் அவ்விதமான தலாந்துகளைப் பெறாதவர்கள் தாங்களாகவே முன்வந்து செய்யக் கூடிய பல செயல்கள் மூலமாக, சில சமயங்களில் பிரச்சனைகள் ஏற்பட வாய்ப்புள்ளது. ஒருவேளை அந்த சபை ஒரு பெரிய ஞாயிறு பள்ளியை நடத்துகிறதாக இருக்கலாம். இந்தக் காரியங்களை ஒழுங்குபடுத்துகிறவர்கள், செயல்படுகிறவர்கள் மற்றவர்களைச் சார்ந்தே இருக்க வேண்டும். ஏதோ அவர் விசேஷித்த நபர் என்று கருதிச் செயல்படக் கூடாது. அப்படியிருந்தால் அவர் பெருமை அடைந்து பிரிவினையை ஏற்படுத்துவதற்கும் வாய்ப்புண்டு.

இன்னொரு சிறப்பான தாலந்து பொறுப்போடு செயல்படுவது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் பொறுப்புள்ளவராகவே இருக்க வேண்டும். ஆனாலும், மற்றவர்கள் கவனிக்காத சில காரியங்களை, உதாரணமாக வகுப்புக்கு வருகிறவர்களின் எண்ணிக்கை குறைகிறதை, முக்கியமான சில காரியங்களில் தவறுவதை உணருகிறவர்களாக காணப்படுவார்கள். அவ்விதமான மக்கள் நிச்சயமாக அதின் குறைகளை சரிபடுத்துவதற்கு உதவியாக இருப்பார்கள். ஒருவேளை அவர்கள் ஞாயிறு பள்ளிக்கு வராதவர்களை வீட்டில் போய் சந்தித்து, விசாரிக்கிறவர்களாக காணப்படுவார்கள். பொறுப்புள்ள தாலந்தைப் பெற்றிருப்பவர்கள் அதை சரிபடுத்தும்வரை அமரமாட்டார்கள். பொறுப்பு என்னும் தாலந்தைப் பெற்றிருப்பவர்கள் சபைக்கு அதிகத் தேவையுள்ளவர்களாக இருக்கிறார்கள்.

இன்னொரு கவனிக்கும்படியான தாலந்து சாட்சியிடுதல். தாங்கள் வேலை செய்யும்படியான பணித்தளங்களில் அல்லது மற்றவர்களோடு பழகுகிற விதங்களில் நல்ல சாட்சியிடக் கூடிய வாய்ப்புகளைப் பெற்றவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் அநேகரை வெகு சீக்கிரத்தில் சந்திக்கக்கூடிய, ஒரு பணித்தளங்களிலோ அல்லது கல்லூரிகளிலோ இருப்பார்கள். அவர்கள் அங்கு நல்ல சாட்சியிடக்கூடியவர்களாகவும் இருப்பார்கள். ஒவ்வொரு விசுவாசியும் சாட்சியிட வேண்டியதாக இருந்தாலும், இவர்களுக்கு இது விசேஷித்த தாலந்தைப் பெற்ற ஒரு ஊழியமாக இருக்கிறது. அவர்கள் ஒரு விசேஷித்த கிருபையை அதில் பெற்றவர்களாக இருப்பார்கள். அவர்கள் சாட்சியிடுவதில் எந்த தயக்கமுள்ளவர்களாக இருக்கமாட்டார்கள். அவர்கள் மற்றவர்களால் விரைவில் அங்கீகரிக்கப்பட கூடியவர்களாகவும் மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளும் விதத்தில் பேசக்கூடியவர்களாகவும் இருப்பார்கள். அவர்கள் எவ்வித வெட்கமுமின்றி இரக்க குணத்தோடும், சரியான விதத்தில் சாட்சியிடக் கூடியவர்களாகவும் இருப்பார்கள். அவ்விதமான தாலந்தைப்

பெற்றிருப்பவர்கள் யாவரும் பெருமையுள்ளவர்களாக இல்லாதபடிக்கு, தேவனுக்கு கணக்கு ஒப்புவிக்கவேண்டும் என்ற உணர்வோடு செயல்பட வேண்டும். தேவன் அவ்விதமான தாலந்தைக் கொடுத்திருப்பாரென்றால், அதிக ஜெபத்தோடு அவ்விதம் செயல்பட வேண்டும்.

சிலர் குறிப்பிட்ட சில மக்களோடு நன்கு பழகக்கூடிய தன்மை உள்ள வரத்தை பெற்றவர்களாக இருப்பார்கள். ஏற்கனவே நாம் குறிப்பிட்ட வண்ணமாக சில ஓய்வு நாள் பள்ளி ஆசிரியர்கள் பிள்ளைகளை நன்றாக கட்டுப்பாட்டுக்குள் வைத்து அவர்களை நன்றாக வழிநடத்தக் கூடியவர்களாக இருப்பார்கள். ஒரு இயற்கை பிரகாரமாக அவர்களோடுகூட நன்றாக பழகக்கூடியவர்களாக இருப்பார்கள். அவர்கள் அந்த வகுப்பு பிள்ளைகள் எவ்வளவு கட்டுப்பாடற்ற நிலையில் காணப்பட்டாலும், அவர்களை கட்டுப்பாட்டில் கொண்டுவரக்கூடிய தாலந்தை பெற்றவர்களாக இருப்பார்கள். சிலர் வயதானவர்களோடு நன்கு பழகக்கூடியவர்களாகவும் சிலர் வாலிபப்பிள்ளைகளோடு பழகி சுவிசேஷத்தை அறிவிக்கக்கூடியவர்களாகவும் இருப்பார்கள். இவ்விதமான தாலந்தைப் பெற்றவர்கள் எவ்விதம் சரியாக நடப்பது என்பதை அறிந்தவர்களாக இருப்பார்கள். அவர்கள் ஒரு குறிப்பிட்ட மக்கள் மத்தியிலே ஏற்கனவே அநேக வருடங்கள் அறிமுகமானவர்களைப்போல பழகக்கூடியவர்களாகவும், அவர்களால் ஏற்றுக் கொள்ளப்படக்கூடியவர்களாகவும் இருப்பார்கள். இவ்விதமான தாலந்தைப் பெற்றவர்கள் அந்தத் தாலந்துகளை அதிகம் உபயோகப்படுத்தக் கூடியவர்களாக இருக்கவேண்டும். அதற்கு பதிலாக அதை உபயோகப்படுத்தாமல், வருட கணக்கில் இருக்கும்பொழுது அவர்கள் எவ்விதம் தேவனை சந்திக்ககூடியவர்களாக இருப்பார்கள்.

சிலர் அநேக காரியங்களை நினைவு கூறுவதில் அதிகமான தாலந்தைப் பெற்றவர்களாக இருப்பார்கள். அவர்கள் மற்றவர்களுடைய பெயர்கள், மற்றும் அவர்களுடைய

முகங்களை ஞாபகம் வைத்து சூழ்நிலைகளைத் தெளிவாக சொல்லக்கூடிய ஞாபக சக்தியுள்ளவர்களாக இருப்பார்கள். ஒவ்வொருவரும் இயற்கையான தாலந்துகளை மொழிகளிலோ, எழுதுவதிலோ, அல்லது கணக்கு போடுவதிலோ, அல்லது தங்களின் மூளை அறிவை உபயோகப்படுத்துவதிலோ கர்த்தருடைய மகிமைக்கென்று உபயோகப்படுத்தும்படியாக இருக்க வேண்டும். சில மக்கள் நல்ல ஞாபகசக்தி உள்ளவர்களாக இருப்பார்கள். ஏற்கனவே இருக்கிற இந்த தாலந்துகள் இரட்சிப்புக்குப் பின்பாக அதிகமாக மெருகூட்டப்படுகிறது.

அடுத்த ஒரு தாலந்து நல்ல ஒரு யோசனையும் தரிசனமுமுள்ளது. அதாவது அவர்கள் மற்றவர்களுக்கு எவ்விதமாய் போதிப்பதென்றும் அல்லது ஒரு சமுதாயத்தை நன்மைக்கேதுவாக எவ்விதம் நடத்துவது என்பதைக்குறித்தும் அறிந்திருக்கிறார்கள். நல்ல தரிசனமுள்ள மக்கள் சாத்தியக்கூறுகளை சீக்கிரமாய் கண்டுக்கொள்வார்கள். பொதுவாக சில காரியங்களைக்குறித்த தலைப்புகளைக் கண்டுபிடிப்பதிலோ அல்லது மற்றவர்களுக்கு அல்லது சிறு பிள்ளைகளுக்கு படத்தின் மூலமாக விளக்குவதிலோ ஒரு வித்தியாசமான புதிய அணுகுமுறையில் சொல்லகூடியவர்களாக இருப்பார்கள். வேத அளவின்படியாக இந்த தரிசனங்கள் உபயோகப்படுத்தும் பொழுது அவைகள் மிகபெரிய அளவில் பிரயோஜனமாக இருக்கின்றன. அவைகள் நல்ல அலங்காரமாகவும் இருக்கின்றன.

ஆழமான ஒரு உணர்வுப்பூர்வமான உணர்வுகளைக் கொண்டிருப்பது இன்னொரு தாலந்து. காரியங்களைக் குறித்து அதிகமான கருத்தாய் இருப்பவர்களைக் குறித்து எவ்விதம் விலைமதிக்கிறோம்? அவர்கள் மற்றவர்களையும் பாதிக்ககூடிய அளவிலே வரவேற்கக்கூடிய நல்ல உணர்வுகளைக் கொண்டவர்களாக இருப்பார்கள். ஒரு உணர்வுபூர்வமாக ஒப்புக்கொடுக்கிறவர்களாக இருப்பார்கள். அவர்களுக்கு நெருக்கமான ஒவ்வொருவரையும் உற்சாகப்படுத்தி அவர்களை

செயல்படும்படியாக ஊக்குவிக்கிறவர்களாக இருப்பார்கள். ஆத்துமாவை ஆராய்ந்துப்பார்த்து அதற்காக வருத்தப்படுகிற காரியங்களில் முதன்மையாக இருப்பார்கள். நல்ல ஒரு சபையில் இவ்விதமான தாலந்தைக் கொண்டவர்கள் அதிக பிரயோஜனமுள்ளவர்களாக இருக்க வாய்ப்பு உண்டு.

மேலே சொல்லப்பட்ட இந்த தாலந்துகளைக் குறித்து எதிரான மனநிலைக் கொண்டவர்களாக சிலர் இருக்கலாம். இவ்விதமான சில மக்கள் குளிர்ந்த யோசிக்காத மூளையைக் கொண்டவர்களாக இருப்பது சரியல்ல. இவர்கள் உள்ளான அந்த உணர்ச்சிகளைக் கொண்டிருந்தாலும் அதை அடைத்துப்போடுகிறவர்களாக, அடக்கிக் கொள்கிறவர்களாக இருப்பார்கள். அவர்கள் ஒரு வித்தியாசமான விதத்தில் எச்சரிப்போடும் இதை அடக்கிவைப்பவர்களாகவும் இருப்பார்கள். அவர்கள் ஒவ்வொன்றிலும் மிக அதிகமாக ஆராய்ந்து தேவையில்லாமல் ஊடுருவி பார்க்கிறவர்களாக இருப்பார்கள். சில சமயங்களிலே இவ்விதமான தாலந்துகள் உள்ளவர்கள் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேலாக அந்த உற்சாகம் தாண்டிப்போகாதபடிக்கு கட்டுப்படுத்துகிறவர்களாக இருப்பார்கள். அவர்கள் அமைதியான சூழ்நிலைகளில் காரியங்களைப் பார்க்கக்கூடியவர்களாக இருப்பார்கள். அதிக உணர்ச்சியுள்ளவர்கள் ஆழமான உணர்வுள்ளவர்களாக இருப்பார்கள். ஆனால் அமைதியான மனநிலைக் கொண்டவர்கள் காரியங்களை நிதானித்து செயல்படகூடியவர்களாக இருப்பார்கள். இரண்டு தாலந்துகளுமே உள்ளவர்கள் நமக்குத் தேவை.

இன்னொரு தாலந்து பணிசெய்வதற்காண தாலந்து. இவ்விதமான மக்கள் அதிகமான பெலத்தையும் உற்சாகத்தையும் பெற்றவர்களாக இருப்பார்கள். மாம்சப்பிரகாரமாக உற்சாகத்தோடு உள்ளவர்கள் உணர்ச்சிவசப்படுகிறவர்களாகக் காணப்படுவார்கள். ஆனால் வேலை செய்ய திறமையுள்ளவர்கள் எப்பொழுதும் ஒரு வேலையை முடிக்கும்வரை

செய்யக்கூடியவர்களாக காணப்படுவார்கள். சிலர் ஆச்சரியவிதமாக செயல்படக் கூடியவர்களாக இருப்பார்கள். சில மக்கள் கடினமாக உழைக்கக் கூடியவர்களாகவும் இருப்பார்கள். இவ்விதமான தாலந்துகளைப் பெற்றவர்களைப் பார்க்கும்பொழுது சந்தோஷப்படத் தோன்றுகிறது. இவ்விதமான தாலந்தை பெற்றிருப்பீர்களானால் தேவனுடைய பணியில் பயன்படுத்தும்படி ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்கவேண்டும். இவ்விதமான தாலந்து கர்த்தருடைய பணியில் பயன்படுத்தப்படுகிறதா?

சிலவிசுவாசிகள் சோதனைகளை அதிகமாக தாங்கிக்கொள்ளக்கூடியவர்களாக இருப்பார்கள். அவர்கள் சோதனை வேளைகளில் அதை எதிர்த்து நிற்கிறவர்களாக இருப்பார்கள். அதிகமாக கஷ்டப்படுகிற சூழ்நிலைகளிலும் பொறுமையுள்ளவர்களாகவும் இருப்பார்கள். ஒரு சபைக்கு எதிராகவோ அல்லது ஒரு தனி மனிதனுக்கு எதிராகவோ இவ்விதமான சோதனைகள் வந்தாலும் நாம் சோதனையை எவ்விதம் மேற்கொள்வது என்பதில் முன்மாதிரியைக் காட்டக்கூடியவர்களாக இருப்பார்கள். சோதனையினால் அவர்கள் நொறுங்கிபோகமாட்டார்கள். கொந்தளிப்பான கடலில் மிதக்கிற கப்பலானது எப்படி அமைதியாக காணப்படுகிறதோ அவ்விதமாக செயல்படகூடியவர்களாக இருப்பார்கள். ஒரு மேலான அளவிலே பொறுமையும், விசுவாசமும், தைரியமும் பெற்றவர்களாக இருப்பார்கள். ஒவ்வொரு சபையிலும் இவ்விதமான மக்கள் காணப்படுவது மிக அவசியமானது.

மற்றவர்களால் மெச்சிக்கொள்ளக்கூடிய ஆரோக்கியமான சிரிப்பைக் கொண்டிருப்பது, சிரிப்பூட்டுவது இன்னொரு தலாந்து, அதாவது சந்தோஷமாக இருப்பது. மற்றவர்களை மகிழ்ச்சியூட்டுவதில் சிறந்தவர்களாய் இருப்பார்கள். அவர்கள் வித்தியாசமுள்ளவர்களாக இருப்பார்கள், ஏனென்றால் இதன்மூலம் கனிகளைக் கொடுக்கக்கூடியவர்களாகவும்

இருப்பார்கள். கர்த்தருக்கேற்ற சந்தோஷமும் அந்த ஒரு சிரிப்பான மனநிலையும் எப்பொழுதும் கஷ்டமான நேரத்திலும் அவர்களை இனிமையாய்க் காத்துக்கொள்ளும்.

சில விசுவாசிகள் விசேஷித்த விசுவாசமுள்ள ஜெப தாலந்துகளைப் பெற்றவர்களாக இருப்பார்கள். நான் இதைக்குறித்து சந்தோஷமாய் பேசுகிறேன், ஏனென்றால் ஒவ்வொரு விசுவாசியும் ஜெபிக்கிற தாலந்தைப் பெற்றவர்களாக இருக்கவேண்டும். ஆனால் வேதம் சொல்லும்படியான விசேஷித்த விசுவாசமென்னும் தாலந்தைப் பெற்றவர்களாக இருப்பது மேன்மையானது. இவ்விதமான தாலந்தைப் பெற்றவர்கள் ஒரு ஜெப ஊழிய பணியை செய்கிறவர்களாக இருக்கிறார்கள். இது ஒரு அழைப்பாக இருக்கிறது. எனவே இந்த தாலத்தை அதிகமாக பயன்படுத்தவேண்டும்.

ஒவ்வொரு விசுவாசியும் உக்கிராணத்துவம் உள்ள தாலத்தை பெற்றவர்களாயிருக்கிறார்கள். சிலருக்கு இவ்விதமான காரியங்களில் உற்சாகமுள்ளவர்களாய்க் காணப்படுவார்கள். அவர்கள் இவ்விதமான ஊழியத்தில் நல்ல முன்னேற்றம் காணக்கூடிய அளவில் தேவன் அவர்களை ஆசீர்வதித்திருக்கிறார். அவர்கள் தாங்கள் பெற்றிருக்கிற பொருள்களையும் பணத்தையும் தேவனுடைய பணியிலே பயன்படுத்தக் கூடியவர்களாக இருப்பார்கள். இவ்விதமானவர்கள் தாழ்மையுள்ள மனதுள்ளவர்கள். புகழையும் பெயரையும் சம்பாதிக்க விரும்பாமல், தேவனுடைய ஊழியத்திலே அவைகளை பயன்படுத்த ஜாக்கிரதையுள்ளவர்களாக காணப்படுவார்கள். கொடுக்கிறவர்கள் தாழ்மையுள்ளவர்களாய் கொடுக்கவேண்டும். எந்தவிதமான புகழ்ச்சிக்காகவோ அல்லது மற்றவர்களின் மெச்சுதலுக்கோ இதைச் செய்யக்கூடாது.

மற்றொரு தாலந்து அவர்களின் வாழ்க்கையானது உயர்த்தப்படும் பொழுதும் கிறிஸ்துவுக்குள் தாழ்மையைக் காத்துக்கொள்வது. சில மக்கள் தங்களுடைய வாழ்க்கையிலே பெருமைப்பட அல்லது புகழ்ச்சியடையும்படும்படியான

சூழ்நிலைகளிலும் அதை எதிர்த்து நின்று கர்த்தருக்கென்று சாட்சியாய் வாழக்கூடியவர்களாக இருப்பார்கள். இப்படிப்பட்டவர்கள் சமுதாயத்தில் அதிக சிலாக்கியமுள்ளவர்களாக வைத்திருக்க வாய்ப்பு உண்டு. அவர்கள் தங்கள் வாழ்க்கையின் எல்லா சூழ்நிலைகளிலும் தங்களை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க அறிந்திருக்கிறார்கள். அவர்கள் எந்தவிதமான பெருமைக் கொள்ளாமல், பதஷ்ட்டப்படாமல் தங்களைக் காத்துக்கொள்கிறார்கள்.

சிலமக்கள் தங்களுடைய வாழ்க்கையிலே குறைவுபடுகிற காலங்களில் அதை எவ்விதம் கையாளுவது என்பதை அறிந்திருக்கிறார்கள். பவுல் போன்ற மிஷினரிகள் இவ்விதமான தாலந்தை பெற்றவர்களாகக் காணப்பட்டார்கள்.

சிலர் இசை வரம் கொண்டிருப்பார்கள். அவிசுவாசிகள் இசை மற்றும் பாட்டு தாலந்துகளை பெற்றவர்களைப் பார்த்து பொறாமைப்படுவார்கள். நன்றாக பாடக்கூடியவர்கள் சில சமயங்களில் அந்த தாலந்துகளைப் பயன்படுத்துவதில்லை. பாடக்கூடிய இளையவர்களைப் பயன்படுத்த வேண்டும். நம்முடைய தாலந்துகளையும் திறமைகளையும் பயன்படுத்துவதில் கர்த்தருக்குக் கணக்கு ஒப்புவிக்கிறவர்களாயிருக்கிறோம்.

சிலர் அழகை வெளிப்படுத்தக்கூடியவர்களாக இருப்பார்கள். நான் இங்கே அழகு என்று சொல்லுவது சரீரபிரகாரமான அழகை அல்ல. ஆவிக்குரிய அழகைப்பற்றி பேசுகிறேன். அவர்கள் இவ்விதமான சூழ்நிலைகளில் காரியங்களை அழகாக அமைத்து, ஆண்டவருடைய பணியில் ஈடுபடுகிறவர்களாக இருப்பார்கள். அவ்விதமான மக்கள் இலக்கியங்களை அழகாக ஒழுங்குப்படுத்துவதோ அல்லது ஓய்வுநாள் பள்ளியில் பாடங்களை ஒழுங்காக அமைப்பது போன்ற விசேஷித்த தாலந்துகளைப் பெற்றவர்களாகக் காணப்படுவார்கள்.

சபையில் ஒருவருக்கொருவர் சார்ந்து வாழும்படி அநேக தாலந்துகளை தேவன் ஒவ்வொருவருக்கும் கொடுத்திருக்கிறார். நம்முடைய தாலந்துகளை அறிந்தும் அதே சமயத்தில் மற்றவர்களுடைய தாலந்தைக் குறித்தும் விளங்கிக்கொள்வது மிக

அவசியம். இவ்விதமான தாலந்துகளைப் பெற்றவர்கள் தாங்கள் பெற்ற தாலந்துகளை எவ்விதம் பயன்படுத்தவேண்டும் என்று எண்ணிப்பார்க்கவேண்டும். நீ என்ன தாலந்துகளைப் பெற்றிருந்தாலும் அதற்காக ஜெபி. எல்லா தாலந்துகளும் தேவனுடைய திருச்சபையின் வளர்ச்சிக்கும் ஆறுதலுக்கும் ஏதுவானதாக இருக்கவேண்டும். நாம் நம்முடைய வாழ்க்கையிலே தேவன் கொடுத்திருக்கிற தாலந்துகளை அவ்வப்பொழுது எப்படி உபயோகப்படுத்தியிருக்கிறோம் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். நீ உன் வாலிப காலங்களை கடந்துப்போகும்பொழுது கர்த்தர் உனக்குக் கொடுத்திருக்கிற தாலந்துகளை வெளிப்படுத்தாதைக் குறித்து வருத்தப்படவேண்டியதாயிருக்கும். இவ்விதமாக உங்களுடைய வாழ்க்கையில் தேவன் கொடுத்திருக்கிற தாலந்துகளை கடந்த ஆண்டில் செலவிட்டிருக்கிறேனா என்பதைக்குறித்து யோசித்துப் பார்க்கவேண்டும். தேவன் கொடுத்திருக்கிற பொன்னான தருணங்களை நாம் இழந்துவிடக்கூடாது.

நீங்கள் ஒருவேளை இவ்விதமான வாலிபர்களாய் இருப்பீர்களானால் சபையில் உங்கள் தாலந்துகளை உபயோகப்படுத்தும்படியான வாய்ப்புகள் அதிகம் உண்டு. வயதானவர்கள் கூட தங்களுடைய வாழ்க்கையில் தாலந்துகளை சபைக்கு பயன்படுத்துவது என்பது அவசியம். அவ்விதமாக முப்பது வயதுள்ளவர்கள் நல்லவாய்ப்புகளை பெற்றவர்களாக இருக்கிறார்கள். நாற்பது வயதுடையவர்களும் கூட ஒரு நல்ல காலக்கட்டத்தில் இருக்கிறார்கள். உன்னுடைய வாழ்க்கையிலே பெற்றிருக்கிற தாலந்துகளை இந்த சூழ்நிலையிலே உபயோகப்படுத்துகிறவர்களாக இருக்கவேண்டும். அப்பொழுது மக்கள் உங்களை மதிப்பார்கள். உங்களுடைய வாழ்க்கை மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாயிருக்கும். நீங்கள் அனுபவமுள்ளவர்களாக, அறிவுள்ளவர்களாக இருக்கக்கூடும். ஐம்பதாவது வயதிலே ஒரு நல்ல அறிவு இருக்கும். இவ்விதமாக இவர்கள் வயதான மக்களுக்குரிய சூழ்நிலையைக் கடந்துப் போனாலும், வாலிபர்களுக்குரிய அனுபவங்களையும் கொண்டவர்களாக இருப்பார்கள். நீங்கள் அவ்விதமாக

மிகைபடுத்தவில்லையென்றாலும், பின் வாழ்க்கையைத் திரும்பிப் பார்த்து வருத்தப்படவேண்டியவர்களாய் இருப்பீர்கள்.

ஐம்பதாவது வயதில் உங்களுடைய பிள்ளைகள் பெரியவர்களாக வளர்ந்திருப்பார்கள். அவர்களை தொடர்ந்து பார்த்து பராமரிக்கவேண்டியதாக இருக்கலாம். இப்பொழுது நீங்கள் அதிக அனுபவத்தைப் பெற்றவர்களாக இருப்பதினால் மற்றவர்களுக்கு நல்ல ஆலோசனைக் கொடுப்பதிலும் அவர்களைக் குறித்த நலன்களை விசாரிப்பதிலும் உங்கள் தாலந்துகளை உபயோகப்படுத்தலாம். உக்கிராணத்துவத்தோடு நடக்கக்கூடிய தாலந்துகளைப் பெற்றிருக்கக்கூடும். ஒருவேளை நீங்கள் அதிகமாக அதிகமாக களைப்பு, வியாதிகள் ஏற்பட்ட சூழ்நிலை வயதில் இருக்கலாம். ஆனால் இன்னும் அநேக காரியங்களைச் செய்யக்கூடியவர்களாக இருக்கிறீர்களென்பதை மறந்துவிடவேண்டாம். வெறுமையாக நீங்கள் இழந்துபோன காரியங்களைக் குறித்து வருத்தப்படுகிறவர்களாக இருக்கக்கூடாது.

உங்கள் திறமைகளையும், தாலந்துகளையும், சந்தர்ப்பங்களையும் விலைமதியுங்கள். தன்னுடைய எல்லா மக்களும் கர்த்தருக்கென்று பணிசெய்யும்படியாக கர்த்தர் அவர்களை பெலப்படுத்துகிறார் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். தாழ்மையுள்ளவர்களாக இருங்கள். உங்களுடைய சபையில் முக்கியமான பொறுப்பு வகிக்கிறவர்கள் அதிலிருந்து விலகியிருக்கிறவர்களாக இல்லாதபடிக்கு பொறுப்பு வகிக்கிறவர்களாக இருக்கவேண்டும் என்பதை பார்த்துக்கொள்ளுங்கள். ஒவ்வொரு ஆணும் பெண்ணும் இந்த மகிமைகரமான பாதையில் தாங்கள் பெற்றிருக்கிற ஒவ்வொரு தாலந்தையும் உபயோகப்படுத்துவதில் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். ஆவிக்குரிய வாழ்க்கையில் தேவன் கொடுத்திருக்கும்படியான, தேவனோடு உறவுகொள்ளும்படியான காரியத்தில் வரங்களை ஆசீர்வாதமாக எண்ணுங்கள்.

# அத்தியாயம் 8

# ஆவிக்குரிய உற்சாகமூட்டுதல்

*"தேவனால் எங்களுக்கு அருளப்படுகிற ஆறுதலினாலே, எந்த உபத்திரவத்திலாகிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல்செய்யத் திராணியுள்ளவர்களாகும்படி, எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் அவரே எங்களுக்கு ஆறுதல் செய்கிறவர்" (2 கொரி 1:4).*

நம்முடைய வாழ்க்கையில் தேவனின் கிருபையின் எத்தனங்களாக, நாம் சந்திக்கிற பலவிதமான நெருக்கங்களைக் கொண்டு நாம் ஜெபத்தில் வளரவும், மற்ற விசுவாசிகளுக்கு ஒரு மாதிரியை வைக்கக்கூடியவர்களாகவும் அல்லது அவர்களுக்கு உதவி செய்ய வேண்டிய காரியங்களில் உதவி செய்யவோ, அவர்களை உற்சாகப்படுத்தவோ அல்லது இவ்விதமான தருணங்களை உபயோகப்படுத்தவோ கர்த்தர் நமக்கு உதவி செய்யக்கூடும். பவுல் 2 கொரிந்தியர் 1 அதிகாரத்தில் ஆறுதல் என்று சொல்லுகிற இந்த பதத்தைப் பவுல் எவ்வாறு உபயோகப்படுத்துகிறார் என்பதை நாம் அறிந்திருத்தல் அவசியம்.

ஆறுதல் என்ற பதம் கிரேக்க மொழியில் பார்க்கும்பொழுது நாம் சாதாரணமாக ஆறுதல் என்று சொல்லுவதைவிட, மேலான ஒரு விரிவான அர்த்தத்தைக் கொண்டதாக இருக்கின்றது. யாருக்கு ஆறுதல் தேவை? ஒரு சின்ன குழந்தை வலியின் வேதனையில் இருக்கும்போதோ அல்லது துக்கத்தில் இருக்கும் பெரியவர்களுக்கோ ஆறுதல் தேவை. எப்பொழுதும் ஆறுதல் நமக்கு ஒரு நல்ல தேறுதலை கொடுக்கின்றதாக இருக்கின்றது. சில சமயங்களில் ஒரு நல்ல

உறவு நமக்கு ஆறுதலைக் கொடுக்கக்கூடியதாக இருக்கின்றது. ஆனால் பவுல் இந்தப் பகுதிகளில் சொல்லும்படியான ஆறுதல் என்பது நம்மை உற்சாகப்படுத்தக்கூடிய ஆறுதல் என்று சொல்லுகிறார். நாம் பொதுவாக இன்றைக்குப் பார்க்கிற விதமாக, ஆறுதல் நம்மை இன்னுமாக நம்முடைய காலங்களை அல்லது நம்முடைய காரியங்களைச் சுலபமாக்குகிற மன நிலைமையை ஏற்படுத்துகின்றது. அதே சமயத்தில் நம்மை உற்சாகப்படுத்தக்கூடிய ஒரு பெலனை கொடுக்கின்றதாக இருக்கின்றது. பவுல் இந்த இடத்தில் ஒரு தேறுதலான ஒரு ஆறுதலைக் குறித்துப்பேசுகிறார்.

நம்முடைய எல்லாவிதமான சோதனைகளிலும், இந்த இடத்தில் பவுல் 5 -வது வசனத்தில் ஆறுதலைக்குறித்துப் பேசுகிறதைப் பார்க்கிறோம் (2 கொரி 1:5). அதாவது பாடுகளில் தேவனுடைய ஆறுதலைக் குறித்துப்பேசுகிறார். பாடுகள் என்று சொல்லும்பொழுது அதிகமான நெருக்கங்களைக் குறிக்கின்றது. இந்த இடத்தில் ஆறுதல் என்று சொல்லும்பொழுது எவ்விதமாக உற்சாகப்படுத்தக் கூடியதாக உபயோகப்படுத்தப்படுகின்றது என்பதை நாம் சொல்ல முடியும். இந்த 5 -வது வசனத்தில் பவுல், பாடுகள் நம்முடைய வாழ்க்கையில் கிறிஸ்துவின் பாடுகளைப் பெருகச் செய்கிறது என்று சொல்லுகிறார். இவ்விதமான பாடுகள் முக்கியமாக பவுலுக்கும் தீமோத்தேயுவுக்கும் கிறிஸ்துவுக்காக பணி செய்வதின் மூலமாக ஏற்பட்ட நெருக்கங்கள், உபவத்திரங்கள் பாடுகளாக இருக்கின்றது என்று நாம் பார்க்கிறோம். ஆகவே இது கிறிஸ்துவின் பாடுகள் என்று சொல்லப்படுகின்றது.

தேவன் அவர்களின் ஜெபத்திற்கு பதில் அளிப்பதின் மூலமாக அவர்களை உற்சாகப்படுத்துகிறார். அவர்களுடைய போராட்டங்கள், கஷ்டங்கள், பாடுகளிலே தேவன் விடுதலையை அளிக்கிறதைக் கொரிந்து சபை மக்கள் அனுபவிக்க வேண்டும் என்று பவுல் எழுதுகிறார். அவர்கள் சுவிஷேசத்திற்காகப் போராடுவதில் அதேவிதமான உற்சாகங்களைப் பெற அவர் விரும்பி எழுதுகிறார். உண்மைதான்! நம்முடைய வாழ்க்கையில் நாம் அவ்விதம் பெறும்படியான ஆறுதல்கள், தெய்வீக தேறுதல்கள் மற்றவர்களுடைய வாழ்க்கையிலும் சந்திக்கிற

போராட்டங்கள், நெருக்கங்கள் மத்தியிலே அவர்களை ஆறுதல்படுத்தும்படியான உபயோககரமுள்ளதாக இருப்பதற்கு வாய்ப்பு உண்டு. ஆனால் முக்கியமாக பவுல் இந்த இடத்தில் சொல்லுவது கிறிஸ்தவ ஊழியர்கள் சந்திக்கும்படியான பல போராட்டங்கள், நெருக்கங்கள் மத்தியிலே அவர்கள் பெறும்படியான ஆறுதலைக் குறித்துப் பேசுகிறார்.

இந்தகாலத்தில் நாம் காணும்படியான அவபக்தியின் மத்தியில், கர்த்தர் நம்முடைய ஜெபத்திற்கு பதிலளித்து அநேக மக்களைப் புதுப்பித்து, அவருடைய கிருபையை விளங்கப்பண்ணுவது நம்மை உற்சாகப்படுத்துகிறது. நாம் மக்கள் மத்தியிலே சென்று கர்த்தருடைய பணியைச் செய்யும்படியாக வாஞ்சிக்கிறோம். ஆனாலும் கூட நமக்கு எதிராக பலவித நெருக்கங்கள் எழும்புகிறதைப் பார்க்கிறோம். அநேக சமயங்களிலே நாம் தூஷிக்கப்படுகிறோம், பலவிதமான சட்டங்கள் மூலமாக தடைபண்ணப்படுகிறோம். நமக்கு இவ்விதமான சூழ்நிலைகளில் பவுல் இந்தக் காரியத்தைக் குறித்து பேசும்பொழுது 2 கொரி 1:6 -வது வசனத்தில் "ஆதலால், நாங்கள் உபத்திரவப்பட்டாலும் அது உங்கள் ஆறுதலுக்கும் இரட்சிப்புக்கும் ஏதுவாகும்; நாங்கள் ஆறுதலடைந்தாலும் அதுவும் உங்கள் ஆறுதலுக்கும் இரட்சிப்புக்கும் ஏதுவாகும்; நாங்கள் பாடுபடுகிறதுபோல நீங்களும் பாடுபட்டுச் சகிக்கிறதினாலே அந்த இரட்சிப்பு பலன் செய்கிறது" என்று சொல்லுகிறதைப் பார்க்கிறோம்.

நாம் முக்கியமாக கவனிக்கவேண்டியது என்னவென்றால் பவுல் இந்த இடத்திலே நீங்கள் எங்களோடேகூடப் பாடுபடுகிறதுபோல, எங்களோடேகூட ஆறுதலும் அடைகிறீர்களென்று நாங்கள் அறிந்து, உங்களைக்குறித்து உறுதியான நம்பிக்கையுள்ளவர்களாயிருக்கிறோம் என்று சொல்லுகிறார். ஆகவே பாடுகள் பெருகும்பொழுது 5 -வது வசனத்தில் "எப்படியெனில், கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறதுபோல, கிறிஸ்துவினாலே எங்களுக்கு ஆறுதலும் பெருகுகிறது" (2 கொரி 1:5) என்று சொல்லுகிறதுபோல கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கையில் பாடுகள் இருக்கும் இடத்தில் கிறிஸ்துவின் மூலமாக நிச்சயமான

ஆறுதல் உண்டு. அது நம்மை உற்சாகப்படுத்தக்கூடியதாக இருக்கும். நம்முடைய வாழ்க்கையில் அதிகமான நெருக்கங்கள் போராட்டங்கள் மத்தியிலே தேவனுடைய விடுதலையும் தேவனுடைய கிருபையும் அநேகரைக் கிறிஸ்துவண்டை வழிநடத்தக்கூடியதாக இருக்கும்.

பவுல் இந்த இடத்திலே இவ்விதமாக சொல்லும் விதத்தைப் பாருங்கள். கிறிஸ்துவினுடைய பாடுகள் எங்களிடத்தில் பெருகுகிறதுபோல கிறிஸ்துவின் ஆறுதலும் பெருகுகிறது என்று சொல்லுகிறார். இந்தப் பெருகுதல் என்பது கிரேக்க பதத்தில் மிகவும் அழுத்தம் திருத்தமாகச் சொல்லப்படுகிறது. இவ்விதமான நெருக்கங்கள் போராட்டங்கள் எந்த அளவுக்கு அதிகமாக இருக்கிறதோ அந்த அளவுக்கு மேலாக தேவனுடைய ஆறுதல் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது.

இவ்விதமான உற்சாகப்படுத்துதல் என்றால் என்ன? நமக்கு பவுலினாலே ஒரு உதாரணமானது சொல்லப்படுகிறது. 8 -வது வசனத்திலே "ஆகையால் சகோதரரே, ஆசியாவில் எங்களுக்கு நேரிட்ட உபத்திரவத்தை நீங்கள் அறியாதிருக்க எங்களுக்கு மனதில்லை. என்னவெனில், பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுப்போகத்தக்கதாக, எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று." என்று கூறுகிறார். அதாவது நம்முடைய நெருக்கங்கள் போராட்டங்களை ஏற்றுக்கொண்டு ஜெபத்திலே நாம் தேவன் பக்கமாக திரும்பி, அதன்விளைவாக உற்சாகமடைந்து பிறகு தேவனுக்கு நன்றி சொல்லுகிறவர்களாக இருக்கிறோம். பவுல் இவ்விதமான காரியங்களைத் தன்னுடைய ஊழியத்தின் மூலமாக இரட்சிக்கப்பட்ட மக்களுக்குப் போதிக்கிறதைப் பார்க்கிறோம். அது நமக்கும் பொருந்துகிறதாகவே இருக்கிறது.

நான் என்னுடைய வாழ்க்கையில் நடைபெற்ற ஒரு உதாரணத்தை சொல்லவிரும்புகிறேன். **1959** -ல் நடந்த ஒரு நிகழ்ச்சி அது. நான் ராணுவத்தில் பணிபுரியும்போது இலண்டனில் ஒருசில நாட்கள் விடுமுறைக்காக வந்திருந்தேன்.

நேபாளத்திலே ஒரு மிஷன் ஆஸ்பத்திரியை நிறுவும்படியாக இரண்டு மிஷினரி பெண்களுக்கு உதவி செய்துகொண்டிருந்த ஒரு சபைக்குப் போயிருந்தேன்.

இந்த ஆஸ்பத்திரியை நிறுவின டாக்டர் லில்லி என்பவரும், டாக்டர் ஹில்டா என்பவரும் அந்தக் கூட்டத்தில் பேசினார்கள். இந்த அருமையான டாக்டர் லில்லி, டாக்டர் ஹில்டா என்ற இந்த இரண்டு சகோதரிகளும் மிஷினெரிகளாக கடுமையான போராட்டங்களின் மத்தியில் எப்படியாகிலும் நேபாளத்திலே சுவிசேஷத்தை அறிவிக்கவேண்டுமென்று வாஞ்சித்து செயல்பட்டுக்கொண்டிருந்தார்கள்.

இரண்டாம் உலக யுத்தத்திற்குப் பின்பாக அந்த நாட்களில் நேபாளத்திலிருந்த இங்கிலாந்தின் பிரதிநிதியைச் சந்தித்து இரண்டு சகோதரிகளும் எப்படியாகிலும் நேபாளத்திலே பணிசெய்ய சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொள்ள பிரயாசப்பட்டார்கள், ஆனால் முடியவில்லை. ஆனாலும் கூட இந்த சகோதரிமார்கள் தொடர்ந்து ஜெபித்துவந்தபொழுது 1952 -வது ஆண்டில் நேபாளத்தில் பணிசெய்ய ஆண்டவர் வழியைத் திறந்தார்.

இவர்கள் நேபாளத்தில் பொக்காரோ என்ற இடத்தில் சென்று ஒரு ஆஸ்பத்திரிக் கட்டிடத்தைக் கட்டினார்கள். எப்படி ஆச்சரியமாக கட்டிடத்தைக் கட்டும்படியான பொருட்களைத் தேவன் கொடுத்தார் என்பது ஒரு பெரிய சாட்சியாக இருந்தது. பிரிட்டிஷ் மக்கள் யுத்தத்தின் வேளையிலே கூரை தகரங்களை நிலத்தின் கீழாக புதைத்துச்சென்றுவிட்டார்கள் அவைகளைத் தோண்டி எடுத்து ஆஸ்பத்திரியின் மேல் கூரைகளைப் போட ஆண்டவர் உதவிசெய்தார். இவ்விதமான பல நெருக்கமான வேளைகளில் தேவனுடைய பிள்ளைகள் எப்படி ஜெபித்தார்கள் என்பதும், அதன் மூலமாக தேவன் எவ்விதம் பதிலளித்தார் என்பதையும் நாம் பார்க்கிறோம். இதை எழுதிய ஆசிரியர் 1959 -வது ஆண்டிலே ஏறக்குறைய நான்கு ஆண்டுகள் கழித்து அவரும் அவருடைய மனைவியும்

வடக்கு இலண்டன் பகுதியிலே ஒரு சபையை ஆரம்பிக்கும்படி இருந்த சூழ்நிலையில் அரசாங்கம் அனுமதி வழங்கவில்லை, முற்றிலும் கதவு அடைபட்டதுபோல இருந்தது.

இந்தவிதமான சூழ்நிலையில் நேபாளத்தில் நிறுவப்பட்ட மருத்துவமனையின் சாட்சி எங்களுடைய மனதில் ஆழமாய் பதிந்திருந்ததினால் தொடர்ந்து மூடப்பட்ட நிலையிலும் ஜெபித்து வந்தோம். அப்போஸ்தலன் பவுலுக்கு பின்பாக கிறிஸ்தவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் எதிர்ப்புகள் மத்தியிலே, எவ்விதமாக இருந்தார்கள் என்கிற சாட்சி கணக்கிலடங்காததாயிருக்கிறது. இவ்விதமான நெருக்கம் ஜெபத்தை உற்சாகப்படுத்தினது, பிறகு நன்றி செலுத்தக்கூடியதாயிருந்தது. நாங்கள் அதே வழிமுறையைப் பின்பற்றினவர்களாகக் காணப்பட்டோம்.

பொதுவாக நாங்கள் அதிகம் உறுதியாக நின்று செயல்படக்கூடிய தன்மை உள்ளவர்கள் என்று சொல்ல முடியவில்லயென்றாலும், நாங்கள் சுயநம்பிக்கை நிறைந்தவர்களாய் இந்த இடத்தில் அரசாங்கத்தை எதிர்த்து நின்று இடத்தை வாங்கமுடியும் என்று எண்ணக்கூடியவர்களாக இல்லை. ஆனால் தேவன் வல்லமையுள்ளவர் என்பதை விசுவாசித்தோம். தேவன் எல்லாவிதமான காரியங்களிலும் ஆச்சரியமாக செயல்பட்டு ஒரு பெரிய இடத்தை வாங்கி அதில் ஒரு பெரிய கட்டிடத்தைக் கட்டும்படி கிருபை செய்தார்.

மறுபடியுமாக பவுல் 4 -ம் வசனத்திலே “தேவனால் அருளுகிற ஆறுதலினாலே எந்த உபத்திரவங்களிலும் அகப்படுகிறவர்களுக்கு நாங்கள் ஆறுதல் செய்ய திராணியுள்ளவர்களாகும்படிக்கு எங்களுக்கு வரும் சகல உபத்திரவங்களிலேயும் தேவனே ஆறுதல் செய்கிறவர்” (2 கொரி 1:4). அதாவது தேவன் நம்மை ஆறுதல்படுத்துகிறவர், உற்சாகப்படுத்துகிறவர். கர்த்தருடைய பணியில் நெருக்கங்கள், போராட்டங்கள் மத்தியிலே உற்சாகப்படுத்தி ஜெபிக்கத் தூண்டப்படுகிறோம். அதற்கு தேவன் பதிலளிக்கும்போது நாம் உற்சாகப்படுத்தப்படுகிறோம்.

நான் தற்பொழுது இருக்கும்படியான சபையில் முக்கியமாக வாலிப மக்களைக் குறித்து எண்ணுவது உண்டு. சில சமயங்களில் நீங்கள் ஒரு பெரிய சபையில் இருப்பீர்களானால், சபையினுடைய எல்லாத் தேவைகளும் சந்திக்கப்பட்டு நெருக்கங்கள் இல்லாத விதத்தில் காணப்படும்பொழுது, ஒருவேளை இந்த நெருக்கங்களின் அனுபவங்களைப் பெறாதவர்களாக இருக்க வாய்ப்பு உண்டு. ஆகவே பவுல் சொல்லும் வண்ணமாக காரியங்களைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

உன்னுடைய வாழ்க்கையில் அநேக சமயங்களில் இவ்விதமான அனுபவங்கள் காணப்படலாம். அதாவது நீ சாட்சியிட்டாலும் ஒருவரும் கேட்பதில்லை. நீ ஆத்துமாக்களைச் சந்திக்கும்பொழுதும் ஒன்றும் நடைபெறுவதில்லை அல்லது பலவிதங்களிலே கர்த்தருக்குப் பணிசெய்யும் வேளையில் பலன்களைப் பார்க்கமுடியாமல் இருக்கலாம். ஆனால் பவுலின் முன்மாதிரியை நினைத்துப் புறஜாதிமக்களைக் கர்த்தர் எவ்விதம் அவர் பக்கம் திருப்பினார் என்பதை எண்ணிப் பார்க்கவேண்டும். அநேக மிஷ்னெரிகளின் வாழ்க்கையில் கர்த்தர் எவ்விதம் பதில் கொடுத்தார் என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டும். அப்பொழுது உன்னுடைய வாழ்க்கையிலும் ஏற்ற காலத்தில் தேவன் நீ செய்யும் பணியில் வெற்றியைக் கொடுப்பார். இவ்விதம் நீ நெருக்கம், ஜெபம், உற்சாகப்படுதல், நன்றி சொல்லுதல் என்ற சங்கிலித்தொடரில் உன்னை இணைத்துக்கொள்ளுகிறாய். எந்த அளவுக்கு ஆண்டவர் நமக்கு பாடங்களைக் கற்றுக்கொடுக்கிறாரோ, அவைகளை நாம் நிரூபணம்பண்ணி அவைகளை இருதயத்தில் பதித்துக்கொள்ளவேண்டும்.

சீர்த்திருத்தவாதிகள், மிஷினெரிகள் எவ்விதமாக ஆண்டவரைப் பின்பற்றினார்கள் என்பதை அதிகமாக வாசிக்கவேண்டும். அவர்களுடைய விசுவாசத்தை பின்பற்றுகிறவர்களாக நாம் இருக்கவேண்டும். நான் ஒன்றும் செய்யமாட்டேன் என்றும் ஆண்டவரே எல்லாவற்றையும்

கொண்டுவரவேண்டும் என்றும் சொல்லக்கூடாது. நமக்கு எதிரிடையாய் கிளம்பும் சூழ்நிலைகளின் மத்தியிலே நிச்சயமாக நமக்கு உற்சாகப்படுதல் என்பது காலபோக்கில் கிடைக்கும் என்பதில் நிச்சயமுள்ளவர்களாக இருக்கலாம். பவுலைப் போல மண்பாண்டங்களில் இவ்விதமான பொக்கிஷங்களைக் கொண்டிருக்கிறோம். ஏனென்று கேட்டால் இது நம்முடையவைகள் அல்ல, ஆண்டவருடையவைகள் என்பதை மறந்துவிடக்கூடாது.

2 கொரிந்தியர் நிருபத்தை எழுதுவதற்கு முன்பாக அவரும் தீமோத்தேயுவும் சந்தித்த சோதனைகளைக் குறித்துப் பவுல் சொல்லுகிறார். பயங்கரமான சோதனை நம்மை ஜெபத்திற்கு வழிநடத்தி வெற்றிபெறச் செய்கிறது. கொரிந்து மக்களும் இவ்விதமாக ஜெபிக்கவேண்டும் என்று சொல்வதைப் பார்க்கிறோம். "அநேகர் மூலமாய் எங்களுக்கு உண்டான தயவுக்காக அநேகரால் எங்கள் நிமித்தம் ஸ்தோத்திரங்கள் செலுத்தப்படும்பொருட்டு, நீங்களும் விண்ணப்பத்தினால் எங்களுக்கு உதவிசெய்யுங்கள்" **(2 கொரி 1:11).**

சபை தானாக நடந்துகொண்டிருக்கிறது, ஆகவே நாம் அதைக்குறித்து கவலைப்பட வேண்டியதில்லை போன்ற விதங்களில் பிசாசு நம்மை தரிசனமற்ற நிலைக்கு கொண்டு செல்லக்கூடாது. சுவிசேஷத்தை அறிவிக்கும்படியான சபையின் காரியங்களில் நாம் ஒவ்வொருவரும் பங்கு கொள்கிறவர்களாக இருக்கவேண்டும். நாம் அவ்விதமாக இணைந்து ஆண்டவருடைய கிருபை தேவை என்ற உணர்வோடு தேவனைச் சார்ந்து ஜெபிப்பதும் துதிப்பதும் போற்றுவதும் அவசியம். ஆண்டவராகிய இயேசுவின் ஊழியங்களில் ஒவ்வொரு காரியமும் ஒரு பெரிய சாதனையாகவே இருக்கிறது.

# அத்தியாயம் 9

# மன்றாட்டு ஜெப ஊழியம் உனக்கு உண்டா?

*"நான் பிரதானமாய்ச் சொல்லுகிற புத்தியென்னவெனில், எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் ஸ்தோத்திரங்களையும் பண்ணவேண்டும்" (1 தீமோ 2:1).*

*ஒரு ஆசாரியன் தேவனிடத்தில் மனிதனையும், மனிதனிடத்தில் தேவனையும் வெளிப்படுத்துகிறவனாக இருக்கிறான். கிறிஸ்தவ விசுவாசிகள் திருச்சபையின் காலமாகிய இந்த காலங்களில் ஆசாரியர்களாக இருக்கிறார்கள். விசுவாசிகள் யாவரும் ராஜரீகமான ஆசாரியக் கூட்டமாக இருக்கிறார்கள் என்று வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. நம்முடைய சாட்சியிடுதலில் நாம் தேவனுடைய பிரதிநிதிகளாக, ஆசாரிய ஊழியத்தைச் செய்கிறவர்களாக, தேவனிடத்தில் மற்றவர்களுக்காகப் பரிந்துபேசும் மன்றாட்டு ஜெபத்தை ஏறெடுக்கிறவர்களாக இருக்கிறோம். அடுத்ததாக மக்களிடத்தில் தேவனை எடுத்துச் செல்லும் பிரதிநிதிகளாக இருக்கிறோம். ஒவ்வொரு விசுவாசியும் இவ்விதமான பணிகளைச் செய்கிறவர்களாகக் காணப்படுகிறோமா?*

*1 தீமோ 2:1 -ல் சொல்லப்பட்டவிதமாக நாம் மனிதர்களுக்காக மன்றாடுகிறவர்களாக இருக்கிறோம். அதுமாத்திரமல்ல, இரட்சிக்கப்படாதவர்களுக்காக நாம் ஜெபத்தில் மன்றாடுகிறவர்களாக இருக்கிறோம். ஏனென்றால் தேவன் இழந்துபோனவர்களின் ஆத்துமா இரட்சிப்படைய வேண்டுமென்று விரும்புகிறார். எபேசியர் 6:18 -ல் எல்லா*

பரிசுத்தவான்களுக்காகவும் வேண்டுதல் செய்கிறவர்களாகவும் ஜெபிக்கிறவர்களாகவும் இருக்கிறோம் என்று பவுல் சொல்லுகிறார். தேவன் மன்றாடும்படி கட்டளையிட்டவர் நிச்சயமாக மன்றாட்டுக்குச் செவிகொடுக்கிறவராகவே இருக்கிறார். தேவன் அவருடைய சித்தத்தின்படி இதை நிறைவேற்றுகிறார். இது நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற ஒரு சிலாக்கியமாக இருக்கிறது. இதை வாசிக்கும் ஒவ்வொரு விசுவாசிக்காகவும் அவர்களுடைய இரட்சிப்புக்காகவும் மற்றவர்கள் மன்றாட்டை ஏறெடுத்திருப்பார்கள். யார் நமக்காக ஜெபித்தார்கள்? நாம் அறிந்தோ, அறியாமலோ தேவனுடைய பிள்ளைகள் நமக்காக ஜெபிக்கிறவர்களாக இருந்திருக்கிறார்கள். நாம் மற்றவர்களுக்காக மன்றாடுகிறவர்களாக இருக்கிறோமா?

**மன்றாட்டின் ஜெப ஊழியத்தை கர்த்தர் ஏன் நமக்கு கொடுத்திருக்கிறார்?**

முதலாவதாக, மன்றாடுகிறவர்களின் இருதயத்தை தேவன் விசாலமாக்குகிறார். மற்றவர்களின் ஆத்துமாக்களுக்காக கரிசனை உள்ளவர்களாக ஜெபிக்க ஆண்டவர் உதவிசெய்கிறார். இந்தக் காரியத்தைக் கருத்தில் கொள்ளும்படி ஒரு விசுவாசியின் குணநலனில் ஒரு மாற்றத்தை கொடுக்கிறதாக அது இருக்கிறது. நம்முடைய வாழ்க்கையில் எவ்வளவு நேரம் ஜெபத்தில் செலவிடுகிறோமோ அவ்விதமாகவே நம்முடைய ஆத்துமாவின் நிலையும் ஆவிக்குரிய வாழ்க்கையும் இருக்கிறது.

இரண்டாவதாக, கிறிஸ்தவ வாழ்க்கையில் இயேசு கிறிஸ்துவுக்காக செய்கிற பணியானது, நம்முடைய ஆத்துமாவில் ஆழமாக பதிந்திருக்கிறதாக இருக்கிறது. மற்றவர்களுக்காகத் தொடர்ந்து ஜெபிக்கிற மக்களாக இருக்கும்பொழுது, இது மற்ற எல்லாவற்றைக் காட்டிலும் நம்முடைய வாழ்க்கையில் ஒரு முக்கியமான காரியமாக இருக்கிறது.

மூன்றாவதாக, மன்றாட்டின் ஊழியமானது நம்மைக் கிறிஸ்துவுக்கு நெருக்கமாய் பிரதான ஆசாரியராகிய இயேசுகிறிஸ்துவினிடத்தில் கிட்டிச் சேர்க்கிறதாய் இருக்கிறது.

யோவான் 17 -ஆம் அதிகாரத்தில் சொன்னவண்ணமாக, தேவன் நமக்காக ஜெபிக்கிறதைப் போல நாமும் மற்றவர்களுக்காக ஜெபிக்கிறவர்களாக இருக்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

நான்காவதாக, மன்றாட்டின் ஊழியமானது நம்மை சுயநலமற்ற பரந்த மனப்பான்மை உள்ளவர்களாக வாழ உதவிசெய்கிறது. உயர்ந்த குணநலன்கள் ஜெபத்தின் மூலமாகத் தூண்டப்பட்டு நம்மூலமாக பரவுகிறதாயிருக்கிறது.

ஐந்தாவதாக, இந்த ஊழியம் மற்ற ஊழியங்களைப் போல் அல்லாமல் ஒவ்வொரு கிறிஸ்தவனுக்கும் ஒவ்வொரு சூழ்நிலையிலும் உதவி செய்யக்கூடியதாக இருக்கிறது. ஆரோக்கியமுள்ளவர்களுக்கும் அல்லது பெலவீனமுள்ளவர்களுக்கும் இது ஏற்ற ஊழியமாக இருக்கிறது. படுத்த படுக்கையில் இருக்கும்படியானவர்கள் மன்றாட்டின் ஊழியத்தைச் செய்யும்பொழுது, ஆயிரக்கணக்கானவர்களுக்கு பிரசங்கிப்பதைக் காட்டிலும் அதிகமாக தேவனால் பயன்படுத்தக்கூடிய பாத்திரமாக இருக்கிறார்கள்.

ஆறாவதாக, எல்லா கனமும் மகிமையும் மன்றாட்டின் ஊழியத்தின் மூலமாக நாம் தேவனுக்கே செலுத்துகிறவர்களாக இருக்கிறோம். நாம் ஜெபிக்கும்பொழுது இரட்சிக்கப்படாதவர்கள் இரட்சிக்கப்படுகிறார்கள், விசுவாசிகள் ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். நாம் மன்றாட்டு ஜெபம் செய்யாமல் செய்கிற காரியங்களில் பலனைக் காணமுடிவதில்லை. நிலையான மன்றாட்டின் ஊழியத்தைச் செய்கிறவர்கள் எல்லா மகிமையும் தேவனுக்கே உரியது என்று கண்டுகொள்ளுகிறார்கள்.

## இதின் மூலம் நாம் பெறும் நன்மைகள் என்ன?

1. இழந்துபோன ஆத்துமாக்களின் இரட்சிப்பு.
2. தேவ ஜனங்களின் பாதுகாப்பு.
3. கிறிஸ்தவர்களின் வளர்ச்சியும் இரட்சிப்பும்.

*4. கிறிஸ்தவர்கள் பயன்படுத்தப்படுதல்.*

*5. இதன் மூலம் மற்ற அநேகர் பயன் பெறுதல்.*

*6. உலகத்தினின்று கிறிஸ்தவர்கள் பாதுகாக்கப்படுதல்.*

*7. கிறிஸ்தவ பணியாளர்கள் பெறும் ஆசீர்வாதம்.*

*வேதாகமத்தில் சொல்லப்படும் முதலாவது மன்றாட்டு ஜெபம் லோத்திற்காக ஆபிரகாம் ஜெபிப்பதே (ஆதி 18). ஆதியாகமம் 18ம் அதிகாரத்தில் ஆபிரகாம் லோத்திற்காக செய்யும்படியான முதல் மன்றாட்டின் ஜெபத்தினைப் பார்க்கிறோம். அந்த முழு நிகழ்ச்சியையும் விளக்கப்படுத்தாமல் தேவனிடத்தில் எவ்விதமாக ஆபிரகாம் மன்றாடினான் என்பதைப் பார்ப்போம். தேவன் சோதோமைப் பார்க்கப் போகிறேன் என்று சொன்னபொழுது, ஆபிரகாம் வரக்கூடிய பொல்லாப்பை அறிந்திருந்தான். தேவனுக்கு முன்பாக ஆதியாகமம் 18:22 -ல் ஒரு தீர்மானத்தோடு நிற்கிறதை நாம் பார்க்கிறோம். ஆபிரகாமுடைய மன்றாட்டுப் பணியானது இந்தக் காரியத்தை அற்பமாக எண்ணாமல் அவனுடைய முழுமனதுடன் செயல்படுகிறதைப் பார்க்கிறோம். அவனுடைய மன்றாட்டு ஜெபம் நிச்சயமாய் கர்த்தரைக் கிட்டி சேரவேண்டும் என்ற மனநிலையுடன் செய்யப்பட்டதாக இருந்ததை நாம் பார்க்கிறோம்.*

*தேவன் சோதோமில் ஐம்பது நீதிமான்கள் இருந்தால், அதை அழிக்காமல் விட்டுவிடும்படியாக தேவனுடைய நீதிக்காக ஜெபிக்கிறதைப் பார்க்கிறோம், ஆனாலும் ஆபிரகாம் பூமியை நியாயம் தீர்க்கிறவர் சரியானதையே செய்வார் என்பதையும் தேவனுடைய சர்வ ஞானம் வல்லமை பரிபூரண சித்தத்திற்கு ஏற்றதாகவே அனைத்தையும் செய்வார் என்பதைக் குறித்தும் நிச்சயமாய் இருந்தான். நாமும் கூட தேவனிடத்தில் மன்றாடுகிறவர்களாகக் காணப்படவேண்டும். ஆபிரகாம் தன்னை சாம்பலும் தூசியுமாக இருக்கிறேன், நான் பேசுகிறேன் என்று தன்னைத் தாழ்த்தி மன்றாடுகிறதைப் பார்க்கிறோம்*

நான் இந்த ஒருமுறை பேசட்டும் தேவன் கோபப்படாமல் இருப்பாராக என்று அவன் மன்றாடுகிறதைப் பார்க்கிறோம். நம்முடைய பிதாவாகிய ஆபிரகாமின் தாழ்மையான மன்றாட்டு ஜெபம் ஆண்டவர் ஏற்றுக்கொள்ளகூடியதாகவும், நாமும்கூட அவ்விதமாகவே நம்முடைய இருதயத்தைத் தாழ்த்தி ஜெபிக்கவேண்டும் என்பதையும் இங்கே உணர்த்துகிறார்.

மேலும் நம்முடைய அபாத்திர நிலையையும் நம்முடைய மதியீனமான செயலையும் உணர்ந்து செய்யவேண்டிய காரியங்களைச் செய்யாமலும், செய்யக்கூடாத காரியங்களைச் செய்கிறவர்களாகவும் இருக்கிறதை அறிக்கையிட்டு ஜெபிக்கிறவர்களாக இருக்கவேண்டும். நம்முடைய தேவனுடைய நீடிய பொறுமையையும், நம்முடைய இயலாமையையும் வெளிப்படுத்துகிறவர்களாக இருக்கவேண்டும். நாம் நம்முடைய பெருமையோடும் சுயநீதியோடும், நான் தகுதியானவன் என்ற மனநிலையுடனும் செல்லாதபடிக்கு, தேவனை உன்னதமானவராகக் கருதி ஒப்புக்கொடுத்து மன்றாடுகிறவர்களாக இருக்கவேண்டும். ஆபிரகாமுடைய மன்றாட்டு ஜெபத்திற்கு அவர் எதிர்பார்த்த வண்ணமாக இல்லையென்றாலும், தேவன் அவர் ஜெபத்திற்குப் பதிலளித்தவராகவே இருக்கிறார். சோதோம் பட்டணம் அழிக்கப்பட்டது, ஆனால் லோத்து பாதுகாக்கப்படுகிறதை நாம் பார்க்கிறோம். ஆபிரகாம் சொன்னதை விட, தேவன் மேலான பரிகாரத்தைக் கட்டளையிடுகிறதைப் பார்க்கிறோம். நாம் சொல்லுவதைக் காட்டிலும், இந்நாளிலும் தேவன் அதிகமாய் ஜெபத்திற்கு பதிலளிக்கிறவராகவே இருக்கிறார்.

## மோசேயினுடைய மன்றாட்டு ஜெபம்

இஸ்ரவேல் மக்கள் மோசேயை விரோதித்துக் கலகம் பண்ணினாலும் அவர்களுக்காக அவன் மன்றாடுகிறவனாக காணபட்டான். யாத்திராகமம் **32:9** -ல் இந்த மக்களை அழிக்கும்படியாக யோசித்த பொழுது மோசே மிகுந்த பாரத்தோடும் அதிக உணர்வோடும் தேவனுடைய நாமம்

எகிப்து மக்கள் மத்தியிலே விளங்க வேண்டும் என்று ஆண்டவர் முற்பிதாக்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தங்களை நினைவுகூர்ந்து ஜெபிக்கிறதைப் பார்க்கிறோம். தேவன் அந்த ஜெபத்தைக் கேட்டு இஸ்ரவேலரை பாதுகாத்துக்கொண்டார். மன்றாட்டு ஜெபம் ஒரு உள்ளான மனதோடு ஜெபிக்கிறதாக இருக்கிறது. நாம் ஆண்டவருடைய நாமத்தின் மகிமைக்காக, மக்களுடைய ஆத்துமாக்களின் பாதுகாப்பிற்காக மன்றாடி ஜெபிக்கவேண்டியவர்களாக இருக்கிறோம்.

யாத்திராகமம் **32** -ம் அதிகாரத்தில் அந்த மக்கள் விடுவிக்கும்படியாக தன்னுடைய பெயர் கூட ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடப்பட்டாலும் சரி என்பதாக தேவனிடத்தில் மன்றாடுகிறான். இதில் மோசே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை பிரதிபலிக்கிறவராக, தம்முடைய மக்கள் ஜீவனைப் பெற்றுக் கொள்ளும்படி தன்னையே பலியாய் ஒப்புக்கொடுத்ததை நினைவுபடுத்தும்படியாக இருக்கிறது. தேவன் அதின் பின்னணியிலிருந்த ஆழமான உணர்வை நோக்கிப்பார்த்தார். இந்த மக்கள் மோசேக்கு எதிராகக் கலகம் பண்ணினாலும் மோசே ஒரு ஆசாரியனாக, மன்றாடுகிறவனாக மன்றாடி ஜெபிக்கிறதைப் பார்க்கிறோம். நாம் மோசேயைப்போல அந்த அளவில் பொறுப்புள்ளவர்களாக ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

**சாமுவேலின் உறுதியான ஜெபங்கள்:**

ஒரு விதத்தில் சொல்லப்போனால் சாமுவேல் ஒரு மன்றாட்டு ஜெப வீரர். ஜெபத்தின் மூலமாகவே பிறந்த தீர்க்கதரிசி. சாமுவேல் என்று சொன்னால் தேவனுக்காக கேட்கப்பட்டவர் என்று அர்த்தம். **1** சாமுவேல் **12** அதிகாரம் **23** வது வசனத்தில் அவர் தம்முடைய மக்களை நோக்கி "நானும் உங்களுக்காக விண்ணப்பம் செய்யாதிருப்பேனாகில் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறவனாயிருப்பேன்; அது எனக்குத் தூரமாயிருப்பதாக; நன்மையும் செவ்வையுமான வழியை நான் உங்களுக்குப் போதிப்பேன்" என்று கூறுவதைப் பார்க்கலாம்.

இது நம்முடைய ஆசாரியத்துவத்தின் ஒரு முக்கியமான பங்காக இருக்கிறது. மற்றவர்களுக்காக நாம் ஜெபிக்காமல் இருப்பது, ஆண்டவருக்கும், அவருடைய கிருபைக்கும், நன்றியில்லாதவர்களாக உண்மையில்லாதவர்களாக இருப்பதைக் காண்பிக்கிறது. இது இருதயத்தின் கடினத்தன்மையையும், மற்றவர்களைக் குறித்து அக்கறையின்மையையும் காண்பிக்கிறது. நாம் இந்த வழியில் பாவம் செய்கிறோமா?

மோசேயை போல சாமுவேலும் தேவன் பதிலளிக்கும் மட்டுமாக ஜெபிக்கிறவராக இருந்தார். அவர் நான் உங்களுக்காக விண்ணப்பம் செய்யாதிருப்பேனாகில் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறவனாயிருப்பேன் என்று சொல்லுகிறார். நம்முடைய நாட்களைப்போல சாமுவேல் தீர்க்கதரிசிக்கு மன்றாடுவதும், ஜெபிப்பதும் அவருடைய அழைப்பாக இருந்தது. அவர் மன்றாடுவதை விட்டுவிடாமல், அவர் அவ்விதம் ஜெபிப்பது அவருக்கு வழக்கமாக இருந்தது. நாமும் கூட தினந்தோறும் நம்முடைய குடும்ப மக்களுக்காக, நம்மோடுகூட பணி செய்பவர்களுக்காக நம்முடைய சபையில் இருக்கும் மக்களுக்காக, ஆண்டவருடைய ஊழியக்காரர்களுக்காக ஜெபிக்கவேண்டும். நாம் மற்றவர்களுக்காக அதிகம் ஜெபிக்க வேண்டும், இவ்விதமாக ஜெபிக்கும்படியான மக்களின் பெயர் பட்டியல் அதிகம் இருக்குமானால் நாம், ஒரு வாரத்திற்குக்கென்று அதைப் பிரித்து அவர்களுடைய பெயரை மாத்திரம் சொல்லி ஜெபிக்காமல், அவர்களுக்காக உறுதியாய் கருத்தாய் ஜெபிக்க வேண்டும்.

சாமுவேல் அவர்களுக்காக ஜெபிக்கிறார் என்பதை அந்த மக்கள் அறிந்திருந்தார்கள். இஸ்ரவேல் மக்களுக்கு பயம் நிறைந்த சூழ்நிலைகள் வந்தபொழுது, அந்த மக்கள் அவரிடம் வந்து அவர்களுக்காக ஜெபிக்கும்படியாக கேட்டுக்கொண்டார்கள். "சாமுவேலைப் பார்த்து: நாங்கள் சாகாதபடிக்கு உம்முடைய தேவனாகிய கர்த்தரிடத்தில் உம்முடைய அடியாருக்காக விண்ணப்பம் செய்யும்; நாங்கள் செய்த எல்லாப் பாவங்களோடும்

எங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என்று கேட்ட இந்தப் பாவத்தையும் கூட்டிக்கொண்டோம் என்று ஜனங்கள் எல்லாரும் சொன்னார்கள்" (1 சாமு 12:19). இரட்சிக்கப்பட்டவர்களோ அல்லது இரட்சிக்கப்படாதவர்களோ அவர்களுக்காக நாம் ஜெபிக்கிறோம் என்பதை அவர்கள் அறிந்திருப்பது நல்லது. எல்லாவற்றிலும் தேவனுடைய நாமம் மகிமைப்படும்படியாக இருக்கிறது. சாமுவேல் நெருக்கப்பட்ட பாவகரமான மக்களைப்பார்த்து இதைச் சொன்னார், உங்களுக்காக நான் விண்ணப்பம் பண்ணுவேன். "பின்பு சாமுவேல்: நான் உங்களுக்காகக் கர்த்தரை மன்றாடும்படிக்கு, இஸ்ரவேலர் எல்லாரையும் மிஸ்பாவிலே கூட்டுங்கள் என்றான். அப்பொழுது சாமுவேல் பால்குடிக்கிற ஒரு ஆட்டுக்குட்டியைப் பிடித்து, அதைக் கர்த்தருக்குச் சர்வாங்க தகனபலியாகச் செலுத்தி, இஸ்ரவேலுக்காகக் கர்த்தரை நோக்கி வேண்டிக்கொண்டான்; கர்த்தர் அவனுக்கு மறுமொழி அருளிச்செய்தார்." (1 சாமு 7:5,9). இங்கு சாமுவேல் அவர்களுக்காக அதிக பாரத்தோடு ஜெபிக்கிறதைப் பார்க்கிறோம்.

சாமுவேலை ஒரு மன்றாட்டு ஜெப வீரராக வேதத்தில் நாம் பார்க்கிறோம். சங்கீதம் 99 அதிகாரத்தில் 6 வசனத்தில் "அவருடைய ஆசாரியரில் மோசேயும் ஆரோனும், அவர் நாமத்தைப்பற்றிக் கூப்பிடுகிறவர்களில் சாமுவேலும், கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள்; அவர் அவர்களுக்கு மறுஉத்தரவு அருளினார்" என்று சொல்லப்பட்டிருக்கிறது. தேவன் யூதர்களைப் புறக்கணித்தபொழுது, எரேமியா தீர்க்கதரிசியின் மூலமாக மோசேயும் சாமுவேலும் எனக்கு முன்பாக நின்று மன்றாடினாலும் நான் இந்த மக்களுக்கு செய்ய நினைத்ததைவிட்டு திரும்புவதில்லை என்று சொல்லுகிறார். அவர்களின் மன்றாட்டு ஜெபம் எந்த அளவிற்கு வல்லமையுள்ளதாக இருந்தது என்பதை நாம் பார்க்கிறோம். மோசேயும், சாமுவேலும் மன்றாடுவதில் வெற்றிசிறந்தவர்களாகக் காணப்பட்டார்கள்.

**மன்றாடுகிறவர்களுக்கான ஆலோசனை:**

இங்கு மன்றாடுகிறவர்களுக்கு பழைய ஏற்பாட்டில் நல்ல முன்மாதிரிகளைப் பார்க்கிறோம். நாம் பெயரைச் சொல்லி ஜெபிப்பதைவிட திட்டமான ஆசீர்வாதத்தைக் கேட்டு ஜெபிக்கவேண்டும். ஒரு குறிக்கோள் இல்லாமல் மன்றாடுவது சரியான ஜெபமல்ல. ஒவ்வொரு பெயரையும் தனிப்பட்ட விதத்தில் சொல்லி, அவர்களின் ஆசீர்வாதத்திற்காக தெளிவாக மன்றாடுவோம்.

நாம் யாருக்காக ஜெபிக்கிறோமோ அவர்களின் ஸ்தானத்தில் இருந்து, அவர்களின் சூழ்நிலையை உணர்ந்து, அவர்களின் தேவைகள் மற்றும் நித்திய முடிவை எண்ணிப்பார்த்து அல்லது அவர்களின் வியாதியின் மத்தியில் அவர்களுக்காக ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நாம் அவர்களுடைய பிரதிநிதியாக நின்று அவர்களுக்கென்று தேவனிடத்தில் மன்றாடி ஜெபிக்கிறவர்களாகக் காணப்படவேண்டும். இன்றைய நாட்களில் எவ்வளவு சீக்கிரத்தில் ஊக்கமாக ஜெபிப்பது நம்மைவிட்டுப் போய்விடுகிறது? அதை நாம் காத்துக்கொள்ளுவது அதிமுக்கிமான ஒன்று.

ஆகவே கர்த்தர் பரத்திலிருந்து பதிலை அனுப்பும் மட்டுமாக, நாம் உறுதியுடன் கிரமமாக ஜெபிக்கிறவர்களாகக் காணப்படவேண்டும். நாம் எந்த ஒரு விசுவாசிக்காக ஜெபிக்கும்பொழுதும், நாம் ஏதோ அவர்களை விட மேலாக இருப்பதைப் போல எண்ணிக் கொண்டும், அவர்கள் கீழான நிலையில் இருப்பதாக சிந்தித்துக்கொண்டும் இருக்கக்கூடாது. விழுந்துபோன இருதயம் மிகவும் மோசமானது, தந்திரமானது. எப்பொழுதும் நாம் ஜெபிக்கும்பொழுது பெருமையான இருதயத்தோடு ஜெபிக்கவே கூடாது.

நாம் ஞாயிறுப் பள்ளிகளின் வகுப்புகளுக்காக அதிகமாக ஜெபிக்கவேண்டும். அதை நடத்தும்படியானவர்களுக்காகவும் ஜெபிக்கவேண்டும். அவர்களுக்காக அதிகம்

அக்கறையுள்ளவர்களாக அதிகமான ஜெபத்தின் மூலமாகத் தாங்கவேண்டும். கர்த்தருடைய பணியை செய்பவர்களுக்காகவும், போதகர்களுக்காகவும், மற்றவர்களுக்காகவும் நாம் அதிகமாக ஜெபிக்கவேண்டும்.

நாம் கர்த்தருடைய பணியைச் செய்கிறவர்களின் சோதனையைக் குறித்தும், அவர்களுடைய பொறுப்பைக் குறித்தும் நினைத்துத் தெளிவான ஜெபக்குறிப்புகளோடு தேவனுக்கு முன்பாக ஜெபிக்கவேண்டும். அதே சமயத்தில் ஆண்டவர் கொடுக்கும்படியான வெற்றிகளுக்காகத் தேவனைப்போற்றித் துதிப்பவர்களாகவும் காணப்படவேண்டும்.

சில சமயங்களில் நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டு ஜெபத்தை துவக்குகிறதற்கு முன்பாகவே, மற்றவர்களுக்காக மன்றாடி நாம் ஜெபிக்கலாம். அப்பொழுது நாம், நம்முடைய சுயத்திலிருந்து வெளியேவந்து மன்றாடி ஜெபிக்கக் கூடியவர்களாக இருக்கிறோம். ஆனால் பொதுவாக இருதயத்தின் மனந்திரும்புதலோடு கூடிய மன்றாட்டு ஜெபம் நிச்சயமாக காணப்படவேண்டும். ஏனென்றால், நீதிமான் செய்யும் ஊக்கமான ஜெபம் மிகுந்த பெலனுள்ளதாயிருக்கும். மறுபடியுமாக நாம் அதிக ஊக்கத்தோடும், வாஞ்சையோடும் மற்றவர்களுக்காக ஜெபிப்பதில் முழு கவனமுள்ளவர்களாகக் காணப்படவேண்டும். கர்த்தர் நமக்கு உணர்த்தும்படியான காரியங்களுக்குச் செவிகொடுக்கும்படியான உணர்வோடும், தாழ்மையுள்ள மனதோடும் கர்த்தருக்கு முன்பாக நாம் காத்திருக்கவேண்டும்.

சபையினுடைய எல்லா மக்களும் மன்றாடி ஜெபிக்கிறவர்களாக இருப்பார்கள் என்றால், நிச்சயமாக தேவனுடைய ஆசீர்வாதம் மிகப் பெரிய அளவில் காணப்படும். அமெரிக்காவில் 1858 -வது ஆண்டில் ஏற்பட்ட உயிர்மீட்சியானது, இவ்விதமாக அநேகர் ஒருமனப்பட்டு தேவனிடத்தில் அதிகமாக ஜெபித்தபொழுது வந்தது என்பதை நாம் அறிந்திருக்கிறோம். மன்றாடி ஜெபிப்பதில்

நாம் கருவிகளாக இருக்கும்பொழுது, அதிகமாக நாம் உற்சாகப்படுத்தப்படுவோம், நமக்கு அதிகமான ஆசீர்வாதங்கள் தேவனால் கொடுக்கப்படும், இவைகள் எல்லாவற்றிற்கும் மேலாக தேவனுடைய நாமம் மகிமைப்படும்.

ஒரு ஆசாரிய ஊழியத்தில் காணப்படவேண்டிய மன்றாட்டு ஜெபம் இல்லையென்றால், அந்த ஆசாரிய ஊழியத்தில் முன்னேறிச் செல்லுவது கூடாத காரியம். நம்முடைய மன்றாடுகிற இந்தப் பணியை உடனடியாக நாம் எடுத்து, இதனுடைய சிலாக்கியத்தையும், முக்கியத்துவத்தையும் உணர்ந்து செய்யவேண்டும். ஒரு பட்டியலை தயார் செய்து இருதயத்தை ஆயத்தப்படுத்தி தேவனுக்கு முன்பாக வாருங்கள். பத்து நிமிடங்கள் ஜெபிக்கிறதாக இருந்தாலும், மற்றவர்களுக்காக மன்றாடி ஜெபிக்க முடியும். ஆகவே, ஒவ்வொரு நாளும் இதை ஜாக்கிரதையாக கடைப்பிடிக்க வேண்டும். நீ ஜெபிக்கும்பொழுது எப்படியும் ஓரளவிற்கு விரிவான விதத்தில் ஜெபிப்பதும், குறிப்பிட்ட பாரங்களுக்காக ஜெபிப்பதும், உண்மையான வாஞ்சையோடு ஜெபிப்பதும், கிறிஸ்தவ ஆசாரியப்பணிகளை மிகுந்த கருத்தோடு பின்பற்றுவதும் மிக அவசியமான ஒன்று.

# அத்தியாயம் 10

# உண்மைத் தன்மை முக்கியமானது

*அன்பு கிறிஸ்தவ குணங்களில் அதிமுக்கியமனது என்பதை புதிய ஏற்பாடு வலியுறுத்திச் சொல்லுகிறது (1 கொரி 13, கலா 5). ஆனால் ஒரு கிறிஸ்தவனின் தன்மைகளில் அதிமுக்கியமானது நேர்மை. மற்ற குணங்களுக்கு இது அஸ்திபாரம் என்று கூடச் சொல்லலாம். நாம் இதை பெற்றிருக்கிறோமா? இதை நாம் கடைபிடிக்கிறோமா?*

*பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத்தக்கதாக, தேவனின் சர்வாயுதவர்க்கத்தைத் தரித்தவர்களாக நாம் இருக்க வேண்டும் என்று பவுல் சொல்லுகிறார். சர்வாயுதவர்க்கம் என்று சொல்லப்படும்போது தாக்குவதற்கும், தற்பாதுகாப்பிற்கும் ஏதுவான ஆயுதத்தைக் குறிக்கிறதாக இருக்கிறது. நம்மைப் பாவத்திற்கு உட்படுத்துவதற்கும், நாம் தேவன் மேல் வைத்திருக்கும் நம்பிக்கையை தாக்குவதற்கும் பிசாசு எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறான். மேலும் நாம் ஆத்துமாக்கள் மேல் வைத்திருக்கும் வாஞ்சையை சீர்குலைக்க பிசாசும் இருளின் சக்திகளும் ஆயத்தமாயிருக்கின்றன. உலகப்பிரகரமான ஆசைகளையும், மற்றவைகளையும் முக்கியப்படுத்தி ஆவிக்குரிய முக்கியத்துவங்களை இழந்துபோகச் செய்வான். விசுவாசிகளையும் சபைகளையும் குளிர்ந்துபோய் அனலற்ற நிலைக்கு கொண்டுசெல்ல முயற்சிப்பான். கள்ள உபதேசங்களை உட்புகுத்தப் பிரயாசப்படுவான். நாம் எவ்வளவாக சர்வாயுதவர்க்கத்தை தரித்தவர்களாக இருக்க வேண்டியது அவசியமாயிருக்கிறது!*

“ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்” (எபே **6:13**). பவுல் இங்கு தீங்கு நாள் என்று எதைச் சொல்லுகிறார்? ஒரு விதத்தில் சொல்லப்போனால் ஒவ்வொரு நாளும் தீங்கு நாளே, ஏனென்றால் பிசாசு ஒரு நாளும் தூங்குவதில்லை. ஆனாலும் பிசாசும் அவன் தூதர்களும் சில நாட்களில் தீவிரமாக இருப்பதுண்டு. சில நாட்களில் நாம் பாதுகாப்பாய் இருப்பது போன்ற ஒரு பொய்யான உணர்வை பெறும்படியாக அமைதியாக இருப்பது போலவும் இருப்பான். பதுங்கி தாக்குவது போல பிறகு தீவிரமாய் தாக்குவான். எந்த சூழ்நிலையிலும் சர்வாயுதவர்க்கம் போதுமானது. எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்லும்போது விசுவாசியாக, சபையாக விட்டுக்கொடுக்காமல் உறுதியாயிருப்பதைக் குறிக்கிறது.

நாம் பாவத்தில் விழுந்துபோகவோ, கிறிஸ்துவின் பணியில் பின்னடைவு ஏற்படுவதற்கோ இடங்கொடாமல் உறுதியாக இருக்கவேண்டும். நாம் தவறான உபதேசங்களை, கள்ள போதனைகளை, வேதத்திற்கு ஏற்புடையாத ஆராதனைகளை நல்ல தீர்மானத்தோடு எதிர்க்க வேண்டும். “சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும் ..... நில்லுங்கள்” (எபே **6:14**).

இந்த கச்சையைக்குறித்து நாம் முழுமையாக அறிந்துகொள்ளவேண்டுமானால், ஒரு ரோம சிப்பாயின் போர் கவசங்ககளைக் குறித்து அறிந்து கொள்ளவேண்டும். அவன் பட்டயத்தோடு கூட நீண்ட கத்தியையும் தரித்திருப்பான். மேலும் அவன் இரண்டு ஈட்டிகளையும் அவனைப் பாதுகாக்க கேடகத்தையும் வைத்திருப்பான். மொத்தமான பெரியகச்சையையும் அணிந்திருப்பான். இந்த கச்சையிலிருந்து தொடையைப் பாதுகாக்க தோலோடு கூடிய உலோகத்தாலான பகுதி உண்டு. இது இடுப்பு கச்சையோடு இணைந்ததாக

இருக்கும். அதோடு கூட தலைச்சீராவையும் மார்க்கச்சையையும் அணிந்திருப்பான்.

இந்தக் கச்சையானது முன்புறம் மார்க்கவசத்திற்கும், பின்புறமும் பாதுகாக்கும் படியான பகுதியாகவும் இவையெல்லாம் அந்த இடுப்பு கச்சையோடு இணைந்ததாகவே இருக்கும். இந்த இடுப்பு கச்சையோடு கூட கொக்கியின் மூலமாக ஈட்டி இணைக்கப்பட்டிருக்கும். கேடகமும் கூட பின் பகுதியில் இந்த இடுப்பு கச்சையோடு இணைக்கப்பட்டதாகவே இருக்கும். ஆகவே இந்த இடுப்பு கச்சை மற்ற எல்லாவற்றிற்கும் முக்கியமான இணைப்பைக் கொடுக்கிறதாக இருக்கின்றது. அத்தோடுகூட ஒரு போர் வீரன், போரிடுவதற்கு ஆயத்தப்படுத்துவதற்குரிய ஒன்றாகவும் இது இருக்கின்றது.

இவைகள் எல்லாவற்றையும் நினைத்துப் பவுல் அப்போஸ்தலன் கிறிஸ்தவ யுத்தத்தில் இருக்கும் படியான காரியத்தை இவ்விதமாய் சொல்லுகிறார். சத்தியத்தை மார்க்கச்சையாக அணிந்துகொண்டு என்று சொல்லுகிறார், இயற்கையாக சத்தியம் என்றால் என்ன? இங்கு பவுல் சொல்லும்பொழுது ஆவிக்குரிய அணிகலன்களை அணிவதற்கு முன்பாக சத்தியத்தை அணியும்படியாக சொல்லுகிறார். அதாவது விசுவாசத்திற்கு அடிப்படையான உபதேசம் என்பது ஆவியின் பட்டயமாகிய தேவ வசனம் என்று சொல்லப்படுகின்றது.

அப்படியானால் சத்தியம் என்று இங்கு சொல்லப்படுவது, முதலாவது முக்கியமாக நேர்மையைக் குறிக்கக் கூடியதாக இருக்கின்றது. நீதியென்னும் மார்க்கவசம் என்றும் பிறகு சொல்லப்படுகின்றது. இதற்கு சரியான விளக்கம் என்னவென்றால் உண்மையோடும், நேர்மையோடும் இருக்கிறதைக் குறிக்கிறதாக இருக்கின்றது. அதாவது உன்னுடைய ஆவிக்குரிய யுத்தத்திற்கு அதிமுக்கியமான தேவையான காரியங்கள் இந்த இடுப்பு கச்சையோடு, அதாவது நேர்மை என்கிற இடுப்பு கச்சையோடு இணைந்ததாக இருக்க வேண்டியது அவசியமாக இருக்கின்றது.

நேர்மைத் தன்மை என்பது இரட்சிக்கப்படுகிற வேளையில் பரிசுத்த ஆவியானவரின் ஈவாகக் கொடுக்கப்படுகிறது. இந்த கவசம் ரோம சிப்பாய் விலை கொடுத்து வாங்கினதாக அல்ல, அவனுக்காகவே கொடுக்கப்பட்டதாக இருக்கின்றது. அவன் யுத்த தளவாடங்கள் இருக்கும் படியான இடத்தில் அவனாகவே அதை தேர்ந்தெடுக்கிறதாக இருக்கிறது. ஆகவே அது நேர்மைத் தன்மையை காட்டுகிறதாக உள்ளது. இது ஒரு ஈவாகக் கொடுக்கப்படுகிறது. நமக்குள்ளாக நாமே நேர்மைத் தன்மையை உருவாக்கிக்கொள்ள முடியாது. தேவனுடைய வல்லமையினால் அது நமக்கு கொடுக்கப்பட வேண்டும். இருதயமோ எல்லாவற்றைப் பார்க்கிலும் திருக்கும், மகா கேடுள்ளதாக இருக்கின்றது. அந்த உண்மைத் தன்மை, நேர்மைத் தன்மை, கபடமற்ற தன்மையை தேவன் ஒருவரே நமக்குக் கொடுக்க வேண்டும்.

உண்மைத் தன்மையில்லாத ஒரு இரட்சிக்கப்பட்ட மனிதன் என்பவன் இல்லை. ஆனால் இந்த மறுபிறப்பைப் பெறும்பொழுது தேவன் அதைக் கொடுத்து, பெலப்படுத்துகிறவராக இருக்கின்றார். இரட்சிக்கப்படுவதற்கு முன்பாக பெருமைக்காரர்களாகவும், கற்றுக்கொள்ள விரும்பாதவர்களாகவும், தந்திரமுள்ளவர்களாகவும், சுயநலவாதிகளாகவும் இருப்பார்கள். இவ்விதமாக மறுபடியும் பிறந்த வாழ்க்கையின் ஒரு முக்கிய காரியம் உணமைத் தன்மையுள்ளவராக இருப்பது. இது மற்ற எல்லாவற்றிற்கும் அடித்தளமாக இருக்கின்றது.

இந்த உண்மைத் தன்மை என்கிற தளவாடம் வல்லமையான பாதுகாப்பாக இருக்கின்றது. ஏனென்று கேட்டால் இவ்விதமான தன்மையுள்ளவர்களை பிசாசுவானவன் கீழே விழ்த்துவது என்பது மிகக் கடினம். ஒரு உண்மையான விசுவாசி அவன் தன்னுடைய நடத்தையை குறித்தும், மாய மாலத்தைக் குறித்தும் வெகு சீக்கிரத்தில் உணர்ந்துகொள்ளக் கூடியவனாக இருப்பான்.

ஆனாலும்கூட உண்மைத் தன்மை என்கிற கச்சை தன்னை பாதுகாக்கிறதாக இருக்கிற ஒரு அணிகலனாக இருக்கின்றது. ஏனென்று கேட்டால் இரட்சிக்கப்படாத மக்களும் கூட, உண்மையான நேர்மையுள்ள தன்மையை வெளிப்படுத்தக்கூடிய விசுவாசிகளுக்கு அவர்கள் செவி கொடுப்பவர்களாக இருப்பார்கள். மிகக் கடினமான இருதயமுள்ளவர்களும் நேர்மையைக் கனப்படுத்துகிறவர்களாய் இருப்பார்கள். போர் வீரனின் கச்சையைப் போல, உண்மைத் தன்மையுள்ள விசுவாசிகள், தைரியமுள்ளவர்களாய் இருக்க அது பலப்படுத்துகின்றது. கர்த்தருக்கென்று மிகச்சிறந்த காரியத்தை செய்யக் கூடியவர்களாகவும், ஜெபத்தோடும் ஆவிக்குரிய பல காரியங்களைச் செய்வதற்கும் அது தகுதிப்படுத்துகின்றதாக இருக்கின்றது. உண்மைத்தன்மை இல்லாமல் இருப்பது நம்முடைய வாழ்க்கையில் பிரச்சினையாக இருக்கும்

கிரேக்க புதிய ஏற்பாட்டில் உண்மைத் தன்மைக்கு பல வார்த்தைகள் இருக்கின்றன. அதில் ஒரு அர்த்தம் "அது தூய்மையானதும் சரியானதாகவும் இருக்கிறது" என்பதைக் குறிக்கின்றது. இன்னொரு அர்த்தம் "சரியானதாகவும் சரியான விதத்திலிருந்து உருவாக்கப்பட்டதும் அல்லது பிறப்பிக்கப்பட்டதும், நடிப்பு என்பது இல்லாமல் காணப்படுகிறதாகவும்" இருக்கின்றது. இன்னொரு கிரேக்க மொழி வார்த்தையின் அர்த்தம் "எந்தவிதமான அப்பழுக்கு இல்லாதபடிக்கு இருப்பதைக் குறிக்கிறதாக" இருக்கின்றது. இன்னொரு விதத்தில் சொல்லப்போனால் ஒரு உண்மையான நேர்மையான மனிதன் நிலைத்தவனாகவும், சரியான நிலைபாடுள்ளவனாகவும் இருப்பான். பிசாசு உண்மைத் தன்மையை வெறுக்கிறவனாக இருக்கிறான். ஏனென்றால் அவன் ஆதியிலிருந்து பொய் பேசுகிறவனாகவே இருக்கின்றான். உண்மைத் தன்மையானது அல்லது நேர்மைத் தன்மையானது நம்மிடத்தில் நெருங்கி வருகிறதை அவன் வெறுக்கிறவனாக இருக்கிறான். வேறு விதமாக சொல்லப்போனால் உண்மைத் தன்மையற்ற நிலை சாத்தானுடைய தாக்குதலால்

உற்சாகப்படுத்தப்படுகிறதாக இருக்கிறது. இருமனம் உள்ளவன் தன் வழிகளில் எல்லாம் நிலையற்றவனாக இருக்கின்றான் என்று யாக்கோபு சொல்லுகிறார்.

உண்மைத்தன்மையற்ற, நேர்மையற்ற நிலைபாடு நம்முடைய மனதில் கிறிஸ்துவக் குறிக்கோள்களை ஒரு குறிப்பிட்ட அளவில் மாத்திரமே பின் பின்பற்றுகிறதாகவும், உலக சிந்தனைகள் உலக சந்தோஷங்கள் உலகத்தின் மகிழ்ச்சிகள் ஆகியவற்றை மனதிலே அதிகமாகத் தேடுகிறதாகவும் இருக்கின்றது. நேர்மையுள்ள ஒரு மனிதன் தேவனுக்குப் பிரியமாக இருந்து அவருக்குப் பணி செய்கிற ஒரே குறிக்கோள் உள்ளவனாக இருப்பான். அதோடுகூட சாத்தானுடைய பின்வாங்குதலுக்கு அவன் விலகினவனாய்க் காணப்படுவான். உண்மைத்தன்மை அநேக நற்குணங்களுக்கு அஸ்திபாரமாக இருப்பதோடு கூட நம்முடைய வாஞ்சையை சுத்தமாக காத்து கொள்ளுகிறதாக இருக்கிறது.

உண்மைத்தன்மை இல்லாமல் கர்த்தருக்குச் செய்கிற பணி மற்றவர்கள் பார்த்து மெச்சிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தோடு செய்கிறதாக இருக்கின்றது. உண்மைத்தன்மை உள்ளவர்கள் பரிசுத்தமாக்கப்பட்ட நோக்கங்களைக் கொண்டவர்களாகவும், ஆத்துமாக்கள் இரட்சிக்கப்படுகிறதை விரும்புகிறவர்களாகவும், கிறிஸ்து மாத்திரமே மகிமைப்படுவதை வாஞ்சிக்கிறவர்களாகவும் இருப்பார்கள். உண்மைத்தன்மை பாவத்தை வெறுக்கிறதாகவும், தேவனுக்குக் கீழ்ப்படிகிறதைத் தெரிந்து கொள்ளுவதாகவும் இருக்கிறது. உண்மைத் தன்மையுள்ளவர்கள் ஆண்டவருக்குக் கொடுத்த பொருந்தனை போன்ற வாக்குகளாக இருந்தாலும் சரி, சபைக்கோ அல்லது சமுதாயத்துக்கோ கொடுக்கப்பட்ட வாக்குகளாக இருந்தாலும் சரி, அவைகளைக் கடமை உணர்வோடு கூட நிறைவேற்றுகிறவர்களாய்க் காணப்படுவார்கள்.

ஒரு உண்மையான மனிதன் மற்றவர்கள் தன்னை மெச்சிக்கொள்ளுவதை விரும்பமாட்டான். அவன் தன்னை

முன்பாக வைத்துக்கொள்ளுவதையோ அல்லது தான் செய்வதை மிகைப்படுத்தி நேர்மையற்ற நிலையில் வாழ்வதையோ விரும்பமாட்டான்.

உண்மைத் தன்மையுள்ள ஒரு நபர் சரியான குணநலன் இல்லாத நிலையில் ஒரு கோபமடைகிற மனப்பான்மையோடு கூட காணப்படமாட்டான். ஏனென்று கேட்டால், இவ்விதமான காரியங்கள் அவனை மிகைப்படுத்திக் காண்பிக்கிறதாகவோ அல்லது பொய்யானவிதத்தில்தன்னை வெளிப்படுத்துகிறதாகவோ இருக்கும். ஆகவே உண்மைத் தன்மை என்பது பெரிய பாதுகாப்பைக் கொடுக்கிறதாக இருக்கிறது. நேர்மைத்தன்மை பரிசுத்தமாகுதலின் அஸ்திபாரமான ஒரு ஆயுதமாக இருக்கிறது. நேர்மைத்தன்மை என்கிற கச்சை இல்லாமல் நீதி என்கிற மார்க்கவசம் சரியான விதத்தில் இணைக்கப்பட முடியாது. பவுல் கிறிஸ்தவ அணிகலன்களைக் குறித்துப் பேசும்பொழுது வல்லமையாய் ஜெபிப்பதைக் குறித்துப் பேசுகிறார். ஆனால் எங்கு உண்மைத்தன்மை இல்லையோ அங்கு அதிகமான உண்மையான ஜெபம் இருக்காது. இவ்விதமான ஜெபம் இல்லாத படிக்கு அணிகலன்களின் மற்ற காரியங்களும் கூட பிரயோஜனமற்றதாகவே இருக்கும்.

இரட்சிக்கப்படாததிற்கு முன்பாக இருந்த நேர்மையற்ற தன்மை ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் திரும்பி வரக்கூடும். அது தந்திரமாக உள்ளே நுழையக்கூடும். முதலாவது இருமனமுள்ளவர்களில் இது நுழையக்கூடும். நாம் சபையிலும், ஆத்துமாக்களிலும் ஆசீர்வாதங்களை விரும்புகிறதோடு, கிறிஸ்துவை அதிகமாக வாஞ்சிக்கிற எண்ணங்கள் இருந்தாலும், அத்தோடுகூட தெய்வ பக்திக்குரிய வாஞ்சைகள் சுயநலமும், உலக நோக்கங்களும் உள்ளதாக இருக்குமானால் இரண்டு மனதோடு செய்கிற காரியமாக அது இருக்கிறது. நாம் ஒரு பக்கத்தில் இவ்விதமான காரியங்களை வாஞ்சித்தாலும் அடுத்த பகுதியில் நாம் உண்மையற்றவர்களாக இருக்கும் பொழுது இருமனம் உள்ளவர்களாக இருக்கின்றோம். இவ்விதமான

மக்களால் எவ்விதமானவர்கள் உருவாக்கப்படக்கூடும்? நாம் இவ்விதமான மனசிந்தையோடு இருப்போமானால், எவ்விதமான வாஞ்சைகள் நம்மில் இருக்கக்கூடும்?

நாம் மற்றக் கிறிஸ்தவர்கள் பார்க்கக்கூடாதபடிக்கு இரகசியமான விதங்களில் காரியங்களை வைத்திருப்போமானால் அதுவும் நேர்மையற்ற தன்மையாகவே இருக்கின்றது. நாம் நேர்மைத்தன்மையை குறைவுபடுத்தும் பொழுது நமக்கு இருக்கிற அபாயத்தையும் சாத்தானுடைய வல்லமையை குறைவாய் மதிப்பிடுகிறவர்களாய்க் காணப்படுவோம். உண்மைத்தன்மை என்பது நேர்மைத்தன்மையைக் குறிக்கிறதாக இருக்கிறது. மேலோட்டமான நம்பிக்கை, சுயநம்பிக்கை அதோடு கூட இணைந்ததாக இருக்கமுடியாது. இவ்விதமான சூழ்நிலையில் இருக்கும் படியான மக்கள் இருதயத்தினுடைய பலவீனத்தையும் சாத்தானுடைய தந்திரமான தன்மையையும் அறியக்கூடாமல் ஆவிக்குரிய யுத்தத்தில் நிற்ககூடாதவர்களாய் காணப்படக்கூடும்.

உண்மைத்தன்மையானது நாம் ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணாமல், பரிசுத்த தன்மையை வாஞ்சிக்காமல் இருக்கும்பொழுது குறைந்து போய்விடும். உதாரணமாக, நாம் ஆத்துமாக்களிடத்தில் சாட்சியிடுவதில், கிறிஸ்துவப் பணியில் பின் தங்கியவர்களாய் இருப்பதற்கு காரணம் நாம் உண்மையற்றவர்களாய், ஒரு காலத்தில் நாம் ஆண்டவருக்கென்று நம்மை ஒப்புவித்ததையும் உணராமல் பின் வாங்கி போனவர்களாய் இருப்பதைக் காட்டுகிறது. நாம் ஒருவேளை ஆண்டவருக்கென்று ஒப்புக்கொடுப்பதை மறுபடியும் மறுபடியுமாக அநேக முறை சொல்லக் கூடியவர்களாக, அர்ப்பணிக்கக் கூடியவர்களாக இருந்தாலும், அந்த வாக்குறுதிகளை உறுதியாய்ப் பற்றிக்கொள்ள மனதற்றவர்களாய் காணப்படக்கூடும். அப்படியானால் உண்மைத் தன்மை எங்கே இருக்கிறது? நாம் நீதிக்காக வாஞ்சையையும் விருப்பத்தையும் தாகத்தையும் கொண்டிருக்கிறவர்களாய்

இல்லாமல் போகும்பொழுது, ஆண்டவருக்கு கொடுத்த வாக்குறுதிகளைக் கைவிட்டு, கர்த்தரை நாம் ஏமாற்றி நம்முடைய நேர்மைத்தன்மையை இழந்து போகிறவர்களாய் இருக்கிறோம்.

கர்த்தருடைய கண்கள் தம்முடைய பிள்ளைகளை எப்பொழுதும் நோக்கிக் கொண்டிருக்கிறது என்பதை அறியாமல் இருக்கும்பொழுது, நாம் உண்மைத்தன்மையை இழந்து போகிறவர்களாய் காணப்படக்கூடும். நாம் கர்த்தருடைய பார்வையில் எப்பொழுதும் காணப்படுகிறோம் என்கிற அந்தக் காரியம் நம்முடைய வாழ்க்கையில் உண்மைத்தன்மைக்கு அஸ்திபாரமாக இருக்கும். இந்த அறிவோடு கூட இருக்கும் பொழுது நாம் எதையும் செய்யக் கூடியவர்களாக, நம்முடைய வாழ்க்கையின் சோதனையின் வேளைகளில் சரியாக செயல்படுகிறவர்களாக இருப்போம். கிறிஸ்துவானவர் நமக்கு நெருக்கமாக இருக்கிறார் என்பதும் எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார் என்று உணர்ந்து வாழுகிற காரியம், நம்முடைய வாழ்க்கையில் நம்மை அனல் உள்ளவர்களாகவும், உண்மைத் தன்மையுள்ளவர்களாகவும் காத்துக்கொள்ளும்.

ஆகவே உண்மைத்தன்மை என்பது நம்முடைய வாழ்க்கையில் கிறிஸ்தவக் கடமைகளை நிறைவேற்றாமல் இருக்கும் பொழுதும், நமக்கு இருக்கிற ஆபத்தை உணராமல் இருக்கும் பொழுதும், நாம் யுத்தம் செய்ய விருப்பமற்றவர்களாய், நல்ல விசுவாசத்தின் போராட்டத்தைப் போராடாமல் இருக்கும் பொழுதும், நம்மில் உண்மைத்தன்மை இல்லாததைக் காண்பிக்கிறது. உண்மைத்தன்மை கர்த்தரிடத்திலிருந்து வருகிற அதிமுக்கியமான குணம் நம்முடைய வாழ்க்கையில் இது இல்லையென்றால் இருதயம் கடினமாகி முடிவில் நாம் மாய மாலத்திற்கு நம்மை ஒப்புக்கொடுகிறவர்களாய் போவோம். இவ்விதமான நம்முடைய வீழ்ச்சிக்குரிய காரியங்களைச் சிந்திக்கும்பொழுது நம்முடைய வாழ்க்கையில் இதைக்குறித்து தேவனிடத்தில் மனந்திரும்புதலோடும், மறுபடியுமாக அர்ப்பணிப்போடும், நம்முடைய வாழ்க்கையில் நேர்மைத்

தன்மையைக்குரிய காரியங்களை வாஞ்சிக்க வேண்டும். நாம் கர்த்தருக்கென்று வாழக்கூடிய சிலாக்கியத்தை பெறுவதைக்குறித்த நம்பிக்கை நமக்கு இருப்பதினால் நாம் நன்றி உள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

நம்முடைய வாழ்க்கையில் உண்மைத் தன்மையோடு இருப்பதற்கு என்ன தடையாக இருக்கிறது என்பதை ஆராய்ந்து பார்க்கவேண்டும். அதை நாம் எவ்விதமாக சரிபடுத்துவது என்பதைக் குறித்துச் சிந்திக்க வேண்டும். முதலாவதாக, அதற்காக நாம் ஜெபிக்கவேண்டும். அநேக காரியங்களுக்காக நாம் ஜெபிக்கிறோம், ஆனால் நாம் உண்மையுள்ளவர்களாக இருக்கவேண்டும் என்று நாம் ஜெபிக்கின்றோமா? நாம் உண்மைத்தன்மை கொண்டிருப்பதற்கான வாஞ்சையை எப்படி பலப்படுத்த முடியும்? நம்முடைய உண்மைத்தன்மை இல்லாததினுடைய பெலவீனத்தையும், அதினுடைய பரிதாபத்தையும் உணரும்பொழுது மாத்திரமே. நாம் இவ்விதமாக உண்மைத்தன்மை இல்லாத நிலையைக் குறித்து சிந்திக்கும்பொழுது, நம்முடைய இருதயத்தில் அதற்காக அதிகமாக ஜெபிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். தொடர்ச்சியாக நான் உண்மையுள்ளவனாக இருக்கிறேனா? நேர்மையுள்ளவனாக இருக்கிறேனா? என்னுடைய விசுவாசத்தில், ஆவிக்குரிய ஓட்டத்தில் உண்மையாகக் காணப்படுகிறேனா? அவ்விதமான சிந்தனைகள் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் உண்மையுள்ளவர்களாகக் காணப்படுவதற்கு நம்மை ஊக்குவிக்கிறவைகளாக இருக்கும்.

நாம் உண்மையுள்ளவர்களாக இருக்கும்படியான முக்கியமான காரியம் என்னவென்றால், ஒரு ஆத்துமாவை மீட்கும்படியாக, கிறிஸ்துவானவர் சிலுவையில் எவ்வளவு கிரயம் செலுத்தினார் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். நமக்காக அவர் எவ்வளவு விலையேறப்பெற்ற கிரயத்தை செலுத்தியுள்ளார் என்பதை நாம் சிந்திக்கவேண்டும். நாம் அரைமனதோடு, ஒரு உண்மையில்லாத, ஆவிக்குரிய நிலையில் மந்தமாக, சத்தியத்தை ஏற்க விருப்பமில்லாத நிலையில், ஆவிக்குரிய வாழ்வில்

தடுமாறுகிறவர்களாக இருக்கும்படியாகவா கிறிஸ்துவானவர் நமக்காக மரித்தார்? அவருடைய சாயலில் நாம் உருவாக்கப்பட விரும்புவதில்லையா?

நாம் உண்மைத்தன்மை என்கிற கச்சையைக் கட்டிக்கொள்ளும்பொழுது, நம்முடைய செயலில் தவறிப்போகும்பொழுது நம்முடைய மனசாட்சியில் பரிசுத்த ஆவியானவர் கொடுக்கும் உணர்த்துதலை விளங்கிக் கொண்டு, நம்மை சரிபடுத்தி செயல்பட முடியும். நம்முடைய வாழ்க்கையில் பாவ சிந்தனைகள், விருப்பங்கள் வரும்பொழுது, நம்முடைய மனநிலையில் ஆவிக்குரிய சரியான நிலையில் காணப்படாதபொழுது, நம்முடைய உதடுகளில் இருந்து பொய்கள் அல்லது தவறான வார்த்தைகள் வரும்பொழுது, நாம் மனசாட்சியின் குரலுக்குச் செவிகொடுக்க ஆயத்தமாக இருக்கிறோமா? நாம் உடனடியாக எழும்பி நின்று நம் இருதயத்தில் இருந்து தோன்றுகிற பாவத்தைக் கட்டுப்படுத்துகிறோமா? நம்முடைய மனசாட்சிக்கு செவிகொடுத்து கீழ்ப்படிவது, உண்மைத்தன்மையைக் கொண்ட கச்சையை அணிந்துகொள்ளுவதாக இருக்கிறது. ஆனால், மனசாட்சியின் சத்தத்திற்கு செவிகொடாமல் அதை உதறித் தள்ளிவிட்டு, ஒரு நொடிப்பொழுது நேரத்தில் செயல்பட்டாலும், நாம் உண்மைத்தன்மை என்கிற கச்சையை தூக்கியெறிந்து செயல்படுகிறவர்களாக இருக்கிறோம்.

நாம் இந்த உண்மைத்தன்மை என்கிற கச்சையை அணிந்து கொள்ளும்படியாக காணப்படும்படிக்கு குறிப்பிட்ட விதத்தில் ஜெபிக்கிறவர்களாக தீர்மானம் பண்ணவேண்டும். அதற்கு பதிலாக ஒரு தெளிவில்லாமல் மேலோட்டமாக வாழுகிற ஆவிக்குரிய வாழ்க்கையானது, நாம் உண்மைத் தன்மையற்றவர்கள் என்பதைக் காட்டுகிறது. உதாரணமாக நாம் ஜெபிக்கிற வேளையில், ஆண்டவரே என்னை மன்னியும் நான் மனந்திரும்புகிறேன் என்று மேலோட்டமாக ஜெபிப்பது போதாது. இது உண்மையான மனந்திரும்புதலாக இல்லாமல்,

ஒரு மதிகேடான மேலோட்டமான காரியமாக இருக்கக் கூடும். நாம் என்ன செய்தோம் என்பதை எண்ணிப்பார்த்து பாவத்தைக் குறித்து ஒரு விரிவான விளங்குதலோடு தேவனிடத்தில் மன்றாடி ஜெபிக்கவேண்டும். மன்னிப்பு கேட்டு ஜெபிக்க வேண்டும். நாம் அந்த பாவத்தின் பெயரை அறிக்கையிட்டு, அதைக்குறித்த பாரத்தை உணர்ந்து, அதனுடைய வெட்கத்தைக் குறித்து எண்ணிப்பார்த்து, அவைகளை அகற்றும்படியாக தீர்மானத்தோடு தேவனிடத்தில் உறுதியாக ஜெபிக்கவேண்டும். மேலோட்டமான, ஆழமில்லாத மனந்திரும்புதல் என்பது ஒரு போலியான மனந்திரும்புதலாகவும், உண்மைத் தன்மையற்றதாகவும் காணப்படுகிறது.

அதேவிதமாக நாம் ஜெபத்தில் மன்றாடுவதில் தெளிவான மக்களைக் குறித்த எண்ணமும், அவர்களுக்காக மன உருக்கத்தோடும் வாஞ்சையோடும் நாம் ஜெபிக்கவேண்டும். பொதுவான மனநிலையோடு ஜெபிப்பது என்பது சோம்பேறித்தனமாகவும், உண்மைத் தன்மையற்றதாகவும் காணப்படும். பிரசங்கிகள் மேலான ஒரு ஆவிக்குரிய நிலையில் இருப்பதைக் குறித்து இவ்விதமாக சொல்லுவதுண்டு. நான் முழங்கால் படியிட்டு தேவனை நோக்கி, ஆண்டவரே ஒவ்வொருவரையும் ஆசீர்வதியும் என்று ஜெபிப்பதைப் போலிருக்கிறது. ஆனால் பொதுவாக ஜெபிக்கிற வேளைகளில் குறிப்பிட்டு அதிகமாக ஜெபிக்க முடியாது. ஆனால் தனிப்பட்ட ஜெபங்களில் ஆண்டவரே உபத்திரபடுகிறவர்களை ஆசீர்வதியும் என்று ஜெபிப்பது மட்டும் போதாது, யார் என்பதைக் குறிப்பிட்டு அவர்களுக்காக நம்முடைய ஜெபங்களில் ஜெபிப்பது, நாம் உண்மைத்தன்மை என்கிற கச்சையை அணிந்து கொண்டிருப்பதின் உறுதியைப் பிரதிபலிக்கிறது. உண்மையுள்ளவர்களாக நாம் காணும்படிக்கு நாம் ஆவிக்குரிய காரியங்களை முதலாவதாக வைக்கக் கற்றுக்கொள்ளவேண்டும். முக்கியமாக நம்முடைய வேலைப்பளு அதிகமான மத்தியிலும் அதேவிதமாகக் காணப்படவேண்டும். நாம் வாழ்க்கையினுடைய ஒவ்வொரு பகுதியிலும் தனிப்பட்ட வாழ்விலும், குடும்ப

வாழ்விலும், செய்கிற பணிகளிலும், நம்முடைய ஆவிக்குரிய குறிக்கோளோடுகூடிய ஜெபம் என்பதைக் விட்டுவிடாதபடிக்கு அந்த உண்மை என்கிற கச்சையை கட்டிக்கொள்ளவேண்டும்.

உண்மைத்தன்மை என்பது அழகானதும், ஒரு நபரை அலங்கரிக்கக் கூடியதாகவும் இருக்கிறது. சாதாரண எளிய விசுவாசி முதற்கொண்டு மிகப்பெரிய ஞானி வரைக்கும் உண்மைத்தன்மையானது அவர்களுக்கு விசேஷித்த தன்மையைக் கொடுக்கிறது. முதிர்ந்த ஒரு விசுவாசியும் அதினால் உயர்த்தப்பட்டு ஆசீர்வதிக்கப்படுகிறார். அதேவிதமாக இளம் வாலிப பிள்ளைகளும் ஆசீர்வதிக்கப்படுவார்கள். இதைக் கவனிக்கும்படியாக மேலும் பார்க்கும்பொழுது, இரட்சிக்கப்படாத மக்களும், நம்முடைய வாழக்கையில் காணப்படுகிற உண்மைத்தன்மையை மதிப்பார்கள். சிறு பிள்ளைகளும் கூட உண்மைத்தன்மை மற்றும் உண்மைதன்மையற்ற நிலையை எளிதில் விளங்கிக் கொள்ளுவார்கள். நாம் உண்மையுள்ள மக்களாக இருப்போமானால், நம்முடைய ஞாயிறு பள்ளி சிறுவர் சிறுமியர் நம்மை மதிப்பார்கள். நம்முடைய பிள்ளைகளும் மற்றவர்களை மதிக்கக் கற்றுக்கொள்ளுவார்கள். எல்லாவற்றிற்கும் மேலாக இதின் மிகப்பெரிய ஆசீர்வாதம் என்னவென்றால், நம்மில் உண்மைத்தன்மை இருக்கும்பொழுது பரிசுத்த ஆவியானவர் நம்மில் வாசம்பண்ணி ஆசீர்வாதத்திற்குரிய வெளிச்சத்தைக் கொடுப்பார். பெருமை போன்ற உண்மையற்ற நிலைகள் ஆண்டவரைப் புறக்கணிப்பதாக இருக்கிறது.

உண்மைத்தன்மை இருப்பவர்களிடத்தில் நன்றியுணர்வுள்ள தன்மையும் காணப்படும். தேவன் நம்மில் செய்திருக்கிற எண்ணிலடங்காத நன்மைகளை நாம் நினைத்துப்பார்த்து, அவைகளுக்காக கர்த்தரை துதிக்கும்பொழுது உண்மைத்தன்மை அதிகமாய் உற்சாகப்படுத்தப்படும். உண்மைத்தன்மைக்கு மூலக்காரணமாக கர்த்தரை முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும் நேசிக்கும்பொழுது உண்மைத்தன்மை உள்ளவர்களாக இருப்போம்.

உண்மைத்தன்மைக்கு சகோதரனாக இருப்பது விசுவாசம். உண்மைத்தன்மைக்கு சகோதரியாக இருப்பது ஜாக்கிரதை. நாம் விசுவாசத்தோடு ஜாக்கிரதையாக இருக்கும்பொழுது உண்மையுள்ளவர்களாக காணப்படுவோம்.

ஆகவே நாம், தேவனே, நான் என்னுடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் உண்மையுள்ளவனாக காணப்படும்படியாக, என்னுடைய குடும்பத்தில், என்னுடைய நடத்தைகளில் நீர் செய்தருளும் என்று ஜெபிக்க வேண்டும். உண்மை மற்றும் நேர்மை என்கிற கச்சையை அணிந்துகொள். உண்மைத்தன்மை எவ்விதமான பாதுகாப்பைத் தருகிறது? எவ்விதமான பெலன் இதில் அடங்கிருக்கிறது? மற்றவர்களுக்கு எவ்விதமான உண்மை நிலையை வைக்கிறதாக இருக்கிறது?

உண்மைத்தன்மை நம்முடைய வாழ்க்கையில் ஆண்டவரை மகிழ்விக்கவும், பிசாசைத் தோற்கடிக்கவும் தீர்மானம் செய்ய நம்மை வழிநடத்துகிறது. அது நாம் எதைச் செய்தாலும் உண்மையுள்ளவர்களாக நேர்மையுள்ளவர்களாக இருக்கச் செய்கிறது. அது நம்முடைய வாழ்க்கையில் ஒரு ஆபரணத்தைப்போல நம்முடைய ஆள்தத்துவத்திற்கு அலங்கரிப்பாக இருக்கிறது. உண்மைத்தன்மை என்பது சபையை இந்த உலகத்தில் உள்ள இருளின் ஆளுகையிலிருந்து பாதுகாத்துக் கொள்ளுகிறதாகவும், சத்தியத்தை சபையில் பாதுகாத்துக் கொள்ள கருத்தோடும் ஜாக்கிரதையோடும் இருக்கச் செய்கிறது. உண்மைத்தன்மை என்பது நாம் கர்த்தருடைய சுவிசேஷத்தை எங்கும் பிரசங்கிக்கும்படியாக சொல்லப்பட்ட கட்டளைக்குக் கீழ்ப்படிய உதவி செய்கிறது. எபேசியர் **6:14** -ல் "சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும்" என்று சொல்லப்படுகிறது. இந்த வசனத்தில் சொல்லப்பட்ட வண்ணமாக நாம் தாழ்மையாய், மெய்யாய் ஆண்டவருடைய விலையேறப்பெற்ற அழகை ஜொலிக்கிறவர்களாக காணப்படவேண்டும்.

# அத்தியாயம் 11

# தாழ்மை ஆசீர்வாதத்திற்கு அதிக முக்கியமானது

*"வெகு மனத்தாழ்மையோடு நான் கர்த்தரை சேவித்தேன் (அப் 20:19)".*

*பவுல் மெலித்தா தீவில் எபேசு சபையின் மூப்பர்களை சந்தித்துப் பிரிவு உபசாரம் பெறும் வேளையில் இந்த வார்த்தைகளைப் பேசினார். அவர் அவர்களுடைய சபையை நிறுவினவரும், அந்த சபையின் போதகராக மூன்று ஆண்டுகள் இருந்ததினாலும் பவுலை நன்கு அறிந்திருந்தார்கள். பவுல் இயேசு கிறிஸ்துவின் பணிக்கென்று அர்பணித்து செயல்பட்டதையும், அவர்களுடைய ஆவிக்குரிய நலனை விரும்பினவர் என்கிறபடியால் அவர்கள் அவரை அதிகம் நேசித்தார்கள். பவுல் தன்னைக் குறித்துப் பேசும்பொழுது, கர்த்தரை சேவித்தேன் என்ற கிரேக்க பதத்தில் தன்னை ஆண்டவருக்கு பிறவி அடிமையாக ஒப்புக்கொடுத்து தன்னுடைய எஜமானன் சொல் கேட்டு அடிமையாக வாழ்வதைச் சித்தரிக்கும் விதமாக பேசுகிறார். ஆனால் எல்லாவித மனத்தாழ்மையோடு கூடிய மனதோடு கர்த்தரை சேவித்தேன் என்று சொல்லுகிற பவுலின் வார்த்தையைப் பார்க்க வேண்டும். அப்போஸ்தலர்களுடைய தாழ்மையும், ஒரு அடிமையைப் போல ஆண்டவருக்குப் பணி செய்ததும் நமக்கு ஒரு முன்மாதிரியாகவும் சவாலாகவும் இருக்கிறது.*

*பவுல் அதிகமாக தளர்வுற்ற நிலையில் வயதான மனிதனாக இருந்தாலும், ஒரு நாளும் தன்னுடைய பணியில் அசதியாகவோ அல்லது நேரத்தை வீணாய்க் கழித்துப் பணியை*

செய்யாமல் இருந்ததோ கிடையாது. பவுல் ஒருபோதும் தான் கர்த்தருடைய பணியைச் செய்வதிலிருந்து ஓய்வு பெற்றோ அல்லது பின் தங்கிய நிலையிலோ காணப்படவில்லை. அதற்குப் பதிலாக தன்னுடைய கடைசி மணி நேரம் மட்டும் கர்த்தருடைய பணியை அவர் செய்தார். அவருடைய இந்தத் தாழ்மையிலிருந்து முக்கியமாக இப்பொழுது நாம் கற்றுக்கொள்ள பிரயாசப்படுவோமாக.

தாழ்மையான மனதோடு என்பது ஒரு அருமையான வார்த்தை. நாம் இந்த நாட்களில் சுவிஷேசப் பணியாளர்கள் மத்தியில் இவற்றை அதிகமாக பார்க்க முடிவதில்லை. மக்கள் மத்தியில் அதிகாரத்தோடும், தாங்கள் பெற்றிருக்கிற தாலந்துகளைக் குறித்த பெருமிதத்தோடும், ஆராதிக்கிற புதிய வழிமுறைகளையும், சபை அமைப்பின் காரியங்களில் புதிய வழிகளை ஏற்படுத்தியும் செயல்படுகிறதைப் பொதுவாக ஊழியர்கள் மத்தியில் பார்க்கிறோம். அதிகமான சுய நம்பிக்கையும், சுயமாக தங்களைச் சார்ந்து கொள்ளுதலும் அதிகமாக இருக்கின்றது. ஆனால் பவுலின் குறிக்கோளோ எல்லா மனத்தாழ்மையோடு என்பதே.

பவுல் சரீரப் பிரகாராமான ஒரு தாழ்ந்த நிலையிலே இருந்ததை நாம் விளங்கிக் கொள்ள முடிகிறது. அவர் வயதானவரும், வாலிபர்களைப் போல பெலசாலியாக பெலமும், வல்லமையும் பெற்றவராக இல்லை. மேலும் அவர் வியாதிப்பட்டவராக இருந்த நிலையில் தன்னைப்பற்றிச் சொல்லுகிறார். அவர் தன்னுடைய சரீர பெலத்தின் எல்லைக்குட்பட்டவராய், தன்னைக் குறித்து அவர் தாழ்மையானவராய் எண்ணினதை நாம் பார்க்கிறோம். ஆனால் பவுல் எல்லா மனத்தாழ்மையோடும் இருந்தார். அதாவது மனதிலும் தாழ்மை, மேலும் தன்னுடைய அறிவு சார்ந்த தாழ்மையைக் கொண்டிருந்தவராகவே இருந்தார்.

பவுல் தான் எழுதின கடிதங்கள் மூலம் நாம் பார்க்கும்பொழுது ஒரு பெரிய ஞானியாக இருந்தார். அவர்

எழுதின கடிதங்கள் தேவ ஆவியானவரால் ஏவப்பட்டு எழுதினவைகள். மனிதனுடைய ஞானத்தை விட, தேவனுடைய ஞானத்தை வெளிப்படுத்துகின்றவைகளாக இருந்தது. ஆனால் தேவ ஆவியினால் அது எழுதப்பட்டிருந்தாலும், எழுதின நபரின் பல தன்மைகளை வெளிப்படுத்தும் விதமாக அவைகள் எழுதப்பட்டிருக்கின்றன. ஆகவே இவைகளைப் பார்க்கும்பொழுது பவுல் ஒரு ஞானியாக இருந்தார் என்பதை அறிகிறோம். ஆனாலும் அவர் அறிவு சார்ந்த உன்னதமான ஞானத்தைக் கொண்டிருந்தவராக இருந்தார். நாம் ரோமருக்கு எழுதின நிரூபத்தை வாசித்துப் பார்த்தோமானால், அதில் ஒரு தலைப்பின்கீழ் சொல்லப்படும்படியான காரண காரியங்கள் பவுலினுடைய உன்னதமான ஞானத்தை வெளிப்படுத்துகின்றதாக இருக்கிறது. பவுல் எப்பொழுதும் தேவனுடைய புத்தகத்தை (வேதத்தை) சார்ந்தவராகவே செயல்பட்டார் என்பதை நாம் பார்க்கின்றோம். பவுல் ஒருபோதும் தன்னுடைய ஞானம் என்கிற காரியத்தைச் சார்ந்து போதிக்கவே இல்லை. தேவனுடைய சத்தியத்தைச் சார்ந்து போதித்தார்.

பவுல் பரிசுத்த ஆவியானவரை முழுமையாக தேவனுடைய வல்லமைக்காக சார்ந்து இருந்தவராகவே காணப்பட்டார். மற்றவர்களை போல அவர் ஒருபோதும் தன்னுடைய ஞானத்தை, இயற்கை தாலந்துகளை சார்ந்து இருக்கவே இல்லை. பவுல் தன்னுடைய அசாதாரணமான ஒரு தோற்றத்தைக் கொண்டவராக இருக்கவில்லை என்று சொல்லத்தக்கதாக எப்பொழுதும் தன்னைத் தாழ்மையில் காத்துக்கொண்டார். அவர் ஆவிக்குரிய காரியங்களுக்காகத் தேவனை மாத்திரமே சார்ந்ததினால் தன்னை மேன்மைப்படுத்திக்கொள்ளவே இல்லை. ஒருபோதும் பவுல் பிரசங்கிக்கும் பொழுது தன்னை உயர்வாய்க் காட்டக்கூடிய நிலையில் அங்கும் இங்குமாக சுற்றி நடந்து, தன்னை மேன்மைப் படுத்திக்கொள்ளும் விதத்தில் பிரசங்கிக்கின்றவராக இல்லை. அதற்குப்பதிலாக பிரசங்கத்தில் மென்மையான தன்மையைக் கையாண்டதைக் குறித்து குற்றம் சாற்றப்பட்டதுமுண்டு.

பவுல் ஒருபோதும் அதையும், இதையுமாக கேட்டதில்லை. வேதத்தில் நாம் ஜெபிக்கும் படியாக அநேக வாக்குத்தத்தங்கள் இருந்தாலும், பவுலைப் போல பயபக்தியோடும், தாழ்மையோடும் ஜெபிக்கிறவர்களாய் காணப்பட வேண்டும்.

பவுல் தன்னைத் தாங்கினவர்கள் இடத்தில் எப்போதும் தாழ்மையான விதங்களில் உதவியை தேடுகிறவராகவே இருந்தார். யாரும் குறைவான ஒரு பிரசங்கியின் நிலையில் பவுலைப் போல ஊழியம் செய்யவில்லை. அவர் ஒருபோதும் ஒரு அப்போஸ்தலனாக, எனக்கு இந்த அதிகாரம் அந்த அதிகாரம் என்று சொல்லி தனக்கு மக்கள் அதிகமாக செய்ய வேண்டும் என்று கேட்கவே இல்லை. மக்கள் அவரை கைவிட்ட நிலையிலும், அவருக்கு உதவிசெய்யத் தவறிப்போன நிலையிலும் கர்த்தருடைய பணியை செய்வதில் அவர் குறைந்து போகவுமில்லை, கர்த்தருக்கு முற்றிலுமாகத் தன்னை ஒப்புக்கொடுத்தார். அது பரிசுத்தத்தின் தாழ்மையாக இருக்கிறது.

பவுல் மக்கள் மிக்குறைந்தவர்களாக இருந்தாலும், அவர்களுக்குப் பணி செய்வதில் எப்பொழுதும் ஆயத்தமாகவே இருந்தார். அவர் ஒருபோதும் நான் அநேக சபைகளை நிறுவினவன், மிக அதிகமான பொறுப்புகள் உள்ளவன், ஆயிரம் பேருக்கு மேலாகக் கூட்டிச் சேர்த்தால் தான் பிரசிங்கிப்பேன் என்று சொல்லவே இல்லை.

அதற்குப்பதிலாக எபேசு சபையில் வீடுவீடாகச் சென்று ஆத்தும ஆதாயத்திற்காக உழைக்கின்றதைப் பார்க்கின்றோம். பவுல் சோதனைகளை எவ்விதம் தாழ்மையாக ஏற்றுக்கொண்டார் என்பதை அப்போஸ்தலர் 20:22 முதல் 24 -வது வசனம் முடிய வாசிக்கின்றோம்.

நாம் பவுலைப் போன்று தாழ்மையான மனதோடு சோதனைகளையும், தேவைகளையும் ஏற்றுக்கொள்ளுவோமானால் எவ்வளவு நலமாக

இருக்கும். ஆனால் பெருமை எவ்வளவு சீக்கிரம் நம்மில் நுழைந்துவிடுகின்றது. பெருமை ஒரு பயங்கரமான காரியம். அது பல வித தோற்றங்களில் தன்னை வெளிப்படுத்துகின்றதாக இருக்கின்றது.

ஒரு சகோதரனோ சகோதரியோ தன்னில் தவறு இருக்கின்றது என்பதை ஒத்துக்கொள்ளாத பொழுது அல்லது மன்னிப்பு கேட்காத பொழுது, அவர்களுக்குள்ளாக ஒரு ஆழமான பெருமை இருக்கிறது. ஒரு காலத்தில் மனந்திரும்பினவர்கள், கர்த்தருக்கு முன்பாகத் தங்களை தாழ்த்தின கிறிஸ்துவர்களும் கூட சில சமயங்களில் மனந்திரும்பவோ அல்லது தங்களுடைய பாவங்களைக் குறித்து வருத்தப்படவோ கூடாதவர்களாக இருக்கக்கூடும். அவர்கள் குறைவுள்ளவர்கள் என்பதைக் கர்த்தருக்கு முன்பாக உணருகிற தன்மையை இழக்கலாம். உலகமானது வாழ்க்கையில் வெற்றி பெற சுய நம்பிக்கை அவசியமாக எண்ணுகிறது. அவ்விதமான வழிமுறையை நாம் பெற்றுக்கொள்வதில்லை. அதற்குப் பதிலாக நம்முடைய முடியாமையைக் குறித்ததான ஒரு உணர்வு நமக்குள் இருக்க வேண்டும். நாம் சுயத்தைச் சார்ந்து கொள்ளுவதையும், சுயத்திற்காக முக்கியத்துவத்தை கொடுப்பதும் வெறுப்போமாக. ஒரு ஆத்துமாவில் பெருமை உடையும் பொழுது மனந்திரும்புதல் வெளிப்படுகிறது.

தங்களை மற்றவர்கள் கவனிக்க வேண்டும் என்று புகழ்ச்சியை விரும்புவதும், மதிப்பை விரும்புவதும், தங்களை உயர்வாக மற்றவர்கள் எண்ணவேண்டும் என்று எண்ணக்கூடியவர்களில் ஒரு விதமான பெருமை இருக்கின்றது. இது நம்முடைய ஆத்துமாவில் நுழைந்திருக்கிறதா? இவ்விதமான பெருமை மெதுவாக உள்ளே நுழைந்து தன்னுடைய குணத்தை வெளிப்படுத்தும். ஜாக்கிரதையோடு சுய பரிசோதனை செய்து, அதைக் கண்டு அதை வெறுப்பது நம்முடைய கடமையாகும். பெருமையாக இருக்கக்கூடியவர்கள் அதிக விலையேறப்பெற்ற பொருள்களை விரும்புவதும் தங்களைத்

தனித்துவமாகக் காட்டிக்கொள்ளுவதும், மற்றவர்களை விட வித்தியாசமானவர்கள் என்று காட்டிக்கொள்ளுவதிலும் அதிக ஆர்வமுள்ளவர்களாக இருப்பார்கள். ஏனென்று கேட்டால் இவ்விதமான குணமுள்ளவர்கள் தங்களை விசேஷித்தவர்கள் என்றும், மற்றவர்களை விட மேலானவர்கள் என்றும், உயர்வானவர்கள் என்றும் வெளிப்படுத்த விரும்புகிறவர்களாக இருப்பார்கள். இவர்கள் தங்களைத் தாங்களே விளம்பரப்படுத்திக் கொள்ளக் கூடியவர்கள். இவ்விதமான குணங்கள், பயங்கரமான வீழ்ச்சிக்குக் கொண்டு செல்லுகிறதாக இருக்கிறது. இன்னொரு விதமான பெருமை என்னவென்றால், தங்களை மற்றவர்கள் வழி நடத்துவதையும், அவர்கள் ஆலோசனை கொடுப்பதையும் ஏற்றுக்கொள்ளக் கூடாத மனநிலை. இது எப்பொழுதும் சுய வழியைக் கொண்டதாக, தான் செயல்படுவது சரி என்றும், நான் விரும்புகிறதை செய்வேன் என்றும் சொல்லுகிறதாக இருக்கிறது. இது கிறிஸ்துவர்களுக்கும் வரக்கூடும்.

இது பொதுவாக இரட்சிக்கப்படாததிற்கு முன்பாக ஒரு நபரில் காணப்படக் கூடிய குணம். கிறிஸ்தவர்களில் பிசாசானவன் மறுபடியுமாக அதை உயிர்ப்பிக்க முயற்சி செய்து, பெருமையான சுய வழியையும், மேட்டிமையான தனித்தன்மையையும், தாழ்மைக்குரிய காரியத்தை விரும்பாத நிலைக்குள்ளும் கொண்டு செல்லலாம்.

நாம் இரட்சிக்கப்படும் பொழுது கர்த்தர் நமக்குத் தாழ்மையைக் கொடுக்கிறார். இது இரட்சிப்பினுடைய ஒரு நிச்சயமான அடையாளமாக இருக்கின்றது. பெருமையானது நீக்கப்பட்டு விலையேறப்பெற்ற தாழ்மை அங்கு வருகிறது. கர்த்தரைச் சார்ந்துகொள்ளுவதும், கற்றுக்கொள்ள விரும்புவதும், திருத்திக்கொள்ள விரும்புவதுமான குணங்கள் அங்கு காணப்படும். ஆனால் இவ்விதமான தாழ்மைக்கு அடிக்கடி நடப்பது என்ன? அது எப்படி இழக்கப்பட்டுப் போகிறது?

சில சமயங்களில் நாம் பெற்றிருக்கிற தாலந்துகளைக் குறித்து நாம் பெருமைப்படும் பொழுது நாம் தாழ்மையை

இழந்துவிடுகிறோம். கர்த்தர் கொடுத்திருக்கிற தாலந்துகளை நாம் தாழ்மையாக ஏற்றுக்கொள்ளுவதில்லை. நாம் அதைக் குறித்து மேன்மை பாராட்டக்கூடியவர்களாகவோ, அல்லது மற்றவர்களுக்கு மேலாகத் தன்னை உயர்த்துவதற்கு கருவியாக உபயோகப்படுத்தவோ கூடாது. நாம் நினைவில் கொள்ள வேண்டிய காரியம் என்னவென்றால், தேவன் இந்த தாலந்துகளை சபையில் பகிர்ந்து அளித்திருக்கிறார். ஒரு நபர் ஒரு சிறிய பகுதியை பெற்றவராக இருக்கின்றார். மற்ற விசுவாசிகள் வித்தியாசமான வேறு தாலந்துகளைப் பெற்று இருக்கின்றார்கள். நாம் ஒருவருக்கொருவர் தேவையுள்ளவர்களாகவும், வித்தியாசமான பல தாலந்துகளை ஒவ்வொரு விசுவாசியும் பெற்று இருப்பதினாலும் அது சபையின் பணிக்கென்று பிரோயஜனமாகக் காணப்படும். தேவன் இதில் சரியான விதத்தில் தாலந்துகளைப் பகிர்ந்து அளித்து செயல்படுகிறார். எந்தவொரு விசுவாசியும் தன்னை ஒரு விஷேசித்தவனாகவோ, அல்லது மற்றவர்களை காட்டிலும் முக்கியமானவனாகவோ எண்ணத்தக்கதாக சாத்தான் வஞ்சிக்க இடம் கொடுக்கக்கூடாது.

நாம் பெற்றிருக்கிற தாலந்துகள் மூலம் நாம் பெருமை அடையும்பொழுது எவ்விதம் செயல்படுவது என்று சில ஆலோசனைகள் இங்கு சொல்லப்படுகிறது. முதலாவது, ஒவ்வொரு நாளும் கொஞ்சம் நேரமாவது அல்லது அடிக்கடி உன்னுடைய பலவீனத்தை குறித்து, உன்னுடைய குற்றங்களைக் குறித்து எண்ணிக்கொள். நம்மைக் குறித்து அது மேன்மை பாராட்டாத படிக்கு அது நமக்கு உதவி செய்யும். தேவன் கொடுத்திருக்கிற தாலந்தைக் கொண்டு நீ இன்னும் எவ்வளவு அதிகமாக அதை உபயோகப்படுத்திருக்கலாம் என்பதையும், இன்னுமாக அவ்விதம் செய்யவேண்டும் என்பதையும் குறித்தும் எண்ணிப்பார். உன்னுடைய காலங்களில் கர்த்தர், உன்னுடைய தகுதிக்கு மேலாக உபயோகப்படுத்தும்படி எவ்வளவு கிருபைகளை கொடுத்திருக்கிறார் என்பதையும், அதற்கு நீ நன்றியுள்ள நபராக இருக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து

நீ வெட்கப்படுகிற ஒரு நபராக காணப்படுவாய். உனக்கு கொடுத்திருக்கிற தாலந்துகளுக்கு ஏற்ற வண்ணம், உன்னுடைய வாழ்க்கையில் நீ செயல்படாததைக் குறித்தும், கர்த்தர் கிருபையாக அந்த தாலந்துகளை உன்னிடத்திலிருந்து எடுத்துப் போடாததைக் குறித்தும் நீ ஆச்சரியப்படக் கூடும். இவ்விதமாக நாம் நம்மைத் தாழ்மையுள்ளவர்களாகக் காத்துக்கொள்ளுவது மிகப்பெரிய சவாலாகவே இருகின்றது. தேவனுடைய ஆசீர்வாதம் இல்லாதபடிக்கு நாம் உபயோகம் உள்ளவர்களாக இருக்க முடியாது என்பதை நினைவுகூறுவோமாக. கர்த்தர் பெருமையை வெறுக்கிறார். தேவன் நம்மை அங்கீகரிக்கவில்லை என்றால் நாம் பெற்றிருக்கிற தாலந்துகளினால் என்ன பிரயோஜனம்.

பரிசுத்த பவுல் எவ்வளவு கஷ்டங்கள், பாடுகளின் ஊடாகக் கடந்து போனாலும், ஏன் தேவனால் ஆசீர்வதிக்கப்பட்டார்? மனத்தாழ்மையை அவர் விரும்பினதினால் தான். அவர் வைராக்கியமாகத் தாழ்மையைத் தேடினார். நாம் நல்ல அதிகமான தாலந்துகளைக் கொண்டிருந்தும், தேவனால் அதிகமாக உபயோக்கப்படுத்தப்படாத, ஆசீர்வாதம் அற்ற மக்களைப் பார்க்கும்பொழுது அவர்கள் தாழ்மையை இழந்துபோனதின் நிமித்தமாகவே அவர்களுக்கு இவ்விதம் நேரிட்டது என்பதை விளங்கிக்கொள்ள முடியும்.

சிலசமயங்களில் தேவன் நமக்குத் தாழ்மையைக் கற்பிக்கும் படிக்கும், நம்முடைய வாழ்க்கையில் அதிகமான தாலந்து இல்லாத நபர்கள் நமக்கு மேலாக உபயோகப்படுத்தும்படியாக கர்த்தர் அனுமதிக்கிறார். வழக்கமாக தேவன் செயல்படும்படியான விதமாக பெருமைப்படுகின்றவர்களை தாழ்த்தும் விதமாக கர்த்தர் அவ்விதம் செய்கிறார். அதிகமான தாலந்துகளை பெற்றவர்களைக் கர்த்தர் அந்த இடத்தில் முட்டாள்களாக ஆக்குகின்றார். நாம் ஊழியங்களில் அதிகமான தாலந்துகளை பெற்றிறாதவர்களையும் கர்த்தர்

உபயோகப்படுத்தும் பொழுது, எவ்விதம்? ஏன்? தேவன் அவர்களை அவருடைய பணியில், ஊழியங்களில் இவ்வளவு வெற்றியைக் கொடுத்து உபயோகப்படுத்துகிறார் என்று கேட்கக்கூடும். சில சமயங்களில் நாம் தாலந்துகள் திறமைகளில் குறைவுள்ளவர்களாக இருக்கும் பொழுதும் பெருமையடைய முடியும். நாம் மற்றவர்களைக் குறித்துப் பொறாமைப்படும் பொழுது, தேவன் தாலந்துகளை தம்முடைய மக்களுக்கு பகிர்ந்தளித்திருக்கிற காரியத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கும் பொழுது, நாம் இவ்விதமாக பொறாமை உள்ளவர்களாய் மாறும் பொழுது, பெருமையுடைவர்களாய் காணப்படுகிறோம். இது அநேகரிடத்தில் இருக்கிற பாவமாக இருக்கிறது. பிசாசு தேவனைக் குறித்து அதிக பொறாமை கொண்டவனாக, தேவனை தேவனாக விசுவாசிக்க அவன் மறுத்ததினால், பெருமையடைந்து விழுந்து போனான். அதாவது பிசாசானவன் தேவனையும் கூடத் தன்னைப் போல ஒரு தூதனாக எண்ணி, அவரோடு கூடப் போட்டி போட ஆரம்பித்தான். ஆகவே சாத்தான் தேவனை தேவனாக உணராததினால் இவ்விதமான வீழ்ச்சிக்குரிய வழியில் செயல்பட்டான். அவன் தேவனுக்கு எதிராக யுத்தம் செய்கிறவனாகவும் அவருடைய பணியைச் சிதறடித்து நாசமாக்கி, தேவனுக்கு மேலாக தன்னை உயர்த்தும்படியாகவும் செயல்பட்டான்.

இதுவே ஏசாயா **14:12-17** உள்ள வசனங்களில் நாம் பார்க்கிறோம். சாத்தானுடைய பயங்கரமான இந்த பாவத்திற்குக் காரணம் அவனுடைய பெருமைதான். நம்முடைய வாழ்கையிலும் இவ்விதம் பொறமைப்பட்டு மற்றவர்களை அலட்சியப்படுத்தவோ, நாம் பெருமையடையவோ வாய்ப்புண்டு. நம்முடைய பெருமை, கசப்பான உணர்வுகளோடு போட்டிப் போட்டு நம்மை உயர்த்திக்கொள்கிற மனப்பான்மை வெளிப்படக்கூடும். மனந்திரும்புதலும், தாழ்மையையும் பெற்றுகொள்கிறதின் மூலமாய் மாத்திரமே தேவன் நமக்கென்று கொண்டிருக்கிற பணியை நாம் அறிந்து செயல்பட முடியும்.

தேவன் உனக்கு வெற்றியை கொடுப்பாரனால், நீ பெருமையடைந்து உன்னைத்தானே புகழ்ந்து கொள்ளாதே. உனக்கு இவ்விதமான உயர்வையும் பெருக்கத்தையும் கொடுத்ததற்கு தேவனுக்கு முதலாவதாகவும், உன்னோடு கூட இருக்கின்ற மற்றவர்களுக்காகவும், உனக்காக ஜெபிக்கிற விசுவாசிகளுக்காகவும், நீ எப்பொழுதும் நன்றி உணர்வைக் கொண்டிருப்பது அவசியம். பெருமைக்குப் பயப்படுங்கள். அது உங்களுடைய அன்பை நசுக்கிவிடும். உங்களுடைய சிந்தையைக் கெடுத்துவிடும். உங்களுடைய வாழ்க்கையை அழித்துவிடும். சில கிறிஸ்தவர்கள் தாங்கள் அறிந்திருப்பதைக் குறித்து அதிகப் பெருமைப்படுவதுண்டு. இதற்கு சரியான பரிகாரம் நாம் எவ்வளவு அறியாமல் இருக்கிறோம் என்பதை எண்ணிப்பார்ப்பது. சில மக்கள் நான் நீண்ட காலத்துக்கு முன்பாகவே இரட்சிக்கப்பட்டேன் என்று சொல்லி அதில் பெருமை பாரட்டுகிறதுண்டு. அதற்கு பதிலாக நீ இவ்வளவு காலத்தில் என்ன செய்திருக்கிறாய், ஆண்டவருக்கு எப்படி கணக்குக் கொடுப்பாய் என்பதை சிந்தித்துப் பார். இது உன்னை அதிகம் தாழ்த்துவதற்கும், தேவனுடைய கிருபைக்காக நன்றியுள்ள உணர்வோடும், உன்னுடைய பெருமையை அகற்றிப்போடவும் உனக்கு உதவி செய்யும். ஒருவேளை உன்னுடைய வாழ்க்கையில் நீ இருக்கிற ஸ்தானத்தில் அல்லது நீ பெற்றிருக்கிற சொத்து, பொருள்கள் மூலமாக அல்லது நல்ல உடல் ஆரோக்கியம், இவைகளை குறித்தும் பெருமை அடையக்கூடும்.

அப்போஸ்தலர் **20:19** -ல் பவுல் கர்த்தருக்கு ஊழியம் செய்வதைக் குறித்துப் பேசுகிறார். எவ்விதமான ஒரு கருத்து இங்கு சொல்லப்படிருக்கிறதை நாம் பார்க்கிறோம். ஊழியம் செய்வது என்று சொல்லும் பொழுது, அது பிறவி அடிமையைக் குறிக்கிறதாய் இருக்கிறது. பவுல் இயேசு கிறிஸ்துவின் பிறவி அடிமையாக தன்னை உட்படுத்திக்கொண்டார்.இது தாழ்மையைக் குறித்து அதிகமாய் பேசுவது மட்டுமல்லாமல், தாழ்மையின் அடையாளைங்களையும் வெளிப்படுத்துகிறதாய்

இருக்கிறது. ஒரு பிறவி அடிமை தன்னுடைய எஜமானின் பணிக்கென்று தன்னை அர்ப்பணித்தவனாய் இருக்கிறான். அவன் தன்னுடைய எஜமானின் ஒவ்வொரு தேவையையும் நோக்கிப் பார்க்கிறவனாகவும், அவருடைய ஒவ்வொரு கட்டளைக்கும் கீழ்ப்படிகிறவனாகவும், அனுப்பப்படுகிற எந்த இடத்திற்கும் செல்கிறவனாகவும் இருப்பான். தாழ்மை என்று சொன்னால், பவுலில் பார்க்கிறவண்ணமாக தேவனுடைய வார்த்தையின்படி எப்பொழுதும் பணி செய்கிறவனாக காணப்படுகிறான். தாழ்மை தன்னுடைய எஜமானை எப்பொழுதும் நோக்கிப் பார்த்து, அவருக்கு திருப்தியானதைச் செய்கிறதே கீழ்ப்படிதலாய் இருக்கும். பிரசங்கிகளும் கூட சில சமயங்களில் தேவனைப் பார்ப்பதற்குப் பதிலாக மக்களைப் பார்ப்பதுண்டு. அவர்கள் அநேக மக்களுக்குப் பிரியமானதைப் பிரசங்கிக்க பார்க்கிறவர்களாய் காணப்படுகிறார்கள். தனக்கு நல்ல புகழை, இது கொண்டு வரும் என்று சிலர் எண்ணுவதுண்டு. பவுல் தான் செய்ய வேண்டிய வழிமுறைக்காவும் தான் அங்கீகரிக்கபடும்படியாகவும் தேவனை மாத்திரம் நோக்கி பார்க்கிறவராய் இருந்தார். அவர் ஒரு போதும் மனிதர்களுடைய விருப்பத்திற்கு ஏற்றவண்ணமாக தன்னுடைய போதனையை மாற்றிக்கொள்ளவே இல்லை.

ஒரு கிறிஸ்துவின் பிறவி அடிமை எப்பொழுதும் தன்னுடைய நடக்கைகளைக் குறித்து ஆராய்ந்து பார்க்கிறவனாகவும், தன்னை ஒவ்வொரு நாளும் தாழ்மைப்படுத்தி ஆராய்ந்து கிறிஸ்துவுக்காக நான் என்ன செய்திருக்கிறேன் என்று ஆராய்ந்திருப்பான். ஆண்டவரை நான் ஏதாகிலும் கோபப்படுத்தியிருக்கிறேனா? நான் செய்ய வேண்டியவைகளைச் செய்யாமல் போன பாவங்கள் என்ன? என்னுடைய பணிகளை நான் இன்னும் சிறக்கச் செய்ய, கர்த்தரின் உதவியை நாடுவான். பெருமை தன்னுடைய காரியங்களைக் குறித்து மறுபடியும் ஆராய்ந்து பார்ப்பதற்கு விரும்புவதில்லை. ஆனால் தாழ்மை எப்பொழுதும் அவ்விதமாய்ச் செய்யும். ஒரு இராஜாவின் பிறவி அடிமை எப்பொழுதும் தனக்கு கொடுக்கபட்டிருக்கிற

சிலாக்கியங்களை அறிந்தவனாயிருக்கிறான். நாமும் இராஜாதி இராஜாவும் தேவாதி தேவனின் பிறவி அடிமைகளாக அவ்விதம் நமக்கு கொடுக்கபட்டிருக்கிற சிலாக்கியங்களை எண்ணிப் பார்க்க வேண்டியதாயிருக்கிறது. தேவன் ஏன் என்னுடைய அவிசுவாச, பாவப்பட்ட பெருமை இருதயத்தை அவர் பக்கமாகக் கொண்டுவர செயல்பட்டார்? நானே தேவனிடத்தில் திரும்ப ஒருபோதும் எண்ணியிருக்கவே மாட்டேன். தாழ்மை எப்பொழுதும் இவைகளை நினைவுக்கூர்ந்து பொறுமையோடும், தேவனுடைய இரக்கத்தைச் சார்ந்து போகிறதாயுமிருக்கிறது. ஹோல்னி என்ற இடத்திலிருந்த நியூட்டன் குப் மியூசியத்தில் ஜான் நியூட்டன் படிப்பு அறையின் மேல் இவ்விதமான வார்த்தை எழுதப்பட்டிருந்தது. "நீ எகிப்தில் அடிமையாய் இருந்தாய் என்பதை நினைவு கொள்". அவர் ஒரு போதும் தேவன் தன்னை எந்த நிலையிலிருந்து தன்னை உயர்த்தினார் என்பதை மறக்கவில்லை. அது மாத்திரம் அல்லாமல் அவர் தன்னை அர்ப்பணிக்கவும் அது உதவியாய் இருந்தது.

ஒரு பிறவி அடிமையானவன் தான் தேவனுக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவன் என்பதை எப்பொழுதும் உணர்த்து வாழ்பவனாகவே காணப்படுகிறான். நாம் கடினமான சூழ்நிலையில் இருக்கும் பொழுதும், கோபப்படும்படியாகவோ அல்லது கசப்பான உணர்வுக்குள் போகக் கூடியதாகவோ, சுயப்பரிதாபமான சூழ்நிலைக்குள் போகச் சோதிக்கப்படும் பொழுது, நான் ஆண்டவருடைய பிறவி அடிமை, என்னுடைய ஒவ்வொரு செயலுக்கும் நான் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவனாய் இருக்கிறேன். ஆகவே என்னுடைய வார்த்தைகள், நடத்தைகள் மூலமாக தேவனை நான் ஒருக்காலும் துக்கப்படுத்தவோ அல்லது அவருக்குப் பிரியமில்லாமல் வாழவோமாட்டேன் என்று உறுதியாய் நிற்பதே தாழ்மை.

ஒரு பிறவி அடிமையானவன் உல்லாசமாய் வாழ்கிறதை அல்லது தாழ்மைக்குப் புறம்பானவைகளை, அபாயம்

என்று விட்டு விடுகிறவனாய் இருக்கிறான். தேவையில்லாத உல்லாசமான ஒவ்வொரு காரியமும் பெருமையைத் தூண்டக் கூடியதாக, ஆத்துமாவுக்குப் பாதகமான ஒன்றாய் எண்ணி, அது தவிர்க்கப்படும்படியாக இருப்பான். தாழ்மை என்பது ஒருக்காலும் தோற்றத்தைச் சார்ந்ததாக இருப்பதில்லை. அது எப்பொழுதும் தன்னைச் சுத்தமாக ஆண்டவருக்கென்று உபயோககரமான பாத்திரமாக காத்துக்கொள்வதில் ஜாக்கிரதையாய் இருக்கும். ஆனால் தாழ்மையின்மையானது தன்னை மற்றவர்கள் எப்பொழுதும் பார்க்க வேண்டும் என்று எண்ணுகிறதாய் இருக்கிறது. தாழ்மை என்பது ஒருக்காலும் தன்னை மற்றவர்களுக்கு முன்பாக பெருமைப்படுத்தியோ அல்லது புகழ்ச்சியை விரும்பியோ செயல்படாது. அது பெருமையாய் பேசுகிற மக்களிடத்தில் ஐக்கியத்தைத் தேடாது.

ஒரு பிறவி அடிமையானவன் எவ்விதமாக தன் எஜமானின் விருப்பத்தையும் வாஞ்சையையும் நோக்குகிறவனாகக் காணப்படுகிறானோ, அப்படியே கிறிஸ்துவ தாழ்மை என்பது கிறிஸ்துவுக்குரிய காரியங்களைத் தொடர்ச்சியாக நோக்கிப் பார்க்கிறதாய் இருக்கிறது. சில சமயங்களிலே பிரசங்கிகளும் தவறிப்போக வாய்ப்புண்டு. சில சமயங்களில் சபைகளிலும் கூட சூழ்நிலை வித்தியாசமாய் காணப்படும் போது, பெருமையினால் கிறிஸ்துவுக்குப் புறம்பான காரியங்கள் வருவதற்கும் வாய்ப்புண்டு. அதன் மூலமாக கிறிஸ்துவின் பணிக்கு பாதகத்தை ஏற்படுத்துவதுண்டு. தாழ்மை எப்பொழுதும் கிறிஸ்துவின் கனத்தையும் மகிமையையும் விரும்புமேயொழிய, தன்னுடைய சொந்த நலத்தை விரும்புகிறதாய் இருக்காது.

பிறவி அடிமை என்ற தாழ்மை குணம் தன்னை விட மற்றவர்களைக் குறித்து அதிகம் சிந்திக்கக் கூடியதாயிருக்கிறது. தாழ்மை எப்பொழுதும் அப்போஸ்தலர் 20:31 -ல் "ஆனபடியினால் நான் மூன்று வருஷ காலமாக இரவும் பகலும் கண்ணீரோடு இடைவிடாமல் அவனவனுக்குப் புத்தி சொல்லிக் கொண்டுவந்ததை நினைத்து விழித்திருங்கள்" என்று பவுலைப்

போல தாழ்மையாய் சொல்லக்கூடும். இந்த கண்ணீர்கள் என்ன? இந்தக் கண்ணீர் தன்னுடைய சுயத்துக்காய் அல்ல, கர்த்தருடைய மந்தையைக் குறித்த கவலையினால் சொல்லப்பட்டதாய் இருக்கிறது. அப்போஸ்தலருடைய பெரிதான கரிசனை என்னவென்றால், போலி உபதேசங்கள் உள்ளே நுழைந்து சபையைப் பாதிக்குமோ என்பதே. ஊழியத்தில் ஆத்துமாக்கள், விசுவாசிகள் மன வேறுபாடோடும், சண்டையோடும் காணப்படும்போது அவர்களுக்காக, அவர்கள் ஒருமனப்பட வேண்டும் என்று சிந்துகிற கண்ணீராயிருக்கிறது. தாழ்மை என்பது எப்பொழுதும் தொடர்ச்சியாக உணர்வுப்பூர்வமாகக் கற்றுக்கொள்கிற ஒரு காரியமாயிருக்கிறது. தாழ்மை என்பது தவறிப்போன மக்களுக்கு உதவிகரம் நீட்டுகிறதாயிருக்கிறது.

கிறிஸ்துவப் பிறவி அடிமையானவன் தன்னுடைய எஜமானோடுகூட பாடுபடுகிறவனாகவும், ஜெயம் கொள்ளுகிறவனாகவும் இருக்கிறதைப் போலவே கிறிஸ்துவத் தாழ்மை இருக்கிறது. அவன் கிறிஸ்துவுக்காகச் சோதனைகளையும், பாடுகளையும் ஏற்றுக்கொள்ள முன்வருகிறான். பவுலுக்கு அநேக சோதனைகள் இருந்தன. நாம் அவைகளில் சிலவற்றை அப்போஸ்தலர் நடபடிகளில் பார்க்கிறோம். ஆனாலும் அவர் அவற்றில் எழுதி இருப்பதற்கு மேலாக அதிகமான பாடுகளைப்பட்டார். அப்போஸ்தலர் 20:19 -ல் பவுல், “யூதருடைய தீமையான யோசனைகளால் எனக்கு நேரிட்ட சோதனைகளோடும்” (அப் 20:19) என்று எழுதுகிறார். ஆனால் சோதனைகள் என்று எழுதுவதினால், அவருக்கு எழுதப்படாத பல சோதனைகளை சந்தித்திருப்பார் என்று நாம் அறிந்துகொள்ள முடிகிறது. ஆனால் ஒருபோதும் இவ்விதமான சோதனைகள் நேரிடக்கூடாது என்றோ, அல்லது எனக்கு இவ்விதமான சோதனைகள் வரவேண்டும் என்றோ, நான் ஒரு அப்போஸ்தலன் என்றோ, நான் வயதாகிவிட்டேன், எனக்கு வியாதியிருக்கிறது, இது எனக்கு ஏற்றதில்லை என்றும் சொல்லவே இல்லை. தாழ்மை என்று சொல்லப்படும்பொழுது கிறிஸ்துவின் ஊழியத்தின் நிமித்தம்

தனக்கு வந்த எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டு, அவருடைய அன்பின் நிமித்தம் நன்றியின் நிமித்தமாக பாடுபட்டார்.

தாழ்மை என்பது அர்ப்பணித்த ஒரு பிறவி அடிமையானவன், கருத்தோடு அப்போஸ்தலர் 20:20 -ல் சொல்லுகிற வண்ணமாக "பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்து வைக்காமல், வெளியரங்கமாக வீடுகள் தோறும் உங்களுக்குப் பிரசங்கித்து, உபதேசம்பண்ணி" என்று சொல்லுவதைப் போன்றது. பவுல் ஒரு முழுமையான உபதேசத்தையும், பிரசங்கத்தின் மூலமாக ஆத்துமாக்கள் பரிசுத்தமாக்கப்பட வேண்டும், விசுவாசத்தின் போதனையை அவர்கள் அறிந்துகொள்ள வேண்டுமென்ற நோக்கத்துடன் செயல்பட்டார். அவர் விசுவாசிகளை கிறிஸ்துவ ஊழியத்தில் உட்படுத்தவும், உலகத்தில் இருந்து அவர்கள் பிரிக்கப்பட்டவர்களாய் காணப்படவும் பிரசங்கித்தார். அவர் கிறிஸ்துவினுடைய மகிமையான காரியங்களை முழுமையாகவும், எல்லாவற்றையும் உட்படுத்தினதாகவும் பிரசங்கித்தார். ஏனென்றால் தாழ்மை என்பது அதிகக் கருத்தோடு கூடிய செயல்பாட்டைக் கொண்டதாக இருக்கின்றது. பெருமை ஒன்று தான் மேலோட்டமாகப் போதித்து வெறும் மக்களுடைய மெச்சுதலை எடுத்துக்கொள்ளுகிறதாக இருக்கிறது.

தாழ்மை அன்பைப்போலே தன்னுடைய சொந்த விருப்பத்தை மாத்திரமே பற்றிக்கொள்ளாது. சொல்லப்போனால் தன்னுடைய சொந்த ஜீவனைப் பற்றிக்கொள்கிற சுயநலமுள்ளதாக இருக்காது. என்னுடைய ஜீவனையும் நான் அருமையாக எண்ணேன் என்று பவுல் சொல்லுகிறார். மேலும் என்னுடைய ஓட்டத்தை சந்தோஷத்தோடே முடிப்பேன் என்றும் பவுல் சொல்லுகிறார். அவர் அப்போஸ்தலர் 20:34-வது வசனத்தில் "எனக்கும் என்னுடனே கூட இருந்தவர்களுக்கும் வேண்டியவைகளுக்காக இந்தக் கைகளே வேலை செய்தது" (அப் 20:34) என்று பவுல் சொல்லுகிறார்.

தாழ்மை மற்றவர்களுக்காக நோக்கிப்பார்க்கிறது,

ஆனால் பெருமை தன்னை மாத்திரமே நோக்கிப்பார்க்கிறது. அப்போஸ்தலர் 20:33 -ல் பாருங்கள் "ஒருவருடைய வெள்ளியையாகிலும் பொன்னையாகிலும் வஸ்திரத்தையாகிலும் நான் இச்சிக்கவில்லை" (அப் 20:33) என்று பவுல் சொல்லுகிறார். கிறிஸ்துவனின் தாழ்மை எப்பொழுதும் ஜெபத்தில் தேவனை மாத்திரமே சார்ந்துகொண்டதாகவும், அவருடைய ஒவ்வொரு பணியிலும் சாட்சியிடுகிறதிலும், ஒவ்வொரு பிரயாணத்திலும், ஜெபத்திலும் ஒவ்வொரு நாளும் தேவனுக்கென்று செயல்படுகிறதிலும் இருக்கிறது. அவர்கள் பவுலை சிறைப்படுத்தி, அவனை ஒன்றுமில்லை என்று எண்ணி, அவனை ஒரு பைத்தியக்காரன் என்று அழைத்தார்கள். அவர் அநேக சமயங்களில் குளிரிலும், பட்டினியிலும், வியாதியிலும், பெலத்தை இழந்துபோன நிலையிலும் சிறைப்பிடிக்கப்பட்டுக் காணப்பட்டார். ஆனால் தேவன் அவரை வல்லமையாக உபயோகப்படுத்தினதிற்கு காரணம் அவருடைய தாழ்மையே.

பெருமை எப்பொழுதும் மனதிலே ஆரம்பிக்கின்றதாகக் காணப்படுகிறது. அது உன்னுடைய வீழ்ச்சிக்கு முன்பாக ஒடுகிறதாக இருக்கின்றது. பெருமை எப்பொழுதும் மற்றவர்களுடைய பார்வையில் அருவருக்கப்படத்தக்கதும், அசுத்தமானதுமாகவும் இருக்கிறது. ஒருவேளை கண்ணாடியில் அதைப் பார்க்க முடியாமல் இருக்கலாம். ஆனால் உன்னை சுற்றியுள்ள மக்கள் அதைப் பார்ப்பார்கள். உன்னுடைய தோற்றத்திலேயே அது வெளிப்படுகிறதாக இருகின்றது. சில சமயங்களில் நீ உன்னுடைய தலையை உயர்த்திப் பார்ப்பதிலும், மேட்டிமையான கண்களோடு பார்ப்பதிலும், நீ பேசும்படியான தொனியிலும் அது வெளிப்படும். மக்கள் நீ பெருமைக்காரன் என்று சொல்லக்கூடும். இன்னொரு விதமாக அவர்களே பெருமைக்காரராக இருந்தால் அவர்களும் உன்னை அலட்சியப்படுத்தக்கூடும்.

பெருமையானது, நீ நிதானத்தை இழந்து போகவும், நல்ல தீர்மானங்களைச் செய்வதைச் செய்ய முடியாமல்

போகவும் செய்யும். பெருமை ஆலோசனையை வெறுக்கும், தன்னுடைய சொந்த யோசனையையே அது நாடும். பெருமை என்பது நீதிமொழிகள் புத்தகத்தில் சொல்லுகிற இராஜாவைப் போல, தகுதியற்ற அதிகாரிகளையும், அறிவில்லாதவர்களையும் தன்னுடைய மாகாணங்களுக்கு அதிகாரிகளாகவும், தன்னுடைய மந்திரி சபையில் வைத்துக் கொள்ளுகிற இராஜாவைப் போலவும் காணப்படும். ஏனென்று கேட்டால் நல்ல அறிவாளியானவர்கள் தன்னை சுற்றிலும் இருந்தால் தனக்குப் பாதகமாக இருக்கும் என்று பயப்படுவார்கள். பெருமையின் மதிகேடு மிகப்பெரியது. அவ்விதமாகவே பெருமை ஒரு பிரசங்கியில் நுழையும்பொழுது அவன் தேவனுடைய கருவியாக இருக்க முடியாது. தவறாக வழிநடத்தப்பட்ட விசுவாசிகள் அவனைக்குறித்து ஆச்சரியப்படலாம். ஆனால் இரட்சிக்கப்படாத மக்கள் அவனை ஒருபோதும் நம்பமாட்டார்கள்.

பெருமையானது நம்முடைய மனதிலும் நம்முடைய எல்லா விதமான விருப்பங்களிலும் காணப்படுகிறது. அது ஒரு நபருடைய எண்ணங்களையும் நம்பிக்கைகளையும் பாதிக்கிறதாகக் இருக்கிறது. அதை எதிர்த்து விலகி வரவில்லை என்றால், ஒருவேளை கர்த்தர் நம்மைத் தாழ்த்துவதற்கு ஏதுவாக செயல்படலாம். லூக்கா 14:11 -ல் நமது இரட்சகர் "தன்னைத்தான் உயர்த்துகிறவனெவனும் தாழ்த்தப்படுவான், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்" என்கிறார். இது ஆண்டவருடைய கடைசி நியாயத்தீர்ப்பில் என்பதாக மாத்திரமல்ல, தேவன் கிருபையாக நம்மில் செயல்பட்டு நம்மைச் சுத்திகரித்து ஆசீர்வதிக்கிறார் என்பதைக் காண்பிக்கிறது.

பெருமையானது தேவனுக்கென்று சாட்சியிட்டு வாழக்கூடிய காரியத்தில் எவ்வளவு பெரிய சோம்பேறித்தனத்தை உண்டாக்குகிறது. ஏனென்றால் ஒரு பெருமையான கிறிஸ்தவன் தான் செய்கிற கொஞ்சத்திலும் மிகப் பெரிதாக எண்ணுகிறவனாக இருக்கிறான். அவன் செய்யும்படியான சிறிதான காரியங்களும் அவனுடைய பெருமையினிமித்தம்

அவனுக்கு முன்பாக மிகப்பெரிய அளவில் அவன் சாதித்ததாய் எண்ணுகிறதாகக் காணப்படுகிறது.

கொலோசேயர் 3:12 -ல் பவுல் "ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு;" என்று சொல்லுகிறார். அதாவது மனத்தாழ்மை என்று சொல்லுகிறார். நாம் தேவனுக்குச் சொந்தமாக அவரை நம்முடைய வாழ்க்கையில் வெளிப்படுத்தவேண்டியவர்களாக இருப்பதினால், நாம் தாழ்மையை அணிந்துகொள்ளவேண்டும். நாம் தாழ்மையாய் இருக்க வேண்டியவர்கள், ஆனால் நம்முடைய எண்ணங்களில் எவ்வளவு பெருமையுள்ளவர்களாகக் காணப்படுகிறோம். "அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள்; பெருமையுள்ளவர்களுக்குத் தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார்" (1 பேதுரு 5:5).

நாம் பவுலை எண்ணிப்பார்க்கும்பொழுது பாடுகள் நிறைந்த அப்போஸ்தலனாக, ஆத்துமாக்களுக்காகப் பாரமுள்ள மனிதனாக, கிறிஸ்துவின் மக்கள் நன்றாக இருக்கவேண்டும் என்ற பாரத்தோடு ஆண்டவருடைய மகிமையை விரும்புகிறவராய் இருப்பதைப் பார்க்கிறோம். நாம் பவுலை எண்ணிப்பார்க்கும்பொழுது ஒருக்காலும் மனமேட்டிமையாக மற்றவர்களைவிடத் தன்னை மிக முக்கியமான நபராகக் காண்பிப்பதை பார்க்க முடிவதில்லை. அதற்கு பதிலாக தாழ்மையின் மனதை எப்பொழுதும் கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். நாம் பவுலை நினைத்துப் பார்க்கும்பொழுது கிறிஸ்துவின் ஒரு அடிமையாக தன்னை உட்படுத்திக் கொள்ளுவதைப் பார்க்கிறோம்.

பவுல் இன்றைக்கு இருப்பாரானால் கிறிஸ்தவ கூட்டங்களில் மக்களை ஒருவருக்கொருவர் புகழ்ந்துகொள்ளுவதும், அநேக கிறிஸ்தவர்களுடைய வாழ்க்கைகளை ஒரு விக்கிரகமாக்குவதையும் விரும்பமாட்டார். அப்படி அவர் இருந்திருப்பரானால் அவர் எவ்விதம் மற்றவர்களில் அன்புள்ளவராக இருப்பதையும், ஆண்டவருடைய காரியங்களில் அக்கறையுள்ளவராக இருந்தார் என்பதையும் பார்க்கமுடியும்? ஒருவேளை நாம் அவ்விதமான கேள்வி கேட்போமானால், அவருடைய வாழ்க்கையில் கிறிஸ்துவின் அநேக ஆவிக்குரிய குணநலன்களையும் எப்படி எண்ணிப்பார்க்க முடியும்.

நாம் நம்முடைய எல்லாப் பெருமையையும் தகர்த்துப்போட்டு, நம்மை நாமே உயர்வாக எண்ணுகிற காரியங்களையும் அருவருப்போமாக. நாம் எல்லா மனத்தாழ்மையோடும் கிறிஸ்துவுக்குப் பணி செய்கிறவர்களாய் காணப்படுகிறோம் என்பது உண்மையாக இருக்குமானால் எவ்வளவு ஆசீர்வதிக்கப்பட்டவர்களாக நாம் இருப்போம். இதுவே நம்முடைய இருதயத்தின் அதிகமான வாஞ்சையாகக் காணப்படட்டும். நாம் கிறிஸ்துவுக்காகச் செய்கிற பணியில் உண்மையுள்ள கருவிகளாக காணப்பட கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக.

# அத்தியாயம் 12

# ஒப்புக்கொடுக்கப்பட்ட வாழ்க்கை

**பவுலினுடைய உடன் ஊழியர்களிடம் கண்டது:**

பவுலினுடைய வாழ்க்கையின் கடைசி காலத்தில், ரோமாபுரி பட்டணத்தில் முதல் முறையாக சிறைப்பட்டு இருந்த பொழுது எழுதின நிருபம் கொலோசேயருக்கு எழுதின நிருபம். இதில் அவருடைய உடன் ஊழியர்களாகிய ஏழுபேரைக் குறிப்பிட்டிருக்கிறார். இவர்களுடைய வாழ்க்கையானது, ஆவிக்குரிய வாழ்க்கை என்பது என்ன? என்று சித்தரிக்கின்றதாகவும், இன்றும் நம்மை சவாலுக்கு உட்படுத்துகின்றதாகவும் இருக்கின்றது. இந்த ஏழு பேர்களில் இவர்கள் மாத்திரம் இல்லாதபடிக்கு பவுலினுடைய உடன் ஊழியர்கள் அநேகர் இருந்தார்கள். தீமோத்தேயுவும், தீத்துவும் கூட இந்த பட்டியலில் இல்லை. இந்த ஏழுபேர் வாழ்க்கையின் மூலமாக நாம் கற்றுக்கொள்ளக்கூடிய அவர்களுடைய தனித்தன்மையான குணங்களைப் பார்ப்போமாக.

இதில் முதல் இரண்டு பேர் நிருபங்களை எடுத்துச் செல்லுபவர்களாக இருந்தார்கள். இதில் மூத்தவர் தீகிக்கு. கொலோசேயர் 4:7 -ல் பவுல் "உண்மையுள்ள ஊழியக்காரனும், கர்த்தருக்குள் எனக்கு உடன்வேலையாளுமாயிருக்கிற தீகிக்கு என்பவன் என் செய்திகளையெல்லாம் உங்களுக்கு அறிவிப்பான்" (கொலோ 4:7) என்று சொல்லுகிறார். இந்த எபேசு பட்டணத்து தீகிக்கு நீண்ட நாட்களாக பவுலுக்கு உடன் ஊழியனாகவும், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கின்றவனாகவும், போதகனாகவும், இன்னும் பல கடமைகளை அவருக்குச் செய்கிறவனாகவும் இருந்தான். இந்த ஊழியனான தீகிக்குவை தன் உடன் ஊழியன்

என்று அழைக்கிறார். அவர் புறஜாதி சபைகளினுடைய பிரதிநிதியாக, காணிக்கையை எருசலேமுக்குக் கொண்டு செல்லுகிறார். பவுலோடு கூட மெலித்தா தீவு வரைக்கும் எடுத்துச் சென்றார். அவர் எபேசு சபைக்கும் இவ்விதமாக நிருபத்தை எடுத்துச் சென்றார். மேலும் 2 கொரிந்தியர் நிருபத்தையும் தீத்துவோடு கூட எடுத்துச் சென்றார். அவர் மெலித்தா தீவுக்கும் தீத்துவோடு கூட உழைக்கும்படியாக பவுலினால் அனுப்பப்பட்டார். மேலும் எபேசு பட்டணத்தில் தீமோத்தேயுவுக்குப் பின்பாக ஊழியம் செய்யும்படியாக அனுப்பப்பட்டார். தீகிக்கு பவுலினுடைய மூன்றாவது மிஷினரி பிரயாணத்தில் சென்றவரும், அந்தசமயத்தில் பவுலுக்காக தன்னுடைய உயிரையும் பணையம் வைக்க வேண்டிய சூழ்நிலையிலும் கடந்து சென்றார்.

தீகிக்குவை பவுல் எவ்விதமாக விவரித்திருக்கிறார் பாருங்கள். கொலோசேயர் 4:7 -வது வசனத்தில் “அன்புக்குரிய உண்மையுள்ள சகோதரன்” என்கிறார். மேலும் பவுல் இந்த சகோதரன் மேல் மிகவும் அன்புள்ளவராக இருந்தார். அவருடைய குணமும், வாழ்க்கை முறையும், கிறிஸ்துவை நேசித்த அன்பும், பவுல் அவரை அதிகமாக நேசிக்கச் செய்தது. பவுலினுடைய சரீர ஆரோக்கியத்திலும், அவருடைய தேவையைச் சந்திப்பதிலும், தன்னால் முடிந்த மட்டுமாக பவுலுக்காகச் செய்ததிலும், அவர் ஆழமான அக்கறை உள்ளவராக இருந்ததை நாம் பார்க்கிறோம். அன்புக்குரிய சகோதரன் என்று சொல்லப்படுவது ஒரு சுயநலமற்ற நட்பையும், இரக்கத்தையும் தீகிக்கு பவுலுக்காக செய்கிறதில் எந்த ஒரு எல்லையற்ற நிலையையும் கொண்டிருக்கிறதைப் பார்க்கிறோம். ஒரு தாழ்மையுள்ள பணியாளனை போன்ற ஊழியனுடைய ஆவியை தீகிக்கு கொண்டிருந்தார்.

பவுல் மேலுமாக உண்மையுள்ள ஊழியன் என்று அவரைச் சொல்லுகிறார். முன்பு பிரியமான சகோதரன் என்று சொன்னார், இப்பொழுது உண்மையுள்ள ஊழியக்காரன்

என்று சொல்லுகிறார். ஏனென்றால் ஜனங்களுக்காக தீகிக்கு அக்கறையுள்ளவராக இருந்தார். அவர் ஒரு பிரசங்கியாக இருந்தாலும் மற்றவர்களை உற்சாகப்படுத்துவதிலும், ஆறுதல்படுத்துவதிலும், அவர்களுக்கு ஆவிக்குரிய சவாலைக் கொடுப்பதிலும் ஒரு நல்ல முன்மாதிரியாக இருந்தார். அவர்களுடைய இருதயத்தில் விசுவாசிகளைக் குறித்த ஒரு ஆழமான பாரம் இருந்தது. கள்ள உபதேசம் பரவிக்கொண்டிருந்த அந்த காலத்தில், தேவனுடைய வார்த்தைக்கு உண்மையாய் கொலோசு பட்டணத்திற்கு அனுப்பக்கூடிய, நம்பிக்கைக்குரியவராக இருந்ததினால் அவர் உண்மையுள்ளவர் என்று அழைக்கப்படுகிறார். சத்தியத்தைத் தெளிவாகவும், உண்மையாகவும், தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த பொறுப்பை நிறைவேற்றுகின்றவராகவும், அவர் செயல்பட்டதை நாம் பார்க்கிறோம்.

அதோடு கூட தீகிக்குவை பவுல் உடன் ஊழியன் என்று அழைக்கிறார். முதலாவது அவர் பவுலினுடைய குழுவில் காணப்பட்ட ஒருவராக விவரிக்கப்பட்டார். தீகிக்கு தன்னை மாத்திரமே உயர்த்திக்கொள்ளக் கூடிய, தனக்கு மகிமை தேடிக்கொள்ளுகிற ஒரு நபராக இல்லை. பவுலோடும், மற்றவர்களோடும் உழைப்பதில் ஆர்வமுள்ளவராகவே இருந்தார். அவர் கருத்துள்ள ஊழியக்காரனாய் ஆண்டவருடைய அடிமையாய் தன்னை ஒப்புக்கொடுத்திருந்தார். ஒரு அடிமையானவன் தன்னுடைய எஜமானனால் உரிமை பாராட்டக்கூடியவனும், அவனுடைய எதிர்பார்ப்புக்கும் சந்தோஷத்திற்கும் செயல்படுகிறவனாய் காணப்படுவான். தீகிக்கு ஒரு கிறிஸ்துவின் ஊழியக்காரனாக இவ்விதமான மன நிலைமையைக் கொண்டிருந்தான். அவரிடத்தில் எதிர்பார்க்கப்பட்ட எதையும் அவர் செய்வார். பவுல் இந்த இடத்தில் தன்னுடைய பணியாளனாக தீகிக்குவை அழைக்கவில்லை. கிறிஸ்துவுக்குள் உடன் வேலையாள் என்று சொல்லுகிறார். ஊழியத்திற்காக அவர் எதையும் செய்யக்கூடியவராக இருந்தார்.

பவுல் தீகிக்குவைப் பார்த்து, உங்களுடைய நிலையை அறியவும், உங்களுடைய இருதயங்களை ஆறுதல்படுத்தவும், உங்களை உற்சாகப்படுத்தவும் தீகிக்கு கொலோசு பட்டணத்திற்கு வருவார் என்று சொல்லுகிறார். உங்களுடைய எல்லாச் சூழ்நிலைகளையும், உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற எல்லாவிதமான வாய்ப்புகளையும் பார்த்து உங்களுக்கு உதவி செய்வார் என்று சொல்லுகிறார். அவர் கிறிஸ்துவை உங்களுக்குப் பிரசங்கித்து, அவரை உயர்த்திக் காண்பித்து, அவருடைய அற்புதமான போதனைகளை உங்களுக்குக் கொடுத்து உங்களைப் பணியில் உற்சாகப்படுத்துவார் என்றும் நித்திய மகிமையைக் குறித்து அவர் உங்களோடு கூட பேசுவார் என்றும் சொல்லுகிறார். உங்களுடைய சூழ்நிலைகள் கடினமாக இருக்குமானால் உங்களை வரப்போகிற நித்திய மகிமையின் வீட்டை நோக்கிப்பார்க்கும்படியாக வழி நடத்துவார் என்று சொல்லுகிறார். தீகிக்குவை விட இவ்விதமாக தேவனைக் காண்பிக்கவும், அவருடைய வார்த்தைக்கு உண்மையாகவும், விசுவாசிகளுக்கு உண்மையாகவும் போதிக்கக்கூடிய மேலான நபர் ஒருவரும் இல்லை. நாம் கிறிஸ்துவின் பணியாளர்களாய் அவர் விரும்புகிற வண்ணம் செய்கிறவர்களாய் காணப்படுகிறோமா? அல்லது சொந்த விருப்பத்தின்படி ஓடுகிறவர்களாய் இருக்கிறோமா? பவுலினுடைய உடன் வேலையாளான தீகிக்கு தன்னலமற்ற கிறிஸ்துவின் அன்புக்கு மாதிரியாகவும், நம்முடைய வாழ்க்கைக்கு ஒரு நல்ல இலக்கை வைக்கிறவராகவும் இருக்கிறார். பரிசுத்த பவுல் தன்னுடைய வாழ்க்கையின் மூலமாக அவருக்கு ஒத்த மனநிலையை உடையவர்களை தன் பக்கமாக இழுத்துக் கொள்ளுவது தானாகவே நடைபெறுகிற ஒரு காரியமாக இருந்தது. ஊழியம் செய்யும்படியான மக்களாகிய நாம் பவுலைப் போல இருப்போமானால் நிச்சயமாக நம்முடைய சபைகளில் அவ்விதமான ஊழியர்களை இழுத்துக் கொள்ளக்கூடியவர்களாய் இருப்போம்.

அவர் சொல்லும்படியான அடுத்த நபர் ஒநேசிமு. உண்மையும் பிரியமுமான, உங்களில் ஒருவரான சகோதரன் என்று

சொல்லப்படுகிறார். இதை வாசிக்கிற அநேகர் ஒநேசிமுவை கிருபையின் சின்னமாக இருக்கிறார் என்பதை அறிந்துகொள்ள முடியும். பிலேமோனுடைய அடிமையும் பவுலினுடைய பிரசங்கத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டவருமான ஒநேசிமு தன் எஜமானாகிய பிலேமோன் இடத்திலிருந்து பணத்தைத் திருடிக்கொண்டு ரோமாபுரிக்கு போனவன். அவனுடைய வாழ்க்கையில் பிறகு கிறிஸ்தவர்களையும், பவுலையும் சந்தித்து முற்றிலுமாக மாற்றப்பட்டார். இப்பொழுது பிலேமோன் இடத்திலும், கொலோசு பட்டணத்தில் இருக்கும் சபைக்கும் ஒரு திருடனாக, ஓடிப்போனவனாக அல்ல, ஆண்டவருடைய ஊழியக்காரனாக திரும்பினவனாக இருக்கிறான். இப்பொழுது அவர் உண்மையும் பிரியமுமான சகோதரனாக ஒரு முதிர்ந்த விசுவாசியாக, ஒரு நல்ல சாட்சியாக முற்றிலும் நம்பப்படத்தக்கவராகத் திரும்பி வருகிறார்.

நாம் கிருபையின் சின்னமாக இருக்கிறோமா? நாம் உண்மையாலும் மாற்றப்பட்டு இருக்கிறோமா? சில மக்கள் ஆண்டவரிடத்தில் வந்ததாகவும், ஆண்டவரை நம்புவதாகவும் சொல்லுவார்கள். ஆனால், அவர்கள் உண்மையான விதத்தில் கிருபையின் சின்னமாக இருப்பதில்லை. அவர்களுடைய வாழ்க்கையானது பழைய வாழ்க்கைக்கு மாறுபட்டதாகவும் இல்லை. அவர்கள் புதிய ஆவியையும், புதிய இருதயத்தையும் கொண்டவர்களாக இருப்பதாகப் பார்க்க முடிவதில்லை. அவர்கள் முற்றிலும் கர்த்தருக்கென்று அர்ப்பணித்து அவருக்கென்று பணிசெய்கிறவர்களாகவும் பார்க்க முடிவதில்லை. இன்னுமாக அவர்கள் உலகத்துக்கு உரியவர்களாக, உலகத்தின் காரியங்களிலே திருப்தி அடைகிறவர்களாகவே இருக்கிறார்கள். ஒநேசிமு முற்றிலும் மாற்றப்பட்ட ஒரு வாலிபனாகத் திரும்பி வருகிறான். அதுவே ஒவ்வொரு இரட்சிக்கப்பட்ட விசுவாசியிலும் பார்க்க வேண்டியதாக இருக்கிறது. நாம் மெய்யாலுமே நம்முடைய பாவத்திற்காக மனந்திரும்பி இருக்கிறோமா? கல்வாரியில் விசுவாசம் வைத்து அவரைத் தேடுகிறவர்களாக இருக்கிறோமா? உண்மையாலும் நம்முடைய

வாழ்க்கையை ஆண்டவருக்கென்று அர்ப்பணித்தவர்களாக இருக்கிறோமா? இவ்விதமாக நாம் கிருபையின் சின்னமாக இருப்போமானால் மாத்திரமே நம்முடைய வாழ்க்கையில் புதிய நோக்கங்களையும், புதிய வாஞ்சைகளையும் கொண்டவர்களாக காணப்படுவோம். இதை வாசிக்கிற ஒவ்வொருவரும் ஒநேசிமுவைப் போல அவருடைய சந்ததியில் வந்த மக்களாக, கிருபையின் சின்னமாக இருப்போமாக.

அடுத்ததாக பவுல் சொல்லும்படியான நபர் அரிஸ்தர்க்கு. இந்த அரிஸ்தர்க்கு மக்கதொனியாவின் தெசலோனிக்கேயாவில் இருந்து வந்தவர். அவர் தியாகமுள்ளவர் என்று நாம் சொல்ல வேண்டும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மூன்று யூதப் பெயர்களில் இவர் முதலாவதாக சொல்லப்பட்டிருக்கிறார். ஒருமுறை பவுலோடு கூட எபேசு பட்டணத்தில் சிறைப்படுத்தப்பட்டார். பவுலின் மூன்றாவது மிஷனரி பயணத்தில் உடன் சிறைக் கைதியாக கப்பல் சேதமடைந்த பிரயாணத்தில் பவுலோடு கூட அரிஸ்தர்க்கு இருந்தார். அரிஸ்தர்க்கு பவுலினுடைய உடன் உதவியாளனாய் அநேக முறை இருந்திருக்கிறார். இந்த இடத்தில் அவர் உடன் கைதி என்று அழைக்கப்படுகிறார்.

அடுத்ததாக பிலேமோனுக்கு எழுதின நிரூபத்தில் எப்பாப்பிராத்துவுடன் கைதியாக இருந்தார் என்று சொல்லப்படுகிறதை வாசிக்கிறோம். ஒருவேளை சிறைச்சாலையில் அரிஸ்தர்க்கும் எப்பாப்பிராத்துவும் மாறிமாறி பவுலோடு உடன் கைதிகளாக தங்களை உட்படுத்திக்கொண்டிருக்கக் கூடும். அதாவது ரோம சிறைச்சாலையில் அவர் தங்கியிருந்தபொழுது அவரோடுகூட ஜெப ஊழியத்திலும் நிரூபங்களை எழுதுவதிலும் உடன் அல்லது கூட இருந்து செயல்படுவதில் அவர்கள் முன் வந்து தாங்களாகவே சிறைக் கைதிகளாக தங்களை உட்படுத்தியிருக்கலாம் என்று கருதப்படுகிறது.

சிறை கைதி என்று சொல்லப்படும்பொழுது தன்னுடைய நாட்டிற்காகத் தியாகம் செய்கிற அல்லது சிறைக்குச் சென்ற மக்கள் எவ்விதமாக அந்நாட்டில் கனப்படுத்தப்படுவார்களோ

அதை விட இங்கு அரிஸ்தர்க்கும், எப்பாப்பிராத்துவும் கிறிஸ்துவுக்காகச் சிறைப்படுத்தப்பட்டு தேவனுடைய இராஜ்யத்தில் கனப்படுத்தப்படக் கூடியவர்களாகக் காணப்பட்டார்கள். இது அவர்களுடைய தியாகம் என்று அழைக்கலாம்.

அரிஸ்தர்க்குவினிடத்தில் காணப்படுகிற குணங்களில் ஏதாகிலும் ஒன்று நம்மிடத்தில் காணப்படுகிறதா? நாம் நம்முடைய பணி கிறிஸ்துவுக்காக உழைப்பதே என்று சொல்லி உலகத்தையும் உலகத்தின் காரியங்களையும் விட்டு ஆண்டவருக்காக உழைக்க முன் வருவோமா? நிச்சயமாக சில விசுவாசிகள் தங்களுடைய வாழ்க்கையில் உயர்ந்த நிலையிலும் கூட தங்களுக்கென்று கொடுக்கப்படுகிற வாய்ப்புகளைப் பயன்படுத்தி ஆண்டவருக்குச் சாட்சி சொல்லக்கூடியவர்களாக இருக்கிறார்கள். நம்முடைய வாழ்க்கையிலும் அவ்விதமாக கிறிஸ்துவே பிரதானமானவராக காணப்படுவது அவசியமாக இருக்கின்றது.

அடுத்தது நாம் பவுலின் உதவியளானாக மாற்குவை 10-வது வசனத்தில் பார்க்கிறோம். மாற்கு பர்னபாவின் சகோதரியின் மகன், நிச்சயமாக நாம் இந்த மாற்குவை ஒரு வெற்றியாளனாகக் குறிப்பிட முடியும். ஏறக்குறைய 12 முதல் 14 ஆண்டுகளுக்கு முன்பாக அவர் பவுலோடும் பர்னபாவோடும் பிரயாணம் பண்ணுவதிலும், பிரசங்கம் பண்ணுவதிலும், சுவிசேஷ சபைகளை நிறுவிப்பதிலும் உடன் இருந்து உழைத்து வந்தார். பின்பு பம்பிலியா பட்டணத்தில் அவர்களை விட்டுத் தன்னுடைய சொந்த ஊராகிய எருசலேமுக்குத் திரும்பி வந்துவிட்டார். ஏன் மிஷினரி பிரயாணத்தை விட்டு இவ்விதமாக வந்தார்? ஒருவேளை பம்பிலியாவில் இருந்த அந்தச் சூழ்நிலை, அந்த பட்டணத்தில் இருந்த உபத்திரவங்கள், பாடுகள், கஷ்டங்கள் இவைகளைக் கண்டு அஞ்சி இருந்திருக்கக்கூடும். ஒரு நல்ல வாலிபனாக திடகாத்திரமான உடலைப் பெற்றிருந்தாலும் அவர் தைரியமான ஒரு குணத்தையும், ஆண்டவருடைய

ஊழியத்திற்கு என்று தொடந்து உழைக்கக்கூடிய தன்மையையும் பெற்றிருக்கவில்லை. அவ்விதமான பணியில் மாற்கு பவுலையும், பர்னபாவையும் விட்டுப் போனது மிகப்பெரிய தவறாக இருந்தது. பிறகு பர்னபா பவுலை கூட்டிக்கொண்டு போய்விட்டதை நாம் பார்க்கிறோம்.

காலப்போக்கில் மாற்கு தன்னுடைய பெலவீனத்தை உணர்ந்து மனந்திரும்பி ஒரு கிறிஸ்துவின்ப் ஊழியக்காரனாக பவுலோடு கூட இணைந்து செயல்படுவதைப் பார்க்கிறோம். பன்னிரெண்டு ஆண்டுகளுக்குப் பின்பாக அவரில் ஏற்பட்ட மாற்றத்தை நாம் பார்க்கிறோம். அவர் மறுபடியுமாக தன்னுடைய பெலவீனத்தை மேற்கொண்டு கர்த்தருடைய பணியில் வந்ததையும் நம்மால் பார்க்கமுடிகிறது. அவர் தன் தோல்வியை மேற்கொண்டு ஜெயித்தவர் என்று பார்க்கிறோம். தன்னுடைய கடந்தகால தோல்விகளுக்காக வருத்தப்பட்டு மனந்திரும்பி தன்னுடைய பெலவீனத்தை, இயலாமையை ஆண்டவருடைய சமூகத்தில் வைத்து, கர்த்தரிடத்தில் இருந்து பெலத்தையும் தொடர்ந்து உழைக்கக்கூடிய மனநிலமையையும் பெற்றார். அதிலிருந்து அவர் முன்னேறிச் செல்லுகிறதைப் பார்க்கிறோம். பிறகு மாற்கு சுவிசேஷத்தை எழுதின ஒரு நபராகக் கர்த்தர் அவரை உயர்த்தினார்.

நம்மைக் குறித்தக் காரியம் என்ன? என்று நாமே நம்மை கேட்கவேண்டியவர்களாக இருக்கின்றோம். ஆரம்பத்தில் இருந்த மாற்குவைப் போல நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோமா? நாம் கொஞ்சம் ஆண்டவருக்கென்று அர்ப்பணித்துவிட்டு, பிறகு நம்முடைய அர்ப்பணிப்பை விட்டுவிடுகிறோமா? நாம் ஒரு பணியைத் தொடர்ந்து உற்சாகத்தோடு செய்கிறோமா? அல்லது நாம் நிலையற்றவர்களாய்க் காணப்படுகிறோமா? நம்முடைய ஆண்டவருக்கென்று பண்ணின வாக்குத்தத்தங்களை நிறைவேற்றாமல் வாழ்ந்து கொண்டிருக்கிறோமா? இந்த பவுலினுடைய முன் மாதிரியானது நம்முடைய வாழ்க்கையிலும்

இருக்குமானால் கிறிஸ்துவின் வல்லமையினால் நாம் மேற்கொள்ள முடியும் என்பதை உணரவேண்டும். நீ ஒரு வாலிபனாக ஆண்டவருக்கென்று உழைக்க வேண்டும் என்ற வாஞ்சையைக் கொண்டிருக்கலாம். ஆனாலும் நீ வெகுசீக்கிரத்தில் வழிவிலகி மாற்குவைப் போல உன்னுடைய வாழ்க்கையில் தவறிபோகக் கூடிய குணத்தைக் கொண்டிருக்க வாய்ப்புண்டு. ஆனால் கர்த்தரிடத்தில் நீ பெலத்திற்காக ஜெபி. கர்த்தர் உன்னை பெலப்படுத்துவார். அதிகமான முதிர்ச்சிக்காகவும், நிலைத்த தன்மைக்காகவும், ஒரு வெற்றியுள்ள ஆவியோடு உழைப்பதற்கும், உன்னுடைய பெலவீனங்களை மேற்கொண்டு வாழ்வதற்கும் நீ உறுதியாய் இரு. உன்னை நம்பகத்தன்மையுள்ள மனிதனாக ஆண்டவர் மாற்றுவார். பவுலினுடைய பிரியமான ஊழியர்களில் மாற்கு ஒருவராய் இருந்தது உற்சாகப்படுத்தக் கூடிய காரியமாக இருந்தது. நாம் எல்லோருமே இவ்விதமாக கிறிஸ்துவுக்காக ஒரு வெற்றியாளராக இருக்கமுடியும்.

அடுத்து பவுல் சொல்லும்படியான உதவியாளன் யுஸ்து எனப்பட்ட இயேசு. இங்கு பவுல் இவரைப்பற்றிச் சொல்லும்பொழுது இவ்விதமாக சொல்லுகிறதைப் பார்க்கிறோம். கொலோசெயர் 4-வது அதிகாரம் 11-ம் வசனத்தில் “யுஸ்து என்னப்பட்ட இயேசுவும் வாழ்த்துதல் சொல்லுகிறான். விருத்தசேதனமுள்ளவர்களில் இவர்கள் மாத்திரம் தேவனுடைய ராஜ்யத்தின்பொருட்டு என் உடன்வேலையாட்களாயிருந்து, எனக்கு ஆறுதல் செய்துவந்தவர்கள்” (கொலோ 4:11) என்று சொல்லுகிறார். அப்படி பார்க்கும்பொழுது இவர்கள் மூன்றுபேர் மாத்திரம் அவரோடுகூட உடன் ஊழியர்கள் என்று அல்ல, உடன் ஊழியர்களில் இந்த மூன்றுபேர் மாத்திரம் யூதர்களாக இருந்தார்கள் என்று சொல்லுகிறார். இங்கு தேவனுடைய ராஜ்யத்தின் பொருட்டு என்று சொல்லுகிறார். அதாவது ஆண்டவருடைய ராஜ்யத்தின் பொருட்டு ஆத்துமாக்களை ஆதாயம் செய்யும் படியாக அவர்கள் உடன் ஊழியர்களாக இருந்தார்கள். முக்கியமாக புறஜாதி சபைகளில் இந்த மூன்று

யூத சுவிசேஷகர்கள் இருந்ததை நாம் பார்க்கிறோம். இங்கு யுஸ்து சுவிசேஷக ஊழியன் என்று அழைக்கப்படுகிறார். அதாவது பவுலோடு கூட தேவனுடைய ராஜ்யத்தில் ஆத்தும அறுவடையில் உடன் ஊழியனாக இருந்ததைப் பார்க்கிறோம்.

இந்த இடத்தில் பவுலுக்கு இந்த மூன்று யூதர்கள் ஆறுதலாகவும், உற்சாகத்தைக் கொடுப்பவர்களாகவும் காணப்பட்டார்கள். சங்கிலியினால் கட்டப்பட்ட நிலையில் அதிகமான உபத்திரவத்தின் மத்தியிலே கர்த்தருடைய பணி செய்ய வேண்டிய வேளையில் சிறையில் அடைபட்டு இருந்த பவுலுக்கு, இந்த சுவிசேஷகர்களின் பணி உற்சாகமுட்டும் விதமாக இருந்திருக்கும். நாம் அவ்விதமாக ஆவிக்குரிய சிந்தையோடு கிறிஸ்துவின் மனதோடு உழைப்போமானால் எவ்வளவு நலமாக இருக்கும். இங்கு நமக்கு ஒரு சவால் வைக்கப்படுகிறது. நாம் முதலாவது இரட்சிக்கப்பட்டபொழுது ஆண்டவருக்காக அதிகமான சாட்சி சொல்லிவந்தோம். இப்பொழுது அவ்விதமாக தொடந்து ஆண்டவருக்காக சாட்சி சொல்லி வருகிறோமா? இப்பொழுது நாம் அவ்விதமாக சாட்சி சொல்பவர்களோடு ஜெபித்து நம்முடைய பணியில் அவர்கள் சேரக்கூடிய அளவில் உழைக்கிறோமா? பவுல் இவ்விதமாக "தேவனுடைய ராஜ்யத்தின் பொருட்டு என் உடன்வேலையாட்களாயிருந்து, எனக்கு ஆறுதல் செய்துவந்தவர்கள்" என்று அவர்களைக் குறித்துச் சொல்வதைப்போல நாம் இருக்கிறோமா?

அடுத்து பவுல் சொல்லும்படியான ஊழியன் எப்பாப்பிரா. "உங்களைச் சேர்ந்தவனும் கிறிஸ்துவின் ஊழியக்காரனுமாகிய இவன்" (கொலோ 4:12) என்று அழைக்கப்படுகிறார். இந்த எப்பாப்பிரா அவ்விதமாக ஒருவேளை லவோதிக்கேயாவிலும், எராப்போலியாவிலும் சபையை நிறுவி இருக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால் இப்பொழுது அங்கு பவுலோடு இருப்பதைத் தெரிந்துகொள்ளுகிறார். ஆகவே பவுலோடு கூட ஜெபிக்கிறார். பவுல் அவருடைய ஜெபத்தைப்

பற்றி இவ்விதம் சொல்லுகிறார். “உங்களைச் சேர்ந்தவனும் கிறிஸ்துவின் ஊழியக்காரனுமாகிய இவன், நீங்கள் தேவனுக்குச் சித்தமானவைகளெல்லாவற்றிலும் தேறினவர்களாயும் பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலைநிற்கவேண்டுமென்று, தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான்” (கொலோ 4:12) என்று எப்பாப்பிராவின் ஜெபத்தைக் குறித்துப் பேசுகிறார். எப்பாப்பிரா மக்களுக்காக மன உருக்கத்தோடும், ஆத்துமாக்கள் ஒவ்வொருவருக்காகவும் அவர்களுடைய சூழ்நிலைகளில் அவர்கள் கிறிஸ்துவுக்கென்று எழும்பி வாழவும் பரிசுத்தப்படுத்தப்படவும், ஆண்டவரை அறிகிற அறிவில் வளர்ந்து ஆண்டவருடைய சித்தத்தைச் செய்கிறவர்களாய் காணப்படவும் ஜெபிக்கிறார். அவர்களை கர்த்தர் பரிசுத்தத்தில் பாதுகாத்துக் கொள்ளும்படியாக, அவர்களுடைய வாழ்க்கையில் கர்த்தருடைய நாமம் மகிமைப்பட ஜெபிக்கிறார்.

இங்கு எப்பாப்பிராவினுடைய ஜெபங்களானது ஒரு நோக்கமற்றதாக, அரைமனதோடு கூடிய ஜெபமாக அல்ல, ஆத்துமாக்களுக்காகப் போராடி மன்றாடுகிறதைப் பார்க்கிறோம். அவர்கள் முதிர்ச்சி அடைந்து ஆண்டவருடைய சித்தத்தில் முழுமையானவர்களாக கர்த்தருடைய வசனம் சொல்லுகிற வண்ணமாக ஆண்டவருடைய சித்தத்தில் அவர்கள் தேறினவர்களாக காணப்பட ஜெபிக்கிறார். ஒவ்வொரு நாளும் அவருடைய ஆவிக்குரிய பணியில் ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்கும்படி ஜெபிக்கிறார். அதுவே எப்பாப்பிராவினுடைய ஜெபமாக இருக்கிறது. அது நம்முடைய ஜெபமாக இருக்கிறதா?

பவுல் இங்கு எப்பாப்பிராவைக் குறித்துச் சொல்லும்பொழுது மிகுந்த ஜாக்கிரதை உள்ளவனாய் இருக்கிறான் என்பதற்கு நான் சாட்சியாக இருக்கிறேன் என்று சொல்லுகிறார். தொடர்ச்சியாக இந்த சபைகளுக்காக ஜெபிப்பதிலும் கருத்தாக இருக்கிறார் என்பதைக் குறிக்கிறார். நாமும் கூட இவ்விதமாக மன்றாடி ஜெபிக்கிறவர்களாக

இருப்போமானால் இந்த மூன்று சபைகளைப் போல இன்னும் அநேக சபைகள் நாம் இருக்கிற இடங்களில் எழும்பும்படியாக கர்த்தர் உதவி செய்ய முடியும். ஆகவே எப்பாப்பிரா ஒரு மன்றாட்டு வீரனாக இருப்பதைப் பார்க்கிறோம்.

ஏழாவது உடன் ஊழியனாக அவர் லூக்காவைக் குறித்துப் பேசுகிறார். இந்த இடத்தில் லூக்காவைக் குறித்துப் பழைய ஏற்பாட்டின் வழக்கத்தின்படி அவரை பவுலினுடைய ஆயுததாரி என்று சொல்லலாம். ஏனென்று கேட்டால் பவுலினுடைய சரீர பெலவீனங்களில் அவர் உதவி செய்கிறவராய் காணப்பட்டார். பவுலினுடைய முக்கியமான வியாதி என்ன என்பது நமக்கு தெரியாது. ஆனால் அது அதிகமான வலிக்குரியதாகவும், பார்வையில் புரைகள் உண்டாக்குகிறதாகவும் அவருக்கு ஊழியங்களில் இடறலாக இருப்பதையும் பார்க்கிறோம். ஆனால் அநேக சமயங்களில் பவுலோடு கூட லூக்கா இருந்தார். அவர் ஒரு பிரசங்கியாகவும் இருந்தார்.

இவர் சிரியாவினுடைய அந்தியோகியாவில் இருந்து வந்த ஒரு புறஜாதி நபர். அவர் ஒரு திருமணம் ஆகாதவர். அதே சமயத்தில் ஒரு நல்ல ஓவியக் கலைஞருமாக இருந்தார் என்று சொல்லப்படுகிறது. இவ்விதமாக அவரைப்பற்றி வழக்கமாக சொல்லக்கூடிய காரியம் உண்டு. தர்சு பட்டணத்து சவுலோடு கூட பல்கலைக்கழகத்தில் லூக்காவும் படித்தார் என்றும் சொல்லப்படுகிறது. பவுலும் லூக்காவும் நெருங்கிய நண்பர்கள். ஆகவே இருவரும் ஒரே இடத்தில் படித்தார்கள் என்றும் சொல்லப்படுகிறது. அவர் ஒரு டாக்டர் மாத்திரம் அல்ல, கப்பலில் பணிசெய்த ஒரு டாக்டராக இருந்திருக்கக் கூடும். அப்போஸ்தலர் 27 -ல் கடலின் சம்பவங்களை அவர் தெளிவாக எடுத்துப் பேசுகிறார்.

பாரம்பரியத்தில் லூக்கா நீண்ட காலம் வாழ்ந்தார் என்பதையும், அவர் லூக்கா சுவிசேஷத்தையும், அப்போஸ்தலர்

நடபடிகளையும் எழுதினார் என்றும் பார்க்கிறோம். அவர் எப்பொழுதும் பிரசங்கிக்க ஆயத்தமுள்ளவராகவும், அப்போஸ்தலர்களைக் கவனித்துக் கொள்ளுபவராக பரிசுத்த வேத சத்தியத்தை எழுதுகிறவராய்க் காணப்பட்டார். இந்த லூக்கா நன்கு படித்தவர், புத்திசாலியானவர், அப்போஸ்தலர்களுக்கு அவரால் ஆன மட்டும் உதவி செய்கிறவராக இருந்தார். பவுலைப் போல நாமும் கூட நம்முடைய எல்லாவிதமான தாலாந்துகளையும் பெலத்தையும் ஆண்டவருடைய பணிக்கென்று உபயோகப்படுத்தக் கூடியவர்களாய் இருக்கவேண்டும். ஆகவே பவுலினுடைய உடன் ஊழியர்களைப் போல லூக்காவும் ஆண்டவருக்கென்று முழுமையாக பணி செய்பவராக இருந்திருக்கிறார்.

பவுல் அடுத்த ஒரு நபரைக் குறித்துப் பேசுகிறார். அவர் தேமா. பிற்காலத்தில் அவரைக்குறித்து என்ன சொல்லப்படுகிறது. பவுல் இந்த மனிதரைக் குறித்துச் சொல்லுகிறது வருத்தமளிக்கிறதாக இருக்கிறது. சொல்லப்போனால் ஒரு பக்கம் பவுலோடு கூட உடன் போர்ச்சேவகராகச் சொல்லப்பட்டவர், ஆனால் ஒரு நிலைத்த தன்மை இல்லாதவராக வீழ்ச்சியடைந்ததைப் பார்க்கிறோம். ஏறக்குறைய இதை எழுதி 5 முதல் 7 ஆண்டுகளுக்குள்ளாக பவுல் தீமோத்தேயுக்கு எழுதும்பொழுது தேமாவைக் குறித்து "ஏனென்றால், தேமா இப்பிரபஞ்சத்தின்மேல் ஆசைவைத்து, என்னைவிட்டுப் பிரிந்து, தெசலோனிக்கே பட்டணத்துக்குப் போய்விட்டான்" (2 தீமோ 4:10) என்று சொல்லுகிறார்.

ஏன் தேமா அவனுடைய அழைப்பை உதறிவிட்டான்? அவன் ஒரு பொய்யான மனந்திரும்புதலைப் பெற்றவனா? அப்படி என்றால் பவுல் இதைக் குறித்து அநேக ஆண்டுகளுக்கு முன்பாகக் கூட அறிந்திருக்கக்கூடுமல்லவா? ஆரம்பத்தில் ஒரு நல்ல உடன் ஊழியனாக இருந்து அநேக நன்மைகளைச் செய்து வந்தவன். நிச்சயமாக ஆண்டவராகிய இயேசுவை நேசித்தவன்.

ஆனாலும் அவன் ஆவிக்குரிய நடையில் குறைவுபட்ட நிலையைப் பார்க்கிறோம். உலகத்தின் காரியமானது அதின் பக்கமாக இழுத்துக்கொண்டது.

ஒருவேளை அவன் நல்ல திறமையானவனாக, அதிகமான பணம் சம்பாதித்து, நல்ல அழகான வீட்டை தெசலோனிகேயரின் மூலமாக கட்டியிருக்கலாம். அதே காரியம் நம்முடைய வாழ்க்கையிலும் நேரிட வாய்ப்புகள் உண்டு. சாத்தானுடைய தந்திரங்களையும் அறியாமல் தேவனை விட்டு உலகத்தை நோக்கி ஓடுகிறவர்களாக மாறிவிடலாம். பொருளாசைக்குரிய எண்ணங்களையும் கொண்டவர்களாக, நம்முடைய வாழ்க்கையில் சிற்றின்பங்களை விரும்பி ஓடுகிறவர்களாக இருக்கலாம். சாத்தான் நம்முடைய மனதில் இவ்விதமான காரியங்களுக்கு ஆசையைக் கொடுத்து, நம்முடைய ஆதி அன்பை விட்டு விலகி போகத் தூண்டுவான்.

தேமா ஆத்துமாக்களின் விரோதியான சாத்தானால் உலகத்தினுடைய மேன்மையையும், உலகத்தின் புகழ்ச்சியையும் அவனுடைய இருதயத்தில் வைத்து, கர்த்தருடைய பணியிலிருத்து பின்வாங்கிப் போகச் செய்தான். அவன் ஒரு உண்மையான ஊழியனாக இருந்திருப்பானால், தேவனுடைய இரக்கத்தின் சிட்சையினால் பிற்காலத்தில் அவனை மறுபடியும் தேவன் சரிப்படுத்தியிருந்திருப்பார். நாம் ஒருவேளை உலகத்தின் காரியத்தில் அதிகம் எண்ணமுள்ளவர்களாய், உலகத்தின் ஐஸ்வரியத்துக்கும், மற்றவைகளுக்கும் அதிகம் விருப்பம் உள்ளவர்களாய், சுயதிருப்தி உள்ளவர்களாய் இருப்போமானால், தேமாவின் வாழ்க்கை நமக்கு ஒரு பெரிய எச்சரிப்பாய் இருக்கிறது. தெய்வ பக்தியுள்ளவர்களும் கூட இந்த காரியத்தில் இழுப்புண்டுபோக வாய்ப்புண்டு. தேவனை நாம் சார்ந்து இந்தக் காரியத்தில் கர்த்தர் நமக்குப் பாதுகாப்பைக் கொடுக்கவும், அவரை முழுமையாய் நம்பி வாழவும் கர்த்தர் நமக்கு உதவி செய்ய மன்றாட வேண்டும். பவுலுடைய உடன்

வேலையாள் தேமா ஒரு நிலையற்றவனாய் போனது நமக்கு ஒரு எச்சரிப்பாய் இருக்கட்டும்.

பவுலுடைய உடன் ஊழியர்கள் தேமாவோடும் சேர்த்து ஏழு பேரை குறித்துச் சொல்லியிருக்கிறார். கொலோசெயர் 4:15 -ல் நிம்பாவை குறித்துக் கூறுகிறார். அவரைக் குறித்து நமக்கு ஒன்றும் தெரியாது. அவருடைய வீட்டில் கூடுகிற சபையைக் குறித்து அவர் பேசுகிறார். அடுத்தது பிலமோனின் உடன் போர்ச் சேவகனான அர்க்கிப்பைக் குறித்துப் பேசுகிறார். இந்தச் செய்தியானது மிகக் கண்டிப்பாய் இருக்கிறதைப் பார்க்கிறோம். நீ கர்த்தரிடத்தில் பெற்ற ஊழியத்தை நிறைவேற்றும்படி கவனமாய் இருப்பாயாக என்று சொல்லுகிறார்.

இந்த அர்கிப்பா எந்த காரியத்தில் செய்ய வேண்டியவைகளை செய்ய தவறிப்போனான் என்று நமக்குத் தெரியவில்லை. ஒருவேளை அர்கிப்பா பிலமோனின் வீட்டில் கூடுகிற சபைக்கு போதகராய் இருந்திருக்கலாம். சிலர் அவரை பிலமோனின் மகன் என்றும் கர்த்தருடைய ஊழியத்தைச் செய்ய அழைக்கப்பட்டவர் என்றும் சொல்லுகிறார்கள். அவனுடைய காரியம் என்ன? ஏன் அவன் ஊழியத்தில் கவனம் இல்லாமல் இருக்கிறான்? ஒருவேளை இந்தக் காரியம் இவ்விதமாய் இருக்கலாம் என்று நாம் எண்ணுகிறோம். அவன் நிச்சயமாக ஒரு வாலிபனாக ஆண்டவரை நேசிக்கிறவனாக, அவருடைய ஊழியத்தைச் செய்ய விருப்பம் உள்ளவனாக இருந்திருப்பான். ஆனால் பவுல் இந்த இடத்தில் தொடர்ந்து கவனமாக இல்லை என்று சொல்லும்பொழுது, ஒருவேளை அவன் கர்த்தருடைய பணியில் குறைவுப்பட்ட நேரத்தில் அவனுக்கு இவ்விதமாக எழுதியிருக்கக்கூடும். அவருடைய பணியிலிருந்து பின்தங்கிய நிலையில் இருந்திருக்கிறான் என்று நாம் சொல்லக்கூடும்.

இந்த நாட்களில் நாம் இதை ஊழியங்களில் பார்க்கிறோம். எனக்கு தெரிந்த ஒரு திறமையான போதகர் அநேக ஆவிக்குரிய புத்தகங்களை எழுதினவர், நீண்ட காலம் அந்த

சபையில் உழைத்திருந்தார். ஆனால் திடீரென்று அவருடைய சபையில் பழுது ஏற்பட்டது. அவர் பின்தங்கிப்போய் ஊழியம் செய்வதையே நிறுத்திவிட்டார். அவருடைய எழுத்துக்கள் உணர்ச்சி வேகத்தில் எழுதப்பட்டதாய் காணப்படுகிறது. அவர் தெரிந்துகொண்டு உழைத்த பகுதி நல்லதாக இருந்திருக்கலாம். ஆனால் அவருடைய நேரத்தையும் காலத்தையும் முக்கியமான பணியிலிருந்து பின்தங்கிப் போக செய்திற்று. எனக்குத் தெரிந்த ஒன்று இரண்டு போதகர்கள் சில மிஷினரி சங்கத்தின் தலைவர்களாய் பணிசெய்த போது, அவர்கள் அங்கும் இங்கும் பிரயாணம் செய்த வேளையில், அவர்களின் சபைகள் பின்தங்கி, வளர்ச்சியின்மைக்குள் சென்றதைப் பார்த்திருக்கிறோம். இந்த சகோதரர்கள் நன்கு சத்தியத்தை பிரசங்கிக்கக் கூடியவர்கள். ஆனாலும் கூட பின்தங்கிப் போகக்கூடிய நிலைமைக்கு சென்றுவிட்டது. ஒருவேளை அவர்களுக்கு பவுல் சொன்னவண்ணமாக, நீ பெற்ற ஊழியத்தை நிறைவேற்றக் கவனமாய் இருப்பாயாக என்று சொல்கிறது அவசியமாய் இருக்கிறது.

செய்யவேண்டியது நிறைய உண்டு, ஆத்துமாக்களை ஆதாயப்படுத்த வேண்டியது உண்டு. ஆனாலும் இதன் மத்தியில் நாம் நிறைவேற்றும் பணியில் முக்கியத்துவமாய் செயல்படும் காரியங்கள் உண்டு. அவர்களுடைய வாழ்க்கையில் ஏதோ ஒன்று ஆர்வத்தைத் தூண்டி அவர்கள் கவனத்தை திசை திருப்பிவிட்டதையும், அவர்களின் அழைப்பின் முக்கியத்துவத்தின் அறியாமையையும் நாம் பார்க்கிறோம். ஊழியம் செய்கிறவர்கள் மாத்திரம் இவ்விதமாக இழுக்கப்பட்டு போகிறவர்கள் அல்ல. இங்கு பவுலுடைய வார்த்தை உன்னுடைய சபைக்கு நீ அளிக்கவேண்டிய பங்களிப்பில் ஜாக்கிரதையாய் இரு என்று சொல்லவேண்டியதாய் இருக்கிறது. ஒருவேளை இந்த எச்சரிப்பு, அகரிப்பை மறுபடியும் தூண்டி, வழிநடத்தியிருக்கும் என்று எண்ணுகிறோம்.

பவுலுடைய உடன் ஊழியர்கள் தங்களை மிகவும் அர்ப்பணித்தவர்கள். அவர்களிடம் நாம் அநேக காரியங்களைக் கற்றுக்கொள்ள முடியும். தீகுக்கை எண்ணிப் பாருங்கள் ஒரு தாழ்மையான கர்த்தருக்குரிய பணியாளனின் ஆவியைப் பெற்றிருந்தார். இயேசுவுக்காக உங்களை முற்றிலும் அர்ப்பணித்து, அவரைப் போன்று மாற வேண்டிய விருப்பத்தைக் கொண்டிருங்கள். ஒநேசிமுவை நினைத்து பாருங்கள், கிருபையின் பாத்திரமாயும் சின்னமாயும் முற்றிலும் மாற்றப்பட்ட ஒரு வாலிபனாய் இருந்தான். நாமும் கூட நம் மாற்றங்களில் அவ்விதமான கிருபைகளில் வளருகிறவர்களாய்க் காணப்பட வேண்டும். அரிஸ்தர்குவை எண்ணிப் பாருங்கள். அவர் தியாகமுள்ளவராய் எழும்பியிருந்தார். இந்த நாட்களில் உபத்திரவமுள்ள பகுதிகளில் மாத்திரம் இயேசுவுக்காக தியாகமுள்ளவர்களாய் எழும்புகிறதை நாம் பார்க்கிறது போதாமல், நாம் ஒவ்வொருவரும் எல்லா வேளைகளிலும் தியாகமுள்ளவர்களாய் வாழ கிறிஸ்துவின் கையில் நம்மை ஒப்புக்கொடுப்போமாக. நம்முடைய தியாகங்கள் அனைத்தும் மற்றவர்களை சந்தோஷப்படுத்தும்படியாக இருக்கும். மாற்குவை எண்ணிப் பாருங்கள். ஜெயம் கொண்டவன். தன்னுடைய பெலவீனத்தை தேவனுடைய பெலத்தால் மேற்கொண்டான். நமக்கும் நம்பிக்கை உண்டு. நாமும் கிறிஸ்துவில் முன்னேற்றம் அடைய முடியும்.

யுஸ்துவை நினைத்துப் பாருங்கள், ஒரு சுவிசேஷகனாக பவுலை அதிகமாக உற்சாகப்படுத்தினான். நாம் தனிப்பட்டவராக, ஒரு சபையாக, எவ்விதமான சாட்சிகளைக் கொண்டவர்களாய் இருக்கிறோம்? எப்பாபிராத்துவை நினைத்துப் பாருங்கள். அவன் ஒரு மன்றாட்டு வீரனாய்க் காணப்பட்டான். சபைகள் மன்றாட்டு வீரர்கள் இல்லாமல் போனால் அது எவ்வளவு பரிதாபம்! லூக்காவைப் போல பவுலுடைய உடன் ஊழியனாய் காணப்பட்ட அருமையான குணத்தைப் பார்க்கிறோம். லூக்கா மற்றும் அப்போஸ்தலர் நடபடிகள் போன்ற புத்தகங்களை

எழுதக்கூடிய அளவுக்கு அவர் எழும்பினார். அவருடைய தாழ்மையையும், குழுவாக இருந்து செயல்படக்கூடிய தன்மையையும் நாம் கற்றுக் கொள்ள வேண்டும்.

தேமா மட்டும் நிலையற்றவனாய் ஏமாற்றத்துக்குரியவனாய்ப் போனது நம்முடைய வாழ்க்கையை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டியதாய் இருக்கிறது. கடைசியாக அர்க்கிப்பு பின்தங்கிப்போனான். ஒரு நல்ல ஆர்வமுள்ள சகோதரன், அவர் பணியில் விழிப்பாய் இருப்பது எவ்வளவு அவசியமானதாய் இருக்கிறது. ஒரு போதகனாக எழுதப்பட்ட பவுலுடைய நிருபங்கள் நமக்கு ஆசீர்வாதமாகவும், செவிகொடுக்க வேண்டியவைகளாகவும் இருக்கிறது. இவ்விதமாக பவுலுடைய பணியாளர்களின் வாழ்க்கையின் சவால்கள் இன்னும் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையில் தேவனுக்கென்று அதிகம் வாஞ்சிக்க, உழைக்க உதவி செய்யட்டும்.

குறிப்புகள்



டாக்டர். பீட்டர் மாஸ்டர்ஸ் இங்கிலாந்து தேசம் லண்டன் மாநகரத்தில், மெட்ரோபாலிட்டன் டேபர்னேக்கில் என்ற சீர்திருத்த பாப்திஸ்து சபையின் போதகராக 1970-ஆம் ஆண்டு முதல் கர்த்தருக்கென்று பணி செய்து வருகிறார்.இந்த சபையானது பிரசங்கிகளின் இளவரசன் என்றழைக்கப்படும் சி.எச். ஸ்பர்ஜன் என்ற தேவ மனிதரால் ஆரம்பிக்கப்பட்டது.



டாக்டர். பீட்டர் மாஸ்டர்ஸ் எழுதியிருக்கிற அநேக நல்ல ஆவிக்குரிய புத்தகங்கள் உலகத்தின் பல மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டு இன்றும் அநேகருக்கு ஆசீர்வாதமாக இருந்து வருகிறது.

தனிப்பட்ட ஆவிக்குரிய வாழ்க்கையை வெற்றியோடு கடந்து செல்ல நல்ல ஆவிக்குரிய ஆலோசனைகள் அடங்கிய புத்தகம் இது.
இதை வாசிப்பவர்கள் நிச்சயம் ஆசீர்வதிக்கப்படுவீர்கள்.

**சீர்திருத்த பாப்திஸ்து சபை**
5/295, சாந்தி நகர்,
ஏற்காடு மெயின் ரோடு,
சேலம் - 636 008
தொடர்பு எண் : +91 98427 67184
*Website : www.reformedbaptistchurch.in*
*www.tamilchristianmessages.com*